

1985

JL
N85
N85.9
85356


தமிழரசு





# மாண்புமிகு முதல்வர் சென்னை திரும்பினார்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மையாரும்-மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. எஸ். முத்துசாமி ஆகியோரும் பிறரும் ஜப்பான் அமெரிக்கா ஆகிய நாடுகளில் தமது சுற்றுப்பயணம் வெற்றிகரமாக முடிந்து 21.8.85 அன்று இந்தியா திரும்பினார்கள்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் டில்லியில் சந்தித்து இலங்கைத் தமிழர்கள் பிரச்னை குறித்துக் கலந்தாலோசித்தார். இந்தச் சந்திப்பு இரண்டு நாட்கள் நடந்தது. இச்சந்திப்பின் போது நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் திரு தம்பிதுரை அவர்களும் உடனிருந்தார்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

அமெரிக்காவிலும் ஜப்பானிலும் தான்


## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆவணி 16
மலர் : 16 இதழ் : 5
1-9-1985


verified

நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்கும் பெரிதும் உறுதுணையாக இருப்பவர் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவர் நேற்று சுதந்திரச் செய்தி வெளியிட்டபோது, ''தேசிய ஒற்றுமையும், ஒருமைப்பாடும் மிகவும் இன்றியமையாதது. மத, இன சாதி முரண்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்'' என்று சொல்லி இருக்கிறார்.

மாநில அரசுகள் மத்திய அரசுடன் இணைந்தவை. ஆகவே ஒன்றை ஒன்று எதிர்ப்பதில் பலன் இல்லை என்று கூறி இருக்கிறார். மத்திய அரசுடன் இணக்கமாகச் செயல்பட வேண்டும் என்று கூறி இருக்கிறார். மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் பெற வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்லி இருக்கிறார்.

இலங்கைத்தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில், நமது பிரதமர் ராஜீவ் காந்தி மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்றும் முதல் அமைச்சர் தெரிவித்து இருக்கிறார். திம்புவில் இலங்கை அரசுக்கும், இலங்கைத் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையே நடக்கும் பேச்சு வார்த்தைகள் நல்லமுறையில் வெற்றி பெற வேண்டும். இலங்கைத் தமிழர்கள் நியாயமான நிலையில் வசதியாகக் கவலையின்றி வாழ வழி ஏற்பட வேண்டும் என்பதை நமது முதலமைச்சர் 1983ஆம் ஆண்டிலேயே கூறி இருக்கிறார். அது இப்போது பலன் அளிக்கத் தொடங்கிவிட்டது.

திம்புவில் நடைபெறும் பேச்சுவார்த்தை ஓரளவு வெற்றி பெறும் நிலைமையை அடைந்து இருக்கிறது. அதன் மூலம் நல்ல விளைவுகள் ஏற்படும். இலங்கைத் தமிழர்கள் மகிழ்ச்சியோடு, நிம்மதியோடு வாழ வழி ஏற்படும் என்று நம்புவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறி இருக்கிறார்.


இலங்கைத்தமிழர்கள் ஒரு இலட்சம் பேர் அகதிகளாகத் தமிழ்நாட்டில் தங்கி இருக்கிறார்கள். இலங்கையில் நல்ல நிலைமை ஏற்பட்டால் இந்தச் சுமை நமக்குக் குறையும். தமிழ்நாட்டிற்குள்ளே நலிந்தோர், ஏழைகள் கல்வி மற்றும் உணவு பெற ஏற்பாடு செய்து இருக்கிறோம். 80 இலட்சம் மாணவர்களும் 2 இலட்சம் முதியோர்களும் சத்துணவு சாப்பிடுகிறார்கள்.

பொருளாதாரத் துறையில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பல திட்டங்களை முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.


இதற்கு மக்களின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

**(15-8 85 அன்று சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கொடியேற்றி வைத்து ஆற்றிய உரையிலிருந்து).**





29.8.85 அன்று இயற்கை எய்திய பழம் பெரும் நடிகர் எம்.கே. ராதா இல்லம் சென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.



# பெருந்தலைவர் பிறந்த மண்ணில்....

பெருந்தலைவர் காமராஜரின் 83-வது பிறந்த நாள் தமிழக அரசின் சார்பில் 15-8-85 அன்று பெருந்தலைவர் பிறந்த விருதுநகரில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சத்திரியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலை 10 மணியளவில் பிச்சைப் பிள்ளை குழுவினரின் நாயன இசையுடன் விழா தொடக்கமாகியது.

காமராஜர் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு எஸ். தீனதயாளன் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல். என். விஜயராகவன் இ.ஆ.ப. விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''சுயநலம் இல்லாதவர்களை உலகம் மதிக்கிறது; அவர்களது சிறப்பும் அதிகரிக்கிறது. அவர்களது சுட்டுவிரல் அசைந்தால் மக்கள் கட்டுப்படுகிறார்கள். அவர்கள் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களால் மதிக்கப்படுகிறார்கள். அத்தகைய சிறப்புமிக்க பெருமக்களில் பெருந்தலைவர் காமராஜரும் ஒருவர்.

'மக்கள் பார்வையில் காமராஜர்' என்ற பொதுத் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமை ஏற்றார். அப்போது அவர் தெரிவித்தார்:

'சுதந்தரத்திற்காகப் பாடியவன்-பாடுபட்டவன் பாரதி. ஆனால் அவன் சுதந்தரக்காற்றை சுவாசிக்காமலேயே மறைந்துவிட்டான். கல்வி இல்லாத ஊர் தீயினால் எரிக்கப்பட வேண்டும் என்று பாரதி பாடினான். கல்வி நல்காக் கசடரைக் கழுவேற்ற வேண்டும் என்றார் அவரது சீடரான பாரதிதாசன்.

''விடுதலை பெற்ற பின்னர் கட்டாயக் கல்வியின் வாயிலாக, தமிழகத்தில் ஊர்தோறும் பள்ளிகளைத் திறந்து வைத்தார் காமராஜர். பாரதி இன்று திரும்பி வந்து பார்த்தால், தீ வைப்பதற்கு ஊர் கிடைக்காதபடி செய்து விட்டார் காமராஜர்."

'நாட்டுப்பற்று' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் சி. சிவசங்கரன் குறிப்பிட்டார்:

''காமராஜர் வேலூர்ச் சிறையிலிருந்த போது, விருதுநகர் ஊராட்சி மன்றத் தலைராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் 5 நிமிடம் அந்த இருக்கையில் அமர்ந்துவிட்டு பதவியை ராஜினாமாச் செய்து விட்டார். அவரிடம் ஊர்ப் பற்று இருக்கவில்லை நாட்டுப் பற்று -உலகப் பற்று உறைந்திருந்தது."

'பத்திரிகையாளர்' என்ற பொருளில் உரையாற்றிய திரு மு. நமசிவாயம் (காமராஜர் வரலாற்று நூலாசிரியர்) தெரிவித்ததாவது:

''அந்தக்காலத்தில் பத்திரிகையாளர்கள் எல்லாரும் தேசப் பற்று மிகுந்தவர்களாக இருந்தனர். காமராஜர் பத்திரிகை படித்துப் படித்து அரசியல் தெரிந்து கொண்டார். அவர் தமது வாழ்நாளில் 3,000 நாட்கள் சிறைவாசம் செய்திருக்கிறார். 9 ஆண்டுகள் சிறையிலும் 9 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பிலும் இருந்தார். பணம் சோறு போடுமா என்று கேட்பார். பண்ட உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்று கூறுவார்.''

பெருந்தலைவரை நினைவு கூர்ந்து உரையாற்றிக்கொண்டிருந்த நமசிவாயம் உணர்ச்சி வயப்பட்டவராக, ''பெருந்தலைவர் பிறந்த இந்த மண்ணை முத்தமிடுகிறேன்'' என்று சொல்லியவாறு சடாரென்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்து தரையை முத்தமிட்ட காட்சி அனைவரையும் திகைக்க வைத்து விட்டது.

'கல்வித் தொண்டு' என்ற தலைப்பில் உரையாற்றிய டாக்டர் சுப. அண்ணாமலை தெரிவித்ததாவது:

"காமராஜர் காலத்திற்கு முன்பு இந்த நாட்டில் கல்வி, கிடைக்காத ஒரு சரக்காக இருந்தது. எல்லா ஊரிலும் கல்வி விளக்கை ஏற்றி வைத்தார் காமராஜர்."

அடுத்து கவிஞர் மீரா தலைமையில் 'பெருந்தலைவர் காமராஜர்' என்ற தலைப்பில் கவி அரங்கம் நடை பெற்றது.

'ஏழை பங்காளன்' என்ற பொருளில் கவிஞர் அரு.நாகப்பன்,

'தொண்டின் தலைவர்' என்ற பொருளில் கவிஞர் திருமதி குருவம்மாள்,

'சிந்தனையாளர்' 'என்ற பொருளில் கவிஞர் திருமதி தங்க அன்புவல்லி,

ஆகியோர் கவி பாடினர்.

இறுதியில் துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றி நவில, காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் நிகழ்ச்சி தேசபந்து மைதானத்தில் மாலை 5 மணிக்கு சிவகாமி ராத்திமதி சகோதரிகளின் வில்லிசை நிகழ்ச்சியுடன் தொடக்கமாகியது. பெருந்தலைவரின் வாழ்க்கை வரலாற்றை சகோதரிகள் சுவையாக வில்லிசையின் மூலம் எடுத்துரைத்தனர்.

பார்த்த தொழிற்சாலைகள் பற்றியும், தமிழ்நாட்டில் அதையொட்டி புதிதாகத் தொடங்கத் திட்டமிட்டுள்ள பெரிய தொழில்கள் பற்றியும் அப்போது மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு 30 நிமிட நேரம் நடந்தது.

டில்லியில் தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு உ. சுப்பிரமணியம் அவர்கள் சந்தித்து மாலை அணிவித்து வாழ்த்தினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏனையோரும் 25.8.85 அன்று தமிழகம் வரவிருப்பதாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால், சென்னையில் மாபெரும் வரவேற்பளிக்க ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. ஆனால், இலங்கைத் தமிழர் படும் இன்னல் காரணமாக அப்படிப்பட்ட வரவேற்பு அளிப்பது தவிர்க்கப்பட வேண்டுமெனப் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

இருந்தும்கூட, திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்பே-அதாவது 24.8.85 சனிக்கிழமை காலையே டில்லியிருந்து 6.45 மணிக்கு விமானம் மூலம் புறப்பட்டு-மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றவர்களும் காலை 10.15 மணிக்கு நலமுறச் சென்னை வந்து சேர்ந்தார்கள்.

இந்த வருகை முன் கூட்டியே அறிவிக்கப்படாதிருந்தும்-சிறிது நேரத்தின் முன்பே அறிந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் ஏராளமான பொதுமக்களும் சென்னை விமான நிலையத்தில் கூடி நின்று அவர்களை மகிழ்ச்சி பொங்க வாழ்த்தி வரவேற்றார்கள் ,''புரட்சித்தலைவர் வாழ்க''... ''பொன்மனச் செம்மல் வாழ்க''... ''முப்பிறவி கண்ட முதல்வர் வாழ்க'' என்பன போன்ற முழக்கங்கள் விண்கிழித்தன.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களும் விமான தளத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாலையணிவித்து மகிழ்ந்து வரவேற்றார்கள்.

அங்கிருந்து கார்மூலம் புறப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் - விமான நிலையத்தின்முன் கூடியிருந்த நாடாளுமன்ற, சட்டப் பேரவை-மேலவை உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் உள்ளிட்ட மக்கட் பெருவெள்ளத்தைக் கண்டதும் காரை நிறுத்தச்சொல்லி கீழே இறங்கிவந்தார். வானை எட்டின வாழ்த்து முழக்கங்கள். எண்ணற்ற கைத்தறி ஆடைகளும் மாலைகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அணிவிக்கப்பட்டன.

எல்லாவற்றையும் ஏற்று, நன்றி தெரிவித்தபின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் காரில் ஏறி இராமாவரத்தில் உள்ள தமது இல்லம் சென்று சேர்ந்தார்கள்.

—இல. இராசேந்திரன்



மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. பி. சங்கர் ஆனந்த், சென்னையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்தார். (25.8.85).



# ஒத்துழைப்புத் தேவை..

மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் **இரா. நெடுஞ்செழியன்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக அமெரிக்கா சென்று பரிசோதனை முடிந்து இப்போது அவர் உடல் நிலை சிறப்பாக இருக்கிறது.

இன்று அமெரிக்காவில் தலைநகர் வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நமது விடுதலை நாள் விழா கொண்டாடப்படுவதையொட்டி, அங்கு நமது முதல்வர் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதில் மகிழ்ச்சியோடு கலந்து கொள்கிறார் என்பதில் நமக்குப் பூரிப்பு ஏற்படுகிறது.

வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்து அடிமை விலங்கை உடைத்து எறிந்து சுதந்திரம் பெற்றோம். இதைப் பெறுவதற்காகப் பல இலட்சக்கணக்கான மக்கள் உடைமைகளைப்பறி கொடுத்தனர். இன்னும் பல ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் இன்னுயிரை இழந்தும் இருக்கிறார்கள்.

அப்படி அரும்பாடுபட்டு, தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அத்தனை பேருக்கும் இன்று நாம் வீர வணக்கம் செலுத்துவது கடமையாகும். காந்தியாருக்கு உறுதுணையாகப் பல தலைவர்கள் கஷ்ட, நஷ்டங்களைத் தாங்கிப் பாடுபட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் நமது அஞ்சலியையும், மரியாதையையும் செலுத்தும் நாள் இது ஆகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லும் போது, 1947 ஆகஸ்டு 15ஆம் தேதியை வெள்ளையனைக் கணக்கு தீர்த்த நாள் என்றும், அடுத்து வரும் ஆகஸ்டு 15ஆம் தேதிகளை நமது கணக்கை நாமே பார்க்கும் நாள் என்றும் கூறினார்கள். அரிமா நோக்கு என்று இலக்கியத்தில் சொல்வார்கள். அதாவது சிங்கத்தின் பார்வை, சிங்கம் கொஞ்ச தூரம் போனதும் நின்று, தான் வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும். பிறகு முன்னால் திரும்பி இனிமேல் எப்படிப் போக வேண்டும் என்று பார்க்கும். நாமும் அதுபோல, பழைய தியாகங்களை எண்ணிப்பார்ப்பதோடு, இனிமேல் செய்ய வேண்டியவைகளை நினைத்து திட்டமிட்டுப் பணிகளைத் துவங்கும் நாளாக இது இருக்கிறது.

உலகிலேயே இந்தியாதான் மிகப் பெரிய ஜனநாயக நாடு. 38 ஆண்டுகளாக இதைக் கட்டிக் காத்து வந்திருக்கிறோம். ஆனால், நம்மைச் சுற்றிலும் பல நாடுகள் சர்வாதிகார ஆட்சிக்கு உட்பட்டு ஜனநாயகத்தை மீட்க முடியாமல் தத்தளிக்கும் நாடுகளாக இருக்கின்றன. 78 கோடி மக்களிடையே பல சாதி, மொழி வகைகள், போக்குகள், இருந்தும், 38 ஆண்டுகளாக நாம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடிந்து இருக்கிறது.

வன்முறை, உள்நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவது போன்ற பல தொந்தரவுகள் இருந்தும், உலக நாடுகள் போற்றத்தக்க அளவுக்குப் பல சாதனைகளைப் புரிந்து வளரும் நாடுகளுக்கு எல்லாம் நாம் தலையாய நாடாக விளங்குகிறோம்.

திருமதி இந்திராகாந்தி தலைமையில் நாம் முன்னேறியதையொட்டி, அவர் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து கடமை உணர்வோடு உலகத் தலைவர்கள் அனைவருடைய பாராட்டையும் பெற்றுப் பணிபுரியும் இன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியை எண்ணும் போது பூரிப்பாக இருக்கிறது.

பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பஞ்சாப் பிரச்சினை அவரால் தீர்க்கப்பட்டது. அதேபோல் அசாம் பிரச்சினையும், காஷ்மீர் பிரச்சினையும் தீர்க்கப்படுகிறது.



அதன் பின்னர் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார்.

அனைவரையும் வரவேற்ற காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல். என். விஜய ராகவன் இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''நாட்டுக்குழைத்த நல்லவர்களுக்கெல்லாம் விழா எடுத்து இளைஞர் சமுதாயத்தின் நெஞ்சில் நிலைத்து நிற்கும் வகையில் அரசு தொண்டு புரிந்து வருகிறது.''

பெருந்தலைவர் திருஉருவப் படத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

அடுத்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு சுந்தரராஜ் உரையாற்றுகையில், ''காமராஜரின் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட அவரது பல திட்டங்களை நிறைவேற்றவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் பின்பற்றி வருகிறார்கள். இந்த பூமிக்கு காமராஜர் பெயரைச் சூட்டியுள்ளார் புரட்சித் தலைவர்'' என்று கூறினார்.

அடுத்து உரையாற்றிய அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு பிச்சை, ''உலகத் தலைவராகப் போற்றப்பட வேண்டியவர் காமராஜர்; தலைவர்களுக்கெல்லாம் தலைவராக இருந்தவர் காமராஜர். தனக்கென எதுவும் விட்டுச் செல்லாத தூயவர் அவர்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய விருது நகர்த்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம் தமது உரையில் தெரிவித்தார்:

''நாடு விடுதலை பெற்ற பின்னர் தமிழகத்தின் முதல்வரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு காமராஜரிடம் இருந்தது. பலரை முதல்வராக்கிய அவர் தாமே முதல்வராகப் பொறுப்பேற்கும் சூழ்நிலையும் ஏற்பட்டது. ஒரு நாள் அந்தப் பதவியை உதறித் தள்ளும் நிலையும் அவருக்கு ஏற்பட்டது. அவரது ஆட்சிக் காலத்தைப் பொற்காலம் என்று ஏழை, எளிய பொதுமக்களும், அறிஞர் பெருமக்களும் ஏககாலத்தில் பாராட்டினர். தமிழகத்தில் அவர் காலத்தில் கட்டப்பட்ட அணைக்கட்டுகள் அதிகம்.''

பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு செல்வேந்திரன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''உலகின் கிழக்கு மேற்கு நாடுகளின் தலைவிதியை பிரிட்டிஷ் ராணியின் இடுப்பிலே தொங்கிக் கொண்டிருந்த சாவி நிர்ணயித்துக் கொண்டிருந்த காலத்திலே - பெருந்தலைவர் அவர்கள் தமது 15வது வயதில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, போராட்டங்களில்கலந்து,சிறைச்சாலையைச் சந்தித்துக் கொண்டிருந்தார் என்ற செய்தி அவரது சரித்திரத்தின் மிகப் பெரும் பக்கங்களில் இடம் பெற்றுள்ளது. காமராஜரின் எளிமை, தியாக உணர்வு ஒவ்வொரு அரசியல்வாதியும் ஏற்றுக் கொள்ள வேண்டிய வேதமாகும்.''

அடுத்து உரையாற்றிய நாடாளு மன்ற மாநிலங்கள் அவை உறுப்பினர் திரு ஆலடி அருணா, தெரிவித்தார்:

''புரட்சித் தலைவர், காமராஜரின் திட்டங்களை எல்லாம் புதிய வகையில் நிறைவேற்றி வருகிறார். காமராஜர் காலத்தில் 17 இலட்சம் சிறுவர்கள் பகல் உணவு பெற்றார்கள். தற்போது புரட்சித் தலைவரின் ஆட்சியில் 80 இலட்சம் மாணவர்களுக்குப் பயன் கிடைக்கும் வகையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. காமராஜர் காலத்தில் 5 இலட்சம் பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டன. இப்போது 11 இலட்சம் பம்பு செட்டுகள் அமைக்கப்படுகின்றன. இதுதான் ஒரு தலைவருக்கு நாம் அளிக்கும் மரியாதை - அவரைப் பின்பற்றுகிறோம் என்பதற்கு அழுத்தமான ஆதாரம். வாழ்க்கையின் இறுதி வரை தியாக தீபமாக விளங்கி ஒளி விட்டுப் பிரகாசித்த அந்தத் தலைவரின் பெருந்தன்மையும் தியாக உள்ளமும் நம்மிடையே வளர்ச்சியுற வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டாவே இந்த விழா.''

தலைமை உரையாற்றிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்:

''உயர்ந்த ஜாதிக்காரர்கள்—பணக்காரர்கள்—பட்டம் பெற்றவர்கள் [illegible]





நலிவுற்ற பெண்களுக்கு தையல் இயந்திரங்களை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

மைச்சராக வேண்டும் என்றிருந்த நிலையை மாற்றியவர் காமராஜர். ஏழை, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த மகன் உயர முடியும் - உயர்ந்த பதவிக்கு வர முடியும் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் காமராஜர். ஏழை எளிய மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளும் அரசாக தமிழக அரசு விளங்கியது காமராஜர் ஆட்சியில்தான்! அதற்கு முன்பு அப்படி இல்லை!

''அவர் பிறந்ததன் காரணமாக இந்த மண் உயர்ந்திருக்கிறது. விருதுபட்டி, நகரானதற்குக் காரணம், காமராஜர்தான்!''

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார் :

''இந்தியத் துணைக் கண்ட வரலாற்றிலேயே ஒரு மாவட்டத்துக்கு ஒரு தலைவரின் பெயர்

ஆந்திரத்தில் தான் முதல் முதலாக எழுந்தது. பிரகாசம் மாவட்டம் எனத் தோன்றியது. அதனை அடுத்து, தந்தை பெரியாரின் பெயரில் ஒரு மாவட்டத்தைப் புரட்சித் தலைவர்தான் அமைத்தார். காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்று அந்தப் பணியைத் தொடர்ந்தார். அண்ணா பெயரால் மாவட்டம் விரைவில் உருவாகப் போகிறது. புதிய மாவட்டங்களை உருவாக்க முன்பிருந்தவர்கள் முயலவில்லை. புரட்சித் தலைவர் தான் முயன்றார்.

''பேரறிஞர் அண்ணா அவர்கள் யாரிடமும் குறுகிய நோக்கத்துடன் நடந்து கொள்ளவில்லை. 'மற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் இருக்கும்' என்று சொன்னார். அதுமட்டுமல்ல 'எங்கே இருந்தாலும் வாழ்க' என்றார். அதைப் பின்பற்றி வருகிறார் புரட்சித் தலைவர்.

''சுதந்தரம் பெற்ற 25 ஆண்டுகளுக்குப் பிறகு தருமபுரி மாவட்டம்தான் உருவாக்கப்பட்டது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த 7 ஆண்டுகளில் புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளார்.

''நாட்டில் எத்தனையோ தலைவர்கள் தோன்றினர். அவர்களில் பட்டம் பெற்றவர்கள் இருந்தனர்; பணக்காரர்கள் இருந்தனர்; உயர்ந்த ஜாதியினர் இருந்தனர். ஆனால் சாதாரண குடும்பத்தில் பிறந்து மாபெரும் தலைவராக - வழி காட்டும் திறமுடைய தலைவராக நமது பெருந்தலைவர் விளங்கினார்.

''இதை 20 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலேயே தமிழகத்தின் தளநாயகர் புரட்சித்தலைவர் அவர்களே அடையாளம் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டார். 'நான் விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கும் தலைவர் காமராஜர்' என்று அவர் குறிப்பிட்டார்.

''காமராஜர் 'கே'. பிளான்படி பதவி விலகப் போகிறார் என்ற செய்தியை அறிந்ததும் தமிழகத்தின் தளநாயகர் அப்போது காமராஜரின் வீட்டுக்குப் போனார். அந்த மாபெரும் தலைவர் வாசலில் நின்று, நமது புரட்சித் தலைவர் அவர்களை வரவேற்றார். அன்று புரட்சித் தலைவர் அவர்கள் தி. மு. கழகத்தின் சாதாரண உறுப்பினர்தான்.

''நீங்கள் ராஜினாமா செய்யாதீர்கள்! செய்தால் தமிழகத்தின் நலன் பாதிக்கப்படும்'' என்று காமராஜரிடம் வேண்டிக்கொண்டார் புரட்சித் தலைவர்.

''இந்தத் திட்டத்தை மாற்ற முடியாது. நானே கொண்டு வந்த திட்டம் இதனை நானே ஏற்க மறுத்தால் இந்தியாவிற்குப் பல கேடுகள் ஏற்பட்டுவிடும்'' என்று பெருந் தலைவர் அவர்கள் நமது தளநாயகரிடம் தெரிவித்திருக்கிறார்.

'மக்களிடம் தவறான கருத்துகளைச் சொல்லி அவர்களை உணர்ச்சி வசமாக்கி விடுகிறோமோ' என்று கேட்டவர் காமராஜர். அவர் Practical man. நடத்த முடிவதைச் சொல்ல வேண்டும்; சொல்லியதை நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் காமராஜர். அந்த நெறியைத்தான் நமது புரட்சித் தலைவர் பின்பற்றுகிறார்.''

செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் உரைக்குப் பின்னர் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்க்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் புத்தகங்களைப் பரிசாக வழங்கினார். நலிவுற்றோருக்கு வீட்டு மனைப் பட்டா, முதியோர்க்கு உதவித் தொகை, இலவச புத்தாடை, இலவச தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூறினார்.

இரவு 10 மணி அளவில் தூத்துக்குடி கீதா பிரியா குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பெருந்தலைவர் பிறந்தவூரிலே கொண்டாடப் பெற்ற அவரது பிறந்த நாள் விழா, எழுச்சியூட்டும் விதத்தில் அமைந்தது என்றால் அது மிகையாகாது!

நிகழ்ச்சித் தொகுப்பு:
**தமிழ்ப்பித்தன்**

வேலூர்த் தொகுதி நாடாளு மன்ற உறுப்பினர் திரு ஏ.சி. சண்முகம் உரையாற்றுகையில், "1983ஆம் ஆண்டில் மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட இந்தத் தொழிற் சாலை இப்போது தொடக்க விழாவில் ஈடுபட்டுள்ளது. ஒரு திட்டத்தை நிறைவேற்ற 5 ஆண்டுகள் ஆகும், 10 ஆண்டுகள் ஆகும் என்ற நிலையெல்லாம் முன்பு இந்த நாட்டில் இருந்தது. புரட்சித் தலைவரின் தலைமை யில் உள்ள இந்த அரசு திட்டங் களை விரைவாக நிறைவேற்றி வருகிறது" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் ஜெகதீசன் அவர்கள் உரையாற்று கையில் தெரிவித்தார்:

"முன்பெல்லாம் பல தொழிற் சாலைகளுக்கு அடிக்கல் நாட் டப்படும். எந்தக் காலத்தில் அவை பூர்த்தியாகும் என்று சொல்லமுடியாது. ஆனால் புரட் சித்தலைவரின் காலத்தில் அடிக் கல் நாட்டப்படும் தொழிற்சாலை கள் விரைவில் உருவாக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலை அல்லது ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் எது வானாலும் புரட்சித் தலைவரின் ஆட்சியில் முன்னேற்றம் பெற்று வருகிறது. திட்டக் காலத்திற்குள் பணிகள் செய்து முடிக்கப்படுவது இந்த ஆட்சியின் மாட்சி ஆகும்.

"புரட்சித் தலைவரின் ஆட்சி யில் தொழிற்புரட்சி ஏற்பட்டு வருகிறது. 10 ஆயிரம் தொழில் களைத் தொடங்கியுள்ளது இந்த அரசு. தமிழ்நாடு தொழில் வளத் தில் அனைத்திந்திய அளவில் 3வது இடத்தைப் பெறுகிறது என்று மைய அரசின் புள்ளி விவ ரக்குழு 1981 ஏப்ரலில் தெரிவித் துள்ளது.

"விழாக்கள் நடத்துவதன் மூலம் நாங்கள் புதிய பெருமை யைப் பெற்றுவிடவில்லை. இந் திய விடுதலைக்குப் பின்னர் உரு வாக்கப்பட்டுள்ள பெரியதொழிற் சாலை புகளூரில் 200 கோடி ரூபாய்த் திட்டத்தில் உருவாக்கப் பட்டுள்ள செய்தித்தாள் காகித ஆலை. இதற்கு நாங்கள் விழா ஒன்றும் எடுக்கவில்லை. தென்ன கத்தின் மற்ற மூன்று மாநிலத் திலும் இல்லாத சிமெண்ட் பைப் தொழிற்சாலை தமிழகத்தில்தான் தொடங்கப்பட்டுள்ளது. இதற் கும் நாங்கள் விழா எடுக்க வில்லை. அதிகாரிகள் உற்சாகம் பெற்று மேன்மேலும் ஏராளமான பணிகளைச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தை மேற் கொள்ள வேண்டும் என்பதற் காகத் தொடக்க விழாக்கள் கொண்டாடப்படுகின்றன".

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்கள் தமது உரையில் தெரி வித்தார்:

"இந்தியாவிலேயே அரசுச்சார் பில் தொடங்கப் பெறும் முதல் சந்தனத் தொழிற்சாலை இது வாகும். நாட்டில் புதிய மறு மலர்ச்சி ஏற்படவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அந்த மறு மலர்ச்சி, தொழில்துறையின் மூலம் ஏற்படவேண்டும் என்ற முறையில் புரட்சித் தலைவர் ஆட்சி புரிந்து வருகிறார்.

"தொழில்துறையில் தமிழகம் 3-வது இடத்தைப் பெற்றுள்ள தைக் கண்டு, மக்கள் மகிழ்கிறார் கள். ஆனால் ஒருசிலர், '3வது இடத்துக்கு வந்துவிட்டார்களே' என வருந்துகிறார்கள். இதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

"கர்நாடக மாநிலத்தைவிட, சந்தனப் பொருட்களை நாம்



திருப்பத்தூரில் கூடுதல் சந்தனக் கிடங்கு மற்றும் அலுவலர்கள் குடியிருப்பை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.



சிறப்பாகத் தயாரிக்க முடியும் என நமது வனத்துறை சவால் விட்டுச் சொல்லும் பெருமை பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டின் அத்தியாயத்தில் புதிய இடத்தை இந்தத் துறை பெற்றிருக்கிறது".

மாண்புமிகு செய்தி-அறநிலை யத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்:

"7 ஆண்டுக்காலப் போராட் டத்துக்கு இடையே இந்த சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற் சாலை தமிழகத்தில் முதன் முத லாகத் திறக்கப்படுகிறது.

"தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் 1978ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இந்தத் தொழிற்சாலைப்பற்றிய திட்டத் தைத் தெரிவித்தார்.

"அன்று மத்திய அரசின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஜனதா அரசு இந்தத்திட்டத்தை நிறைவேற்ற மறுத்தது.

"அதற்குப்பிறகுஎப்படியாவது இந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று புரட்சித் தலை வர் இயந்திரத்திற்கு 35 லட்சம் தொழிற்சாலைக் கட்டடத் திற்கு இத்தனை லட்சம் என்று பல பிரிவுகளாக பிரித்துக் கொடுத்து அனுமதி பெற்றார்.

"1982ஆம் ஆண்டில் ரூ.54 லட்சம் செலவில் கட்டி முடிக்கப் பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இன்று அனு மதி கிடைக்கக் காலதாமதம் ஆனதாலும், இப்போது பொருட் கள் விலை ஏறிவிட்டதாலும் 85 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

2 ஆண்டுகளில் கட்டி முடிக்கப் பட்டு கடந்த 3 மாதத்துக்கு முன் பாகவே செயல்படத் தொடங்கி வெள்ளோட்டம் பார்க்கப்பட்டு இந்தத்தொழிற்சாலையில்இருந்து தயாரிக்கப்பட்ட சந்தன எண் ணெய் ஆராய்ச்சிக்கும் அனுப்பப் பட்டு, தரமானது என்ற சான் றைப் பெற்றுள்ளது.சராசரி 93% எண்ணெய்ச்சத்து இருந்தால் அது உயர் ரகம் ஆகும். நமது எண் ணெய்யில் 94.17% எண்ணெய்ச் சத்து உள்ளது. எண்ணெய் எடுக் கும்போது சக்கையை வடிகட்டி வடிகட்டி இறுதிச் சத்துவரும் வரை பிழிந்து எடுக்கிற கருவி இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. இந்தத் தொழிற் சாலையில்தான் உள்ளது.

ரூ. 85 இலட்சம் செலவில் சந் தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை இப்போது திறக் கப்பட்டுள்ளது. சந்தனப் பட் டைகளில் இருந்து மொத்தம் 20 பொருள்களை உருவாக்குகின்ற திட்டம் இங்கு மேலும் ரூ. 35 இலட்சம் செலவில் வர இருக்கி கிறது. இவை இரண்டையும் சேர்த்தால் ஏறத்தாழ ரூ. 1¼ கோடி ஆகும்.

இந்தத் திட்டங்கள் இறுதி வடிவம் பெற்று நிறைவேறும் போது ரூ. 1½ கோடியாகக்கூட வரக்கூடும்.

இங்கு 200 பேர்களுக்கு மேல் வேலை பார்க்கிறார்கள். வெளி நாட்டிலிருந்து அந்நியச் செலா வணியாக ஆண்டுக்கு ரூ. 3கோடி வருகிறது என்பது மட்டுமல்ல, இதன் மூலம் தமிழகத்துக்கு ஆண் டுக்கு ரூ. 1 கோடியே 30 இலட் சம் வருமானம் வரப்போகிறது. என்பதைப் பெருமையோடும் நெஞ்சை உயர்த்தியும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த சந்தனம் கிடைக்கும் தமிழகத் தில் இப்படிப்பட்ட தொழிற் சாலையை அமைக்க முந்திய ஆட்சியாளர்கள் முயற்சி செய்ய வில்லை. அந்த வாய்ப்பைப் புரட்சித் தலைவர்தான் ஏற் படுத்தித் தந்து இருக்கிறார்.

இன்று இந்தியாவை எடுத்துக் கொண்டால் கர்நாடகத்தில் மிகுந்த அளவு சந்தன மரம் இருந்தது. இப்போது அங்கு சந் தன மரங்கள் அழிக்கப்பட்டு விட் டன.

வடக்கே உத்தரப்பிரதேசம், அரியானா மாநிலங்களில் இந்த எண்ணெய் ஆலைகள் உள்ளன. அவர்களும் நம்மிடம் இருந்து தான் ஏலத்தில் சந்தனம் வாங்கு கிறார்கள். அதுபோக வெளிநாடு களுக்கும் ஏற்றுமதி செய்து வரு கிறோம்.

ஆண்டுக்கு 54 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்து வந்த ஜனதா ஆட்சியில் 19 ஆயிரம் டன்னாகக் குறைந்தது. போராடிப் போராடி இன்று மத்திய அரசு சில ரக மரங்களை அனுப்ப அனுமதித்து உள்ளது. டன்னுக்கு ரூ. 1 லட் சம் விதம் ரூ. 6 கோடிக்கு அதிக மாக மரம் ஏற்றுமதி செய்யப்படு கிறது.

எண்ணெய்யாகத்தான் ஏற்று மதி செய்ய வேண்டுமே தவிர- மரமாக ஏற்றுமதிசெய்யக்கூடாது என்று வடக்கே உள்ள சில தனி யார் வியாபாரிகளும், பிற மாநிலங்களும் முயற்சி செய்து வருகிறார்கள். இது தமிழகத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கும் திட்டமாகும் என்பதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்கிறேன்.

தமிழ்நாடு வனத் தொட்டக் கழக நிர்வாக இயக்குநர் திரு ஆர்.பி.எஸ்.கட்வால், இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

இந்த விழாவின் தொடக்கத் திற்கு முன்னர், மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் திருப்பத்தூரில் கூடுதல் சந்தனக் கிடங்கு மற்றும் அலு வலர்கள் குடியிருப்பையும், கூடு தல் இரட்டைப் பூட்டுச் சந்தனக் கிடங்கையும் திறந்து வைத்தார்.

இந்தச் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையின் மூலமாக வாணியம்பாடி ஒரு வரலாற்றை உருவாக்கப் போகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

தொகுப்பு

எஸ். எஸ். சுந்தரம்



திருப்பத்தூரில் கூடுதல் இரட்டைப பூட்டு சந்தனக் கிடங்கை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

# அமெரிக்க டாக்டருக்கு சென்னையில் வரவேற்பு



தமிழகத்திற்கு வந்துள்ள அமெரிக்க டாக்டர் காலித் எம்.எச். பட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அரசு விருந்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார். மேதகு தமிழக ஆளுநர், மற்றும் அமைச்சர் பெருமக்கள் வருகை தந்திருந்தார்கள் (27.8.85).

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கடந்த ஆண்டு அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ள புருக்ளின் மருத்துவ மனையில் மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்த டாக்டர் காலித்பட்டும், டாக்டர் கோவிந்த ஜுங்காளியும், டாக்டர் ஸ்ரீபாதராவும் சென்னை வந்துள்ளார்கள். அவர்களுக்கு சென்னை தென்மேற்கு ரோட்டரி சங்கத்தின் சார்பில் 27.8.85 மாலை 5 மணிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது செய்தியாளர்களும், பிரமுகர்களும் கேட்ட கேள்விகளுக்கு டாக்டர் காலித்பட்டும், டாக்டர் ஸ்ரீபாதராவும் பின்வருமாறு பதில் அளித்தனர்:

"மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுடைய உடல்நிலை பரிபூரண ஆரோக்கியத்தோடு மிகச் சிறப்பாக இருக்கிறது. அவர் உற்சாகத்துடனும், கூர்மையான நினைவாற்றலுடனும் இருக்கிறார். மாற்றுச்சிறுநீரகம் நன்கு இயங்குகிறது.

"இப்போதே அவர்சில வார்த்தைகளையும், சில வாக்கியங்களையும் நல்ல உரத்த குரலில் பேசுகிறார். தன் மனதில் பட்ட கருத்துக்களை மற்றவர்களுக்கு நன்கு புரியும்படியாகச் சிறப்பாக வெளிப்படுத்தி விடுகிறார்.

"ஆகவே, அவர் பேச்சு ஆற்றலில் பிரச்சினை எதுவுமில்லை.

"முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். இந்த மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு திரும்ப ஆரோக்கியம் பெற்று இருப்பது உண்மையிலேயே- சிறப்பான கண்கண்ட அபூர்வ சாதனையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். இதயம் மிகச் சிறப்பான வலிமையுடன் இருப்பதால்தான், அவரால் இத்தனைக் கடுமையான சோதனைகளையும் தாங்க முடிந்திருக்கிறது. அதற்குக் காரணம் அவர் சிறுவயதில் இருந்தே நல்ல உடல்பயிற்சிகளைச் செய்து இருக்கிறார். யோகாசனம் போன்றவற்றைச் செய்து இருக்கிறார். உடல் நலத்தைக் கவனமாகக் கவனித்து வந்து இருக்கிறார். அதனால்தான் வயதுக்கு மீறிய இளமையுடனும், வலுவான இதயத்துடனும் அவர் இருக்கிறார்.

"இளம் சிறுநீரகத்தைப்பெற்று மிகவும் இளமையுடன் இருக்கிறார் என்றும் சொல்லலாம்.





# வாணியம்பாடி வரலாறு படைக்கிறது

வட ஆர்க்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள தெக்குப்பட்டுக் கிராமத்தில் சந்தனப் பொருட்கள் தொழிற்சாலையின் தொடக்க விழாவும் சந்தனத்தூள் தொழிற்சாலை அடிக்கல் நாட்டுவிழாவும் 7.8.85 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றன.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.ப.உ.சண்முகம் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்க, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. ஆனூர் கோ.ஜெகதீசன் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் தொடங்கிவைத்தார்.

வரவேற்புரை ஆற்றிய வனத்துறைத் தலைவர் திரு எஸ். கொண்டாஸ்,இ.வ.ப. குறிப்பிட்டார்:

"சந்தனம் என்றால் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலை பெயர்போனது. அதனால்தான் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை இந்த மாவட்டத்தில் நிறுவப்படுகிறது. 9.25 ஏக்கர் பரப்பளவில் 85.5 இலட்சம் ரூபாய் செலவில், நிறுவப்படும் இந்தத் தொழிற்சாலையின் மூலம் 113 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்."

வனம் மற்றும் மீனளத்துறை ஆணையாளர் திரு சி.அ.சுப்ரமணி,இ.ஆ.ப. உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இன்று தொடங்கப்படும் இந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடைபெறும் என்று உறுதி கூறுகிறேன். இது அந்நியச் செலாவணியைத் தேடித்தரும்"

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டேனியல் குணாநிதி இ.ஆ.ப தெரிவித்ததாவது:

"வளர்ந்துவரும் வட ஆர்க்காடு மாவட்டம் தொழில்துறையில் தத்தித் தத்தி நடைபோட்டு வருகிறது. நமது முதல்வர் அவர்களின் முயற்சியால் முன்னேறி வருகிறது. இந்தத்தொழிற்சாலை வாழட்டும், வளரட்டும்!"

திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.பி. மணவாளன்பேசுகையில்,"இந்தத் தொழிற்சாலை இந்திய நாட்டுக்குப்பலகோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும். சந்தனத்தைக் கொண்டு கலைப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டார்.

நாட்ராம்பள்ளித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு டி. அன்பழகன் உரையாற்றுகையில் தெரிவித்தார்:

"ஜவ்வாது மலையில் சந்தனம் அதிகமாகக் கிடைத்தாலும் சந்தன மரத்தூள் தொழிற்சாலை இங்கு அமையக் காரணம் தண்ணீர்ப் பிரச்சினை. தண்ணீர் இங்கே நல்லமுறையில் கிடைப்பதால், இந்தத் தொழிற்சாலையில் துணைத் தொழிலாக சந்தனத்தூள் தொழிற்சாலை அமையவிருக்கிறது. புரட்சித்தலைவரின் அரசு, சொன்னதைச் செய்கின்ற அரசு"



# நூற்றாண்டு கண்ட மருத்துவமனை

திருவல்லிக்கேணியில் உள்ள 'கோஷா ஆஸ்பத்திரி' என வழங்கும், அரசினர் கஸ்தூரிபாய்காந்தி மருத்துவமனை அண்மையில் தனது நூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடியது.

1985 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9, 10, 11 ஆகிய மூன்று நாட்கள் விழா நடந்தது.

முதல் நாள் காலை மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தும், புதிய புற நோயாளிகளுக்கான கட்டடத்தைத் துவக்கி வைத்தும் பேசினார். அப்போது அவர், உலகச் சுகாதார அமைப்புகளின் ஆதரவைப் பயன்படுத்தி மக்களுக்கு அதிகப்படியான மருத்துவச் சேவை புரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், குழந்தைகள் அறுவைச் சிகிச்சை நடத்தும் பிரிவுக்கான கட்டடத்தின் அடிக்கல்லை நாட்டிப் பேசுகையில், கல்விக்கு அடுத்தபடியாக அதிக அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்படுவது சுகாதாரத்துறைக்குத்தான். இந்த மருத்துவமனை தூய்மைக்குப் பெயர் பெற்றது. அது தொடர வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுபடுத்த, குடும்ப நலத்திட்ட முகாம்களை அதிகப்படுத்த வேண்டும்'' என்றார்.


மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவிலிருந்து அனுப்பிய வாழ்த்துச் செய்தியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் படித்தார். மேலும் இந்த மருத்துவமனையின் தொண்டு வளர வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், அன்னை கஸ்தூரிபா காந்தியின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து 'மருத்துவர்கள் தாய்க்குலத்திற்கு ஆற்றி வருகின்ற பணி பாராட்டத்தக்கது, பெருமைப்படத்தக்கது' என்றார்.

மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர். சண்முகம் இ.ஆ.ப. சிறப்பு மலரை வெளியிட்டார்.

விழாவில் கஸ்தூரிபாய்காந்தி மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் சி.ஆர்.காந்தாமணி, மருத்துவத்துறை முன்னாள் இயக்குநர் டாக்டர் ஏ.பி.மரைக்கார், தட்டடத் தலைமைப் பொறியாளர் திரு என். பாலசுப்பிரமணியம், மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் லலிதா காமேசுவரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏ.கே.அப்துல்சமது, திருமதி வளர்மதி ஆகியோர் இம் மருத்துவ மனையின் பணிகளைப் பாராட்டிப் பேசினார்கள்.





கடந்த 50 ஆண்டுகளில் மட்டும் இந்த மருத்துவமனையில் 5.1 இலட்சம் குழந்தைகள் பிறந்துள்ளன. நாட்டில் பெண்கள், குழந்தைகளுக்கென நிறுவப்பட்ட ஒரே மருத்துவமனையாக இது விளங்குகிறது.

கடந்த ஆண்டுகளில் மட்டும் இந்த மருத்துவமனையில் ஆண்டுதோறும் சுமார் 100லிருந்து 200 இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன; 14 தாய்மார்களுக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன. 1984ஆம் ஆண்டில், இந்த மருத்துவமனையின் வரலாற்றிலேயே இல்லாதபடி ஒரு பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் (ஒரு ஆணும், மூன்று பெண்ணும்) பிறந்தன.

நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய், இரட்டைக் குழந்தைகளில் ஒன்றாகப் பிறந்தவர்.

1890ஆம் ஆண்டு இந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. முதலில் பொதுமக்கள் நன்கொடையாக அளித்த ரூ. 80 ஆயிரத்தைக் கொண்டு தொடங்கிய இந்த மருத்துவமனைக்கு, வெங்கட்டகிரி ராஜா ரூ. 1 லட்சம் கூடுதலாக நன்கொடை அளித்தார்.

வேல்ஸ் இளவரசர் வருகையையொட்டி 136ஆம் ஆண்டு மருத்துவமனையின் குழந்தைப் பிரிவு கட்டடம் கட்டப்பட்டது. 1961ஆம் ஆண்டில் பல மாடி மருத்துவக் கட்டடம் கட்டப்பட்டது. 1950ல் சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த போதனைக் கல்வி நிறுவனமாக ஆனது.

1940ஆம் ஆண்டில் இந்த மருத்துவமனையில் 5 ஆயிரத்துக்கும் குறைவான மகப்பேறு பார்க்கப்பட்டது. 1968ல் இது 17,000 ஆக உயர்ந்தது. கடந்த 45ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக இங்குச் சுமார் 13 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன.

நூற்றாண்டு கண்ட இம் மருத்துவமனை, தாய்க்குலத்திற்கு ஆற்றிவருகின்ற அரியதொண்டுகளையெல்லாம் சொல்லாமல் சொல்லியது இந்த விழா என்றால் அது மிகையல்ல!

**பி. வி. கிரி**



1984-85-க்குக் கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1826 வீடுகள் கட்டி முடிக்கப்படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட குறியீடு குறைவின்றி அடையப் பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 87 பேர்களுக்கு வீடு கட்ட கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு 20 அம்சத் திட்டத்தின் கீழ் எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் வட்டம் அவளூர் கிராமத்தில் மொத்தம் 29 வீடுகள் 20 அம்சத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தைச் சேர்ந்த விவசாயக் கூலி வேலை செய்யும் மூன்று பேர்களுக்கு ஸ்ரீபெரும்புதூர் கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தால் தலா ரூபாய் 5,000 கடன் அனுமதிக்கப்பட்டு வீடு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இனிக்கும் புதிய இருபது அம்சத் திட்டத்தின் மூலம் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் பயனடைந்த மக்கள் சிலரின் கருத்துக்கள்:

**கரிகலவாக்கம் திருமதி முனியம்மாள் கூறுகிறார்:**

''எங்கள் கிராமத்தில் 1984-85ஆம் ஆண்டில் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தின் உதவியால் பாரத வங்கி மூலமாக எங்கள் கூட்டுறவுப் பால் வழங்கு சங்கத்தில் உள்ள 160 பேர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கித் தரப்பட்டன. கறவை மாடு ஒன்றுக்கு ரூ. 2,000 கடன் தந்தார்கள். இதில் ரூபாய் 666 மானியம் தரப்பட்டது. நான் தினசரி காலை மாலை இரண்டு வேலைக்கு 4 லிட்டர் பால் ஊற்றி வருகிறேன். ஓர் ஆண்டில் என் கடன் அடைந்து விடும். நிரந்தரமாகத் தினசரி எனக்கு எட்டு ரூபாய் கிடைக்கிறது. இது என் குடும்பத்திற்குப் போதுமானது. இப்பொழுது என் வீட்டில் பட்டினி இல்லை.''

**புல்லரம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர் திரு கணேசன் கூறுகிறார்:**

''எங்கள் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்பில் அதிக இட நெருக்கடி உள்ளதால் அரசு எம்.ஜி.ஆர். நகரில் எங்களுக்கு குடிமனைகள் நான்கு ஆண்டுகளுக்குமுன் தந்தார்கள். ஆனால் நாலைந்து குடிசைகள் மட்டுமே அமைத்துக் கொண்டோம். காற்று மழையில் கடும் அவதிப்பட்டோம். திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தில் பதினாறு பேர்களுக்கு ரூ. 6,000 மதிப்பில் வீடு கட்டித் தந்துள்ளார்கள்''

**வேப்பம்பட்டு திரு.சி. கோவிந்தன் கூறுகிறார்**

''எனக்குச் சொந்த நிலம் கிடையாது. திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தின் உதவியால் கும்பகோணம் நகர வங்கி மூலம் ரூ. 2200 வாத்து வாங்க கடன் தந்தார்கள். இதில் ரூபாய் 733 மானியம் கழித்து விட்டார்கள். என்னிடம் 115 வாத்துகள் உள்ளன. தற்பொழுது முட்டைகள் விற்று தினசரி ரூபாய் பத்து அல்லது பன்னிரெண்டு வரை கிடைக்கிறது. இதில் குடும்பம் பட்டினியின்றி இருக்கிறது. குஞ்சு பொரித்து வளர்த்து என் கடனை அடைத்து விடுவேன். வாத்து முழுதும் எனக்கே சொந்தமாகி விடும். பிறகு எங்கள் வாழ்வில் வறுமையே வராது.''



# மதுரை மாவட்டத்தில்..



மதுரை மாவட்டத்தில் 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்புப்படி 44.45 இலட்சம் மக்கள் உள்ளனர். இதில் தகுதி வாய்ந்த தாய்மார்களின் எண்ணிக்கை 7.68 இலட்சமாகும். மதுரை மாவட்டத்தில் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 28.1 ஆகவும், இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 11.8 ஆகவும் உள்ளது. இம்மாவட்டத்தில் 38 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 20 அரசு மருத்துவமனைகளும் இயங்கி வருகின்றன. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 35 நிலையங்களில் மட்டும், ஆண்களுக்கான நிரந்தரக் குடும்பநலச் சிகிச்சைக்கான வசதிகளும் ஆண்-பெண் இருபாலருக்கான தற்காவ குடும்பநலச் சிகிச்சைக்கான வசதிகளும் உள்ளன.

அரசு மருத்துவமனைகளில் 10ல் மட்டும் தற்சமயம் ஆண்-பெண் இருபாலருக்கான நிரந்தர மற்றும் தற்காலிகக் குடும்பநலச் சிகிச்சைக்கான வசதிகள் உள்ளன. மற்றவற்றில் தற்காலிகக் குடும்ப நலச் சிகிச்சைக்கான வசதிகள் மட்டுமே உள்ளன. நத்தம் மற்றும் வாடிப்பட்டியிலுள்ள இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மட்டும் தாய்மார்களுக்கான நிரந்தரக் குடும்ப நலச் சிகிச்சைக்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இது தவிர, மதுரையில் அரசு ராஜாஜி மருத்துவமனை, தொழிலாளர் காப்பீட்டுக் கழகம் சார்பான மூன்று மருத்துவமனைகளிலும் குடும்பநலச் சிகிச்சைக்கான வசதிகள் உள்ளன.

மதுரை மேலமாசி வீதியில் இயங்கி வரும் அகில இந்தியக் குடும்பநலச் சங்க மருத்துவமனை, காந்திகிராமம் கஸ்தூரிபாய் மருத்துவமனை, மதுரை, பெரியகுளம், ஒட்டன்சத்திரம், அம்பிலிகை ஆகிய இடங்களில் உள்ள கிருத்துவச் சங்க மருத்துவமனைகள், மற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட தனியார் மருத்துவமனைகள் ஆகிய இவையனைத்திலு குடும்பநல நிரந்தரத் தற்காலிகச் சிகிச்சைக்கான வசதிகளும், வாய்ப்புகளும் இருந்து வருகின்றன. ஆகவேதான் மதுரை மாவட்டம் ஒவ்வொரு ஆண்டும், அரசால் தனக்கு நிர்ணயிக்கப்படும் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைக்குறியீடுகளை அடைவது சாத்தியமாகிறது.

குடும்பநலத் துறையைச் சார்ந்த ஏறத்தாழ 220 ஆண் களப்பணியாளர்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்களோடு இணைந்துள்ள கிராமியக் குடும்ப நல மையங்களின் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறார்கள். 20 முதல் 25 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு சுகாதார ஆய்வாளர் வீதம் குடும்பநலத்துறையின் சார்பில் நியமனம் பெற்று மாவட்டக் குடும்பநல அலுவலர் மற்றும் மாவட்ட மக்கள் கல்வி தகவல் அலுவலர் இவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு குடும்ப நலப் பணி செய்து வருகிறார்கள். இது தவிர கிராமியக் குடும்பநல மையத்திற்கு ஒரு பெண் சுகாதாரப் பார்வையாளரும், ஒரு மருத்துவ மாதும், தாய்சேய் நலப் பணிகளையும் குடும்பநலப் பணிகளையும் கவனித்து வருகின்றனர்.

தகுதி வாய்ந்த தாய்மார்களை அணுகி குடும்பநல முறைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறி அவர்களுக்கு எழும் ஐயப்பாடுகளை நீக்கி குடும்பநல முறைகளில் அவர்களுக்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதைப் பின்பற்றச் செய்வதும், குடும்பநலச் சிகிச்சை பெற்றவர்களுக்குத் தொடர்ந்து பின் கவனிப்பு கொடுப்பதும் குடும்ப நலக் களப் பணியாளர்களின் வேலை. அதை அவர்கள் ஆண்டு முழுதும் தொடர்ந்து செய்து வருகிறார்கள். அவர்கள் பணியை அந்தந்த ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களும், மாவட்ட அளவிலான குடும்பநலத் துறை அலுவலர்களும் மேற்பார்வையிட்டும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், அவர்கள் பணி முறையாகவும் சிறப்பாகவும் நடைபெற உதவுகின்றனர்.

மக்கள் மத்தியில் குடும்பநலத் திட்டம் பற்றிய செய்திகளைப் பரப்பவும் சிறு குடும்பநெறிக்கு ஆதரவைப் பெருக்கவும் மாவட்ட குடும்பநல அமைப்பைச் சேர்ந்த மாவட்ட மக்கள் கல்வி தகவல் அலுவலர், இதர அலுவலர்களுடனும், இதர துறைகளுடனும், இணைந்து பல தரப்பட்ட விளம்பரப் பணிகளைச் செய்து வருகிறார்.



# முதுமையிலும் தமிழ் கற்ற பேராசிரியர்

## நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

சிறந்த கல்வியாளரும் அரசியல் வாதியுமான அமரர் பேராசிரியர் இரத்தினசாமியின் நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்ச்சி 18-8-85 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்த அனைவரையும் விழாக்குழுவின் சார்பில் திரு வலம்புரி ஜான், எம்.பி. வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''பேராசிரியர் இரத்தினசாமி அவர்களின் நினைவாக இந்திய அரசின் அஞ்சல் துறை, அஞ்சல் தலை வெளியிட உள்ளது. இது பேராசிரியரின் நூற்றாண்டுத் தொடக்கம்தான். நிறைவின் போது மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் கலந்துகொள்வார்கள்'

விழாவைத் தொடங்கிவைத்த மாண்புமிகு மத்திய தொழிலாளர் நலத்துறை இணை அமைச்சர் திரு அஞ்சையா தமது உரையில் தெரிவித்தார்:

''பேராசிரியர் இரத்தினசாமியின் பண்பு, அவரது திறன் போன்றவை இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. இவற்றை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும்.

''அவரது அரசியல் நோக்கில் குறுகிய எண்ணங்கள் இருந்ததில்லை. கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவரது எண்ணங்களும் செயல்களும் நாட்டின் மொத்த நன்மை, வளவாழ்வு ஆகியவற்றை ஒட்டியே இருந்தன.''

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்;

''மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் கொள்கைப்படி, இரத்தினசாமி அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவைத் தமிழக அரசு சிறப்பாக, சென்னையில் நடத்தும் என்பதைப் புரட்சித் தலைவரின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இரத்தினசாமி அவர்கள் வாழ்ந்த ஸ்டார்லிங் சாலை, ரத்தினசாமி சாலை என்று புரட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று மாற்றப்படும்.



மனைவி ஜெபமாலைமேரி, சகோதரி மேரி ஆகியோருடன் பேராசிரியர் ரத்தினசாமி (1914).





பேராசிரியர் ரத்தினசாமி அவர்களின் மருமகள் (கடைசி மகனின் மனைவி) டாக்டர் ஹன்சுயின். சீன நாட்டைச் சேர்ந்த இவர் புகழ் பெற்ற நாவல் ஆசிரியை ஆவார். இவர் தனது கணவருடன் ஜெனிவாவில் வசித்து வருகிறார்.

''பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் சிறு வயதிலிருந்தே ஆங்கிலப் பயிற்சி பெற்று, பட்டம் பெற்று சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்து கல்வியில் நாட்டத்தைச் செலுத்தினார். தமிழ் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தமது 50-வது வயதில் தமிழைப் பயின்றார். சான்றோர்கள் கடைசி வரை கற்றுக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதை இந்தக் காலத்து இளைஞர்கள் உணர வேண்டும்.''

பேராசிரியரின் உருவப் படத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு மத்திய சமூக நலத்துறை இணை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் குறிப்பிட்டார்:

''அனைவரும் கல்வி அறிவு பெற்றுத் திகழ வேண்டும் எனப் பாடுபட்டவர் இரத்தினசாமி. எல்லோரும் கல்வி அறிவு பெற்றால் தான் சமுதாய ஏற்றத் தாழ்வு நீங்கும் என்ற உணர்வுடன் அவர் செயலாற்றினார். நாட்டு ஒற்றுமைக்காகப் பெருந்தொண்டாற்றியவர் அவர்.''

மாண்புமிகு தமிழகத் தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாராம் தமது உரையில் தெரிவித்ததாவது :

''இரத்தினசாமி நியாயமானவர். மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டவர்களில் இவர் முதன்மையானவர். பொதுவாழ்க்கையில் புனிதராக வாழ்ந்தவர். மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பேராசிரியர் இரத்தினசாமியிடம் மிகுந்த ஈடுபாடு இருந்தது.''

பேராசிரியர் என். ஜி. ரங்கா எம். பி., சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு என். டி. சுந்தரவடிவேலு, ஆர்ச் பிஷப் திரு அருளப்பா, திரு கோவிந்த் சுவாமிநாதன், டாக்டர் ஔவை நடராசன் சீன எழுத்தாளரும் ரத்தினசாமியின் மருமகளுமான ஹான் சயீன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

விழா இறுதியில் தேசிய ஒருமைப் பாட்டை வலியுறுத்தி திரு வலம்புரி ஜான் எழுதிய 'நம் நாடு' என்ற நாட்டிய நாடகத்தை உமா தண்டாயுதபாணி குழுவினர் அரங்கேற்றினர்.

—சுந்தர்

சென்னையில் 15.8.1885ல் பிறந்தவர்.

92 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்.

சட்டக் கல்வி படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் என்றாலும் அதை விடுத்து கல்வித் தொண்டில் ஈடுபட்டார்.

சட்டக் கல்லூரி முதல்வராகவும், பச்சையப்பன் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றியிருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை இருமுறை மேற்கொண்டிருக்கிறார்.

நீதிக் கட்சியில் உறுப்பினராக இருந்தார்.

சிறந்த நூலாசிரியர்.

### பேராசிரியர் ரத்தினசாமி



### சில தகவல்கள்

* ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ். இந்தி ஆகிய மொழிகளில் வல்லவர்.
* புனித கிரகோரியின் மகன் என்ற விருதினை போப் ஆண்டவரிடமிருந்து பெற்றவர்.
* தமது நூலகத்தில் 17 ஆயிரம் புத்தகங்களை வைத்திருந்தார். தம்மால் படிக்க முடியாமற் போனபோது அவற்றை லயோலா கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கினார்.
* இந்திய அரசின் பத்மபூஷன் விருதைப் பெற்றிருக்கிறார்.
* எழுத்தாளர். பத்திரிகையாசிரியர், பேச்சாளர்.
* ரெயில் நிர்வாகத்தைப் பற்றித் தமது பத்திரிகையில் எழுதி, குறைபாடு நீங்கப் பாடுபட்டிருக்கிறார். பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி ஆகியோரிடம் ஈடுபாடு கொண்டவர்.

குடும்பநலம் பற்றிய சினிமாப் படங்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்பகுதிகளிலும் தொடர்ந்து காட்டப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு 215 இடங்களில் படக்காட்சிகள் நடத்தப்பட்டன. நாடகம், கலைநிகழ்ச்சிகள் மூலமாகவும் குடும்பநலத் திட்டத்தின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு 20 கலை நிகழ்ச்சிகளும், 12 நாடகங்களும் நடத்தப்பட்டன. பட்டி மன்றங்களை மக்கள் விரும்பிக் கேட்கின்றனர். கடந்த ஆண்டு இரண்டு இடங்களில் குடும்பநலப் பட்டி மன்றங்கள் நடத்தப்பட்டன.

குடும்பநலத் தலைவர்கள் பயிற்சி முகாம்கள் நடத்துவதன் மூலம் நூற்றுக்கணக்கான தாய்மார்களும், தந்தைமார்களும் தங்கள் தங்கள் மனத்திலுள்ள சந்தேகங்களைக் கேட்டு தங்கள் விளக்கங்கள் பெற வழி வகை செய்யப்படுகிறது. குடும்பநல முறைகள் பற்றிய விவரங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டில் அத்தகைய குடும்பநலத் தலைவர்கள் பயிற்சி முகாம்கள் 85 கிராமப் பகுதிகளில் நடத்தப்பட்டன. ஒவ்வொரு முகாமிலும் 40 தலைவர் தலைவியர் பங்கு கொண்டு பயன் பெற்றனர். கிராம அளவில் நடந்த பயிற்சி முகாம்களில் பங்கு கொண்ட தலைவர் தலைவியரில் 60பேரை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கென்று மாவட்ட அளவில் ஒரு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

சித்த, ஓமியோபதி தனியார் மருத்துவர்களுக்கான குடும்பநலப் பயிற்சி முகாம் ஒன்றும் பழனியில் நடத்தப்பட்டது. அதில் முப்பதுக்கும் மேற்பட்ட தனியார் மருத்துவர்கள் கலந்து கொண்டார்கள்.

மாணவர்களுக்கு இளம் பருவத்திலேயே மக்கள் தொகைக்கல்வி கருத்துக்களைப் பரப்பும் நோக்கோடு கல்லூரிப் பேராசிரியர்களுக்காக மக்கள் தொகைக் கல்விக் கருத்தரங்கு ஒன்றும் உயர் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியைகளுக்கான மக்கள் தொகைக் கல்விக் கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டன.

மாவட்ட குடும்பநல அமைப்பின் சார்பில் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்கின்ற இடங்களில் [illegible] [illegible] [illegible] கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. இது தவிர ஆண்டுதோறும் சித்திரைப் பொருட்காட்சியில் குடும்பநலத் துறை சார்பில் கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு படங்கள் மூலமாகவும், கருவிகள் கொண்டும் குடும்பநலத் திட்டம் பற்றி பார்வையாளர்களுக்கு விளக்கங்கள் தரப்படுகின்றன. நாள் தோறும் குடும்பநலப் படக் காட்சிகளும் நடத்தப்படுகின்றன.

கடந்த ஆண்டு பிரத்யேகமாக நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் முக்கியமானவை செப்டம்பரில் கொடைக்கானலில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான குடும்பநல நிரந்தரச் சிகிச்சைக் கருத்தரங்கும், அதையொட்டி சோழவந்தான் கிராமத்



தில் நடைபெற்ற கிராமியக் கலை விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகளுமாகும்.

குடும்பநலச் சிகிச்சைக்கான குறியீடு நடந்த ஆண்டு முந்திய ஆண்டுகளை விட அதிகம், எனவே அந்தக் குறியீட்டினை எப்படியும் அடைந்துவிட வேண்டும் என்று கடந்த ஆண்டின் முற்பகுதியில் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி. சந்திரலேகா இ.ஆ.ப. அவர்களும், ஆண்டின் பரபரப்பான இறுதிப் பகுதியில் பொறுப்பேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. [illegible] இ.ஆ.ப. அவர்களும் [illegible] டார்கள். [illegible] பணிந்தது. இருபது. இருபத்தைந்து என்று லெப்ராஸ்கோபிக் முகாம்கள் மாவட்டத்தின் முக்கிய மருத்துவ மனைகளிலெல்லாம் முறையாக நடத்தப்பட்டன. பம்பாய் மருத்துவர் டாக்டர் இரானி அவர்கள் மாதா மாதம் வரவழைக்கப்பட்டார். மாவட்ட ஆட்சியாளரின் ஆய்வுக் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட்டன. அவர்கள் முயற்சி வீண் போகவில்லை. கடந்த ஆண்டு மதுரை மாவட்டம் தமிழ்நாடு அரசு நிர்ணயித்த குறியீட்டை அடைய முடியாவிட்டாலும், மத்திய அரசு நிர்ணயித்த குறியீட்டினை அடைந்து சாதனை நிகழ்த்தியுள்ளது.

**பயறு வளர்ச்சித் திட்டம்:**

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறையின் மூலமாக பயறு வளர்ச்சித் திட்டம் அமலாக்கப்பட்டு வருகிறது.

1984-85-ஆம் ஆண்டு பயறு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறு உற்பத்தி 38,000 மெட்ரிக் டன்னாக இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில் இம்மாவட்டத்தில் அடைந்த மொத்த சாதனை 38,045 மெ. டன்.



பயறு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறு வகைப் பயிர்கள் இம் மாவட்டத்தில் கடலையுடன் ஊடு பயிராகவும் சோளம் மற்றும் இதர தானியப் பயிர்களுடன் ஊடுபயிராகவும் தனிப் பயிராகவும் பயிரிடப்படுகிறது. நெல் வயல் வரப்புகளில் குறுகிய காலத்தில் பலன் அளிக்கும் பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

நெல் அறுவடை முடிவடைந்ததும் வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டு உளுந்து மற்றும் பாசிப்பயறு இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது.

தனிப்பயிராகப் பயிரிடப்படும் பயறு வகைப் பயிரில் விதைத்த 25வது மற்றும் 35வது நாளில் ஏக்கர் ஒன்றுக்கு 4 கிலோ டைஅமோனியம் பாஸ்பேட்டை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து அக்கரைசல் இலை மீது தெளிக்கப்படுகிறது. இதனால் பயறு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

பயறு வகைகள் விதைக்கும் பொழுது பயறு விதைகளுடன் நுண் உயிர்ப் பொட்டலம் கலந்து விதைக்கப்படுகிறது. இதனால் வாயு மண்டலத்தில் உள்ள தழைச்சத்து வேர்முடிச்சு மூலம் கிரகிக்கப்பட்டு பயறு உற்பத்தி அதிகரிக்கிறது. இந்த ஆண்டு 38,400 நுண் உயிர்ப் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

பயறு உற்பத்தியை அதிகரிக்க சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 4 கிலோ பயறு விதையுடன் 20 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 6120 என் மினுகிட்டுகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு மானியமாக ரூ. 6,12,000 வழங்கப்பட்டுள்ளது.

பயறு வகைப் பயிரில் விழும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லிமருந்துகள் 25 சதவிகித மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மானியமாக ரூ. 5010-க்குப் பூச்சிக் கொல்லி மருந்துகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மருந்துகள் தெளிப்பதற்குத் தெளிப்பான் மானியமாக எக்டேர் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் 452 எக்டேருக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.



**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் ரூ. 1984-85ஆம் ஆண்டின் ஒதுக்கீடு ரூ.272 இலட்சம் மானியம் ஆகும். உதவி அளிக்கப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை 20,400 ஆகும்.

31-3-85 முடிய ரூ. 272 இலட்சம் மானிய குறியீட்டிற்கு எதிராக ரூ. 309.45 இலட்சம் மானியம் செலவிடப்பட்டு வங்கியிலிருந்து ரூ. 656.50 இலட்சம் கடன் பெறப்பட்டது. இது ஆண்டுக் குறியீட்டில் 114 சதவிகிதம் ஆகும். இவ்வாண்டில் 20,400 குடும்பக் குறியீட்டிற்கு எதிராக 29,092 குடும்பங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இச்சாதனை குறியீட்டில் 143 சதவிகிதமாகும்.

1984-85ஆம் ஆண்டில் குறைந்தது 10,200 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கிற்கு எதிராக 14,613 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 144.53 இலட்சம் மானியம் விநியோகிக்கப்பட்டு ரூ. 230.46 கடன் வங்கியிலிருந்து பெறப்பட்டது. இது குடும்பக் குறியீட்டில் 143 சதவிகிதமாகும்.

பெண்களுக்கு இந்த ஆண்டில் வட்டாரத்திற்கு 200 நபர்கள் வீதம் மொத்தம் 6800 பெண்களுக்கு மானியம் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதற்கு எதிராக 9434 பெண்களுக்கு மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. இது குறியீட்டின் 139 சதவிகிதமாகும்.

**வேளாண்மை உற்பத்திப் பெருக்க பேருதவித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் நடப்பு 1984-85ஆம் ஆண்டில் 3907 குடும்பங்களுக்கு வங்கிகளின் கடன் உதவியால் ரூ. 85.09 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டு ரூ. 180.45 இலட்சம் கடன் வங்கியிலிருந்து பெறப்பட்டது. இது கடந்த ஆண்டினைவிட ரூ. 30 இலட்சம் கூடுதலாக மானியம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மானிய உதவியினால் 287 புதிய கிணறுகள் வெட்டவும், 3529 ஆயில் என்ஜின்கள் வழங்கவும், 492 பழைய கிணறுகள் சீர்திருத்தவும், 165 குழாய்கள் அமைக்கவும், 319 கிணறுகள் ஆழப்படுத்துவதற்கும்,

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் பரவியிருந்தது. ஏழாவது திட்டத்திலும் தொடர்ந்து வருகின்றது. சிறு விவசாயிகள், கைவினைஞர்கள், நிலமற்ற தொழிலாளர் மற்றும் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழ் உதவியளிக்கப்பட்டது. கூட்டுறவு, வர்த்தக மற்றும் கிராமப்புற வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டது. எல்லோருக்கும் 3,000 ரூபாய் மானியம் அளிக்கப்பட்டது. சிறப்பாக ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும்ஆதிதிராவிடப் பழங்குடியினருக்கு 5,000 ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 16.56 மில்லியன் வறிய குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினருக்குச் சிறப்புச் சலுகை அளிக்கப்பட்டது. 1980-81ஆம் ஆண்டில் 7.8 இலட்சம் குடும்பத்தினர் மட்டுமே பயனடைந்திருந்தனர். 1983-84ல் 17.3 இலட்சம் குடும்பத்தினர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தனர்.

தனி நபருக்கு அளிக்கப்பட்ட கடன் தொகை 1060 ரூபாயிலிருந்து 2134 ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும் தனிநபர் மானியத் தொகை 58 ரூபாயிலிருந்து 1190 ரூபாயாக அதிகரித்துள்ளது. வறுமைக் கோட்டிலிருந்து பொருளாதாரத்தில் 49 சதவீத மக்கள் இத்திட்டத்தினால் உயர்ந்துள்ளனர்.

'டிரைசெம்' என்று அழைக்கப்படும் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி மற்றும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் 18லிருந்து 35 வயது வரையிலுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்டு தோறும் 2 இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்க இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆறாவது திட்ட காலத்தில் 10 இலட்சம் இளைஞர்கள் டிரைசெம் மூலம் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் 50 சதவீதத்தினர் ஏற்கெனவே சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் இதன் மூலம் பயிற்சி பெற்றுள்ளனர்.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சிறப்புத் திட்டம் ஒன்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னோடித் திட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. பெண்களைக் குழுக்களாகப் பிரித்து அவர்களிடையே வருவாய் வருவதற்கான தொழிலைச் செய்யும்படி ஊக்குவித்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அறுவடை இல்லாத காலங்களில் கிராமப்புற மக்களுக்குத் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. அவர்களுக்குக் கூலியில் பாதிக்கு உணவுத் தானியங்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஐந்தாண்டுகளில் 1819 கோடி ரூபாய் இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டது. ஆண்டுதோறும் 300 முதல் 408 மில்லியன் மனித வேலை நாட்கள் ஏற்படுத்தித் தரப்பட்டன. 9.13 இலட்சம் எக்டேருக்குச் சிறு பாசன வசதி மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள் அமைத்துத் தரப்பட்டன. 5 இலட்சம் எக்டேருக்கு மண் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 4.28 இலட்சம் கிலோ மீட்டர் நீளத்திற்குக் கிராமப்புறச் சாலைகள் போடப்பட்டன. 2 இலட்சம் பள்ளிக் கூடக் கட்டடங்கள் மற்றும் சமூகநலக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டன.



# வளர்ச்சிப் பாதையில் கிராமங்கள்



# செங்கல்பட்டு மாவட்டத்தில்..

செங்கல்பட்டு மாவட்டத்தில் நெற்பயிருக்கு அடுத்த இடத்தை வகிப்பது பயறு வகைப் பயிராகும். பயறு வகைப் பயிர்கள் 40,420 எக்டேரில் பயிரிடப்பட்டு 17,100 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. பயறு வகைகள் பெரும்பகுதி மானாவாரியாகவும், ஊடு பயிராகவும் பயிரிடப்படுவதால் இதன் உற்பத்தி கணிசமான அளவு கூடுதல் அடைய சான்று பெற்ற விதைகள் வழங்கியும் பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இவ்வாண்டு உற்பத்தி இலக்கைவிட 2100 டன் அதிகம் விளைவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக உளுந்து பயிரில் மிக குறுகியகால இரகமான டி. 9. அதிக அளவாகப் பயிரிடப்படுகிறது. இறவையில் தனிப் பயிராக டி. எம். வி. 1 உளுந்து அதிக அளவில் இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்படுகிறது. புதிய இரகங்கள் அதிகப் பரப்பளவில் மிகக் குறுகிய காலத்தில் புகுத்த 5360 மினிகிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மினிகிட்டுகள் மத்திய அரசு மானியத்தின் இலவசமாக மிகச் சிறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு அதிக அளவு வழங்கப்பட்டன.

பயறு வகை உற்பத்தியைப் பெருக்க 65 முதல் 70 நாட்கள் வரை குறுகிய கால இரகங்கள் பயிரிடப்பட்டு, இறவையில் நல்ல பயனை அளித்து வருகிறது. இறவையாக இரண்டு மாதத்தில் ஆண்டு முழுவதும் பயிரிடக்கூடிய உளுந்து டி. 9 மற்றும் பாசிப் பயறு கே. 851 பயிரிடப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் இவை தனிப் பயிராகப் பயிரிடப்படுவதால், எக்டேருக்கு 400 கிலோ வரை மகசூல் எடுத்து குறுகிய காலத்தில் அதாவது 65 நாட்களில் ரூ. 2,000 வரை நிகர இலாபம் பெற்றுள்ளனர். பயறுவகை மானியமாக ரூ. 5.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 108 டன் தரமான விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு மானிய உதவியுடன், பயறுவகை உற்பத்திக்கு முக்கிய பங்கு வகிக்கும் டை அம்மோனியம் பாஸ்பேட் உரக் கலவைத் தெளிப்பதற்கு 100 எக்டேருக்கு 1000 ரூபாய் மானியமாக வழங்கியும் சான்று பெற்ற விதை உற்பத்திக்கு ரூ. 12500 வழங்கியும் தனிப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பயறு உற்பத்திக் கூடுதல் பெற இந்தத் திட்டங்கள் அனைத்தும் உதவின.

20 அம்சத் திட்டத்தின் 9 (பி) அம்சத்தின்படி கிராமத்தில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வீடு கட்ட நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்த நிதி உதவி கிராமிய வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் தகுதி வாய்ந்த நபர்களுக்கு அளிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏழு கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் உள்ளன. வீடு கட்டுவதற்காகத் தற்சமயம் ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 3,500 வட்டியில்லாதக் கடனாகவும் ரூ. 1,000 மானியமாகவும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்கு ரூ. 4,500 கடனாக வழங்கப்படுகிறது. கடன் தொகை 4 தவணைகளில் கட்டுமானத்தில் முன்னேற்றத்தினைக் கணக்கில் கொண்டு வழங்கப்படுகிறது. 201 சதுர அடிக்கு வீடுகள் கட்டப்பட வேண்டும்.

# மாவட்டங்களில் 20 அம்சத் திட்டச் சாதனைகள்

140 ஏக்கர்கள் நிலச் சீர்திருத்தம் செய்யவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டிலும் இத்திட்டம் செயல்பட உள்ளது.

**தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்:**

இத்திட்டத்தில் 1984-85ஆம் ஆண்டில் 2693 வேலைகள் எடுக்கப்பட்டு 2626 வேலைகள் 31-3-85-ல் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் இனி ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 451.99 இலட்சங்களாகும். இத்தொகையில் ரூ. 452.65 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 35.88 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கிற்கு எதிராக 35.90 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம்:**

கிராமப்புறத்திலுள்ள நிலமற்ற உழைக்கும் சக்தி கொண்டோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக அரசு சிறப்புத் திட்டம் ஒன்றினை மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது. சாலை அமைத்தல், பாசனக் கால்வாய்களைப் புனரமைத்தல், பாசன ஏரிகளைச் சீர் செய்தல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு இனாமாக வீடு கட்டிக் கொடுத்தல் ஆகிய வேலைகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1 கிலோ அரிசியும், மீதம் பணமாகவும் மொத்தம் ரூ.7-க்குக் குறையாமல் (1-10-84 முதல் ரூ.8) வழங்கப்படுகிறது.

1984-85ஆம் ஆண்டில் 25 ஊரகச் சாலைகள் ரூ. 109.04 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 65.85 இலட்சம் செலவினமும், 402.281 மெ.டன் அரிசி கூலியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 4.82 மனித சக்தி நாட்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 10 வேலைகள் முடிந்த நிலையிலும், மீதமுள்ள 15 வேலைகள் முன்னேற்றத்திலும் உள்ளன. இத்திட்டம் நெடுஞ்சாலை கிராமப் பணி மற்றும் கிராமச் சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு மற்றும் பாசன ஏரிகள் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 180 வேலைகள் ரூ. 725.53 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 98.09 இலட்சம் செலவினமாகவும், 367.242 மெ. டன் அரிசி கூலியாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 66 வேலைகள் முடிவு பெறப்பட்டுள்ளன. மீதி வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணியில் 6.99 இலட்சம் மனித நாட்கள் பெறப்பட்டுள்ளன. இது பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டில் 280 வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், மண் அரிப்பு தடுக்கப்படுவதோடு நிலத்தடி நீர் வளம் பெருகி விவசாய உற்பத்தியும் பெருகும். வேளாண்மைப்பொறியியல் துறையினர் இதுவரை 247 வேலைகள் மேற்கொண்டுள்ளார்கள். ரூ 148.55 இலட்சம் செலவினமாகவும் 497.428 மெ. டன் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. 83 வேலைகள் முடிவுற்றன. 8.32 இலட்சம் மனித நாட்கள் பெறப்பட்டுள்ளன. மீதமுள்ள வேலைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்கள் குடியிருப்பு :**

இத்திட்டத்தின் கீழ் ஏழை ஆதி திராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 6,000 செலவு செய்யப்படுகிறது. மலைப் பகுதியாயின் ரூ. 9000 செலவாகிறது. இது முழுவதும் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் கட்டமாக 1984 ஜூலை மாதத்தில் 690 வீடுகள் மதுரை மாவட்டத்திற்குஒதுக்கப்பட்டன. 690 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இரண்டாவது கட்டமாக மேலும் 780 வீடுகள் கட்டும் பணி அக்டோபர் 84-ல் துவக்கப்பட்டுள்ள. இதில் 685 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய வீடுகள் முடியும் தறுவாயில் உள்ளன.

**கவலையை நீக்கிய கைத்தொழில்**

அரசின் சிறிய திட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் ஒன்று. இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் நன்முறையில்செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால்பயனடைந்து வறுமைக்கோட்டினைத் தாண்டியவர் பலர்.

இத்திட்டத்தில் பயனடைந்த பலரில் மதுரை மாவட்டம் பழனி வட்டம் அமர பூண்டி கிராமத்தைச் சேர்ந்த கருப்பண்ணன் என்பவரின் மகன் திரு கே. சின்னராஜ் என்பவரும் ஒருவராவார்.

இவர் இத்திட்டத்தால் பயனடையும் முன் எஸ். எஸ். எல்.சி. படித்துவிட்டு வேலையின்றி வீட்டில் இருந்தார். ஓரளவு படித்துவிட்டு ஏற்ற வேலையின்றி சோம்பலாய் வாழ்நாள் வீணாவதை எண்ணிக்கவலைப்பட்டார். இவரது குடும்பத்தில் மொத்தம் 6 பேர்கள். எல்லோரும் விவசாயக் கூலி வேலை செய்து தங்கள் வாழ்க்கையை மிகவும் கஷ்டத்துடன் நடத்தி வந்தனர். இவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்.

1982-ஆம் ஆண்டு இவர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கிராமப் புற இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் சுயவேலை வாய்ப்புப் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருக்குத் திண்டுக்கல் ஐ.டி.ஐ பயிற்சி நிலையத்தில் 6-12-82 முதல் 28-5-83 முடிய 6 மாதக் காலம் டீசல் மெக்கானிசம் மற்றும் ஆட்டோ மெகானிசம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது ஒவ்வொரு மாதமும் ரூ. 125 வீதம் 6 மாதங்களுக்கு ரூ. 950 மானியமாக வழங்கப்பட்டது.

பயிற்சி முடிந்தவுடன் பழனி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் இவருக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.3,000 மானியத்துடன் கூடிய கடன் ரூ. 10,000 அனுமதிக்கப்பட்டு, அதன் மூலம் தொழிற் கருவிகள் பெற்று பழனியில் ஒரு கடை வைத்து சொந்தத்தில் டீசல் மற்றும் ஆட்டோ மெக்கானிக்காகப் பணியாற்றி வருகிறார். இவருக்கு பழனி, தொப்பம்பட்டி மற்றும் ஒட்டன் சத்திரம் ஆகிய ஊராட்சி ஒன்றியத்தின் பகுதியிலிருந்து வேலைகள் பெற்று நன்முறையில் தொழில் செய்து வருகிறார்.

தற்போது இவர் சுயமாகத் தொழில் நடத்துவதுடன், தனது கடையில் இரண்டு பேர்களை வேலைக்கு அமர்த்தியும் உள்ளார். தற்போது நாள் ஒன்றுக்கு ரூ. 30 நிகர வருமானம் கட்டிக் கொண்டு தன்னுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு, அரசின் திட்டத்தின் மூலம் வறுமையைப் போக்கி வளமான வாழ்வு வாழ்ந்து வருகிறார்.



# தஞ்சை மாவட்டத்தில்...



தமிழகத்தின் நெற்களஞ்சியமாகத் திகழும் தஞ்சைத் தரணியில் சற்றேறக்குறைய 14 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. காவிரியாற்றின் நீரைக் கொண்டே இந்நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. சில இடங்களில் இருபோகச் சாகுபடியும், மற்றைய நிலங்களில் ஒரு போகச் சாகுபடியும் செய்யப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் நிலவி வரும் பருவ நிலையே இவ்விருபோகச் சாகுபடியை அதிகரிக்கத் தடையாயிருந்து வந்தது. இவ்விருபோக நிலங்களில் முதல் போகமாகக் குறுவை என்றழைக்கப்படும் குறுகிய கால நெல் வகைகளும் பயிரிடப்படுகின்றன. காவிரியின் நீர்த்தேக்கமான மேட்டூர் அணையிலிருந்து பருவ நிலையை அனுசரித்து ஜூன் மாதத்தில் தண்ணீர் விடப்படுவதும், பருவநிலை பாதகமாக உள்ள ஆண்டுகளில் இது இன்னும் பின்னடைந்து ஜூலை மாத வாக்கில் விடுவதும் இயல்பாக உள்ளது. ஆற்றில் தண்ணீர் வந்த பிறகு, நடவு செய்யப்படும் குறுவை நாற்றுகள் அறுவடைக்கு வரும் போது வடகிழக்குப்பருவக்காலம் தொடங்கி நல்ல மழைக்காலமாகிவிடுவதால் அறுவடை பாதிக்கப்பட்டு விளைச்சல் பெரும் சேதம் ஏற்பட்டுவிடுவதால் இவ்விருபோகச் சாகுபடிப் பரப்பு அதிகரிக்காமலேயே இருந்து வந்தது.

ஆனால், வளர்ந்து வரும் மக்கட்தொகையின் தேவைக்கேற்ப உணவு உற்பத்திப் பெருக வேண்டிய நிலை ஏற்பட்டதால், இதில் அதிககவனம்செலுத்தப்பட்டது. ஆகவே, புதிய 20 அம்சத் திட்டத்தில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் தொடர்பாக, குறுவைச் சாகுபடிக்கு ஆற்றில் தண்ணீர் வந்த பிறகு நாற்று விட்டுப் பயிர் செய்வதைத் தவிர்த்து முன் கூட்டியே நாற்றுவிட்டு ஆற்றில் தண்ணீர் வந்தவுடன் பயிர் செய்தால் மழைக்காலம் தொடங்கு முன்னரே அறுவடையை முடித்து இரண்டாவது பயிர் நடவும் செய்துவிடலாம் என்று உணரப்பட்டது. இவ்விதம் முன்கூட்டியே நாற்று விட தண்ணீர் வசதி தேவைப்பட்டது. இத்தேவையை நிவர்த்தி செய்யவே வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இத்துறையின் மூலமாக அமைக்கப்பட்டன. வடிமுனைக்குழாய்க் கிணறு என்பது பூமிக்கடியில் மேல் மட்டத்துள்ள நீர்ப் பிடிப்புள்ள மணல்







# சேலம் மாவட்டத்தில்

சேலம் மாவட்டத்தில் புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 1984-85ஆம்ஆண்டில் விவசாயப் பொறியியல் துறை மூலம் கீழ்க் கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன.

மானாவாரி நிலங்களை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் கீழ், சம உயர வரப்பிடும் பணியானது, 10 ஆயிரம் ஏக்கர் பெரு விளக்கப் பண்ணைகள் மேற்கொள்ளப்பட்டன 1490எக்டேர்கள் இத்திட்டத்தின் மூலம் மேம் ப்படுத்தப்பட்டு 4,400 விவசாயிகள் பயன டைந்தனர். 498 குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் உயர உதவப்பட்டது. இத் திட்டத்தின் மூலம் 30 சதவீதம் கூடுதல் உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.



மண் அரிப்பைத் தடுப்பது, மண்ணில் ஈரப் பதத்தைக் காப்பது, இடப்படும் உரங்கள் மழை நீரினால் அடித்துச் செல்லப்படாமல் காப்பது போன்றவை சம உயர வரப்பிடுவ தால் ஏற்படும் பலனாகும்.

### பாசன வசதியை அதிகப்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத் தில் 20 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, இதனால் 160 எக்டேர் பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதி கிடைக்கப் பெற்றது.

கிணறுகளில் துளையிடும் திட்டத்தின் கீழ் 400 கிணறுகள் துளையிடப்பட்டு இத னால் 100 எக்டேர் பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதி கிடைக்கப்பெற்றது. மேலும் கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் 504 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, 200 எக்டேர் பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதி கிடைக்கப்பெற்றது. இத்திட்டத்தின் மூலம் 300 டன்கள் கூடுதல் உணவு உற்பத்தி எதிர் பார்க்கப்படுகின்றது.

### வயது வந்தோர் கல்வித் திட்டம்

1984-85ஆம் ஆண்டில் வயது வந்தோர் கல்வித் திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமல் செய்யப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமான அளவில் இத்திட்டத்தினால் கிராம மக்கள் பயனடைந்து உள்ளனர்.

| | பயனடைந் தோர். |
|---|---|
| 1. வயது வந்தோர் கல்வி (15—35 வயதுப் பிரிவு) | |
| அ. மாநில வயது வந்தோர் கல்வித்திட்டம் | 30,383 |
| ஆ. கிராமிய செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் | 19,291 |
| இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் | 2,300 |
| 2. எட்டறிவு நிலைத் திட்டம் | |
| அ. மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் | 3,400 |
| ஆ. தொண்டு நிறுவனங்கள் | 2,250 |
| 3. முறைசாராக் கல்வி (6—14 வயதுப் பிரிவு) மாநில அரசுத்திட்டம் | 350 |
| 4. தொழிற்கல்வி மையங்கள் | 135 |
| | 58,109 |

இம்மாவட்டத்திற்கான 1984-85ஆம் ஆண்டின் இலக்கு 52,950 ஆகும்.

படித்திலிருந்து நீர் பெறும் வகையில் அமைக்கப்படும் குறைந்த ஆழமுள்ள குழாய்க்கிணறு ஆகும். இதன் ஆழம் 25லிருந்து 60 அடி வரை இருக்கலாம். இவ்வடிமுனைக்குழாய்க்கிணறு அமைக்க இயலாத இடங்களில் மேலும் ஆழமுள்ள ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு அமைக்கப் பெற்ற வடிமுனைக்குழாய்க் கிணறு ஒன்றின் மூலம் 2 எக்டேர் நிலப்பரப்பும், ஆழ்குழாய்க் கிணறு ஒன்றின் மூலம் 4 எக்டேர் நிலப்பரப்பும் பாசன வசதி பெறலாம்.

இவ்விதம் அமைக்கப்பட்ட கிணறுகள் முன்கூட்டியே, நாற்று விடுவதற்குப் பயன்பட்டதுபோக நடவு செய்யவும், கோடை சாகுபடி செய்யும் காலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் பயிர் சேதமடையாவண்ணம் போதிய நீர் வசதி பெறவும் பயன்படுகின்றன. மற்றும் நெல் ஒன்றே பெருமளவில் பயிர் செய்து அதிக இலாபம் பெற வழியென்றிருந்த நிலையில் கோடைப் பயிராகப் பருத்தி, கடலை, மக்காச்சோளம் போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் இத்துறையின் மூலம் கைத் துளைக் கருவிகளும், விசைத் துறைக் கருவிகளும் விவசாயிகளுக்கு வாடகை முறையில் வழங்கி மேற்படி வடிமுனைக் குழாய்க்கிணறுகளும், ஆழ்குழாய்க்கிணறுகளும் அமைத்துத் தரப்படுகின்றன. புதிய 20 அம்சத் திட்டத்தின்கீழ் பாசன வசதியைப் பெருக்குவதன் மூலமாக உற்பத்தியை அதிகரிக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த 1984-85 நிதியாண்டில் இம்மாவட்டத்தில் 2378 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும், 1281 ஆழ்குழாய்க்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 9880 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் 1984-85ஆம் ஆண்டில் புதிதாக 350 சிறுதொழில்கள் துவக்கப்படவேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இவ்விலக்கை மாவட்ட ஆட்சியரின் தீவிர முயற்சியால் 56 சதவிகிதம் அதிகமாக நிறைவேற்றி 540 சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தொழிலகங்களால் 4400 பேருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இந்தத் தொழிலகங்களின் முதலீடு ரூபாய்330 இலட்சம் ஆகும். இவற்றுள் படித்த வேலை கிடைக்காத இளைஞர்களால்



பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்ட 279 சிறுதொழிற்சாலைகளும் அடங்கும். இவைகளில் பொறியியல் தொழிற்சாலைகள், வெல்டிங் ஒர்க்ஸ், அச்சகங்கள், ஆட்டோமொபைல் ரிப்பேர் கூடங்கள், ரேடியோ ரிப்பேர், டெலிவிஷன் ரிப்பேர், பேக்கரி, சேமியா தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதரத் தொழிற்சாலைகள் அடங்கும்.

அத்துடன் கைவினைஞர்களால் 151 தொழிற்சாலைகள் தொடங்க உதவியளிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றால் 423 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

இத்தொழிலகங்களின் முதலீடு ரூபாய் 64 இலட்சம். இவைகளுள் கலைத்தட்டு தயாரித்தல் குத்துவிளக்கு தயாரித்தல், வெண்கலப் பொருட்கள் தயாரித்தல், காகிதப் பொம்மைகள் தயாரித்தல், கலையம்ச ஆபரணங்கள் தயாரித்தல், தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள், கண்ணாடிக் கலைப் பொருட்கள், நெட்டி வேலைப் பொருட்கள் போன்ற பல்வேறு கைவினைப் பொருட்கள் அடங்கும்.

**கிராமிய வீட்டுவசதி :**

ஆதிமனிதன் தேவைக்கேற்ப மரக்கிளைகளிலும் குகைகளிலும் உறைவிடம் அமைத்துக்கொண்டு







வாழ்ந்து வந்தான். நாகரிகம் வளர வளர தேவையினைப்புதிய கோணத்தினின்று அணுகும் போது உணவுக்கும் உடைக்கும் நிகராக உறைவிடத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுஇருபது அம்சத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டும் முன்னேற்றப் பணிகள் நிறைவு செய்யப்படுகின்றன.

1984-85ஆம் ஆண்டுக்காக புதிய வீடுகள் 4263 கட்டிமுடிக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கின் கீழ் அட்கோ 3ம் திட்டம் இரண்டாம் பகுதியின் கீழ் 1376 வீடுகளும் வெள்ளம் தொடர்பாக பயனடைவோர்கட்காக 1537 வீடுகளும் நிலுவைத் திட்டங்களின் கீழ் 1350 வீடுகளும் கட்டி முடிக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. இலக்கின்படி அனைத்துத் திட்டங்களின் 4263 வீடுகளும் நிலுவைத் திட்டங்களின் தொடர்பாக மேலும் 4 வீடுகளும் ஆக கூடுதலாக 4267 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

வீடுகள் கட்டும்போது உறுப்பினர்கள் தங்களது மனைகளில் உள்ள மரங்களையே வகைப்படுத்தி தேவைப்படும் மரத்சாத்துகளாகவும் விட்டங்களாகவும் பயன்படுத்துகின்றார்கள். மேலும் அண்மையிலுள்ள பனை, தென்னை மரங்களை வாங்கி மரச்சாத்துக்கள் தயாரித்தும் பயன்படுத்துகிறார்கள்.

உறுப்பினர்களே குழுக்களாகச் சேர்த்துக்கொண்டு செங்கல் சூளை வைத்து செங்கற்களைத் தயாரிக்கின்றனர். இவ்வாறாகத் தயாரிக்கும்போது வெளிமார்க்கெட்டில் செங்கல் 1000க்கு ரூ. 200 முதல் ரூ.240 வரை விற்பதை ரூ. 150 முதல் ரூ. 180-க்கே கிடைக்கப் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் உறுப்பினர்கட்கு ஓரளவுக்குச் சேமிப்புத் தொகை கிடைக்கிறது.

கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் அதன் மதிப்பீட்டிற்கே காப்புறுதி செய்யப்படுகின்றன. உறுப்பினர்கள் ஆறு திங்களுக்கு ஒருமுறை தங்களது தவணைத் தொகையினைச் செலுத்திட வேண்டும் ஆதிதிராவிடர்களாக இருப்பின் வழங்கப்படும் மொத்த க்டன் உதவி ரூ.4,500. இதில் ரூ. 1000 மானியத்தொகை. எனவே திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய அசல் தொகை மட்டும் ரூ. 3,500. வட்டிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் வயதுக்கேற்பக் கடன் தொகை 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் அல்லாத உறுப்பினர்கட்கு 10 சதவிகிதம் வீதம் கடன் தொகை ரூ. 4,500 வழங்கப்படுகிறது. மேற்படி கடன்தொகைச் சலுகைகளைப்பெற்று 1984-85ம் ஆண்டில் 4267 உறுப்பினர்கள் புதிய வீடுகள் கட்டிப் பயனடைந்துள்ளனர்.

**குடும்ப நலத்திட்டச் சாதனை :**

இந்த ஆண்டு குடும்பநலத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகளான நிரந்தரச் சிகிச்சை (லாப்ராஸ்கோப்) ஆண்-பெண் அறுவைச் சிகிச்சைகள் தாற்காலிகச் சிகிச்சைக்கு என உள்ள ஐயுடி (காப்பர் டி) நிரோத், வாய்வழியாக உட்கொள்ளும் கருத்தடை மாத்திரை போன்ற அனைத்து முறைகளிலும் ஓரளவு குறியீட்டை வெற்றிகரமாக அடைய வாய்ப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சையில் மாவட்டம் முழுவதுமாக 6 வருவாய்க் கோட்டங்கள் 34 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 8 நகராட்சிகள் 3 கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 17 குடும்பநல நகரப்புற மையம், 30 அரசு மருத்துவ மனைகள் 26 அரசு மருத்துவமையங்கள், 32 ஊராட்சி ஒன்றிய மருத்துவ மையங்கள், 2 தொழிலாளர் நல மருந்துவ மையம் - ஆகியவை தவிர குறிப்பாக தஞ்சை மருத்துவக்கல்லூரி மற்றும் அரசினர் இராசா மிராசுதார் மருத்துவமனை (தஞ்சாவூர்) யும் இங்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

இவைகளைத் தவிர ஆக்கூர் மையம் பிரிட்டிஷ் உதவியுடன் சுற்றியுள்ள கிராம மக்களுக்குச் சேவை புரிகின்றது. மேலும் 7 தனியார் மருத்துவர்கள் குடும்ப நலச் சிகிச்சை அளிக்க அரசின் அனுமதி பெற்று நன்கு சாதனை புரிந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வயது வந்தோர் கல்வி மையங்களில் கற்போருக்கு எண்ணறிவு எழுத்தறிவு மட்டுமின்றி குடும்பநலன், சிறுசேமிப்பு, கூட்டுறவு இயக்கங்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவற்றைப் பற்றி விழிப்புணர்ச்சியும் ஏற்படுத்தப்பட்டது. கற்போர் குடும்பநலத் திட்டங்கள், சிறுசேமிப்பு இயக்கம், சிறு கைத்தொழில்களில் பயிற்சி ஆகியவற்றில் தங்களை ஈடுபடுத்திப் பயனடைந்தனர். கற்போருக்காகவும், கிராம மக்களுக்காகவும் ஆறு இலவச மருத்துவ முகாம்கள் இந்திய மருத்துவச் சங்க உதவியுடன் நடத்தப்பட்டன. இதில் 2757 நபர்கள் பயனடைந்தனர். 10 குடும்பநலத் தலைவர்கள் பயிற்சி முகாம்களும் குடும்பநலத் துறையுடன் இணைந்து நடத்தப்பட்டன.

**பயறு வகைகள் உற்பத்தி**

இம்மாவட்டத்தில் பயறு வகைப் பயிர்களான துவரை, உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயறு, மொச்சை மற்றும் கொள்ளு ஆகிய பயிர்கள் சுமார் 81,000 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. பயறு வகைப் பயிர்களின் முக்கிய சாகுபடி நுட்பங்களை வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி வழித்தொடர்புத் திட்டத்தின் வாயிலாக முறையாக எடுத்துக் கூறப்பட்டது.

பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பயிற்சி ரூ. 1,35,900 மானியத்தில் 3,400 விவசாயிகளுக்கு 1984-85-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது.

கீழ்க்கண்ட சலுகைகளும் 1984-85ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கி பயறு வகைச் சாகுபடியினை ஊக்குவிக்கப்பட்டது.



| திட்டத்தின் பெயர் | பொருள் சாதனை | நிதி சாதனை | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| நுண்ணுயிர்க் கலவை 50 சதவிகிதம் மானியத்தில் வழங்குதல் | ரூ. 9823 | 7356 | 4000 |
| பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 50 சதவிகித மானியத்தில் வழங்குதல் | 200 எக்டேர் | ரூ.5041 | 450 |
| பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்குதல் | 90 எண்கள் | ரூ.14,000 | 90 |
| மருந்தடிக்கும் செலவிற்கான மானியம் | 450 எக்டேர் | ரூ.6755 | 1200 |
| மினிகிட்டுகள் விநியோகம் | 8050 எண்கள் | ரூ.6,93,000 | 8050 |

மேலும், இம்மாவட்டத்திலுள்ள 50 விவசாயக் கிடங்குகளின் மூலம் 177 டன்கள் பயறு வகை வித்துக்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

மேற்கண்ட பல்வேறு ஆக்கப்பணிகளின் மூலமாக 1984-85ஆம் ஆண்டில் 88,900 எக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது ஆண்டு இயல் பரப்பைக் காட்டிலும் சுமார் 9 சதவிகிதம் கூடுதலாகும்.

உற்பத்தி இலக்கு இம்மாவட்டத்திற்கு 31,200 டன்கள் கொடுக்கப்பட்டது.

மேற்கண்ட பல்வேறு முயற்சிகளில் பலனாக 38.556 டன்கள் பயறுவகைத் தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இது நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டினைக் காட்டிலும் 23 சதவிகிதம் அதிகமாகும்.

**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி :**

நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி, தென்னை. மேற்கண்ட எண்ணெய் வித்துப் பயிர்களைச் சேலம் மாவட்டத்தில் சுமார் 1.35 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மானாவாரிப் பயிராகவும், இறவைப்பயிராகவும் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. இது பயிர் செய்யப்படும் மொத்தம் பரப்பில் 25 சதவிகிதம் ஆகும்.

பயிர் செய்யப்படும் மொத்த எண்ணெய் வித்துப் பயிர்களில் மானாவாரிப் பயிராக மட்டும் 1.10 இலட்சம் எக்டேரிலும் 0.25 இலட்சம் எக்டேரில் இறவைப் பயிராகவும் பயிர் செய்யப்பட்டு வருகிறது. பயிர் செய்யப்படும் எண்ணெய்வித்துப் பயிர்கள் 80 சதவிகிதம் பரப்பில் மானாவாரிப் பயிராக இருப்பதால் வானம் பொய்ப்பின் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கும். அதே சமயம் சொற்ப நீர் தேவையில் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய பயிர்கள் எண்ணெய்வித்துப் பயிர்களே.



1984-85ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்திப் பெருக்கக் கீழ்க்கண்ட சாகுபடி நுட்பங்களை, செயல்படுத்தி வரும் மானியத் திட்டங்களுடன் இணைந்து எடுத்துரைத்ததன் விளைவாக சேலம் மாவட்டத்திற்கு எண்ணெய் வித்து உற்பத்திக்கென நிர்ணயம் செய்யப்பட்ட 1.30 இலட்சம் டன்னுக்கு 1.42 இலட்சம் டன் உற்பத்தி சாதனை புரிய முடிந்தது.

விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தி உற்பத்திப் பெருக்க விதை நேர்த்தி செய்தல் மற்றும் நுண்ணுயிர் கலத்தல் போன்ற கட்டுக்கோப்பு முறைகள் கையாண்டதில் உற்பத்திப் பெருக்கம்.

சரியான விதை அளவை சிபார்சு செய்து தேவையான பயிர் எண்ணிக்கையைப் பராமரித்ததில் கூடுதல் உற்பத்தி பெற வழி செய்யப்பட்டது.

*தேவைக்கேற்பப் பயிர்ப்பாதுகாப்பு முறை மேற்கொண்டது.

*எண்ணெய்வித்து உற்பத்திக்கு முக்கிய அங்கம் வகிக்கும் நுண்ணூட்டச் சத்து, ஜிப்சம் மற்றும் மணிச் சத்துப்போன்ற உரங்களை தேசிய எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்தின் மூலம் மானிய விலையில் வழங்கி உற்பத்தி பெருக்க வழி செய்யப்பட்டது.

* புதிய ரகங்களின் உற்பத்தித் திறனை செயல் விளக்கம் மற்றும் மினிகிட் பாத்திகள் மூலம் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளைக் கையாளுவதால் கிடைக்கும் கூடுதல் உற்பத்தியையும் தெளிவாக விவசாயிகளிடம் எடுத்துக் கூறி கூடுதல் உற்பத்திக்கு வழி வகுக்கப்பட்டது.

* எண்ணெய் வித்துக்களின் உற்பத்திக்கு மேற்கூறிய கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை மத்திய-மாநில அரசு செயல்படுத்தும் திட்டங்கள் மூலம் இணைந்து 1984-85-ஆம் ஆண்டு உற்பத்திக் குறியீட்டை மிக எளிதாக மிஞ்சப்பட்டது.

இதைத் தவிர சிறு/குறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் புதிய புதிய கண்டுபிடிப்புகளில் பயனை அவ்வப்பொழுது உணர்ந்து உற்பத்தியினைப்பெருக்கவும் உணர்ந்த அரசு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த ரூ. 9,24,386 செலவிட்டு 4448 சிறு/குறு உழவர்களுக்கு 0.2 எக்டேர் பரப்பளவிற்குண்டான அனைத்து இடு பொருள்களும் இனாமாக வழங்கப்பட்டு உற்பத்திக்கு வழி வகுக்கப்பட்டது.

மேலும் இம்மாவட்டத்திலுள்ள 50 வேளாண் கிடங்குகள் மூலம் 1984-85-ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு தரமான எண்ணெய் வித்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிலக்கடலை 744.79 டன்; எள் 6.08 டன்; ஆமணக்கு 15.23 டன்; சூரியகாந்தி 22.49 டன்.

மேற்கூறிய பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களினாலும், செயல்படுத்திய முறைகளினாலும் 1984-85ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்கென நிர்ணயிக்கப்பட்ட 1.30 இலட்சம் டன்னுக்கு 1.42 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டிற்கு 8 சதவிகிதம் கூடுதலாகும்.

**மின் அமைப்பு :**

சேலம் மின் அமைப்பில் 1984-85ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தின்கீழ் விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீடாகிய 598 பம்பு செட்டுகளுக்கெதிராக 2394 விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரம் வருமாறு:

சேலம் 469, ஏர்க்காடு 4, ஓமலூர் 136, ஆத்தூர் 1343, இராசிபுரம் 315, நாமக்கல் 119, திருச்செங்கோடு 8, ஆக மொத்தம் 2394.



சேலம் மின் அமைப்பில் 1984-85ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு மின் வசதி அளிக்க நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9 கிராமங்களுக்கு எதிராக 24 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின் வசதி வழக்கமான முறையிலும், டீசல் ஜெனரேட்டர் மூலமும், சூரிய வெப்பச் சக்தி செல்களின் மூலமும் அளிக்கப்பட்டுள்ளது.

இருபது அம்சத் திட்டங்களுள் 13ஆவது அம்சமாக விளங்குவது குடும்பநலத் திட்டமாகும்.

சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட மருத்துவ அலுவலர், இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு மருத்துமனைகளின் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களின் முழு ஒத்துழைப்புடன் குடும்பநலத் திட்டம் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கிய குறியீடு 40,500 எனினும் 34,213 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

குக்கிராமங்களில் இத்திட்டத்தைச் சீரிய முறையில் நடத்துவதற்காகக் கடந்த ஆண்டு மட்டும் 75 குடும்பநலத் திட்டங்களுக்கான குடும்பநல முனைப்பு இயக்கப் பயிற்சி முகாம்கள் நடத்தப் பெற்றன. இம்முயற்சியில் அயராது ஒத்துழைப்பு தந்த நிறுவனங்களில் சில வயது வந்தோர் கல்வி நிறுவனம், நேரு இளைஞர் மையம், நகர்ப்புறக் குடும்பநல மையங்கள், தனியார் நிறுவனங்கள், மகளிர் மன்றங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இத்தகைய முகாம்களில் உள்ளூர் அறிஞர்களையும் பங்கு பெறச் செய்து அவர்தம் கருத்துக்களும் ஆராயப்பட்டன. முகாம்களில் குடும்பநலத் திட்டத்தைப் பற்றிய அறிவுரைகள் குடும்பநல அலுவலர், களப்பணியாளர்களால் வழங்கப்பட்டது. முகாம்களில் பயிற்சி பெற்றோர் பொதுமக்களுக்கு நிரந்தர தற்காலிகக் கருத்தடைமுறைகளை விளக்கினர்.

எதிர்காலத்தை உருவாக்க இருக்கும் இளைஞர்களும் குடும்பநலத் திட்டத்தின் அவசியத்தை உணரும் வண்ணம் இளைஞர் சங்கங்கள் இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் இளைஞர் ஆண்டான இவ்வாண்டில் (1985) சிறப்பாகச் செயல்படும் என்பதில் ஐயமில்லை.






# காமராஜர் மாவட்டத்தில்

காமராஜர் மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) மூலமாக 382 இந்து ஆதிதிராவிட பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 50 சதவிகிதம் கறவை மாட்டு மானியம் ரூ.4,77,500 1984-85 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுப்பினர்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கறவை மாட்டுக் கடன் ரூ. 9,55,000 வழங்கப்பட்டுள்ளது. தனி நபர் உச்சபட்ச மானியத் தொகை ரூ. 1,250.

ஆதிதிராவிடர் நலத்திட்டத்தின் கீழ், காமராசர் மாவட்டத்திலுள்ள 243 இந்து ஆதிதிராவிடர் பால்கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 243 கறவை மாடுகள் வாங்க கடன் ரூபாய் 3,92,096 கூட்டுறவு வங்கி மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு அதில் 50 சதவிகிதம் மானியம் ரூ. 1,96,048 வழங்கப்பட்டுள்ளது. பயனடைந்தோர் எண்ணிக்கை 243.

சிவகாசி ஊராட்சி ஒன்றியம், மாரனேரி ஊராட்சியின் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மகளிர் மன்றக் கட்டடம் கட்டும் வேலை 5-9-84 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டடத்திற்கான மொத்த மதிப்பீடு தொகை ரூ. 26,000 உறுதிப்படுத்தப்பட்ட காங்கிரீட் கூரை போடப்பட்ட இக்கட்டடத்தின் பரப்பளவு 22 சதுர மீட்டர் ஆகும்.

766 மனிதச் சக்தி வேலை நாட்களும் மற்றும் தளவாடச் சாமான்களின் மதிப்புமாகக் கொண்டு மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 23,542 ஆகும்.



மாரனேரி ஊராட்சியில் 1984-85ஆம் ஆண்டுக்கான தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிராமச்சாவடி கட்டட வேலை ரூ. 45,000 செலவில் ஆரம்பிக்கப்பட்டது. 35 சதுர மீட்டர் பரப்பளவில் உறுதிப்படுத்தப்பட்ட காங்கிரீட் கூரையுடன் கூடிய கட்டடமாகும் இது.

1165 மனிதச் சக்தி வேலை நாட்களுடன் மற்றும் தளவாடச்

திட்டத்தின் கீழ் ரூ. 72,500 மதிப்பீட்டில் ஒரு கசிவு நீர்க் குட்டை அமைக்கப்பட்டுள்ளது. குட்டை அமைக்கப்பட்டதால் 12 ஏக்கர் பரப்பளவுக்கு தண்ணீர் தேக்கிநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சுற்றுப்புறத்திலுள்ள 588 விவசாயக் கிணறுகளில் தண்ணீர் ஊற்று பெருகியுள்ளது.

முசிறி ஊராட்சி ஒன்றியம். திண்ணக்கோணம் கிராமதகில் ஆதிதிராவிடர்களுக்கு தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1984-85 ஆம் ஆண்டில் 16 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன ஒரு வீட்டின் மதிப்பீடு ரூ. 6,000.

## 20 அம்சத் திட்டத்தில் எண்ணெய் வித்துத் துறையின் பணிகள்

1984-85ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எண்ணெய்வித்து அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிலக்கடலை சுமார் 1,05,080 மெ.டன்களும் எள்ளில் 9.860 மெ.டன்களும், சூரியகாந்தியில் 3,256 மெ.டன்களும் ஆமணக்கில் 176 மெ.டன்களும் உற்பத்தி அடையப்பெற்றுள்ளன.

மேலும் விதைக்கொள்முதல் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் நிலக்கடலையில் சுமார் 911 மெட்ரிக் டன்களும் எள்ளில் 20 மெ.டன்களும் சூரியகாந்தியில் 72 மெ.டன்களும், ஆமணக்கில் 1,300 மெ.டன்களும் அடையப்பெற்றுள்ளது.

1984-85ம் ஆண்டில் இம் மாவட்டத்தில் 2,20,000 நெட்டை தென்னங்கன்றுகளும், 4,700 நெட்டை மற்றும்குட்டை தென்னங்கன்றுகளும் விவசாயிகளுக்கு 50 சதம் மான்ய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய மற்றும் மாநில அரசு மூலமாக இவ்வாண்டு தேசிய எண்ணெய்வித்து அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாயிகள் நன்மையடையும் பொருட்டு பல திட்டங்கள் இத்துறையினால் செயல்படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகள் நிலக்கடலையில் அதிக உற்பத்தி பெறும் பொருட்டு ஜிப்சம் உரத்தினை எக்டேருக்கு ரூ. 40 வீதம் 1,400 மெ.டன் மானியவிலையில் வழங்கி உற்பத்தியைப் பெருக்க வகை செய்யப்பட்டுள்ளது.

சூப்பர் பாஸ்பேட் சுமார் 400 மெ.டன்களும், ரைசோபியம் கல்ச்சர் 1,750 பொட்டலங்களும், நுண்ணூட்டச்சத்து 18 மெ.டன்களும், மான்ய விலையில் விவசாயிகளுக்குவழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் நிலக்கடலைப் பயிருக்கு நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்த வகை செய்ய, கருவிக்கு மானியமாக அதிகபட்சம் ரூ. 250 வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் விதைத்தெளிப்பான்கள் 99, கடலை உடைக்கும் கருவிகள் 40 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பெருமளவில் பயனடையும் பொருட்டு சிறப்புச் சிறு தளைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

பல சிறப்புத் திட்டங்களை விவசாயிகளுக்கு அளித்திடும் வகையில் எண்ணெய்வித்து துறையில் உற்பத்தியைப் பெருக்கி அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இணைப்பும் 3 பேருக்கு உரிமங்களும் வாங்கி கொடுத்துள்ளது.

## அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மற்றும் தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (தேசிய நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்) மல்லியம்பத்து கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு ரூ.6000 மதிப்பீட்டில் இலவசமாக ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு வீதம் ரூ. 3,12,000 செலவில் 52 வீடுகள் கட்டித்தந்துள்ளது அரசு.

இதனால் குடி இருப்பு வீடு இல்லாமல் சிறு குறு குடிசைகளில் வாழ்ந்து வந்த ஆதிதிராவிடர்களுக்கு குடும்பத்திற்கு ஒரு வீடு வீதம் கிடைத்துள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வொன்றியத்தைச் சேர்ந்த மல்லியம்பத்து கிராமத்தில் ஒரு சமுதாய மன்றம் ரூ. 57,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இந்த சமுதாய மன்றம், கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் பாகுபாடு இன்றி அவர்களின் பொதுக் காரியங்களுக்கு நன்கு பயன்பட்டு வருகிறது.








போதாவூர் கிராமத்தில் 90.50 ஏக்கர் நிலத்தில் மாதிரி விவசாயப்பண்ணை அமைத்துப் பராமரிக்கப்பட்டு, வருகிறது. இப் பண்ணையில் நெல், கரும்பு, பயறு வகைகள், காய்கறிகள், ஆகியவைகள் விவசாயத்துறை வல்லுநர்களின் ஆலோசனையின் பேரிலும் அவர்களின் மேற்பார்வையிலும் விவசாயம் செய்யப்படுகிறது.

உற்பத்தி செய்யப்படும் கரும்பு அருகாமையில் உள்ள பேட்டவாய்த் தலையில் உள்ள அரசு சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறது. மேலும் இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் காய்கறி வகைகள், இவ்வொன்றியத்தில் உள்ள முதலமைச்சர் சத்துணவு மையங்களுக்கு மலிவு விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலேயே ஒன்றியத்தின் மூலம் பராமரிக்கப்படும் விவசாயப் பண்ணை போதாவூர் விவசாயப் பண்ணை மட்டும் தான் என்பதுசிறப்பாகும். இப்பண்ணையில் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு ஒரு மாதிரி விவசாயப்பண்ணையாகத் திகழ்கிறது. இப்பண்ணை



வருடா வருடம் இலாபகரமான முறையில் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

20 அம்சத் திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாகிய கிராமத்தொழில் வளர்ச்சியில் இவ்வொன்றியத்தின் மூலமாக போதாவூர் கிராமத்தில் உள்ள நிலமற்ற விவசாயக் கூலிகளுக்கும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த நெசவுத் தொழில் தெரியாதவர்களுக்கும் நெசவுத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு அரசு வங்கியில் மானியத்துடன் கடன் வாங்கி கொடுக்கப்பட்டது.

காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் போதாவூர் கிராமத்தில் தென்னங்கன்றுகள் 2.00 ஏக்கரில் நடப்பட்டு நன்றாக வளர்ந்துள்ளன. மேலும் ரோடுஓரங்களிலும் தழை தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன. 20 அம்சத் திட்டத்தில் காடு வளர்ப்புத்திட்டம் ஒரு அம்சமானதால் இந்த ஒன்றியத்தில் காடு வளர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, தென்னை, யூகலிப்டஸ், புளி, வேம்பு, வாழை மற்றும் இதர மரங்கள் ரோடு ஓரங்களிலும் தரிசு நிலங்களிலும் நடப்பட்டு, காடு வளர்ப்புத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமத்தில் உள்ள நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு கறவை மாடு வாங்க 2 மாடுகளுக்கு ரூ. 5000க்கு கடன் வழங்கப்பட்டு அதில் மானியமாக ரூ. 1666 வழங்கப்பட்டுள்ளது. கடன் பெற்ற விவசாயி கூட்டுறவுச் சங்கத்தில் பால் கறந்து கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தி வருகிறார்.

இதனால் அவரின் வருமானம் அதிகரிக்கப்படுவதால் அவருடைய வறுமை கோட்டிலிருந்து நீங்கி நல்ல நிலைக்கு உயர்ந்துள்ளது. 20அம்சத் திட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும் அம்சம் இவ்வொன்றியத்தின் மூலம் நன்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாரதப்பிரதமர் அவர்கள் 1983ஆம் ஆண்டு சுதந்திரதினத்தன்று பாரத மக்களுக்கு ஆற்றிய உரையின்படி பாரதநாட்டில் உள்ள 18 முதல் 35 வயதுக்குட்பட்ட பத்தாம்வகுப்பு தேறிய வேலையற்றோருக்கு சுயதொழில்களை மேற்கொண்டு முன்னேறும் வகையில் பாரதப்பிரதமரின் சுய வேலை வாய்ப்புத்திட்டம் 1983-84ல் துவங்கப்பட்டது.

இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 1984-83ம் ஆண்டில் 2495 நபர்களின் மனுக்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு 1620 நபர்களுக்கு வங்கிகளால் ரூ. 263.62 லட்சம் கடன் ஒப்பளிக்கப்பட்டு 1181 நபர்களுக்கு 175.82 லட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சென்ற 1984-85ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 1781 நபர்களின் மனுக்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்குபரிந்துரைக்கப்பட்டு 1300 நபர்களுக்கு வங்கிகளில் ரூ. 232.48 லட்சம் கடன் ஒப்பளிக்கப்பட்டு, 810 நபர்களுக்கு ரூ. 153 லட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தொழில் முனைபவருக்கு மின்விசை வழங்குதல் மற்றும் உரிமங்கள் பெறுவதில் தடைகளைத் துரிதமாக நீக்கி, தொழில் ஆரம்பித்து நடத்த மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் குழு மாதம் இரண்டு முறை கூடி பிரச்சினைகளை தீர்த்து வைத்து வந்துள்ளது.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் இந்த மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளைத் துரிதமாகத் தொழில்மயமாக்குவதற்கும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) நிறுவப்பட்டது. மாநிலத்தில் பரவலாகத்தொழில் வளர்ச்சியை முன்னேறச் செய்வதும் பின்தங்கியுள்ள பகுதிகள் தொழில் வளமுடைய சிறப்பான வசதிகளை அளித்தலும் சிப்காட்டின் குறிகோள்களாகும்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் தொழில்வளர்ச்சிக்காகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குவது.

தொழில் முனைவோர்களுக்குப் பல்வேறு துணையுதவிப்பணிகள் செய்தல்.

தமிழகத்தில் தொழில்வளர்ச்சியினைத் துரிதப்படுத்த சிப்காட் தமிழக அரசின் உதவியுடன் பல் சலுகைகளும் சிப்காட் நிறுவனத்தினரால் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முழுவதுமாகப்பயன்படுத்தப்பட்டுள்ளது. சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ஒப்புதல் அளித்து வழங்கிய உதவித் தொகைகளில் 80 விழுக்காட்டிற்கு மேலாகப் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புதிய தொழில்களுக்குவழங்கப்படும் சலுகைகள்:

# வளரும் தொழில்கள்

இந்நிறுவனம் தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தரத்தொழில்களின் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகச் செயல்பட்டுவருகிறது. 1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் தேதி வரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூபாய் 21,659 இலட்சம் உதவித் தொகையாக அளித்துள்ளதுடன் இதன் மூலம்80,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலை வாய்ப்புக்கு வகை செய்துள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும், அதற்குரிய நிதியுதவிக்கும் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின் கீழ் நடுத்தீர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

வேறு புதிய முறைகளைக் கையாண்டு வருகிறது. சிப்காட், இந்தியத் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினரால் மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அங்கீகரிக்கப்பட்டதால் இந்த நிறுவனத்தின் தவணைக் கடன் திட்டம் மாபெரும் வளர்ச்சியைக் கண்டது.


இத்திட்டத்தின் கீழ் 1984-ஆம் ஆண்டு வரை ரூபாய் 146 கோடி தொழில் முனைவோர்க்கு அனுமதி அளிக்கப்பட்டு அதில் ரூபாய் 83 கோடி ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. இந்த நிதியாண்டில் வழங்கியிருக்கும் தொகை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்ட ஊக்கத் திட்டங்களான மத்தியமானியம், வட்டியில்லா விற்பனை வரிக் கடன்,இந்தியத்தொழில்வளர்ச்சி வங்கியின் மறு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளுக்கான

இத்திட்டம் 1971-72-ஆம் ஆண்டு முதல் அமலில் இருந்து வருகிறது. 1-4-1983 முதல் மத்திய அரசு இத்திட்டத்தை அதிக அளவு விரிவுபடுத்தி, பயன்பெறும் தாலுக்காக்களை ஏ,பி, சி. என மூன்று பிரிவுகளாகப் பிரித்து மானியத்தை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்படி 'ஏ' பிரிவின் கீழ் எந்த மாவட்டமும் தமிழ்நாட்டில் இடம் பெறவில்லை. 'பி' பிரிவின் கீழ் வரும் தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்படும் நிலையான சொத்துக்களின் மதிப்பில் 15 சதவிகிதமும் அல்லது ரூபாய் 15.00 இலட்சமும் (இவற்றில் எது குறைவோ அது) 'சி' பிரிவிற்கு உருவாக்கப்படும் நிலையான சொத்துக்களின் மதிப்பில் 10 சதவிகிதம் அல்லது ரூபாய் 10.00 இலட்சம் (இவற்றில் எது குறைவோ அது) என்ற விகிதத்தில் பயன்பெற தகுதி பெற்றன. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 9 மாவட்டங்களைச் சேர்ந்த 30 வட்டங்கள் 'பி' பிரிவிலும், 62 வட்டங்கள் 'சி' பிரிவிலும் இத்திட்டத்தின்படி பயன்பெறத் தகுதியுள்ள







பகுதிகளாகும். இத்திட்டத்தை நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) சிறு தொழில்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் (டிஐஐசி), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகமும் (சிட்கோ) இணைந்து செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு இத்திட்டத்தை அதிக அளவில் செயல்படுத்தி மத்திய அரசிடம் இருந்து மானியத்தைத் திரும்பப் பெறுவதில் அகில இந்திய ரீதியில் இன்று வரை முதல் இடத்தை வகிக்கிறது. 1984 டிசம்பர் மாதம் முடிய 470 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 34 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் ரூபாய் 23 கோடி மத்தியஅரசிடம் இருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.

தமிழக அரசு இந்தத் திட்டத்தைச் சிறுதொழில்களுக்குமட்டும் அல்லாமல் நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கும் வழங்குவதை 3-10-1981 முதல் விரிவுபடுத்தியுள்ளது. இதன்படி (மத்திய அரசு வழங்கும் மானியத்தின்கீழ் அல்லாமல்) 33 தாலுக்காக்கள் பயன்பெற தகுதி பெற்றன. இத்திட்டம் 1982-ஆம் ஆண்டு இறுதி முதல் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரிவுபடுத்தப்பட்ட இத்திட்டத்தைத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி தொழில் நிறுவனங்கள் தாங்கள் உருவாக்கும் நிலையானசொத்துக்களின் மதிப்பில் 15 சதவிகிதம் அல்லது ரூபாய் 15 இலட்சம் (இவற்றில் எது குறைவோ அது) என்ற விகிதத்தில் தகுதி பெறுகின்றன.

தமிழக அரசின் குறிப்பிட்டு வகைப்படுத்தப்பட்ட தொழில்களுக்கான சிறப்பு மானியம் அறிவித்துள்ள இணையற்ற திட்டத்தின்படி மாநில, மத்திய அரசின் மூலதன மானியத்தின்கீழ் அல்லாமல் தமிழகத்தில் அமைக்கப்படும் குறிப்பிட்டு வகைபடுத்தப்பட்ட தொழில்கள் உருவாக்கும் நிலையான சொத்துக்களின் மதிப்பில் 10 சதவிதம் அல்லது முறைப்படி அமர்த்தப்படும் தொழிலாளர் ஒருவருக்கு ரூபாய் 20,000 (இவற்றில் எது குறைவோ அது) என்ற விகிதத்தில் ரூ. 10.00 இலட்சத்திற்கு மேற்படாமல் சிறப்பு மானியம் பெறத் தகுதி உடையவை ஆகும்.

குறிப்பிட்டு வகைப்படுத்தப்பட்ட தொழில்கள் ஆவன:—

(அ) மின் அணுத் தொழில்

(ஆ) மருத்துவப் பொருள் தயாரித்தல் மற்றும் பட்டியலிடப்பட்ட மருந்துகளின் கலவை நிர்ணயம்.

(இ) மோட்டார் வாகனங்களுக்கான உபகரணங்கள் தயாரித்தல்.

(ஈ) சூரியசக்தியை வீடுமற்றும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தும் கருவிகள் தயாரித்தல்.

(உ) சணல் தயாரித்தலுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 6 வட்டங்களுக்கு மட்டும்.

(1) அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி மாவட்டம்),

(2) மதுரை

(3) முசிறி (திருச்சி)

(4) கும்பகோணம்(தஞ்சாவூர்)

(5) பண்ருட்டி (தென்னார்க்காடு),

(6) செங்கல்பட்டு.

இத்திட்டத்தின்படி நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்கள் சிப்காட் நிறுவனத்தின் மூலம் பயன் பெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 57 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 429.73 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபாய் 181.05 இலட்சம் ஏற்கெனவே மானியமாக வழங்கப்பட்டு உள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ் மேலும் அதிகத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்பமூலதன உதவித் திட்டத்தின் கீழ் தேர்ச்சி பெற்ற புதிய தொழில் முனைவோருக்கு ஆரம்ப மூலதன நிதியுதவியை சிப்காட் நிறுவனம் அளித்து வருகிறது. 1983-84ஆம் ஆண்டில் 10 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 86.70 இலட்சம் வழங்க சிப்காட் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய மொத்தம் 52 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 413 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர்கள் அவர்களாகவே தனிப்பட்ட பங்குதாரர்களைச் சேகரிக்க இயலாதபட்சத்தில் சிப்காட் உதவியை நாடினால் சிப்காட் நிறுவனம் உயர்ந்தபட்ச அளவிற்குப் பங்குகளை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு உதவி புரிந்து வருகிறது. இவ்வாறு எடுத்துக் கொள்ளும் பங்கின் அளவு மொத்த பங்குத் தொகையில் 25 சதவீதம் அல்லது 10 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கும். 1983-84ஆம் ஆண்டில் 5 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 26.50 இலட்சம் வழங்க சிப்காட் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 45 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 200.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சிப்காட் செயல்படுத்தி வரும் பல்வேறு உதவித் திட்டங்களாவன:

ஊக்கச் சலுகை முனைப்பு திட்டம்:

தொழில் திட்டங்களைக்கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றிய ஆய்வுகளை, சிப்காட் தொழில் முனைவோர்களுக்குச் சலுகை விலையில் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர்களுக்குச் சலுகை ஆய்வறிக்கைகள் விலையில் 10

சாமான்களின் கிரையமும் கொண்டு மொத்த வேலையின் மதிப்பு ரூ. 41,660ல் விரைவில் கட்டி முடிக்கப்பட்ட கட்டட மாகும்.

சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமத்தவர்க்கு 1984-85ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 222 பேர்களுக்கு முதல் கறவைமாடுகள் வழங்கப் பட்டுள்ளன. அவற்றில் வி. சல்வார்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினர்கள் 50 பேர்களுக்கு மானியத்தொகையுடன் வழங்கப் பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.



சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் 1984-85ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செம்மறி ஆடுகள் 95 இனங்களுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டு 80 பேர்களுக்கு மட்டும் இதுவரை கடன் வழங்கப்பட்டு செம்மறி ஆடுகள் வாங்கித்தரப்பட்டுள்ளது.

சிவகாசியைச் சேர்ந்த திரு கே. ஆறுமுகச்சாமி, சாண எரிவாயு அமைத்துள்ளார். அவருக்கு அரசு ரூ. 2140 மானியத் தொகை வழங்கியுள்ளது.

சிவகாசி ஊராட்சி ஒன்றியம், இ. புதுப்பட்டி கிராமத்தில் 1984-85ஆம் ஆண்டில் கிராம நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 23 தொகுப்பு வீடுகள் 1984-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் அன்று ஆரம்பிக்கப்பட்டது. ஓடுகளினால் மேற்கூரை போடப்பட்டு கட்டிமுடிக்கப்பட்ட வீடு ஒன்றுக்கு ரூ. 9,000 மதிப்பீடு ஆகும். இத்தொகையில் ரூ. 6,000 அரசு உதவிப்பணம் ஆகும். மனைப் பட்டா உள்ள ஒவ்வொரு நபரும் தங்களின் சொந்த பொறுப்பிலேயே மீதமுள்ள பணத்திற்குத் தளவாடச் சாமான்களும் 350 மனித சக்தி வேலை நாட்களும் கொண்டு கட்டி முடிக்கப்பட்டதாகும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செண்பகத்தோப்பு மலை வாழ் பழியர்கள் குடும்பங்கள் தனியார்களிடத்தில் கொத்தடிமைகளாகி பல ஆண்டுக் காலம் அல்லல் பட்டவர்களை மீட்டுக் கொடுத்து, அவர்களின் 5 குடும்பநலத் தலைவர்களின் புனர்வாழ்வுக்காக, ஆடுவளர்ப்புத் தொழில் செய்வதற்காக தலா 21 ஆடுகள் வாங்குவதற்கு ரூ 4,000 வீகம் மொத்தம் 20,000 விழுப்பனூர் பாண்டியன் கிராம வங்கிக் கிளை மூலம் கடன் வழங்கப்பட்டு நல்ல முறையில் ஆடுகளை வளர்த்துப் பயன் பெறுகிறார்கள்.

கடன் தொகையில் $\frac{1}{3}$ பங்கு ரூ. 6,665 மானியமாக வழங்கப் பட்டுள்ளது.



மலைவாழ் பழியர் குடும்பத்தில் திரு தங்கராஜ் என்பவரின் மனைவி மாரியம்மாளுக்குபெட்டிக் கடை நடத்துவதற்குக் கனரா வங்கி, ஸ்ரீவில்லிப்புத்தூர் கிளை மூலமாக ரூ. 1,000 கடன் வழங்கப்பட்டு கடந்த 9 மாதகாலமாக நல்ல முறையில் கடை நடத்தப் பட்டு வருகிறது. மலைவளம் நாடி சுற்றுலா வருபவர்களுக்கும், மலை விறகு பொறுக்க வருவோர்களுக்கும் இந்தப்பெட்டிக் கடை மிக உபயோகமாக இருப்பதுடன் திருமதி மாரியம்மாள் குடும்பமும் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று வறுமைநிலையைத் தாண்டி வளம் பெற்று வருகிறது. இந்தக் கடனில் $\frac{1}{3}$ பங்கு ரூ. 333 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேன் வளர்ப்புக்காக 3 மாதக் காலம் துறை ஊழியர்களைக் கொண்டு சுமார் 20 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தேனீப் பெட்டிகளும் இனாமாக வழங்கப்பட்டன. ஓய்வு நேரத்தில் தேனீக்களைப் பிடித்து வந்து பெட்டிகளில் வளர்ப்பதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது.



# திருச்சி மாவட்டத்தில்

புதிய 20 அம்சத் திட்டத்தின் முதல் திட்டம் மானாவாரி நிலங்களில் பாசன வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பதாகும். இதைச் செயல்படுத்தும் நோக்கத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை நிலத்தடி நீர் எங்கெல்லாம் அதிகமாக இருக்கின்றதோ அந்த இடங்களை எல்லாம் தேர்ந்தெடுத்து துளையிடும் கருவிகளையும் அதைப்போன்ற மற்ற இயந்திரங்களையும் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்குக் கொடுத்து அதன்மூலமாகப் பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு உதவி செய்கின்றது.

தண்ணீரினுடைய ஊற்றைப் பெருக்கவும் தண்ணீருடைய அளவைப் பெருக்கவும் பலதரப்பட்ட வேலைகளையும் செய்வதற்குத் தேவையான இயந்திரங்களை வாடகைக்குக் கொடுத்து, பல ஆண்டுகளாக புதிய 20 அம்சத் திட்டத்தில் முக்கிய முதல் அம்சத் திட்டத்தை வேளாண்மைப் பொறியியல் துறை, செயலாக்கிக் கொண்டு இருக்கிறது மேற்படி திட்டத்தை 1984-85 ஆண்டில் தீவிரமாகச் செயல்படுத்தியதன் காரணமாக மானாவாரி நிலங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்தும் பாறைக் கிணறுகளை ஆழப்படுத்தியும் கிணறுகளின் உள்ளே துளைக் கிணறுகள் அமைத்தும் அதிகப்படியான மானாவாரி நிலங்களில் அதிகப்படியான பரப்பளவில் பாசனவசதிகளை வேளாண்மைப் பொறியியல் துறையினுடைய திருச்சிக்கோட்டம் செயலாக்கி இருக்கிறது.

3வது திட்டமான கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் வேளாண்மைப் பொறியியல் துறை மாவட்டம் முழுவதிலும் கசிவு நீர்க் குட்டைகள் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியம் மூலமாக 140 குட்டைகளும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக 280 குட்டைகளும் கட்டுவதற்கு இடங்களைத் தேர்ந்தெடுத்து, கடந்த ஆண்டு இத்திட்டத்தைமிகத் தீவிரமாகச் செயலாக்கினது. இதன் காரணமாக கிராமப் புறமக்களுக்கு விவசாயம் அல்லாத காலங்களில் மாற்று வேலை கிடைக்கவும் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் சிக்கல் இல்லாமல் நடைபெறவும் இந்தத் திட்டம் மிகவும் உதவியது.

வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மட்டும் கடந்த ஆண்டு திருச்சி கோட்டத்தில் மட்டும் இந்தத் திட்டத்தில் 280 கசிவு நீர்க் குட்டைகள் கட்டுவதற்கு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கடந்த ஆண்டு முடிவில் 166 குட்டைகள் முழுவதுமாக முடிக்கப்பட்டன. இதற்காக இதுவரை. 1 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. மொத்தமாக திருச்சி மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையில் எடுக்கப் பட்ட வேலைகளின் காரணமாக 13,77,278 மனித நாட்கள் 1984-85ஆம்ஆண்டில்உருவாக்கப் பட்டன. இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 5,78,915, மலையின மக்கள் 1,14,280 மற்றவர்கள், 6,84,081, பயனடைந்துள்ளனர். வருட இலக்கீடான (மனித நாட்கள்) 9.36 லட்சத்தைத் தாண்டி 13,77,278 மனித நாட்கள் இத் துறையின் மூலமாக உருவாக்கப் பட்டன. இதன் காரணமாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 87,818 குடும்பத்தினரும் மலையின மக்கள் 5,780 குடும்பத்தினரும் மற்றவர்கள்1,02,468 குடும்பத்தினரும் பயன் பெற்று இருக்கின்றனர். கடந்த ஆண்டுக் குறியீடான 100 லட்சத்தையும் தாண்டி சுமார் 84 லட்சம் அதிகப்படியாக அதாவது 184 லட்சம் ரூபாய், இத்திட்டத்தில் இத் துறையின் மூலமாகச் செலவு செய்யப்பட்டது.

ஒரு புறம் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கவும் இத்திட்டம் மறுபுறம் கசிவு நீர்க்குட்டைகள் கட்டுவதன் மூலமாக வெள்ள அபாயத்தைக் கணிசமான அளவு குறைக்கிருக்கிறது. மழைக் காலங்களில் பெய்கின்ற மழையின் வேகத்தைக் கட்டுப்படுத்தியும் மழைத் தண்ணீர் உண்டாக்கப்பட்ட குட்டைகளில் தங்கி அதன் மூலமாக நிலத்தடி நீரின் வளம் பெருகவும் இதன் காரணமாக குட்டைகளை சுற்றிலும் ஆயிரம் மீட்டர்வரை உள்ள கிணறுகளின் தண்ணீர் வளம் பெருகவும் சாத்தியம் ஆகிறது. இக்குட்டைகளைக் கட்டியதன் பலனாக 16,600 ஏக்கரில் பாசனம் உறுதிசெய்யப்படுகிறது. மேலும் அதிகப்படியாக 4150 ஏக்கர் நிலம் பாசனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்றவாறு நிலத்தடி நீர் வளம் பெறுகிறது. இதன் மூலமாக வெள்ள அபாயம் குறைவதுடன் பல லட்சக் கணக்கான கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 20 அம்ச முதல் திட்டத்தில் கண்டுள்ளபடி அதிக அளவில் விவசாயத்திற்குப் பாசன வசதி பெருகவும் இக்குட்டைகள் மூலமாக வசதி ஏற்படுகிறது.

முசிறி ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த வெள்ளனூர் கிராமத்தில் 1984-85ம் ஆண்டு தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்

சதவிகிதத்தை மட்டும் முதலில் பெற்றுக் கொண்டு சிப்காட் ஆய்வறிக்கைகளை கொடுக்கிறது. தொழில் முனைவோர்கள் அந்த ஆய்வறிக்கைகளைச் செயல்வடிவம் கொடுக்கும்போது 40 சதவிகித விலையை அவர்களிடம் இருந்து சிப்காட் திரும்பப்பெறுகிறது. மீதமுள்ள 50 சதவிகித விலையை சிப்காட் தொழில் முனைவோர்களுக்கு மானியமாகக் கருதுகிறது. 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இத்திட்டம் அமலில் இருந்து வருகிறது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, சிப்காட் ஆய்வு அறிக்கைகளை தயார் செய்துள்ளது. மேலும் 12 ஆய்வு அறிக்கைகள் சிப்காட் பரிசீலனையில் உள்ளன. இதுவரை 21 தொழில் முனைவோர்கள் இந்த ஆய்வு அறிக்கைகளை சிப்காட்டிடமிருந்து பெற்றுள்ளனர்.

ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின் தங்கிய 11 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் மேலும் குறிப்பிட்ட பின் தங்கிய 10 தாலுக்காக்களிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர், குன்றத்தூர், வட்டாரத்திலும், மற்றும் கும்மிடிப்பூண்டி தொழில் இணையத்திலும் (செங்கல்பட்டு மாவட்டம்) தூத்துக்குடி (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைக்கப்படும் சிப்காட் தொழில் இணையங்களிலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப் பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லதுபெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும்.

இத்திட்டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியில் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்குத் தொழிலைவிரிவுபடுத்தும்போதோ வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ, இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும் அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும். திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்திற்கோ அல்லது 50 இலட்சத்திற்கோ (எந்தத்தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்த பிறகு 3ஆண்டு தவணைகளில் சமத் தொகைகளாக வட்டியின்றி இந்தக்கடன் தொகைகளைத் திருப்பி அடைக்க வேண்டும்.

புதிய தொழில் நிலையங்களை ஏதேனும் பின்தங்கிய மாவட்டங்களில் அமைத்திடவும், மறைமலை நகர், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் மற்றும் கும்மிடிப்பூண்டி (செங்கல்பட்டு மாவட்டம்) தூத்துக்குடி (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைக்கப்படும் சிப்காட் தொழில் இணையங்களிலும் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் வரும். இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட உள்ள புதிய தொழிற் சடங்குகளுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டுக் காலத்திற்குஆண்டுதோறும் வட்டியில்லா விற்பனை வரித் தொகைக்குச் சமமானதாகவும் நிலையான இருப்புகளில் 20 சதவிகித அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்திற்கோ எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமலும் ஒரு கோடி ரூபாய் வரையில் அளிக்கப்படும்.


கடன் வழங்கப்பட்ட 9ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சமஆண்டுத் தவணைகளில் வட்டி எதுவுமின்றித் திரும்பிச் செலுத்தப்பட வேண்டும்.


வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச்சலுகைத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் தேதி வரை மொத்தம் ரூபாய் 3;233.59 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 2,138.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய தொழிலகங்களுக்கு உற்பத்தி தொடங்கிய முதல் ஐந்து ஆண்டுகளுக்கு மின்சாரத்திற்கான கட்டணத்தில் சலுகை வழங்கப்படுகிறது. பொது நீர் நிலைகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ள புதுத் தொழிலகங்கள் முதல் ஆறு ஆண்டுகளுக்கு, ஆண்டு ரூபாய் முன்னூறு மட்டும் ஆயமாகச் செலுத்த வேண்டும்.

சிப்காட் உதவி பெற்ற அல்லது சிப்காட் தொழில் இணையங்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களில் இலங்கை அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக ஒவ்வொரு அகதிக்கும் ரூபாய் 15,000 என்ற விகிதத்தில் ஆண்டுக்கு 11 சதவிகிதம் வட்டி விகிதத்தில் சிப்காட் அத்தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குகிறது.

தமிழகத்தில் புதிய தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் பழங்குடி இனத் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்க அவர்கள் பங்காக 15 சதவீதம் முதலீடு போதுமானது. தவணைக் கடன்களுக்கு வட்டி விகிதத்தில் 15 சதவீதம் தள்ளுபடி, தாழ்த்தப்பட்ட வகுப்பு-பழங்குடி இனத் தொழில் முயற்சியாளர் பொது மக்களிடம் இருந்து பங்குத் தொகை திரட்ட முடியாத நிலையில் பங்கு விநியோகத்தில் சிப்காட் நிறுவனம் நேரடிப் பங்கேற்கிறது.





இந்தத் தனிப் பிரிவு 1981ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய என்னெய் வள நாடுகள் தூரக் கிழக்கு நாடுகள், அமெரிக்கா மற்றும் பல நாடுகளில் இருந்து மொத்தம் 400 பொது விசாரணைகள் வந்துள்ளன. இதுவரை அயல்நாட்டு இந்தியர்கள் பங்கு பெற்று 7 தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 3 தொழில்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அருகில் 240 ஏக்கர் பரப்பளவில் தடையில்லா வணிக மண்டலம் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டது. இதன் பணிகளைக் கவனிக்க மத்திய அரசு ஒரு மேம்பாட்டு ஆணையரை நியமித்துள்ளது. இம்மண்டலத்தில் ஏற்றுமதி செய்வதற்கான தொழில்கள் தொடங்குவதற்கு அயல்நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். இம்மண்டலம் 1985ஆம் ஆண்டு இறுதியில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராணிப்பேட்டை மற்றும் ஒசூர் தொழில் இணையங்களில் கிடைத்த வெற்றியின் ஊக்கத்தில் சிப்காட் மேற்கூறிய இடங்களில் இரண்டாவது பகுதியையும் மற்றும் புதிய 5 தொழில் இணையங்களை கும்மிடிப்பூண்டி தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை மற்றும் மானாமதுரையில் நிறுவி வருகிறது.

இராணிப்பேட்டையில் முதல் தொழில் இணையம் பூர்த்தி அடைந்தவுடன் மேலும் சுமார் 150 ஏக்கர் நிலத்தை சிப்காட் இரண்டாவது பகுதி வளர்ச்சிக்காக வகைப்படுத்தியுள்ளது.

ஒசூரிலும் இரண்டாவதுபகுதி வளர்ச்சிக்காக சுமார் 500ஏக்கர் நிலத்தினை ஒசூர், கிருஷ்ணகிரி சாலையில் சிப்காட் கையகப்படுத்தி வருகிறது.

சென்னையில் இருந்து 45கி.மீ தூரத்தில் சென்னை-நெல் லூர் நெடுஞ்சாலையில் 500 ஏக்கர் பரப்பளவில் கும்மிடிப்பூண்டி கிராமத்தில் ஒரு தொழில் இணையத்தை சிப்காட் நிறுவனம்நிறுவியுள்ளது. இதுவரை 170 ஏக்கர் நிலத்தினை 50 தொழில் முனைவோருக்கு சிப்காட் நிறுவனம் கொடுத்துள்ளது.

மதுரையில் இருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ள மானாமதுரை என்ற கிராமத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் ஒரு தொழில் இணையத்தைச் சகல வசதிகளுடன் நிறுவியுள்ளது. இதுவரை75ஏக்கர் நிலத்தினை சிப்காட் நிறுவனம் தொழில் முனைவோர்களுக்கு அளித்துள்ளது.

புதுக்கோட்டை நகரில் இருந்து 6 கி.மீ.தொலைவில் ஒருதொழில் இணையத்தை 500 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் அமைத்துள்ளது இதுவரை 40 ஏக்கர் நிலத்தினை 7 தொழில் முனைவோருக்குச் சிப்காட் நிறுவனம் அளித்துள்ளது.

கடலூர் நகரில் இருந்து 7 கி.மீ தொலைவில் கடலூர் - சிதம்பரம் சாலையில் பெரிய இரசாயனத் தொழிற்சாலைகளுக்காகச் சிப்காட் நிறுவனம் 500 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் இணையத்தை நிறுவியுள்ளது. இதுவரை 126ஏக்கர் நிலத்தினைச் சிப்காட் நிறுவனம் தொழில் முனைவோர்களுக்கு அளித்துள்ளது.

தூத்துக்குடியில் 1300 ஏக்கர் பரப்பளவில் ஒரு பெரியதொழில் இணையத்தை நிறுவுவதற்காகச் சிப்காட் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் தேதி முடிய சுமார் 80,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்று நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் எனக்கணக்கிடப்பட்டுள்ளது.



# பெரியார் மாவட்டத்தில்

புதிய 20 அம்சத் திட்டத்தின் 2வது அம்சம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது:

''பயறுவகை உற்பத்தியைப் பெருக்க சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதில் தன்னிறைவு அடைய வேண்டும்.''

பெரியார் மாவட்ட வேளாண்மைத் துறை இந்த அம்சத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த 1984-85ஆம் ஆண்டில் பல திட்டங்களைத் தீட்டி அதை நிறைவேற்றுவதில் தீவிர கவனத்தைச் செலுத்தி வெற்றி கண்டுள்ளது. இதில் பல சாதனைகளையும் புரிந்துள்ளது. பயறுவகை உற்பத்தி இலக்காக 19,200 மெட்ரிக் டன்களை அரசு நிர்ணயம் செய்திருந்த போதிலும், 24,000 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி பரப்பளவும் 62,305 எக்டேராக உயர்ந்துள்ளது.

பயறுவகைச் சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும் பல திட்டங்கள் இம்மாவட்டத்தில் தீவிர கவனத்துடன் செயலாக்கப்பட்டன.

*தரமான விதைகள் விநியோகம் செய்தல்.

*விதையுடன் நுண்ணுயிர் கலந்து விதைக்கும் முறையை வழக்கப்படுத்துதல்.

*பூக்கும் பருவத்தில் டி.ஏ.பி. உரம் தெளித்து மகசூலைப் பெருக்கும் வழி முறையை எடுத்துரைத்தல் மற்றும் செயல்விளக்கம் செய்து காண்பித்தல்.

*தழைச்சத்து மற்றும் மணிச் சத்தை அடியுரமாக இடுவதற்கு எடுத்துரைத்தல்.

*தகுந்த பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க அறிவுரை வழங்குதல்.

*தக்க நேரத்தில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளப் பரிந்துரைத்தல் மற்றும் அதற்கான மானிய உதவி அளித்தல்.

*தனிப் பயிராக மட்டுமின்றிப் பயறு வகைகளை வயல் வரப்புப் பயிராக, ஊடு பயிராக, கலப்புப் பயிராகப் பயிரிடச் சிபாரிசு செய்தல்.

*பயறுவகை விதைச்சேமிப்பில் தனிக் கவனம் செலுத்துதல்.

—இத்திட்டங்கள் மைய அரசு மற்றும் மாநில அரசின் மானிய உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன. மானிய வசதியுடன் செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பயறு சாகுபடி பற்றி எடுத்துரைக்கப்பட்டது. நுண்ணுயிர்ப் பொட்டலங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், மினிகிட் விதைகள் ஆகியன மானிய விலையில் விவசாயிகளுக்குவழங்கப்பட்டது. பயறு சாகுபடி பற்றிய சிறப்புப் பயிற்சி வகுப்புகளும் வட்டார அளவில் நடத்தப்பட்டன.

1984-85ஆம் ஆண்டில் பயறு வகைகளின் கீழ் அடையப்பட்ட சாதனைகளில் சில வருமாறு:

88.2 டன் பயறுவகை விதைகள் அரசு வேளாண் கிடங்குகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 359.6 எக்டேர் பரப்பளவில் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டது. 87.8 டன் பயறு வகை விதைகள் கொள் முதல் செய்யப்பட்டுள்ளது. 2057 1 நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் 50 சத மானிய விலையில் 9997 பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பயறு மகசூலைப் பெருக்கிக் காட்ட சுமார் 100 எக்டேரில் டை-அமோனியம் பாஸ்பேட் தெளிக்கப்பட்டது.

ஆதார விதைகளை உற்பத்தி செய்த விவசாயிகளுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு விதை உற்பத்தி மானியமாக ரூ. 150 -வீதம் மொத்தம் 108 குவிண்டாலுக்கும் சான்றிதழ் விதை உற்பத்தி மானியமாகக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.200 வீதம் 401 குவிண்டாலுக்கும் ஊக்குவிப்பு மானியத் தொகை வங்கப்பட்டுள்ளது. பயறுவகைப் பயிர்களுக்குப் பயிர் பாதுகாப்பு செய்வதை ஊக்குவிக்க சுமார் 210.2 எக்டேர் பரப்பளவுக்கு 50 சத மானிய விலையில் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட்டன.

பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் 93 விவசாயிகளுக்கு 50 சத மானிய விலையில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மருந்து தெளிக்க ஆகும் செலவுப் பளுவைக் குறைக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் மொத்தம் 450 எக்டேருக்கு மருந்து தெளிப்பு மானியம் வழங்கப்பட்டது. ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ரகவித்துக்களைப் பிரபலப்படுத்த 3600 மினிகிட் விதைப் பொட்டலங்கள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.


கோடையில் பயறுவகைச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்க 56.6 எக்டேர் பரப்பளவில் புதிய

தொழில் நுட்பங்கள் பற்றிய செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. சான்றிதழ் விதைகளை உற்பத்தி செய்து தரும் விவசாயிகளுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு மானியமாக ரூ. 100 வீதம் சுமார் 309 குவிண்டால் விதை உற்பத்திக்கு மானியத் தொகை தரப்பட்டுள்ளது.

மேலும் பயறுவகை பயிர்களுக்கு நீர்பாய்ச்சும் விவசாயிகளை ஊக்குவித்துப் பயறு மகசூலைப் பெருக்கிக் காட்ட எக்டேருக்கு ரூ. 100 வீதம் 275 எக்டேருக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சேமிப்புக் கிடங்கில் இருக்கும் பயறுவகை விதைகளைப் பூச்சி நோய்களினின்று பாதுகாக்க சுமார் ரூ. 6800 வரை செலவிடப்பட்டு தரமான விதைக்ள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பயறுவகைகளின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும் குறைந்த காலத்தில் குறைந்த செலவில் வருமானத்தை விவசாயிகள் பெற வேண்டியும் வரப்புப் பயிராகக் கலப்புப் பயிராக மற்றும் ஊடு பயிராகப் பயிரிடும் முறைகள் பரிந்துரைக்கப்பட்டது.

நெல் வயல் பரப்புகளில் பயறு வகைகளைப் பயிரிட்டதில் 1055 எக்டேரும் இறவை நிலக்கடலையில் ஊடுபயிராகப் பயிரிட்டதால் 11124 எக்டேரும், மானாவாரி நிலக்கடலையில் பயிரிட்டதில் 4197 எக்டேரும், வாழை மற்றும் மஞ்சளில் ஊடுபயிராகப் பயிரிட்டதில் 1191 எக்டேரிலும், தானிய வகைகளில் கலப்புப் பயிராகத் தட்டைப்பயறு வகைகளைப் பயிரிட்டதில் 4702 எக்டேரும், இறவைப் பருத்தியில் பயறுவகைகளைப் பயிரிட்டதில் 1176 எக்டேரும் கொண்டு வரப்பட்டுள்ளது.



கிராமப்புறங்களில் கிடைக்கும் மாட்டுச் சாணம் மற்றும் விவசாயக் கழிவுப் பொருளை உபயோகித்து கரிமவாயு தயாரிக்கப்படுகிறது. இம்மாதிரி தயாரிக்கப்பட்ட கரிமவாயுவைப் பெரியார் மாவட்டத்திலும் வெற்றிகரமாக வீட்டு உபயோகத்திற்கும் விவசாயத் துறைகளுக்கும், தொழில் துறை ஆகியவற்றிற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் கரிமவாயுவை அதிக அளவில் உற்பத்தி செய்து சுமார் 125க்கும் மேற்பட்ட ஆயில் இஞ்சினை இயக்கி மின்னிசை செக்கு, விசைத்தறி மாவுமில், கரும்புபிழியும் இயந்திரம், தட்டைவெட்டும் கருவி, விவசாய பம்புசெட்டுகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

**சாண எரிவாயு:**

கரிமவாயுவை வெற்றிகரமாக வெவ்வேறு தொழில் துறைக்கும் விவசாயத் துறைக்கும் உபயோகப்படுத்திப் பலரும் பயன் அடைந்துள்ளார்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் சாண எரிவாயுத் திட்டத்தில் பெரியார் மாவட்டத்தின் சாதனைகள்:

| | குறியீடு | சாதனை |
|---|---|---|
| 1982-83 | 500 | 654 |
| 1983-84 | 800 | 1336 |
| 1984-85 | 2000 | 2740 |

**சாலை அமைப்பு**

கொங்கர்பாளையம் முதல் குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கம் வரை சாலை அமைத்தல்: இச் சாலை கோபி வட்டம் தூக்க நாய்க்கன்பாளையம் ஒன்றியத்தில் அமைந்துள்ளதாகும். இச் சாலையின் நீளம் 5.8 கி.மீ. இச் சாலையின் முடிவில் குண்டேரிப் பள்ளம் நீர்த்தேக்கத்துடன் முடிவடைவதுடன் அவ்விடத்தில் பூமிதான இயக்கத்தில் வழங்கப்பட்ட பூமிகளிடையே ஏற்பட்ட வினோபா கிராமம் உள்ளது. இச் சாலை முன்பு வண்டித் தடமாகவும், வண்டிகள் செல்ல இயலாத நிலையிலும் இருந்தது. தற்பொழுது போதுமான அளவு அகலப்படுத்தி போக்குவரத்திற்கு ஏற்ற சாலையாக அமைவதற்குரிய பணிகள் முற்றிலும் முடி

யும் தருவாயில் உள்ளது. மேலும் இச்சாலையை மேம்படுத்துவதனால் 6 கிராமங்களைச் சார்ந்த மொத்தம் 1700 மலை வாழ் மக்கள் பயன் பெறுவார்கள். மேலும் இச்சாலை குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கத்திற்குச் செல்வதற்கு வசதியாக அமைந்துள்ளது.

நம்பியூர் கொளப்பலூர் சாலை கி.மீ. 8-0 13-0 வரை சாலை அமைத்தல்:

இச்சாலை கோபி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. மேற்கண்ட சாலையை இத் திட்டத்தின் கீழ் மேம்படுத்து முன்பு மண் சாலையாகவும், கப்பி சாலை சரியானதாகவும் இல்லாததால், பஸ் போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாமலிருந்தது. தற்பொழுது ஊ.நி.வே. திட்டத்தின் கீழ் எடுத்து மேம்படுத்தி வருவதால் பஸ் போக்குவரத்திற்கு ஏற்ற சாலையாக அமைகிறது. மேலும் 3 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3693மக்கள் பயனடைகிறார்கள்.

வெள்ளித்திருப்பூர் -தொட்டிக்கிணறு சாலை மேம்பாடு செய்தல்: இச்சாலை அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சாலையாகும். இச்சாலை மிகவும் முக்கியமான இணைப்புச் சாலையாகும். இச்சாலை அகலம் குறைவாக வண்டி செல்ல முடியாமல் இருந்தது. இச்சாலை பெரியார் மாவட்டத்தையும் சேலம் மாவட்டத்தையும் இணைக்கும் இணைப்புச் சாலையாகும். இச்சாலை ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 9 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டது. தற்போது சாலை அமைக்கும் வேலை (15.00 மீட்டர் அகலம்) முடிந்துள்ளது. இந்நிலையிலேயே சேலம் மாவட்டா கொளத்தூரிலிருந்து பெரியார் மாவட்டம் அந்தியூர் பவானிக்குப் போக்குவரத்து அதிகரித்துள்ளது. இச்சாலை விவசாய வளர்ச்சிக்கு மிகவும் உபயோகமான சாலையாகும். கரும்புச் சாகுபடி அதிகமாகப் பயிராகும் பகுதியாகும். இச்சாலையால் லம்பாடி மக்கள் சுமார் 3000 பேர் பெரிதும் பயன் பெறுவார்கள். இச்சாலையால் மொத்தத்தில் சுமார் 7000 மக்கள் பயன்பெறுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் 452 மெட்ரிக் டன் நிலக்கடலை விதைகளும் 7 மெட்ரிக் டன் எள் விதைகளும், 15 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளும் மற்றும் ஒரு மெட்ரிக் டன் ஆமணக்கு விதைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.




## மக்கள் சேவையில் அண்ணா போக்குவரத்துக் கழகம்

1. மலைவாழ் மக்கள் நலன் கருதி கொல்லி மலை. வெள்ளி மலை, சேர்வராயன் மலைக்கு பேருந்து செலுத்துவது அண்ணா போக்குவரத்துக் கழகம்.

2. நலிவுற்ற பிரிவினர்க்கும், போக்குவரத்து வசதியேஇல்லாதகுக்கிராம மக்களுக்கும் உதவிடும் வகையில் பேருந்துகளை இயக்குவது அண்ணா போக்குவரத்துக்கழகம்.

3. காலம் தவறாமல், தக்க பாதுகாப்போடு பயணிகள்நம்பிக்கையுடன் பயணம் செய்ய, பயணிகளிடம் கனிவோடு பழகி, சேவை செய்து வருவது அண்ணாபோக்குவரத்துக் கழகம்.

4. சேலம், தருமபுரி மாவட்டங்களில் உள்ள எல்லாசுற்றுலாதலங்களுக்கும் பேருந்துகள்இயக்கி சுற்றுலா வளர்ச்சிக்கு சிறப்பு பணியாற்றுவது அண்ணா போக்குவரத்துக் கழகம்.

5. விற்க,வாங்க, வியாபாரம் செய்ய சந்தைப்பேருந்துகளை இயக்குவது அண்ணா போக்குவரத்துக் கழகம்.

6. பயணிகள் நலனைப்பேணி அவர்தம் நல்லெண்ணத்தைப் பெறுவது அண்ணா போக்குவரத்துக்கழகம்.

நிர்வாக இயக்குநர்.

ADVT




மாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நடைமுறை ஆண்டிற்கு 2607 வீடுகள் ரூ. 156.42 இலட்சம் செலவில் அங்கிகரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிராம வீட்டுவசதி திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பினருக்கு புதிய வீடுகள் கட்ட ரூ. 6,000 திட்ட மதிப்பீட்டில் ஆதிதிராவிட அங்கத்தினர்களுக்கு ரூ. 3,500 கடனாகவும் ரூ. 1,000 மானியமாகவும், ஆதிதிராவிடரல்லாதவருக்கு ரூ. 4,500 கடனாகவும் வழங்கப்பட்டு வருகிறது. மீதித்தொகை ரூ. 1,500 சம்பந்தப்பட்ட அங்கத்தினரே உடல் உழைப்பாலோ அல்லது கட்டடப் பொருளாகவோ வழங்க வேண்டும். மேற்கூறிய கடனை 10 முதல் 15 ஆண்டுகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.

1-4-84 முதல் 31-3-85 வரை காலத்திற்கு 2,654 வீடுகள் கட்டப்பட்டன. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 86.72 இலட்சம் நிதி வசதி பெறப்பட்டது.

இம்மாவட்டத்தில் 10,000 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க் அரசு இலக்கு நிர்ணயம் செய்தது. இவ்வாண்டில் இத்திட்டத்தின் கீழ் 15,922 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அரசு நிர்ணயித்த இலக்கான 10,000-க்கும் அதிகமாக அதாவது 5,922 பட்டாக்கள் வழங்கப்பட்டன என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

குடிநீர்ப் பிரச்சனையுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாது காக்கப்பட்ட நிரந்தரக் குடிநீர் வழங்கும் திட்டம்தான், இருபது அம்ச திட்டத்தின் எட்டாவது அம்சமாகும். வடார்க்காடு மாவட்டத்தில் மேற்படி 20 அம்சத் திட்டத்தைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வட ஆர்க்காடு வட்டத்தின் கீழ் உள்ள மூன்று கிராமியக் கோட்டங்கள் செயல்படுத்தி வருகின்றன. அக்கோட்டங்கள் வேலூர், திருவண்ணாமலை மற்றும் செய்யாறு முதலிய தலைப்பிடங்களில் இயங்கி வருகின்றன.

1984-85ஆம் நிதியாண்டில் இம்மாவட்டத்திலுள்ள குடிநீர்ப் பிரச்சனையுள்ள கிராமங்கள் முப்பது மட்டும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த 30 கிராமங்களில் முப்பத்தாறு குடி



யிருபபுப்பகுதிகள் அடங்கும். அவைகள் அனைத்தும் பயன் பெறும் வண்ணம் ரூ. 50,13,700 மதிப்பீடு தயார் செய்து திட்டங்கள் செயலாக்கப்பட்டு அத்தனையும் செவ்வனே முடிக்கப்பட்டன.

மலைவாழ் மக்களுக்குக் கால் நடைகளை மானிய விலையில் வழங்கும் திட்டம் ஒரு தொடரும் திட்டமாகும். இத்திட்டம் மலைவாழ் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

1984-85ஆம் ஆண்டில் 96 அலகுகள் கறவை மாடுகளும், 117 அலகுகள் ஆடுகளும், 85 இணை உழவு மாடுகளும் விநியோகிக்கப்பட்டன. இவ்வாண்டும் 50 சதவிகிதம் மானியத் தொகையுடன் இவை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயனடையும் மலைவாழ்மக்களுக்குக்கடன் வழங்கும் ஒரே வங்கி வேலூர் மையக்கூட்டுறவு வங்கியேஆகும். மலைப்பகுதிகளில் உள்ள ஜமுனா மருதூர் மற்றும் புதூர் நாடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலமாக இவ்வங்கி கடன் வழங்குகிறது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இத்திட்டத்தை அமல்படுத்துவதிலும், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார நிலையையும் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் விவசாயத்தில் முன்னேற்றம் அடைய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உழவு மாடுகள் வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் உழவு மாடுகள் வாங்க 1/3 பாகம் மானியமாகவும் 2/3 பாகம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

1984-85-ஆம் நிதியாண்டிற்கு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ. 53,400. அனைத்தும் செலவிடப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் கீழ் 89 ஏழை எளிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் பயனடைந்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் விவசாயம் முன்னேற்றம் அடைய நீர்ப்பாசன கிணறுகள் வெட்ட, மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிணறு வெட்ட மதிப்பீட்டுத் தொகையில் 1/3 பாகம் மானியமாகவும் 2/3 பாகம் நிலவள வங்கிகள் மூலம் கடனாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

1984-85ஆம் ஆண்டிற்கு வடார்க்காடு மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு ரூ. 70,300 செலவு செய்யப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் கீழ் 28 ஏழை எளிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனடைந்துள்ளனர்.


அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களையும் புறம்போக்கு நிலம் இல்லாத இடங்களில் பட்டா நிலங்களையும் கையகம் செய்து ஏழை எளிய வீடு அற்ற ஆதி திராவிடர்களுக்கு நபர் ஒருவருக்கு 0.03 செண்டு வீதம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# மாணவர் பக்கம்





ஒரு எலி நாளொன்றுக்குச் சுமார் 30-60 கிராம் தானியத்தையும், 30-50 மி.லி. வரை நீரையும் உட்கொள்கின்றது. 6 எலிகள் ஒரு மனிதனுக்குத் தேவையான அளவு உணவினை உட்கொள்ளுகின்றன.

# திருக்குறள் நெறிபரப்பு மாநாடு



வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிமொழியும் திருக்குறள் அன்பர்களையும், தொண்டர்களையும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களையும் பேணிப் போற்றும் பெருவிருப்புடைய தமிழ்நாடு அரசின் சார்பாகத் திருக்குறள் நெறி பரப்பு மையத்தினால் ஆகஸ்ட்டுத் திங்கள் 18-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (18-8-85) காலை முதல் இரவு வரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் நெறி பரப்பு மாநாடு சிறப்பாக நடத்தப்பட்டது.

திருக்குறள் உரையாசிரியர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், நூலாசிரியர்கள், எழுத்தாளர்கள், திருக்குறள் நெறி பரப்பும் மன்றத்தார், திருக்குறள் - இசைவாணர்கள், திருக்குறள் நினைவுக் கலைஞர்கள், திருக்குறள் இதழாசிரியர்கள், பல்லாற்றானும் குறள் நெறி பரப்பும் தொண்டர்கள் ஆகியோரைப் பேணிப் போற்றிப் பாராட்டிடும் வகையில் மாநாடு வீறுடன் விளங்கியது.

காஞ்சி ஞானசுந்தரம் குழுவினரின் நாயன நல்லிசையுடன் காலை நிகழ்ச்சி தொடங்கியது. கலைமாமணி மயிலம் ப. வச்சிரவேலு, தமிழ்நாடு இசைக் கல்லூரிப் பேராசிரியைகள் திருமதி இராஜேஸ்வரி மற்றும் திருமதி உருக்குமணி ஆகியோர் திருக்குறட்பாக்களை நயத்துடன் பாடி இன்னிசை மழை பொழிந்தனர். தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின் திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநர் தமிழ்மறைக் காவலர் கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவுக்கு நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ்நாடு போக்குவரத்துத் துறை ஆணையர் திரு. எஸ்.டி. காசிராஜன். இ.ஆ.ப., சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர்களின் கருத்துரையுடன் காலை நிகழ்ச்சி முடிவு பெற்றது.

**மாலை நிகழ்ச்சி**

மாலை நிகழ்ச்சி தேனிசை செல்லப்பா குழுவினரின் 'குறளின் குரல்' என்ற வில்லுப்பாட்டுடன் ஆரம்பமாகியது. குறட்பாக்களை வில்லிசையில் அமைத்துப் பாடிய முறை அனைவரையும் கவர்ந்தது.

திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநர் திருக்குறளார் திரு வீ. முனிசாமி திருக்குறள் அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களை அவையோருக்கு அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.





பின்னர் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் மற்றும் மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திருக்குறள் நெறிப் பரப்பு மையத்தின் சீரிய பணிகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர்.

அடுத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் ஆகியோர் திருக்குறளின் அருமை பெருமைகளையும், அதனைப் பரப்பும் வழிமுறைகளையும் எடுத்தியம்பினார்கள்.

விழாவில்-திருவாளர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளார், முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம், திருக்குறளார் திரு வீ. முனிசாமி, டாக்டர் ஔவை நடராசன், பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், கவிஞர் சுரதா, திரு வலம்புரிஜான் எம்.பி., திரு ஜெகத்ரட்சகன் எம்.பி., மயிலம் ப. வச்சிரவேலு, புலவர் இளங்கண்ணனார், புலவர் நாராயணசாமி, பேராசிரியர் பா. வளன் அரசு, மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் பலவகையிலும் திருக்குறளுக்குத் தொண்டாற்றும் அறிஞர் பெருமக்களுக்குப் பொன்னாடைகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழா நிறைவுப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுக்குத் திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநர் திருக்குறளார் திரு வீ. முனிசாமி பதக்கம் அணிவித்து, பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

மாநாட்டில் திருக்குறள் ஓவியக் கண்காட்சி பொதுமக்கள் பார்வைக்கு அமைக்கப்பட்டிருந்தது. புலவர் இளஞ்செழியன் நன்றியுரையாற்றினார்.

ஆயிரக்கணக்கானோர் மாநாட்டில் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்து சென்றனர். தமிழ்நாடு அரசு திருக்குறள் நெறி பரப்பு மையத்தின் சார்பாக வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பட்ட இம்மாநாடு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும்.






தமிழரசு

பழகியவன், அன்பு செலுத்தியவன், கவரப்பட்டவன், பின்பற்றியவன், அவருடைய இலட்சியப் பாதையில் பயணம்செய்து வருபவன் என்ற வகையில் எனக்கு அண்ணா எனும் நிறுவனத்தோடு 40 ஆண்டுத் தொடர்பு உண்டு. அவரே பல முறை கூறியது போல அண்ணா அவர்களுடைய இதயத்தில் தனியானதோர் இடம் பெறுகிற அளவு, நாளுக்கு நாள் தகுதிகளைப் பெற்றிடுவதே வாழ்வின் குறிக்கோள் என்று கருதியவன் என்பதை இந்நேரத்தில் நினைவு கூர்வது பெருமிதத்தையும், ஓரளவு கர்வத்தையும் என்னிடம் ஏற்படுத்துகின்றது.

சரித்திரத்தில் திருப்புமுனைகளை முன்கூட்டியே ஊகித்துச் சொல்வது எல்லோராலும் இயலாத காரியம். தீர்க்கதரிசனம்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள் என்று ஒன்று இருக்குமானால், அது அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய வழியில் நடந்து செல்வது. அமரர் அண்ணா அவர்களின் குறிக்கோள்களுக்குச் செயல் வடிவம் தருவது; நிறைவேற்றப்படாத அண்ணாவின் திட்டங்களை நிறைவேற்றுவது என்பது தான் என் குறிக்கோளாகும்.

''தம்பீ! மத்திய அரசுக்கு எரிச்சலூட்டுவதோ, டில்லியுடன் சச்சரவில் ஈடுபடுவதோ என் நோக்கமல்ல. அது யாருக்கும் உதவி செய்வதாக இருக்காது. உண்மைதான். பொருத்தமான காலகட்டத்தில் திடமனதுடன் விளங்க வேண்டும்; அதுதான் முக்கியம்'' என்று 14-1-69-ல் அண்ணா கைப்பட கட்டளையிட்டுள்ளார்.

திட அண்ணா காட்டிய வழியில் இடையறாது பாடுபட்டு வருகிறோம். நமது தேசிய நோக்கும் அனைத்திந்தியப் பார்வையும், அணுகுமுறையும் அமரர் அண்ணா அவர்கள் காட்டிய வழியின்பாற்பட்டதே! இதனைக் குறை கூறுவோர், கேலி பேசுவோர் யார் என்பதை நான் அறிவேன். மத்திய அரசுடனும், அதன் ஆளும் கட்சியுடனும் நேச உறவு கொள்ள முயன்று, முனைந்து தோற்றவர்கள்தான் இன்று என்னைக் கேலி செய்கிறார்கள்.

அவர்கள் தோற்ற இடத்தில்-அண்ணாவின் சக்தியால் நான் வென்றேன் என்றால் அதனால் தமிழகம் பெற்ற நலன்கள் ஏராளம்.

இன்று இந்த நாட்டின் நாற்புறமும் நிலவியுள்ள சூழ்நிலை—



படைத்தவர்கள் என்று யாரைக் கூறுகிறோம் என்றால், வருங்காலத் தலைமுறைகளுக்கும் பயன்படுகிற நெறிமுறைகளை வாழ்வாலும், வாக்காலும் உணர்த்திவிட்டுச் செல்கிறவர்களைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறோம். மனித இனத்தின் செயல்களில், நடைமுறைகளில், போக்கில் அத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் சரித்திரச் சான்றோர் என்று போற்றப்படுகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை— என்னை என்று தனிப்பட்ட முறையில் நான் அழைத்துக் கொண்டாலும், எனது பாதையை பொதுவாழ்வுக் கொள்கைகளைப் பின்பற்றுகிற அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாகவே என்னை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறேன் - அத்தகைய என்னைப் பொறுத்தவரை என்

அதுதான் நமக்கு வேதவாக்கு. அதுதான் நமக்கு இடப்பட்ட கட்டளை.

தமிழ்நாட்டினுடைய நலன்களையும், தமிழ் மக்களுடைய தனித்தன்மைகளையும் கட்டிக் காத்து வருகிற அதே நேரத்தில் தேசிய இலக்குகளுக்கு வலிவு சேர்க்கிற வகையில் ஒருமைப்பாட்டுக்காக உழைப்பதும், பேத உணர்ச்சிகள், பிரிவினை எண்ணங்கள் வளர இடம் தராமல் பார்த்துக் கொள்வதும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்டிக் காத்த குறிக்கோள்களாகும்.

காலனி ஆதிக்கமற்ற உலகம், போர் ஒழிந்த உலகம், ஒன்றுபட்ட இந்தியா, ஜனநாயக அரசியல், சமதர்மப் பொருளாதாரம், சமத்துவ சமுதாயம், அமைதி வழி நடைமுறை இவற்றைத் தமிழக அளவிலும், அனைத்திந்திய அளவிலும் பேணிக் காத்

வல்லரசுகளின் ஆயுதப் போட்டி காரணமாக அண்டை நாடுகளில் ஆயுதப் பெருக்கம் - சர்வதேச சதிக் கும்பலின் தீய நோக்கம் கொண்ட காரியங்களால் நமது ஒற்றுமைக்கு எழுந்துள்ள ஆபத்துக்கள், இவற்றைத் துல்லியமாக நாம் அண்ணா கற்றுக் கொடுத்த தேசியப் பார்வையால் கணக்கெடுத்து வருகிறோம்.

நமது ஆதரவு என்பது அரசுக்கு மட்டும் அல்ல, தேசத்தின் வலிமையைக் காக்கும் அதன் முயற்சிகளுக்கு என்பதை வெகு விரைவில் காலம் உணர்த்தும்.

வாழ்க அண்ணா நாமம்!

['பேரறிஞர் அண்ணா பவள விழா மலர்'க் கட்டுரையின் ஒரு பகுதி.]



# வாழ்க அண்ணா புகழ்!

மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் நாவலர்
**இரா. நெடுஞ்செழியன்**

ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் பாராட்டிப் புகழப்பட்டவரும், அறிவுடையோராலும், ஆற்றலுடையோராலும் வாழ்த்தி வரவேற்கப்பட்டவரும் நல்லவர்களாலும் வல்லவர்களாலும் ஏற்றிப் போற்றப்பட்டவரும், பாமரர்களாலும், படித்தவர்களாலும் மதித்துத் துதிக்கப்பட்டவரும், இளையோராலும் முதியோராலும் ஆதரித்து அரவணைக்கப்பட்டவரும், மாற்றாராலும் வேற்றாராலும் வியந்து விழையப்பட்டவரும் ஆன அறிஞர் அண்ணா அவர்களின் அன்புத் தம்பியரில், எளியேனும் ஒருவனாகத் திகழ்ந்தேன் என்பதை எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் பூரிப்படைகிறேன்; பெருமைப்படுகிறேன்; பெருமிதங் கொள்கிறேன்.



அறிஞர் அண்ணா அவர்களின் அன்புத் தம்பியாக மட்டுமல்லாமல், அவரின் அருமைத் தம்பியாக, அணுக்கத்தம்பியாக, அவரால் அணைக்கப்பட்ட தம்பியாக, அருளப்பட்ட தம்பியாக, ஆதரிக்கப்பட்ட தம்பியாக, போற்றப்பட்ட தம்பியாகப், புகழப்பட்ட தம்பியாக, பெருமைப்படுத்தப்பட்ட தம்பியாக, பாராட்டப்பட்ட தம்பியாக, அவரின் அறிவுரையையும் அறவுரையையும் பெற்ற தம்பியாக, நம்பிக்கையையும் நன்மதிப்பையும் அடைந்த தம்பியாக எளியேன் விளங்கினேன் என்பதை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் ஈடும் எடுப்புமற்ற, கங்கு கரையற்ற உவகைப் பெருக்கின், அந்த நீங்கா நினைவு என் உள்ளத்தே பாய்ந்தோடச் செய்கின்றது.

அறிஞர் அண்ணா அவர்கள், அவரை அணுகிய அனைவரிடமும் அன்பு காட்டினார்; அனைவரையும் மதித்தார்; அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார்; அனைவரிடமும் கலந்துரையாடல் நடத்திக் களிப்புற்றார்; ஆனால் மிகமிகச் சிலரிடத்தில்தான் நெருங்கிப் பழகி, உடனுறைந்து உரையாடி, உவகைப் பூத்து மனநிறைவோடு வாழ்ந்து வந்தார். அந்த மிகச் சிலரில், யானும் ஒருவன் என்பதை நினைக்கும் தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சு நிறைமகிழ்வு பெறுகின்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், இயற்கையோடு இயற்கையாய் மறைந்து விட்டார்கள்; ஆனாலும் அவருடைய பெயரும், புகழும், அவரைப் பற்றிய அருமை பெருமைகளும் என் போன்றவர் நெஞ்சில் நீக்கமற நிறைந்து நின்று, எப்பொழுதும் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் உவகை இன்பம் தரும் ஒரு பெரும் உள்ள ஓவியமாக, ஆம்! அதுவும் அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிர் ஓவியமாக ஆகிவிட்டார் பேரறிஞர் அண்ணா!

பேரறிஞர் அண்ணா அவர்களோடு இடையறாது, நெருங்கிப் பழகி, உடனுறைந்து, அவருடைய அன்பையும், ஆதரவையும், போற்றுதலையும், பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும், வரவேற்பையும் உவமை பொங்குகிற அளவுக்குப் பெற்று வாழ்ந்த நான், அவரை எந்த வகையிலும் எட்டிப் பிடிக்க முடியாத ஒருவனாகத் தான் ஏங்கித்தவிக்கிறேன். அவருடைய அறிவுத் திறன்— ஆற்றல் திறன் -பண்பாட்டுத் திறன் - செயல்படும் திறன் ஆகியவற்றில் நூற்றிலே ஒரு பங்கு அளவைக்கூட இன்னமும் பெற முடியாமல் நான் இருந்து வருகிறேன்.


''தோழர் நெடுஞ்செழியன் எனக்குத் தம்பிதான் வயதில்! உண்மையில் அவரைத் தம்பி என்று அழைப்பதில் பெருமைப் படுகிறேன். என்னை அண்ணனாகக் கொண்டிருப்பதில் அவரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் 1956-இல் திருச்சி மாநில மாநாட்டில் கூறிய கூற்று, என் செவிகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

வாழ்க அறிஞர் அண்ணாவின் புகழ்!

### சந்தேகம்

சந்தேகம் என்ற கொடிய எண்ணம் மனதிலே புகுந்து விட்டால் வாழ்க்கை என்பதன் பொருளே விளங்காமற் போய்விடும்.


—தந்தை பெரியார்



வரலாற்றில் தமிழகத்தை
வாழவைத்த தெய்வமே!
வண்ணத் தமிழ் நாடென்று
பெயர் சூட்டிய பேரறிஞரே!
எண்ணத்தில் கலந்துவிட்ட
எதையும் தாங்கும் இதயமே!
புகழுடன் ஆட்சி செய்யும்
இதயக்கனி எம்.ஜி.ஆருடன்
இணைந்து
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
தமிழ் பிறந்த திருநாளாய்
இந்நாளை
தலைவா! உன் பிறந்த நாளைக்
கொண்டாடி மகிழ்கிறது.

கோடம்பாக்கம் எம்.குமார்
மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை-600 006



DIPR/1009/85/NAS





# இலட்சியப் பாதையில்....

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

இன்று அமரர் அண்ணா அவர்கள் நம்மிடையே உலவிக் கொண்டிருந்தால்...... என்ற நினைப்பு நம் நெஞ்சை நிறைத்து நிற்பதைத் தவிர்க்க முடியாது.

பிற நாட்களில் மறந்துவிட்டு, பிறந்த நாளில் மட்டும் நினைக்கக்கூடிய தலைவரல்ல அவர். மற்ற நாட்களில் மறந்து விட்டு குறிப்பிட்ட ஒரு நாளில் மட்டும் சடங்கு போல அவரை எண்ணுகின்ற கூட்டமல்ல நாம்.

நமது இதயங்களில் என்றும், எப்போதும் குடிகொண்டிருப்பவர். அதற்கான தகுதி பெற்றவர் என்ற தனிப்பெரும் சிறப்பை நாம் பேரறிஞர் அண்ணா ஒருவருக்குத்தான் தந்திருக்கிறோம்.

நம் நெஞ்சக்கோயிலில் என்றும் இருப்பவர் என்பதால்தான் பேரறிஞர் அண்ணா அவர்களை அமரர் என்று அழைக்கிறோம். அழியாத தன்மைக்கு அமரத்துவம் என்று பெயர்.

நம் நெஞ்சில் அழியாத-நிலையான இடம் பெற்று விட்டவர். என்றும் நினைவில் அழியாதவர். அழிக்கப்படவோ, அகற்றப்படவோ மாற்றப்படவோ இயலாதவர் என்பதால் நான் பேரறிஞர் அண்ணா அவர்களை அமரர் என்ற சொல்லால் அழைப்பதைக் கூட சிலர் குற்றம் சொன்னார்கள். என்றாலும் அமரர் என்ற சொல்லைப் போல நமது உணர்வுகளுக்கு வடிவம் கொடுக்கிற சொல் வேறு இருந்தால் சொல்லட்டும் நான் ஏற்கிறேன்!

அமரர் அண்ணா அவர்கள் தோன்றி முக்கால் நூற்றாண்டு ஆகிவிட்டது. அவரது வாழ்க்கையில் அவர் நடந்த பாதை, எடுத்த முடிவுகள், அறிவித்த கொள்கைப் பிரகடனங்கள், அருளிய உபதேசங்கள் இவையெல்லாம் இன்று நம் கண்முன் விரிந்து கிடக்கின்றன. அவருடைய வாழ்க்கையே நாம் பின்பற்றத் தக்க செய்தியாக நம் முன் வழிகாட்டி, ஒளி வீசி அழைத்துச் செல்கிறது.


பேரறிஞர் அண்ணா அவர்களின் வயது இன்று 76 என்றால், அவருடைய வாழ்வின் சரிபாதி பகுதிக்கும் மேற்பட்ட ஆண்டுகளில் நான் அண்ணா அவர்களுடன் தொடர்புகொண்டவன். அதாவது அண்ணா அவர்களோடு


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆவணி 31
மலர் : 16 இதழ் : 6
16-9-1985

# அண்ணா வழிநடப்போம்!

கவிஞரேறு வாணிதாசன்



அரசில் தமிழரசை நல்லரசாய் ஆக்கி
முரசறைந்து வாழ்த்தினான் மூத்த-உரைசால்
நமதண்ணா நல்லறிஞன். பேரறிஞன் அண்ணா
அமைதியின் தோற்றம் அறி!

தனித்துத் தமிழகத்தின் தாழ்மையைப் போக்க
இனித்த தமிழ்பேசி என்றும் மணித்தப்
பிறப்புப் பெருவாழ்வு பெற்றிடவே அண்ணா
அறத்தொடு செய்தான் அரசு!

அறிந்தார் அறியார் அறிவரே அண்ணா
நெறிநின் றொழுகிய நேர்மை!-வெறிகமழ்
பூஞ்சோலை உள்ளே புகுந்து வருகின்ற
காஞ்சி இளந்தென்றற் காற்று!

தென்றல் இனிமைநற் றேனினிமை வாய்ப்பேச்சில்
மன்றில் இனிக்கும் நமதண்ணா முன்றில்
இளநகை இன்சொல் எவரெவர்க்கும் கூட்டும்
உளத்தோன் உயர்ந்தவனாம் காண்!

மழைமோது நீள்குன்ற மாடத்துக் காஞ்சி
உழைபாய் மலர்க்காட்டின் ஊடே-கழையிடையின்
பின்னே எழுந்து வளரும் இளம்பரிதி
முன்காட்டும் அண்ணன் முகம்!

வாடும் மனத்துள் மறையாத் திருவிளக்கு
நீடு புகழண்ணா நேர்மையோன்-நாடு
செழிக்கவந்த செஞ்சொல் மறவன் பகைநா
அழிக்கவந்த அன்புச் சுடர்!

முகம்மறக்கப் போமோநம் மூதறிஞர் அண்ணா
அகம்நிறைந்து போன அறிஞன்-உகம்போற்றும்
அண்ணா வழிநடப்போம் அண்ணன் நமக்
கெல்லாம்
விண்ணொளி வெய்யோனே யாம்!

## யார் தமிழர்?

பயிரில் களை போன பிறகு, உழவர் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் காண வேண்டுமா? கண்கெட்டதே என்று கவலைப் பட்டவனுக்கு மருத்துவர் உதவியால் மீண்டும் பார்வை விளக்க மான்தும், அவன் எங்ஙனம் இருப்பான் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமா? பாய்ந்த வேலை வாங்கி எறிந்து, எதிரியை வீழ்த்தும்போது வெற்றி வீரனின் அகமும் முகமும் எங்ஙனம் இருந்திருக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?

காதலித்தவளைக் கடிமணம் புரியும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்ற காளையின் களிப்பைக் காண வேண்டுமா? கார் கண்ட மயிலை, கதிரவனைக் கண்ட கமலத்தைக் காண வேண்டுமா

இதோ தமிழர்களைக் காணுங்கள்; பிறப்பால் மட்டுமல்ல உணர்வால், பண்பால் தமிழர்களாக உள்ளவரைக் காணுங்கள் இவ்வளவும் தெரியும்!

—பேரறிஞர்

# திண்டுக்கல் குடிநீர்ப் பிரச்சனை தீர்ந்தது!...

மதுரை மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமான திண்டுக்கல். பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் (15.9.85) முதல், மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிந்த்து புதியதாக உருவாக்கப்படும் அண்ணா மாவட்டத்தின் தலைமையிடமாகத் திகழும்.



இரண்டு இலட்சம் மக்கள் தொகை கொண்ட திண்டுக்கல் நகருக்கு நாள் ஒன்றுக்கு 30 இலட்சம் காலன் குடிநீர் தேவையாகும்.

திண்டுக்கல்லிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து நல்ல மழை பொழிந்து செழிப்பாக இருக்கும் கட்டத்தில் கூட 20 இலட்சம் காலன் குடிநீர்தான் கிடைக்கும். எனவே ஒருநாள் விட்டு ஒருநாள் சாதாரணமான காலத்திலும் கூட குடிநீர் வழங்கப்படும். திண்டுக்கல்லில் பிரிட்டிஷ் காலத்திலிருந்து குடிநீர்ப் பிரச்னை நிலவி வருகிறது.

**அரசு மேற்கொண்ட முன்னேற்பாடுகள்:**

இவ்வாண்டில் ஜனவரி மாதம் முதல் திண்டுக்கல் பகுதியில் மழை கிடையாது. தொடர்ந்து மழை இல்லாத நிலையில் அரசு அடுத்தடுத்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களுக்குக் குடிநீர் வழங்க வழி வகை செய்துள்ளது.

மார்ச் மாதம் முதல் தமிழக அரசின் வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளர் திரு ஏ.பத்மநாபன் அவர்கள் மூன்று முறை திண்டுக்கல் நகருக்கு வருகை தந்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டு தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வழிசெய்தார். அதன் பின்னர் 43 இடங்களில் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள 131 ஆழ்குழாய்க் கிணறுகளும் பழுது ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மொத்தம் 174 ஆழ்குழாய்க் கிணறுகள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன.

ஜூன் மாத இறுதியில் தமிழக அரசு, திண்டுக்கல் பகுதியில் செயற்கை மழை பெய்ய நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால், அப் பகுதியில் போதிய அளவு ''மழை மேகங்கள்'' இல்லாத காரணத்தால் இம்முயற்சி பயன் அளிக்கவில்லை.

**தோண்டுதல்:**


வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு. ஹரிபாஸ்கர் அவர்கள் ஜூலை மாதத்தில் திண்டுக்கல் நகருக்கு வருகை தந்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டு ரூ.15 இலட்சம் செலவில் 17 கிணறுகள் அமைக்க ஆணையிட்டுள்ளார். இதன்மூலம் நாள்தோறும் 5 இலட்சம் காலன் குடிநீர் கிடைக்கும்.

17.8.85 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு டி.வி.அந்தோணி, இ.ஆ.ப., அவர்கள் திண்டுக்கல் நகருக்கு நேரில் வந்து நிலைமைகளை ஆய்வு செய்தார். சுமார் 20 கிலோமீட்டர் தூரம் தனியாக சைக்கிளில் சென்று நகரின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களின் கருத்தை அறிந்தார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா. வரதராஜுலு.இ.ஆ.ப., அவர்கள் செய்துள்ள ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளன என்று தெரிவித்தார்.

மேலும் புதியதாக 25 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் ஆணை பிறப்பித்துள்ளார். ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி உடனடியாகத் துவக்கப்பட்டது. மேலும் நகரில் உள்ள 41 கிணறுகளில் 21 கிணறுகள் நல்லநிலையில் உபயோகத்தில் உள்ளன. எஞ்சிய 20 கிணறுகளை ஆழப்படுத்தவும், தூர் எடுக்கவும் ஆணை பிறப்பித்து, பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து ஏழுமாத காலமாக மழை இல்லாததால், காமராஜர் சாகர் மூலம் கிடைத்த 7 இலட்சம் காலன் குடிநீர் ஆகஸ்ட்டுமாதம் முதல் 2.3இலட்சம் காலனாகக் குறைந்தது. எனவே திண்டுக்கல்லுக்கு வேறு பகுதியிலிருந்து குடிநீர் கொண்டு வருவது தவிர வேறுவழியில்லை என்ற நிலை ஏற்பட்டது.

ப. சாமிநாதன்,
செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்.





# அரசியல் ஞானி

**மாண்புமிகு மின் துறை அமைச்சர்**
**திரு. எஸ். இராமச்சந்திரன்**

பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னைப் போலப் பிறரும் நன்கு வளர வேண்டும் என எண்ணும் இயல்பினர். என்னைப் போன்ற இளைஞர்கள் அவரோடு பழகிய நேரத்தில் அவர் கற்றுத் தந்த அறிவுரைகளும், நாங்கள் பெற்ற பாடமும் மிகப் பல. அவற்றில் ஒரு சிலவற்றை நினைவு கூர்வது இக்கால இளைஞர்களுக்கும் பலன் தரும் என்பதால் சிலவற்றை எடுத்துக்கூற விழைகிறேன்.

இன்னொருவர் நம்மிடம் ஆலோசனை கேட்கும்பொழுது கேட்பவர் நிலையிலிருந்து யோசனை கூறுவதுதான் அறிவுடைமை.

''அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை''

என்றார் திருவள்ளுவர். அறிஞர் அண்ணா அவர்கள் இதற்கு ஓர் நல்ல உதாரணம்.

1959இல், பொறியியல் பட்டப் படிப்பு முடித்து அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து 'அரசியலுக்கு வரட்டுமா அல்லது அரசு வேலையில் சேரட்டுமா?' எனக் கேட்டேன் நான்.





''இப்பொழுது அரசியலுக்கு வேண்டாம். ஒரு வேளை நாம் ஆட்சிக்கு வரும்பொழுது நிர்வாக அனுபவம் பெற்றவர்கள்தேவைப் படலாம். ஆகவே முதலில் வேலையில் சேர்'' என்று அறிவுரை வழங்கினார். அதற்குப் பின்னர் 'ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்' என்பதைப்போல அரசியலிலும் அரசாங்க வேலையிலும் தொடர்வது எனக்கு மிகவும் சங்கடமாயிருந்தது.

1966ஆம் ஆண்டு, திண்டிவனத்தில் நடைபெற்ற ஒரு திருமணத்தின்பொழுது அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து ''அரசியலுக்கு வந்துவிடலாமெனக் கருதுகிறேன்'' என்றேன். ''சரி'' என்று ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் - 'எந்தத் தொகுதி?' எனக் கேட்டு, 'பண்ருட்டி தொகுதி' என்ற உடன், அதையும் ஒப்புக் கொண்டு அனுமதி தந்தார்.

1959இல் இருந்த அரசியல் சூழ்நிலையில், நம்மை நம்பி வந்து கெட்டுவிடக் கூடாதே என்ற எண்ணம் ஒரு வேளை அவருக்கு இருந்திருக்கலாம். ஆனால் 1966இல், அவருக்கே இருந்த நம்பிக்கையின் விளைவாகவே நான் பதவி விலக ஒப்புக்கொண்டிருப்பார் எனக் கருதுகிறேன்.

தன் நிலையிலிருந்து அறிவுரை கூறுவோர்கள் பலர். ஆனால் பிறர் நிலையிலிருந்து எண்ணிப் பார்த்து அறிவுரை கூறுவோர் மிகச் சிலர். அத்தகையோரில் தலையாயவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

கூட்டங்களில்பேசுகிறபொழுது கை தட்டலுக்காகப் பேசுவது பெரும்பாலான பேச்சாளர்களுக்கு வாடிக்கை! ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குச் சொல்வது, ''கூட்டத்தில் பேசும்போது வெறும் கை தட்டலுக்காக மட்டும் பேசக் கூடாது. கை தட்டுகிறவர்கள் நம்முடைய கட்சித் தோழர்களாகவே இருப்பர். ஆகவே தொலைவில் நின்று கொண்டு ஏளனமாகக் கேலியாக நமது பேச்சைக் கேட்டுக் கொண்டு நிற்கிறார்களே; அப்படிப்பட்ட எதிர்க்கட்சிக்காரர்களை மௌனமாக்கவும், கூட்டத்திற்கு வருகிற எந்தக் கட்சியையும் சாராத பொதுமக்களை 'இவர்கள் சொல்வது சரிதானே!' என்று சொல்ல வைக்கவும் பயன்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் நம்முடைய பேச்சைக் கேட்ட பிறகு, அந்தப் பேச்சில் ஏதேனும் ஒரு பகுதியை, கூட்டம் கேட்டவர்கள் கூட்டத்திற்கு வராதவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிற அளவுக்கும் அந்தப் பேச்சு எளிமையாகவும் கருத்தாழமுள்ளதாகவும் இருக்கவேண்டும்'' என்பார்.

பேச்சுக் கலையின் மூலம் பேரியக்கத்தைவளர்த்தவர் அண்ணா. படிக்கத் தெரியாத பாமரமக்கள் நிறைந்த நாடு நம்நாடு. அவர்களிடம், அவர்களுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை எடுத்து வைப்பது படித்தவர்கள் கடமை என்பதை உணர்ந்தவர் அறிஞர் அண்ணா. ஆகவேதான் நன்றாகப்பேசினால் பொறாமைப் படும் கூட்டம் உள்ள நம்நாட்டிலும் கூட, பட்டி தொட்டியிலிருந்து பாராளுமன்றம் வரை நன்கு பேசக் கூடிய பலரை அவரால் தயாரிக்க முடிந்தது.

கொள்வதும் கொடுப்பதும் தகுந்த இடத்திலேயே இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனத்தோடு இருந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

இப்படி துறைபோகிய வல்லவராய்-- தூயமனம் கொண்ட நல்லவராய் - தம்பியரை மேலேற்றும் ஏணியாய், தத்தளித்த தமிழினத்தைக் கரை சேர்த்த தோணியாய், மிகச் சிறந்த அரசியல் ஞானியாய் இருந்தவர் பைந்தமிழ் அண்ணன்!

''பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்''

என்ற குறளுக்கே உரைநூலாக வந்த ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்களே!

அண்ணன் வழியில் நடப்போம்—
ஒரு பொன்னுலகை நாம் படைப்போம்!


## மாநில தலைமை கணக்காயர்

**தமிழ்நாடு, 261, அண்ணாசாலை**
**சென்னை-600 018**

### அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி 1984-85 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள்

மாநில தலைமைக் கணக்காயர், தமிழ்நாடு, அவர்கள், மாநில அரசு ஊழியர்கள் அனைவருடைய பொது வருங்கால வைப்பு நிதியின் (GPF) 1984-85 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (அக்கௌண்ட் சிலிப்) அனுப்பத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த அறிக்கைகள் அரசு ஊழியர்கள் 1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணி புரிந்தார்களோ, அந்தந்த அலுவலக தலைமை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆகவே தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தத்தம் கணக்கு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இந்த கணக்கு அறிக்கைகளில் ஏதாவது குறைகள் காணப்படுமேயானால், அந்த குறைகளை நிவர்த்திக்க, சம்பளபட்டியில் விபரங்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள். கணக்கு அறிக்கைகள் 30-9-'85 தேதி வரை கிடைக்காவிட்டாலும் கீழ்கண்ட முகவரிக்கு உடனே எழுதவும்.

**திரு டி. மெய்யழகன்,**
கணக்கு அலுவர் (எப். எம். I பிரிவு)
மாநில தலைமை கணக்காயர் அலுவலகம்,
261, அண்ணாசாலை,
சென்னை-600 018.

இந்நிலையில் முதலில் திண்டுக்கல்லிலிருந்து சுமார் 20 கி.மீ. தூரமுள்ள நிலக்கோட்டையிலிருந்து தண்ணீர் எடுத்துச்செல்லும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு போதிய அளவு குடிநீர் அங்கு கிடைக்காத நிலையில், திண்டுக்கல்லிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவிலுள்ள ஆண்டிப்பட்டி பங்களா பகுதியில் உள்ள நீர் ஆய்வு செய்யப்பட்டது.

**லாரிகள் மூலம் குடிநீர்:**

மதுரைக்கு அருகிலுள்ள வைகை நதிக்கரையிலுள்ளமேலக்கால் குடிநீர் ஆதாரத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள திண்டுக்கல்லுக்கு குடிநீர் எடுத்துச் செல்லும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்த போர்க்கால நடவடிக்கை போல் பணி மேற்கொள்ளப்பட்டது.

9.8.85 முதல் மேலக்காலிலிருந்து 25 லாரிகள் மூலம் குடிநீர் எடுத்துச் செல்லப்படடு, தற்போது 85 லாரிகள் மூன்று முறை 3 இலட்சம் காலன் குடிநீர் கொண்டு செல்லப்பட்டு திண்டுக்கல் நகரில் 192 இடங்களில் அமைக்கப்பட்ட நீர்த்தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டது. ஆனால் பொதுமக்கள், குழாய்கள் மூலம் குடிநீர் பெறுவதையே பெரிதும் விரும்பினார்கள். இந்நிலையில் மேலக்காலிலிருந்து கொண்டு செல்லும் குடிநீரை மலைக்கோட்டை பகுதியில் உள்ள நிலையான மேல்நிலைத் தொட்டிக்கு அருகில் நீர்த்தேக்கத் தொட்டி உடனடியாக அமைக்கப்பட்டது. மதுரை மேலக்காலிலிருந்து லாரிகள் மூலம் வரும் குடிநீரை இந்தத் தொட்டியில் நிரப்பி பின்னர் நிலையான மேல் நிலைத்தொட்டிக்குக் குடிநீர் ஏற்றப்படுகிறது. அத்தொட்டியிலிருந்து நகரிலுள்ள 205 தெருக் குழாய்களுக்கும் 9,200 வீட்டுக் குழாய்களுக்கும் குடிநீர் 5 நாட்களுக்கு ஒருமுறை விநியோகிக்கப் படுகிறது. சில மேட்டுப் பகுதிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் நகர் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதிக்கு ஒருநாள் வீதம் தெருக் குழாய்களிலும் வீட்டுக்குழாய்களிலும் 5 மணி நேரம் தண்ணீர் விடப்பட்டு வருகிறது. பல்வேறு இடங்களில் வீட்டுக் குழாய்களில் வரும் குடிநீரைத் தேவையான நீர்போக மீதிக் குடிநீரைப் பொது மக்களுக்கு ரப்பர் குழாய்கள் மூலம் விநியோகம் செய்கிறார்கள்.

**தனியார் கிணறுகள்;**

தமிழக அரசின் ஆணையின்படி திரு.திவான் முகமது, இ.ஆ.ப., அவர்களும், நிலத்தடி நீர் வல்லுநர்களும் வருகை புரிந்து அளித்த ஆலோசனையின்பேரில் காமராஜர் சாகர் பகுதியிலுள்ள தனியார் கிணறுகளை ஆய்வு செய்து குடிப்பதற்குத் தகுதியான கிணறுகளைக் குத்தகைக்கு எடுத்து அந்தக் கிணறுகள் மூலம் தண்ணீரைப் பெற்று திண்டுக்கல் மக்களுக்கு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் மூலம் சுமார் 2½ இலட்சம் காலன் குடிநீர் கூடுதலாகக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.




காமராஜர் சாகர் அணைக் கட்டுப் பகுதியில் 200 மீட்டர் நீளம், 1½ மீட்டர் ஆழம், 1 மீட்டர் அகலத்தில் புதியதாகக் கால்வாய் வெட்டப்பட்டதின் மூலமாகவும், கூடுதலாகக் குடிநீர் கிடைக்கிறது. மேலும் அணைக் கட்டுக்கு அருகில் பெரிய கிணறுகள் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் குடிநீர்ப்பிரச்னையைத் தீர்க்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் விரைவான நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா.வரதராஜுலு இ.ஆ.ப. தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. மாவட்டவருவாய் அலுவலர் திரு.கி.இராஜமாணிக்கம் திண்டுக்கல் நகரிலேயே தங்கியிருந்து வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் நகராட்சி அலுவலர்கள் ஒருங்கிணைத்து பணியாற்ற நடவடிக்கை மேற்கொண்டார்.







மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள், தொடர்புடைய அலுவலர்களிடம் அவ்வப்போது ஆலோசனை நடத்தி தேவையான ஆணைகளை உடனுக்குடன் பிறப்பித்தார்கள்.

**நிரந்தரத் தீர்வுக்கு வழி**

ஆண்டாண்டுக்காலமாகத் திண்டுக்கல் நகரில் நிலவி வரும் குடிநீர்ப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் பேரணைத் திட்டத்திற்குத் தமிழகஅரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளதை அனைவரும் மனமாரப் பாராட்டுகின்றனர். சுமார் 8 கோடி செலவில் மூன்றாண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படவுள்ள திட்டத்தின்மூலம் திண்டுக்கல் நகருக்கு நாள்தோறும் சுமார் 50 இலட்சம் காலன் குடிநீர் கிடைக்கும்.

தமிழக அரசின் போர்க்கால நடவடிக்கையால் திண்டுக்கல்லில் குடிநீர்ப் பிரச்னை தீர்க்கப் பட்டது. நிரந்தரத் தீர்வுக்கும் வழி வகுத்த தமிழக முதல்வர் அவர்களையும், தமிழக அரசையும் பொதுமக்கள் பாராட்டி மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



# அண்ணா வாழ்கிறார்

மாண்புமிகு சுற்றுலா, அறநிலையத் துறை அமைச்சர்

**திரு. இராம. வீரப்பன்**

அரசியல் என்பது மற்றவர்களின் வாழ்க்கையைப் பணயம் வைத்து ஆடும் சூதாட்டமல்ல; ஆழ்ந்த அன்பும் இணையற்ற பாசமும் நிறைந்த, சகோதர உணர்வும் மனிதாபிமானமும் கலந்த ஒரு வாழ்க்கை முறை என்பதை உலகுக்கு உணர்த்திய ஒரு மாபெரும் சிந்தனையாளர் அண்ணா!

கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்த நேரத்தில் கோபக் கனலால் சிவந்த கண்கள் நெருப்பைக் கக்கவில்லை..அக்கினியை வீசவில்லை...கண்ணீர் வடித்தது; கண்ணீர்த் துளிகளைச் சிந்தியது. ....தானே கண்ணீர்த்துளியாக மாறினார்... கண்ணீர்த்துளிகள் என்ற பெயர் பெற்றார். அக்கிரமம் நடைபெற்றுவிட்டது..அநீதி இழைக்கப்பட்டுவிட்டது.. இலட்சியம் நொறுக்கப்பட்டுவிட்டது.. கண்ணீரும் கம்பலையுமாய் கதியற்ற நிலையில் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது! நெஞ்சை வாட்டிய அந்த நேரத்திலும் சமுதாயக் கடமையை நிறைவேற்ற களத்திலே நின்ற போதும் கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும், மறவாத போர் வீரனாக விளங்கினார்...! அவர் அணிந்திருந்த கவசம்-ஏந்திய ஆயுதம்-'கடமை கண்ணியம் - கட்டுப்பாடு'..

திறமையாளர்கள் - நல்லவர்கள் - பண்பாளர்கள்- தியாக உள்ளம் படைத்தவர்கள்-நாட்டுக்குழைத்தவர்கள் - எங்கிருந்தாலும் - எந்த முகாமில் இருந்தாலும் பாராட்டுகிற பண்பை வளர்த்தார். பல கருத்துக்களைக் கொண்டவர்கள் - மாறுபட்ட எண்ணம் படைத்தவர்கள் ஒரே மேடையில் கூட முடியும்...ஒத்த கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்...மனித நாகரீகத்தை வளர்க்க முடியும்.' அரசியல் என்பது நாகரிகமுள்ள— நாணயமுள்ள-மனித உணர்வுகளின் அடிப்படையில் கட்டப்பட வேண்டிய பளிங்கு மாளிகையே தவிர, வெறுப்பு, பகை, பழி என்ற அநாகரீக அஸ்திவாரத்தின் மேல் கட்டப்படுகிற அரக்கு மாளிகை அல்ல என்பதை செயலில் காட்டியவர்...'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற சொல்லுக்குப் பொருள் கண்டவர்—



புதிய இலக்கணம் படைத்தவர்.

அன்பும் அரவணைப்பும்அவரது வாழ்க்கை நெறி....எல்லோரிடத்திலும் அன்பு காட்டி, இரக்கத்தைப் போர்த்தி, பாசத்தைக் கொட்டி, குடும்ப உணர்வோடு உறவை வளர்த்து,ஒருமாபெரும் அரசியல் இயக்கத்தை உருவாக்கிக் கட்டிக் காத்து வளர்த்தவர்; அற்புதங்கள் நிகழ்த்தியவர் பேரறிஞர் அண்ணா!

கலையுணர்வும், பாச நெஞ்சமும் படைத்தவர் - தவறே செய்தாலும் கடிந்து கொள்ளப் பழகாதவர் - தண்டிக்க விரும்பாதவர்....பாலூட்டி வளர்த்த சேய் தாயையே வெட்ட முனைவது போல் தம்பிமார்கள் துரோகம் செய்து, தூற்றல் பாணத்தை எய்தபோதும், தன்னைத் தாக்க தம்பி இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொள்கிறானே என்று வருந்தியவர்...தன்னை எதிர்ப்பதால் தம்பி புகழ் உயரும்; வாழ்வு வளமாகும் என்று இருந்தால், அப்படியாவது நன்றாக வாழட்டுமே என்று எண்ணியவர்....... 'எங்கிருந்தாலும் வாழ்க' என்று வாழ்த்தியவர் அறிஞர் அண்ணா!

வசவாளர்களும் வாழட்டும் என நெஞ்சார நினைத்து அவர்களையும் வாழ்த்தி வசவுகளை உரமாக்கிக் கொண்டு வளர்ந்தவர்.

இவைகளெல்லாம் பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களாக அவர்கள் வகுத்துக் கொண்ட வழிமுறைகள்... வர்ழ்க்கை நெறிகள்!

அதனால்தான் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலர் திருமந்திரத்தை, இலட்சிய முழக்கமாக்கி, தமிழ்ச் சமுதாயத்திற்குப் புது நெறி காட்டினார்.....ஆற்றல் மறவர்களை அணிதிரட்டினார்....ஈடு இணையற்ற எழுத்தால், பேச்சால் புத்துணர்வு ஊட்டினார்.......புதிய தலைமுறையை உருவாக்கினார் 'இப்படைதோற்கின் எப்படை வெல்லும்' என்ற மனோன்மணீயம் வரிகளுக்குப் புது வலிவு ஊட்டி புதுப்பொருள் கண்டார். புதிய வரலாறு படைத்தார்...... வாராது வந்த மாமணி போல் தமிழ் அரசு அமைத்தார்..மக்கள் ஆட்சி நடத்தினார்...புதிய தமிழகத்தை உருவாக்கி இதயக்கனியாம் புரட்சித் தலைவரை வழி நடத்திச் செல்லுமாறு பணித்து எங்கும் நிறை நாதமாக-இறவாத இலக்கியமாக - இதயதெய்வமாக எல்லோர்க்கும்-என்றும் அண்ணாவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்!



# நமது கடமை

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்

**திரு. க. இராசாராம்**

தமிழ்நாட்டு மக்கள் அறியாமையிலே மூழ்கிக் கிடந்த காலம்; மூட நம்பிக்கைகள் மலிந்திருந்த வேளை ; பெரியாருக்கு அற்புதத் தளபதியாக அறிஞர் அண்ணா வாய்த்தார்.

பெரியாரிடத்திலே ஓர் ஆற்றல் உண்டு. ஒருவர் தன்னிடம் இடைப்பாரானால் அவருக்கு என்ன என்ன திறமை என்பதைப் பரிசோதித்து அந்த ஆற்றல்களை எல்லாம் வெளிக் கொணர்ந்து காட்டி விடுகின்ற தன்மை பெரியாருக்கு உண்டு. அதற்குக் காரணம் தமிழ்ச் சமுதாயம் நல்லறிவு பெற வேண்டும், மூட நம்பிக்கைகளை அகற்றி, விஞ்ஞான ரீதியான வளர்ச்சியில் அடியெடுத்து வைத்திட வேண்டும். அதற்கான அறிவு விளக்கைக் கொளுத்துகின்ற பணியைச் சிலரால்தான் செய்ய முடியும். அத்தகையவரைப் பயன்படுத்தி நாட்டுப் பணிக்கு முழுமையாக அவர்களது அறிவை, திறமையை அர்ப்பணித்து விட வேண்டுமென்பதில் தந்தை பெரியாருக்கு ஒரு பெருத்த வேகம் உண்டு. அப்படிப்பட்டவரிடத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் கிடைத்தார்கள்.

பேச்சாளராக வாழ்க்கையைத் துவங்கிய அறிஞர் அண்ணா அவர்கள் 'குடியரசு' 'விடுதலை' ஏடுகளின் மூலமாக எழுத்தாளரானார்கள்.

நாடகத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு நல்லதைப் புகுத்த முடியும் என்று தெரிந்தவுடன் நாடக ஆசிரியரானார்கள்.

சிறு கதை, நாவல்கள் எழுதுவதன் மூலம் பெண் இனத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்க முடியும் என்று கருதியவுடன் சிறு கதை, நாவல்கள் எழுதத் தொடங்கினார்கள்.

சரித்திரக் கதைகள் ஒரு சாராரைக் கவர்கிறது என்று தெரிந்தவுடன் சரித்திரத்தை ஆழமாகப் பயின்று சரித்திரக் கதைகளை, நாடகங்களை மிகச் சிறப்பாக எழுதினார்கள்.

இவ்வளவு துறைகளிலேயும் தன்னை வளர்த்துக் கொண்டதற்குக் காரணம், தான் பிறந்த மண் வளம் பெற வேண்டும்; தன்னைச் சேர்ந்த சமுதாயம் உலகோரால் பாராட்டப்பட வேண்டும் என்ற அந்த எண்ணமே தான் என்பதை நான் நன்றாக அறிவேன்.

சமுதாயத்திற்குச் சிறந்த கருத்துக்களை நல்க வேண்டுமென்பதற்காக அவர் எடுத்துக் கொண்ட சிரமம் இவ்வளவு அவ்வளவு அல்ல!

இன்றைய இளைய தலைமுறை அவரது உழைப்பைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். எப்படியெல்லாம் அவர் தன்னை வளர்த்துக் கொண்டு இந்தியத் துணைக் கண்டமே பாராட்டத் தகுந்த அளவிற்கு மிகப் பெரும் அறிஞராகத் திகழ்ந்தார்கள் என்பதை இளைய தலைமுறை இன்றைக்கு நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழ், தமிழ்நாடு, தமிழ் மக்கள் என்றே அவருடைய சிந்தனை என்றென்றைக்கும் ஓடிக்கொண்டே இருந்தது.

அவர் வாழ்ந்த காலத்திலே வசதிகள் இல்லையே என்கிற ஏக்கம் இன்றைக்கும் என்னைத் துன்புறுத்திக் கொண்டே இருக்கிறது.

அவரை யாருக்கும் தெரியாமல் சில நாட்கள் கொண்டுபோய் தனியாக வைத்து, அவரை எழுதச் சொல்லி அவர் எழுதிய வேகத்தையும் அவர் எழுதிய சினிமா படத்தையும்கூட நான் இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறேன். ஒரு படத்திற்கான கதை, வசனம் இரண்டையும் இரண்டே நாளில் என்னுடைய வீட்டில் சேலத்தில் அவர் எழுதி முடித்தார். அவரை அப்படியெல்லாம் உயர்வாக வைத்து அதிக காலம் பார்க்காமல்போய் விட்டோமே என்கிற வேதனை என் உள்ளத்திலே ஆழமாகப் பதிந்து இருக்கிறது. அவர் எழுதிய எழுத்துக்களை இந்தப் பிறந்தநாள் விழாவில் மீண்டும் அசை போடுவோம்! அவர்கள் எண்ணிய எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கின்ற செயல்களில் ஈடுபடுவோம்! அதுதான் நாம் அறிஞர் அண்ணாவுக்கு இந்தப் பிறந்தநாள் விழாவில் ஆற்றுகின்ற கடமையாகும்!

# கோ-ஆப்டெக்ஸ்

# பொன்விழா ஆண்டில் பொன்னான திட்டங்கள்

கோடானு கோடி நெசவாளப் பெருமக்களின் கைவண்ணத்தால் உருவாகும் 'கோ-ஆப்டெக்ஸ்' தன் பொன் விழாவினை 2.9.85 அன்று கோலாகலமாக



கொண்டாடியது. அன்று நெசவாளர் நெஞ்சமெல்லாம் மகிழும் வண்ணம் பொன்னான திட்டங்கள் பல மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சார்பில் அறிவிக்கப் பட்டன.

''நெசவாளர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் நிதி வழங்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்'' என்று மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் கூறினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தில் 5 இலட்சத்து 56 ஆயிரம் கைத்தறிகள் உள்ளன. இந்தியாவில் உற்பத்தியாகும் கைத்தறித்துணியில் மூன்றில் இரண்டு பங்கு தமிழ்நாட்டில் தான் உற்பத்தியாகின்றது. கைத்தறிக்காகத் தனியாக ஒரு அமைச்சரைத் தமிழகத்தில்தான் புரட்சித் தலைவர் அவாகள நியமித்துள்ளார்.

''நெசவாளர்கட்குத் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் இங்குதான் உள்ளது. மேற்கு வங்கத்தில் கூட இப்படிப்பட்ட சட்டம் இல்லை. நெசவாளர்களைப் பாதுகாக்கப் பலவேறு திட்டங்கள் போடப்பட்டுள்ளன. கைவினைஞர்கள் பணிக்காலத்தில், திடீரென்று விபத்தில் இறந்தால், ரூபாய் பத்தாயிரம் வழங்கப்படுகிறது. இதில் கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்படவில்லை. இப்போது இதில் நெசவாளர்களைச் சேர்க்க புரட்சித்தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். (இந்தச் சமயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு உத்தரவு பிறப்பித்துவிட்டதாகச் சைகை செய்தார்) நெசவாளர்கள் விபத்தில் இறந்தால் ரூபாய் 10 ஆயிரம் வழங்கப் புரட்சித்தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

''நெசவாளர்கள் 55 வயதில் அல்லது 58 வயதில் ஓய்வு பெற்றால் ஓய்வு ஊதியம் எதுவும் இப்போது கிடைப்பதில்லை. இதற்காக ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நெசவாளர்கள் மாதம் ரூ.10 கட்டினால், அவர்கள் ஓய்வு பெறும்போது 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 33 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். இத்தகைய பெரிய திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது. அண்ணாவின் கனவை நனவாக்கி வரும் புரட்சித்தலைவர் ஆட்சியில் தான் இது நடைபெற உள்ளது.

''நெசவாளர்கள் வீடுகட்ட இது வரை ரூபாய் 12 ஆயிரம் கடன் தரப்பட்டது. இது ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தப்படும். பொன்விழாவினை ஒட்டி கோ-ஆப்டெக்ஸ் பணியாளர்கட்கு ஒரு மாதச் சம்பளம் வழங்கப்படும்.

''நெசவாளர் குடும்பங்களுக்காக ஒரு அறக்கட்டளை உருவாக்கப்படும். நெசவாளர் வாழ்வு நலநிதி என்ற பேரில் இது இருக்கும்.

''ஆண்டுதோறும் அதிக மதிப்பெண் வழங்கும் மாணவ, மாணவிக்கு ரூபாய் 1000 வீதம் பரிசு வழங்கப்படும். வங்கி வேலைகளுக்காகப் பயிற்சி வகுப்பு, மருத்மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவ டாணவிகட்கு ரூபாய் 1500 வீதம் உதவித் தொகை வழங்கப்படும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், போன்ற தேர்வுக்குப் போகிறவர்கட்குச் சிறப்புப் பயிற்சி பெற முழுக் கட்டணமும் தரப்படும்.

''கைத்தறித் துணிகளில் புதிய வடிவமைப்பை உருவாக்குபவர்கட்கு ரூபாய் 1000 பரிசு வழங்கப்படும். கைத்தறி ஆடை அழகிப் போட்டியில் தேர்ந்து எடுக்கப்படும் ராணிக்கு ரூபாய் 1000 பரிசு வழங்கப்படும். அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் சங்கங்களுக்கு ரூபாய் 1000 பரிசு வழங்கப்படும்.

''இந்த நேரத்தில் மத்திய அரசுக்கும் சில வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன். பாலியெஸ்டர், செயற்கை இழை தயாரிப்பு ஆலை ஒன்று தமிழகத்தில் அமைக்கவேண்டும். கட்ட இருக்கும் பல அடுக்கு மாளிகையில் கைத்தறி மியூசியம் அமைக்க மத்திய அரசு உதவவேண்டும். கைத்தறி ஆராய்ச்சி வளர்ச்சி மையக்கிளை ஒன்றைச் சேலத்தில் துவக்கவேண்டும். கைத்தறித் துறை விளம்பரங்களை, தொலைக்காட்சி, வானொலியில் விளம்பரம் செய்யும்போது அதன் செலவை மத்திய அரசு ஏற்க வேண்டும்.

''ஜமுக்காளம் நெய்யும் நூலைத் தயாரிக்க மதுரை மாவட்டத்தில் ஒரு ஆலை அமைக்கப்பட உள்ளது. ஆசிரியர்கட்குக் கைத்தறித் துணிகள் ரூபாய் 500 அளவுக்குக் கடனாக வழங்கப்பட்டது. இது ரூபாய்1000 ஆக உயர்த்தப்படும். 6 தவணைகட்குப் பதிலாக 10 தவணையில் இது பிடிக்கப்படும்.

''ஜனதா ரகத் துணிக்கு ரூபாய் 52 கோடியை மத்திய அரசு உதவி உதவித் தொகையாக வழங்குகிறது. இதை கோ-ஆப்டெக்ஸிடம் தந்தால் தரமான துணியை செய்து தரமுடியும்''.



முதல்வர் அடிக்கல் நாட்டுகிறார்.

சென்னை நகரில் அண்ணா சாலையிலும் கோ-ஆப்டெக்ஸுக்குப் பல மாடி விற்பனை மற்றும் அலுவலக அரங்கிற்கு மாண்புமிகு முதலவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

நெசவாளர்களின் வாரிசுகளுக்கு நெசவாளர் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 2 ஆயிரம் வீதம் காசோலைகளையும், வடிவமைப்புப் போட்டியில் வெற்றி பெற்றவர்கட்குப் பரிசுகளையும், அச்சிட்ட பாலியெஸ்டர் ஷிபான் சேலைக்கு, திரு சாமுவேல் சுகுமார் என்பவருக்கு ரூ. 1250 பரிசும், அச்சிட்ட பருத்திச் சட்டைத் துணிக்கு, சென்னை அரசுக் கலைக் கல்லூரி மாணவி ஸ்வர்ணாவுக்கு ரூபாய் 1000, பரிசும், அச்சிட்ட பட்டுச் சேலைக்கு மூன்றாவது பரிசாக மீனாட்சிகல்லூரி மாணவி செல்வி சுதா பிரசன்னத்திற்கு ரூபாய 500 பரிசும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்து, சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறித்துணிகளைத் தோளிலே சுமந்து விற்க உத்தரவிட்டார். எல்லோரும் கைத்தறி ஆடைகளை அணிய வேண்டும் என்றார் அதைப் புரட்சித் தலைவர் முன் மாதிரியாக ஏற்றுக் கொண்டு அதுவரை கதர்த் துணியை அணிந்து வந்த அவர், கைத்தறித் துணியை அணிய ஆரம்பித்தார். புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு நெசவாளர்களின் நலனுக்காகப் பல திட்டங்களை நிறைவேற்றினார்.

''கைத்தறித் துறைக்குத் தனியாக ஒரு அமைச்சரை நியமித்தார். இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒன்று.

''கைத்தறி நெசவாளர்களுக்கானத் தனிச் சட்டங்கள் இந்தியாவில் எங்கேயும் இல்லை. நிர்ணயிக்கப்பட்ட சம்பளம், நிர்ணயிக்கப்பட்ட வேலை வாய்ப்பு தமிழகத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை.

''கைத்தறி தொழில் சமுதாயத்தின் அடிப்படையாக அமைந்த தொழில். நமது பண்பாட்டை ஆற்றலை உலகுக்கு உணர்த்திய தொழில். இந்தத் தொழிலை நம்பி தமிழகத்தில் 50 இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்களில் 65 சதவிகிதம் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளனர். தனியாரிடம் கையேந்தி நின்ற நிலைமை மாறி, தறிகளுக்குச் சொந்தக்காரர்களாக ஆகி உள்ளனர். ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவ, புரட்சித்தலைவர் விரும்பினார். ஒரே திட்டத்தில் இரு பிரிவினருக்கு நன்மை உண்டாக்கினார். ஏழை விவசாயிகளுக்கு இலவச வேட்டி சேலை வழங்க உத்தரவிட்டார். இதன் மூலம் அந்த ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலை கிடைக்கிறது.



## உழைப்பு

உழைப்பில்லாமலே
பொருள் சேரவேண்டும்
என்று குறுக்கு வழியில்
சென்றால், ஒரு
நாளைக்கு நிச்சயம்
அவமானப்படநேரிடும்.

— தந்தை பெரியார்

பாமர மக்களுக்கும் புரிந்து கொள்ள முடியும் என்றார்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத் தலைவர் திருமதி கே.ஆர்.ஆர். கல்யாணி இராமசாமி அவர்கள் பேசுகையில், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி அவர்களுக்குப் பாதுகாப்பாகக் கலைவாணர் இருந்தார். கலைவாணர், பாகவதர் சிறையில் இருந்தபொழுது கலைவாணர் நினைவை மக்கள் அறியும் பொருட்டு நிழல் காட்சியை நாடகங்களில் கே.ஆர்.ஆர். காண்பித்து வந்தார்'' என்றார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்விரிவுரையாளர் திருமதி விசயலக்குமி நவநீதி கிருஷ்ணன் அவர்கள் உரையாற்றுகையில் நகைச்சுவை மனிதருக்கும் மட்டும் தான் உண்டு. மனிதனின் நகைச்சுவை சிந்திக்க வைக்க வேண்டும். யாரையும் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது. இனிப்பு பூசப்பட்ட மருந்துகளாகக் கலைவாணர் நகைச்சுவைகள் இருந்தன என்று குறிப்பிடலாம். கலைவாணர் சமயோசித புத்தியுடையவர். தன்னுடன் நடிக்கும் நடிகர்கள் நல்லமுறையில் வளர வேண்டும் என்று விரும்புவார்'' என்றார்.

சென்னை மாநிலக் கல்லூரி தமிழ்த்துறையைச் சார்ந்த திரு தி.வ. மெய்கண்டார் பேசுகையில் கூறியதாவது: திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகம் மூலம், பம்மல் சம்பந்த முதலியார் கலைவாணர் பட்டத்தை வழங்கினார். கலைவாணர் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர். மூட நம்பிக்கைகளை ஒழிக்கப் பாடுபட்டார். திரைப்படம் மூலம் ஒப்பற்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப்பரப்பினார். கலைவாணர் இடத்தை யாராலும் நிரப்ப முடியவில்லை.''

குலதெய்வம் ராஜகோபால் கலைவாணர் பற்றிய பாட்டுக்களைப் பாடினார்.

கலைமாமணி திரு எஸ்.வி. சகஸ்ரநாமம், கலைமாமணி திரு சி.எஸ்.பாண்டியன், கலைமாமணி திரு எஸ்.கே. கரிக்கோல் ராஜ் முதலியோர் நடித்த நான்கு ஓரங்க நாடகங்கள் நடைபெற்றன.

—அ. மருது

## நிலையும் நினைப்பும்!



திருட்டுத்தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும்!

முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்து விடுவானோ, வந்துவிட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன் பின் காயகளையும் பறிப்பான் கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும்பொழுதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும்! அடிக்கடி தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்தால், எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்!

—பேரறிஞர் அண்ணா

## சிறு சேமிப்பில் செங்கை மாவட்டம் முதலிடம்! 163 சதவிகிதம் திரட்டி மகத்தான சாதனை புரிந்துள்ளது!

செங்கற்பட்டு மாவட்டம், 1984-85ஆம் ஆண்டுக்கு, சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 565 இலட்சம் திரட்ட வேண்டும் என்று அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது. அதனை விஞ்சி, ரூ. 922.15 இலட்சம் திரட்டி, செங்கற்பட்டு மாவட்டம் சிறந்த சாதனை புரிந்துள்ளது. இது 163 சதவிகிதச் சாதனையாகும்.

இந்தச் சாதனை தமிழக மாவட்டங்களில் முதன்மையாகும்.

இந்தச் சாதனையைப் பாராட்டும் வகையில், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.ஏ. மாத்யூ, இ.ஆ.ப., அவர்களுக்கு அரசு ரூ. 1500 பரிசு வழங்கியுள்ளது. இந்தத் தொகை தேசிய சேமிப்புப் பத்திரமாக அளிக்கப்படும்.

## இதுதான் அவருடைய பாணி!

ஜப்பானிய நரம்பியல் நிபுணர் டாக்டர் கானுவிடம் தமது உடலைப் பரிசோதித்துக் கொள்வதற்காக முதல்வர் எம்.ஜி.ஆரும் அவருடன் நாங்கள் ஏழெட்டுப் பேரும் மருத்துவமனைக்குச் செல்கிறோம்.

இரண்டு மூன்று கார்கள்... ஒரு காரில் முதல்வர்-அவரது துணைவியார் மற்றும் அமைச்சர்கள்—திரு ச. ராமச்சந்திரன்-நான்.

கார் மருத்துவமனையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. போர்டிகோவில் டாக்டர் கானுவும் பதினைந்து இருபது பேரும் முதல்வரை வரவேற்பதற்காக நிற்கிறார்கள். அது மட்டுமல்ல... நோயாளிகளை அமர்த்தி உள்ளே கொண்டு செல்வதற்கான ஒரு சக்கர நாற்காலியும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

சக்கர நாற்காலியைப் பார்த்ததும் காரை நிறுத்தச் சொல்கிறார் முதல்வர். கார் நின்று விடுகிறது. அதிலிருந்து முதல்வர் மட்டும் இறங்கிக்கொண்டு கையை வீசி;கால்களை எட்டிப்போட்டு டாக்டர் கானுவை நோக்கி நடக்கிறார்; கானு பார்க்கிறார். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்க்கிறார்.



பத்து மாதங்களுக்கு முன்பு பார்த்த எம்.ஜி.ஆர்... படுத்த படுக்கையாகக் கிடந்த எம்.ஜி.ஆர்... அவரா இப்படி-இவ்வளவு வேகமாக நடந்து வருவது!

அவரால் நம்ப முடியவில்லை. ஓடிவந்து எம்.ஜி.ஆரைக் கட்டி அணைத்துக் கொள்கிறார்!

எம்.ஜி.ஆர் குணமடைந்து விட்டாரென்றாலும்கூட-அவரால் பழைய மாதிரி சுலபமாக எழுந்து நடமாட முடியாது என்று நினைத்துத் தான் டாக்டர் கானு கூட சக்கர நாற்காலியைத் தயாராக வைத்திருந்தார்.

ஆனால் அந்தச் சக்கர நாற்காலி இப்போது மட்டுமல்ல-இனி எப்போதுமே எனக்குத் தேவைப்படாது என்பதை உணர்த்துவதற்காகக் காரை வெகுதூரம் தள்ளி நிறுத்திவிட்டு நடந்தே சென்றார் எம்.ஜி.ஆர்.

இதுதான் அவருடைய பாணி!

[மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு என். முத்துசாமி அவர்களின் ஜப்பான் அனுபவம்]

# கப்பலோட்டிய இரண்டாவது தமிழன்

டி.கே.டி. துரைராசன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி மாவட்டம்.

கப்பலோட்டிய தமிழர் ஒருவரல்ல.....

இரண்டு பேர்...

ஒருவர் வ. உ. சி.

ஆங்கிலேயரின் பொருளாதார அரசியல் ஆதிக்கத்துக்கு எதிராக வ. உ. சி. அன்று கப்பல் ஓட்டினார். தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 'லாவோ'-'கலியா'



என்று இரண்டு கப்பல்கள் இந்தியப் பொருள்களைச் சுமந்து கொண்டு வங்கக் கடலில் மிதந்து சென்றபோது வைரநெஞ்சம் கொண்ட அவரைப் பார்த்து வையகம் வியந்தது!

கப்பல் ஓட்டிய முதல் தமிழர் அவர்.

இரண்டாமவர் யார்?

இந்தக் கேள்வியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி கூட்டத்தினரைப் பார்த்துக் கேட்டபோது,

ஒருமித்த குரலில் பதில் இப்படி வந்தது.

''முதல்வர் எம். ஜி. ஆர். முதல்வர் எம். ஜி. ஆர்...''

ஆம்! தமிழக வரலாற்றில் தனிப் பெரும் சாதனைகள் பல புரிந்து சரித்திரம் படைத்த முதல்வரின் மற்றுமொரு சாதனை இது!

தமிழக அரசின் சார்பில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துக்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஜப்பானில் பெற்றுக் கொண்ட கப்பல் 'தமிழ் அண்ணா'!

சுமார் நாற்பதாயிரம் எடையுள்ள - 23 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தக் கப்பல் செப்டம்பர் 5ஆம் நாளன்று தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்துசேர்ந்தது.

செப்டம்பர் 5.

வ.உ.சிதம்பரனார் நாள்.

கடந்த சில ஆண்டுகளாக அவரது பிறந்த நாள் விழாவைச் சிறப்பான முறையில் கொண்டாடுமாறு ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்த ஆண்டு அதே விழாவினை ஈடும் இணையுமற்ற விதத்தில் கொண்டாடும் வகையில் கப்பலோட்டிய தமிழனின் நினைவைப் போற்றும் வகையில் அந்த நினைவுக்குக் காணிக்கையாகத் தூத்துக்குடி துறைமுகத்தில் புத்தம் புதிய ஒரு கப்பலைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டார்.

## முதல் அட்டை சொல்லும் செய்தி:

ஜப்பானிலிருந்து அந்தக் கப்பல் தூத்துக்குடிக்குச் சும்மா வரவில்லை. வழியில் வங்காள தேசத்தில் உள்ள ஹால்தியா துறைமுகத்தில் நிலக்கரியை ஏற்றிக் கொண்டு வந்து சேர்ந்தது.

கப்பல் வாங்கப்பட்டதன் நோக்கமே இதுதான்!

போதுமான நிலக்கரி கிடைக்காமல் - அப்படியே கிடைத்தாலும் தூத்துக்குடிக்கு அதைக் கொண்டு வருவதற்குக் கப்பல் கிடைக்காமல் - அதன் விளைவாகத் தூத்துக்குடி அனல் மின் நிலையம் துவண்டு போவதும், மின்உற்பத்தி குறைவதும் - மின் வெட்டு வருவதும் - மக்களும் தொழிற்சாலைகளும் அவதிப்படுவதும்..

இதற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்திட - மின் உற்பத்தியை முனைப்பாக்கி முடுக்கிவிட வாங்கப்பட்டதுதான் இந்தக் கப்பல்.

அந்தக் கப்பலை வரவேற்று-அதுசுமந்து வந்த நிலக்கரியை தூத்துக்குடி அனல் மின் நிலையத்துக்கு அனுப்புவதைத் தொடங்கி வைப்பதற்காக விழா தூத்துக்குடி துறைமுகப்பகுதியில் செப்டம்பர் 5ஆம் நாளன்று நடைபெற்றது.

தோற்றத்தில் மட்டுமின்றி— எண்ணம்-செயல்-பேச்சு எல்லாவற்றிலும் இளமை கொஞ்சும் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு சு.முத்து



சாமி இவ்விழாவுக்குத் தலைமையேற்றார்.


மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கப்பல் வாங்க வேண்டுமென்ற முடிவுக்கு ஏன் வந்தார்? என்று அவர் அளித்த விளக்கம் பொருளாதார ரீதியில் நூற்றுக்கு நூறு பொருத்தமான-லாபமான செயல் என்பதைத் தெளிவாக உணர்த்தியது.

ஓர் எடுத்துக்காட்டு:

தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஆண்டு முழுவதும் தொய்வில்லாமல் மின் உற்பத்தியில் ஈடுபட வேண்டுமென்றால் சுமார் 45 இலட்சம் டன் நிலக்கரி தேவை. தனியார் கப்பல்களை அமர்த்தி நிலக்கரி கொண்டு வருவதென்றால் டன் ஒன்றுக்கு ரூ. 160 முதல் ரூ. 180 வரை ஆகும்.







இது இப்போதைய நிலவரம். நாளாக நாளாக இது அதிகமாகும். ஆனால் 'தமிழ் அண்ணா' கப்பல் வாயிலாகக் கொண்டு வந்தால் இந்தச் செலவு சுமார் 40 ரூபாய் வரை குறையும். ஆக, டன் ஒன்றுக்கு அரசுக்கு-அதாவது மக்களின் வரிப்பணத்தில் - 40 ரூபாய் சேமிப்பு. நமக்குத் தேவையோ 45 இலட்சம் டன்.

ஆரம்ப வகுப்பில் படிக்கும் பையனுக்குக்கூட இந்த அரிச்சுவடி மிகச் சுலபமாகப் புரியும்!

மாண்புமிகு முதல்வரின் மனிதாபிமானத்தை விளக்கும் வகையில் அமைச்சர் ஒரு நிகழ்ச்சியைக் கூறினார்.

ஜப்பானில், கப்பலின் ஒவ்வொரு பகுதிக்கும் மாண்புமிகு முதல்வர் அழைத்துச் செல்லப்பட்டாராம். மக்களுக்காக-மக்களின் பணத்தில் வாங்கியமக்கள் கப்பலைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போன முதல்வர் கப்பலில் பணியாற்றும் ஊழியர்கள் தங்குவதற்கான அறைகளைப் பார்வையிட வேண்டுமென்று விரும்பினார். ஒவ்வொரு துறையாகச் சென்று பார்த்து விட்டுக் கடைசியில் கூறினாராம்:

''ஏற்றத் தாழ்வுகள் பார்க்காமல் ஒவ்வொருவருக்கும் எல்லா வசதிகளும் கொண்ட ஒரே மாதிரியான அறைகள் அமைக்கப்பட்டிருப்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது......''

இந்த விழாவில் மூன்று நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டிருந்தன.

கப்பலில் கொண்டு வரப்பட்ட நிலக்கரியைத் தூத்துக்குடி அனல் மின் நிலையத்துக்கு 'கன்வேயர் பெல்ட்' வாயிலாக எடுத்துச் செல்லும் பணியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் தொடங்கி வைத்த பின்னர்—

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தூத்துக்குடியிலிருந்து புதிதாக ஆறு வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்கள் ஆரம்பித்து வைத்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தையும் திறந்து வைத்தார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் படத்தையும் தூத்துக்குடி-எட்டயபுரம் சாலையில் ரூ. 16 இலட்சம் செலவில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் கட்டியுள்ள புதிய பணிமனையையும்மாண்புமிகுபொதுப் பணித்துறை அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் திறந்து வைத்தார்.

## வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழா

தமிழக அரசின் சார்பில் வ.உ. சிதம்பரனார் பிறந்தநாள் விழா நெல்லை மாவட்டத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

5-9-1985 காலையில் தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் உள்ள வ.உ. சிதம்பரனார் சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு பி.எச்.பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி இருவரும் மாலை அணிவித்தார்கள்.

அன்று மாலை வ.உ.சி.பிறந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வ. ராமதாஸ், இ.ஆ.ப. தலைமையில் பிறந்த நாள் விழா நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு எம். ஆர். ஜனார்த்தனம், சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். எஸ். ஆறுமுகம், பேராசிரியர் திரு வளன் அரசு, கவிஞர் பாரதி மாறன், கவிஞர் தமிழ்க்கனல் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

திருநெல்வேலிதொகுதிநாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.ஆர். ஜனார்த்தனம், தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். என். ராஜேந்திரன் தூத்துக்குடி துறைமுகப்பொறுப்புக் கழகத்தின் தலைவர் திரு கே.ஏ. சுந்தரம், இ. ஆ. ப., நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வ. ராமதாஸ், இ.ஆ.ப., ஆகியோர் இவ்விழாவில் சிறப்புரை ஆற்றினார்கள்.

தமிழ்நாடு மின்வாரியத்தலைவர் திரு பி. விஜயராகவன், இ.ஆ.ப., தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்த-விழா இறுதியில் போக்கு வரத்துத் துறைச் செயலரும் - பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநருமான திரு வேங்கட. சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## அண்ணா நகரில் சுற்றுலா மையம்

[illegible] பொழுதுபோக்கு அம்சங்கள் [illegible] சுற்றுலாப் பயணிகளைக் கவரும் [illegible] மேம்படுத்த தமிழ்நாடு [illegible] திட்டம் தீட்டியுள்ளது.

இந்தப் பூங்கா [illegible]

[illegible]

கைத்தறித் துணித் தேக்கமும் குறைகிறது.

இதுவரை ரூபாய் 34 கோடிக்கு இலவச வேட்டி சேலை வழங்கப் பட்டுள்ளது. புண்ணியவான் புரட்சித்தலைவர் தந்த வேட்டி சேலை என்று மகிழ்ச்சி பொங்க அந்த ஏழைகள் கூறுகின்றனர். அவர்கள் வாழ்த்துகின்றனர். அப்படிப் பட்ட மக்கள் வாழ்த்துவதால் அவரை யாரும் வெல்ல முடியாத நிலை இருக்கிறது. கோடானு கோடி மக்கள் வாழ்த்துகின்றனர். ஏழை எளிய மக்களது நாடியை உணர்ந்தவர் புரட்சித் தலைவர். மாளிகையில் இருந்து மக்களைப் பார்க்கவில்லை. மக்களில் இருந்து மாளிகையைப் பார்ப்பதாக புரட்சித் தலைவர் கூறியிருக்கிறார். ஆகவேதான் எங்கள் வீட்டுப் பிள்ளையை எடுத்து எறிய எந்த முயற்சி நடந்தாலும் அது பலிக்காமல் இருக்கிறது.

''மத்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். இந்தத் தொழில் இன்று இருக்கும். நாளைக்கு அழிந்து விடும் என்று எண்ண வேண்டாம். இது மக்கள் வாழ்வோடு இணைந்த தொழில். மக்களின் பண்போடு சேர்ந்து வளர்ந்த தொழில். எனவே, கைத்தறியின் வளர்ச்சிக்குப் புரட்சித்தலைவர் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக மத்திய அரசு இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

—கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு [illegible] துரா ராமலிங்கம், மத்திய அரசின் கைத்தறித் துணி வளர்ச்சி ஆணையர் திரு ஆ.சே. நாராயணசாமி ஆகியோரும் விழாவில் பேசினார்கள்.

கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

பொன் விழாவினையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கீதோ உபதேச வடிவமைப்பு கொண்ட பேழை நினைவுப்பரிசாக வழங்கப்பட்டது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களுக்கு நடராசர் சிலை வழங்கப்பட்டது.



### நல்லகாலம்!

இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது எக்கட்சியினராயினும் எம்மதத்தினராயினும், எக்கொள்கையினராயினும் செய்கிற தொண்டு தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பயன்படுகிறதென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக் கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான்; பாராட்டுகிறான்; பரிசளிக்கிறான். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக்காட்டு!

— பேரறிஞர் அண்ணா





# கலைவாணர் நினைவு நாள்....



கலைத்துறை மூலம் நற்பணியாற்றிய தனிப்பெரும் கலையுலக மேதை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் 28வது நினைவு நாள், தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றச் சார்பில் 30.8.85 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

குடந்தை [illegible] குழுவினரின் விகடக் கலை நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பிக்கப் பெற்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் நடிகமணி திரு.டி.வி.நாராயணசாமி வரவேற்புரையாற்றுகையில், 'கலைவாணரின் கலைப்பணி கலைத்துறை வரலாற்றில் ஒரு சகாப்தம் ஆகும்' என்றார்.

திரு கு. சா. கிருஷ்ணமூர்த்தி தலைமையுரையாற்றிப் பேசுகையில், 'கலைவாணரைப்போலவே நாடக உலகிலும் திரைப்படத் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் எம்.கே.ராதா' என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தொடக்கவுரையாற்றுகையில் கூறியதாவது:


''கலைவாணரின் நினைவை நம் நெஞ்சங்களில் நினைவுபடுத்திக் கொள்கின்ற நாளாக இந்த நாளைக் கருதுகிறோம். கலைவாணரால் தமிழ் உலகம் கலை உலகம் பெருமைபெற்றது. கலைவாணர் நினைவு நாளை கலைவாணர் அரங்கில் குறிப்பிட்ட நாளில் நடத்துவது பெருமைப் படத்தக்கது. தமிழ்ச் சமுதாயம் பாராட்டும் வகையில் 49 ஆண்டுகள் கலைவாணர் பணியாற்றியுள்ளார்.

''நேரடியாக மக்களுக்குக் கருத்துக்களை எடுத்துச் சொல்வது கடினம். நகைச்சுவை மூலம் சிந்தித்துச் சிரிக்கும்படிச் செய்தார். கலைவாணர் நாடகத்திற்கும் திரைப்படத்திறகும பாலமாக இருந்தார். பேரறிஞர் அண்ணாவுக்கும் தந்தை பெரியாருக்கும் உள்ள புகழ் கலைவாணருக்கும் உண்டு.

''தமிழ்த் திரைப்பட வரலாற்றை எழுதினால் கலைவாணரைப் பற்றி எழுதியாக வேண்டும். தமிழ் நாடக [illegible] பற்றி எழுதினாலும் அந்தப் புத்தகத்தின் அட்டையில் அவரின் படம் போடத்தக்க அளவில் சிறப்புப் பெற்றுள்ளார்.

''கலைவாணர் பொறுப்பு உணர்ச்சி உள்ளவர். யாருக்கும் கொடுக்கும் கொண்டவர். கலைவாணர் பற்றிய முழுமையான வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தைத் தொகுத்து வெளியிடும் பணியைத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செய்ய வேண்டும். அதற்கு முன்னின்று நடத்தவேண்டிய பணியைநானே எடுத்துக் கொள்கிறேன். கலைவாணரின் நினைவ மதிக்கும் வகையில் தமிழ்ச் சமுதாயம் அவரது கருத்துக்களைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்''

காவிரிப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கே.சமரசம் அவர்கள் பேசுகையில் கதாநாயகர்களைப் பற்றி அன்று மக்கள் கவலைப்பட்டதில்லை. நகைச்சுவையை விரும்பினார்கள். தான் சார்ந்த இயக்கத்திற்குக் கலை மூலம் தொண்டாற்றினார். இவருடைய நகைச்சுவைகளைப்



### மலைப்பு

நம்மால் முடியுமா?
அந்தச் செயல் எவ்வளவோ பெரிதாயிற்றே
என்று எண்ணுவதே
தாழ்வு மனப்பான்மை.
அந்த மனப்பான்மை
நீங்கினால் எதிலும்
மலைப்பு இராது.

—தந்தை பெரியார்

**ஊ**ராட்சி வளர்ச்சி நிர்வாகத்தினைப் பொறுத்த வரையில் மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களில் கீழ்க்கண்ட வளர்ச்சிக் கோட்டங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கும்:

**மொத்தம் 34 ஊராட்சி ஒன்றியங்கள்**

| மாவட்டம் | வளர்ச்சிக்கோட்டம் | ஊராட்சி ஒன்றியங்கள் |
|---|---|---|
| மதுரை | 3 கோட்டங்கள் | 20 ஊராட்சி ஒன்றியங்கள் |
| | 1. மதுரை | 1. மதுரை கிழக்கு<br>2. மதுரை மேற்கு<br>3. திருப்பரங்குன்றம்<br>4. மேலூர்<br>5. கொட்டாம்பட்டி<br>6. வாடிப்பட்டி<br>7. அலங்காநல்லூர். |
| | 2. உசிலம்பட்டி | 1. செல்லம்பட்டி<br>2. கள்ளிக்குடி<br>3. டி. கல்லுப்பட்டி<br>4. சேடப்பட்டி<br>5. திருமங்கலம்<br>6. உசிலம்பட்டி. |
| | 3. பெரியகுளம் | 1. ஆண்டிப்பட்டி<br>2. போடிநாயக்கனூர்<br>3. சின்னமனூர்<br>4. கம்பம்<br>5. பெரியகுளம்<br>6. தேனி<br>7. உத்தமபாளையம் |
| அண்ணா | 3. கோட்டங்கள் | 14 ஊராட்சி ஒன்றியங்கள் |
| | 1. திண்டுக்கல் | 1. திண்டுக்கல்<br>2. ஆத்தூர்<br>3. ரெட்டியார் சத்திரம்<br>4. சாணார்ப்பட்டி<br>5. நத்தம்<br>6. வத்தலக்குண்டு<br>7. நிலக்கோட்டை |
| | 2. பழனி | 1. பழனி<br>2. தொப்பம்பட்டி<br>3. ஒட்டன்சத்திரம்<br>4. வேடசந்தூர் |
| | | 5. வடமதுரை<br>6. குஜிலியம் பாறை<br>7. கொடைக்கானல். |

மதுரை மாவட்டத்தின் மொத்தமுள்ள 861 கிராம நிர்வாக அலுவலர்கள் கீழ்க்கண்ட விவரப்படி மதுரை, அண்ணா மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட உள்ளனர்.

மதுரை மாவட்டம் ... 580 பேர்

அண்ணா மாவட்டம் ... 281 பேர்

மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களில் தற்போதுள்ள மொத்த பிர்க்கா (உள்வட்டம்), வருவாய்க் கிராமங்கள் மற்றும் உட்கடைக் கிராமங்களின் எண்ணிக்கை விவரம்:

| மாவட்டம் | உள்வட்டம் | வருவாய்க் கிராமங்கள் | உட்கடைக் கிராமங்கள் |
|---|---|---|---|
| மதுரை | 68 | 744 | 1,346 |
| அண்ணா | 39 | 358 | 2,148 |
| மொத்தம் | 107 | 1,102 | 3,494 |

## பாசனத் திட்டங்கள் விவரம்

**அண்ணா மாவட்டத்தில் உள்ள பெரிய பாசனத் திட்டங்களின் விவரங்கள்**

| திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.பை. (இலட்சத்தில்) | பயனடையும் நிலப்பரப்பு. ஏ.செ. (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. பாலாறு-பொறந்தலாறு நீர்த் திட்டம், பழனி வட்டம் | 256—00 | 21027—00 |
| 2. பரப்பலாறு நீர்த் திட்டம், பழனி வட்டம் | 104—10 | 1329—43 |
| 3. மருதா-நதி நீர்த்திட்டம், அய்யம்பாளையம் திண்டுக்கல் வட்டம் | 90—00 | 6506—00 |
| 4. வரதமா நதி நீர்த் திட்டம், ஆயக்குடி, பழனி வட்டம் | 188—00 | 5202—45 |
| 5. மஞ்சளாறு நீர்த்திட்டம்-தேவதானப்பட்டி, பெரியகுளம் வட்டம் | 109—00 | *5183—00 |
| 6. குடகனாறு நீர்த்திட்டம்—அழகாபுரி, வேடசந்தூர் வட்டம் | 920—00 | **2230—00 |
| 7. குதிரையாறு நீர்த்திட்டம்—பாப்பம்பட்டிச் கிராமம், பழனி வட்டம். | 404—00 | ***5713—00 |

* பெரியகுளம் மற்றும் நிலக்கோட்டை ஆகிய இரு வட்டங்கள் உட்பட்டவை

** நிர்மாணப்பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. இன்னும் முடிவு பெறவில்லை.

*** நிர்வாணப் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. இன்னும் முடிவு பெறவில்லை.

**சிறு பாசனத் திட்டம்**

| | | |
|---|---|---|
| திண்டுக்கல் வட்டம், தர்மத்துப் பட்டியில் புதிதாக குளம் அமைக்கப்பட்டது. | 24,75,201 | 292—96 |
| பழனி வட்டம், அப்பிபாளையம் கிராமம் புங்கனோடையின் குறுக்கே கண்மாய் அமைக்கப் பட்டது. | 2,82.403.50 | 89—70 |
| பழனி வட்டம், நவகாணி கிராமத்தில் இரு குளம் அமைக்கப்பட்டன. | 8,48,280 | 276—93 |

## என்றும் இன்ப விழா!

எரிமலையும், சுடுமணலும், நெடுங்காடும், பெருவெள்ளமும், வறண்ட நிலமும், வளமற்ற நீர் நிலையும் படைத்த இடமாக இன்றி-நன்செயும், புன்செயும், நடுநடுவே நறுமணப் பூங்காவும், பழமுதிர்சோலையும், பாங்குடன் விளங்கும் குன்றும், மலையும், மலைபடுபொருளும், மக்களின் தேவைக்கேற்றவைகளை நல்கும் கனிகளும், சிந்து பாடும் சிற்றாறும், வள்ளல் போல் தரும் ஆறுகளும், பிறவுங் கொண்டு பொன்னாடாக விளங்கும் இந்நாடு நன்னாடு என்று கூறிக் கொள்வதிலே ஓர் பூரிப்பும் பெருமையும் நமக்கிருப்பது இயல்பே; இருந்தாலும் அவசியமே.



ஆனால், இத்தகைய நாட்டிலேயுள்ள நலிவுகளையும் நாம் மறுக்கலாகாது. தீட்டிய வைரம் போல் தணலில் வெந்து, கைத்திறனால் உயிர்பெறும் தங்கம் போல், அரைத்தெடுத்த சந்தனம்போல் நலிவு நீக்கப்பெற்று, அயர்வு போக்கப் பெற்று, ஆற்றல் வளப்படுத்தப்பெற்ற நாடு அழகுடன் விளங்கும். ஆங்கு அறிவு மணங்கமழும்: இன்பவிழா என்றென்றும் இருக்கும். இதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா



# அண்ணா மாவட்டம் - சில தகவல்கள்

தேவ. நடராசன்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு மக்களுக்காகத் தீட்டுகிற நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமானால், மாவட்ட நிர்வாகம் திறமையாகச் செயற்பட வேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் தொடர்பு மிகவும் நெருக்கமாக இருக்க வேண்டும். மக்கள் அதிகாரிகளை எளிதில் தொடர்பு கொள்ள வசதிஇருக்க வேண்டும். அதற்கு மாவட்டங்கள் சிறிதாக அமைதல் வேண்டுமெனக் கருதி பெரிய மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென மக்கள் நலனில் அக்கறையுள்ள தமிழக அரசு மாவட்டங்களைப் பிரிப்பது குறித்து ஆராய்ந்து ஆலோசனை வழங்க வல்லுநர் குழு ஒன்றை 1984-ஆம் ஆண்டு அமைத்தது. இக்குழு மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. அப்பரிந்துரையைப் பரிசீலித்து மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதென முடிவெடுத்தது.

புதிதாக அமைகிற மாவட்டத்திற்குத் தன் அன்பாலும், ஆற்றலாலும், தொண்டாலும், தாய பணியாலும் மக்கள் நெஞ்சங்களில் என்றும் கோலோச்சும் பேரறிஞர் அண்ணாவின் பெயரைச் சூட்டவேண்டும் என அரசு முடிவெடுத்தது. அண்ணாவின் 77வது பிறந்த நாளான இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளில் புதிய மாவட்டம் பிறக்கிறது.

அண்ணா மாவட்டத்தை உள்ளடக்கிய பாண்டி நாட்டை,

அத் திருத்தகு நாட்டினை
அண்டர்நாடு
ஒத்திருக்கும் என்றால்
உரை ஒக்குமோ
எத்திறத்திலும் ஏழுலகும் புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து
முற்றலால்

எனக் கம்பராமாயணம் போற்றுகிறது.

துந்தி கிழல் கூட்டுறதும்
தூவானம் தூவுறதும்
காதகரம் ஊதுவதும்
நம்ம கொடைக்கானலிலே
இஞ்சி படரு மலை
எலுமிச்சை காய்க்கு மலை
மஞ்சி படரு மலை
மகத்தான சிறுமலை

என நாடோடிப் பாடல் ஏற்றுகிறது.

பாண்டிநாடு முத்துடைத்து

என்று ஔவையார் கூறினார்.

பாண்டிமண்டலத்தைச் சார்ந்த அண்ணா மாவட்டப் பகுதி மன்னர்களும் மகுடங்களும் அலங்கரித்த பூமி. பல்வேறு அரசியல் மாற்றங்களையும் அரசியல் ஏற்ற இறக்கங்களையும் கண்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட ஒரு மண்டலம். ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாகரிகத்தையும், பண்பாட்டையும் வளர்த்துக் காத்த மண். பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும் ஆண்ட மண்டிலம்.

ஆங்கிலேயர்கள் 1790ல் போரிட்டு மைசூர் பிடிப்பிலிருந்து திண்டுக்கல்லை வென்றனர். 1792 1972-ல் உடன்பாடு கொண்டு தம் வசப்படுத்தினர்.

1790-ல் ஆர்க்காடு நவாப்பிடமிருந்த மதுரை மண்டல முழுவதற்குமான வரி வசூல் அதிகாரத்தை ஆங்கிலேயர் பெற்றுக் கொண்டு, பிறகு 1801-ல் ஒப்பந்தம் மூலம் மதுரை மண்டலத்தையே தாம் பெற்றுக் கொண்டனர். அதற்கு முன்னர் தனித்தனியாக நிர்வகிக்கப்பட்ட மதுரை, திண்டுக்கல் பகுதிகள் 1801 முதல் ஒரே நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்டு மாவட்ட ஆட்சியாளர் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இப்படி ஒரே மாவட்ட ஆட்சியாளரின் ஆளுகைக்குள் 1801ல் கொண்டு வரப்பட்ட இப்பகுதிகள் மீண்டும் இப்போது, மக்களுக்குப் பயன்படும் வகையில் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்படுவது வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

திண்டுக்கல் கோட்டை, வரலாற்றுச் சிறப்புமிக்கது. இக்கோட்டை கி.பி. 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலைநாயக்கரால் கட்டப்பட்டதென நம்பப்படுகிறது. இது கி.பி. 1784 முதல் 1790 வரை இப்பகுதியின் பொறுப்பினை மேற்கொண்டிருந்த சையது சாகிப் என்பவரால் மேலும் சீரமைக்கப்பட்டது. ஆங்கிலேயர் இக்கோட்டையை 1797-1798-ல் மேலும் வலுப்படுத்தினர். பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய கால கட்டம் வரை திண்டுக்கல் கோட்டை நாயக்க மன்னர்களிடமே இருந்து வந்தது. பல்வேறு போர்களுக்கும் போராட்டங்களுக்கும் அரசியல் மாற்றங்களுக்கும் பிறகு 1792-ல் திண்டுக்கல் ஆங்கிலேயர் ஆளுகைக்குள் வந்தது.

கொடைக்கானல் பகுதியில் மேற்கு நோக்கிச் சென்றால் காட்டுப் பகுதிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட ஆதாரங்கள் பல இருக்கின்றன. மானிடவியல் ஆய்வாளர்களுக்கு மகிழ்வூட்டும் ஆதாரங்கள் பல அங்கே கிடைக்கின்றன. அந்த ஆதாரங்களைப் பார்க்கும்போது உலகிலேயே மனிதன் முதன்முதலாகத் தோன்றியதும், மனித நாகரிகம் முதன் முதலாக வளர்ந்ததும் தமிழ் நாட்டில்தான் என்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்து உண்மை என்று நிரூபிக்க இவை பெரிதும் துணை நிற்பதாகவே தெரிகிறது.

கொடைக்கானலில் முதன் முதலாக வீடுகள் தோன்றியதே 1845-ல் தான்.

அமெரிக்க கிறித்தவ சமயப் பெரியார்கள்தான் முதலில் கொடைக்கானலில் வீடு கட்டித் தங்கலாயினர். அவர்களைப் பின்பற்றி ஆங்கிலேய அதிகாரிகள் அங்கே குடியேறினர். இன்று கொடைக்கானல் புகழ் பெற்ற கோடைகாலத் தலமாக விளங்குகிறது.

ஊட்டியை விடவும் இதமான தட்பவெப்பநிலை கொடைக்கானலில் உள்ளது. இங்கே மூடுபனி, மேகமூட்டம் இல்லை. எனவேதான், மத்திய அரசு வானிலை ஆராய்ச்சி நிலையத்தை ஊட்டியிலோ, கோத்தகிரியிலேயோ அமைக்காமல் கொடைக்கானலில் அமைத்துள்ளது.

அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக்கானலில்தான் மகளிருக்கென அன்னை தெரசா பல்கலைக்கழகத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் துவக்கியுள்ளார்.

மகளிர் பிரச்சினைகளைத்தீர்த்து மகளிர் நலம் காக்கும் வழிவகைகளை வகுக்கத்தக்க ஆராய்ச்சி பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படுகிறது. வேறு பல கல்வி நிலையங்களும், கலாச்சார அமைப்புகளும் இங்கே இருக்கின்றன.

பாரெலாம் புகழும் பழனி மலையும் இங்கேதான் இருக்கிறது. பன்றி மலையும் இங்கேதான் இருக்கிறது.

## அண்ணா மாவட்ட அமைப்பு விவரம்

| மாவட்டத்தின் பெயர் | கோட்டம் | வட்டம் | பரப்பளவு (சதுர கி.மீ.) | மக்கள்தொகை |
|---|---|---|---|---|
| அண்ணா மாவட்டம் தலைநகர் திண்டுக்கல் | 1. திண்டுக்கல் | 1. திண்டுக்கல் | 1,328.97 | 5,69,876 |
| | | 2. நத்தம் | 567.09 | 1,06,946 |
| | | 3. நிலக்கோட்டை | 468.05 | 2,00,097 |
| | 2. பழனி | 4. பழனி | 1,456.01 | 3,75,923 |
| | | 5. வேடசந்தூர் | 985.83 | 2,28,022 |
| | 3. கொடைக்கானல் (புதியது) | 6. கொடைக்கானல் | 1,029.66 | 83,584 |
| | | | 5,835.61 | 15,64,448 |

## மதுரை மாவட்ட அமைப்பு விவரம்

| மாவட்டத்தின் பெயர் | கோட்டம் | வட்டம் | பரப்பளவு (சதுர கி.மீ.) | மக்கள்தொகை |
|---|---|---|---|---|
| மதுரை மாவட்டம் (பிரிக்கப்பட்டபின்னர்) | 1. மதுரை | 1. மதுரை தெற்கு | 217.17 | 9,69,579 |
| | | 2. மதுரை வடக்கு | 420.98 | 1,78,097 |
| | | 3. மேலூர் | 690.25 | 2,14,124 |
| | | 4. வாடிப்பட்டி (புதிய வட்டம்) | 475.34 | 1,78,712 |
| | 2. உசிலம்பட்டி | 5. உசிலம்பட்டி | 1,081.88 | 2,68,372 |
| | | 6. திருமங்கலம் | 805.99 | 2,33,860 |
| | 3. பெரியகுளம் | 7. பெரியகுளம் | 1,502.80 | 4,42,846 |
| | | 8. உத்தமபாளையம் | 1,364.02 | 4,85,899 |
| | | | 6,558.43 | 29,71,489 |


### இன்ப மணம்!

புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் என்ற பெரு முழக்கம், உலகத் தொழிலாளர்களின் உள்ளங்களிலிருந்து வெளிக்கிளம்பட்டும்! அதனால் ஏற்படும் மகிழ்ச்சி எங்கும் மலரட்டும்! அந்த மலரினின்றும் வீசும் இன்ப மணம் எங்கும் கமழட்டும்!



# அண்ணா மாவட்டம்

Scale 1 Inch 4 Miles



# படமும் செய்தியும்



போக்குவரத்து ஆணையர், திரு. எஸ். டி. காசிராசன் இ.ஆ.ப. தலைமையில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் பிறந்தநாள் விழா சென்னை கலைவாணர் அரங்கில் 5.9.85 அன்று நடைபெற்றது. மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர். ம. பொ. சிவஞானம் அவர்கள் திரு. க, த. திருநாவுக்கரசு அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து திரு.வி க. விருது வழங்கினார்.




சென்னை கலைவாணர் அரங்கில் 6.9.85 அன்று நடந்த கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாள் விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர். இரா நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

சென்னை மாவட்ட ஆசிரியர் தினவிழா 5.9.85 அன்று வள்ளுவர்கோட்டத்தில் நடைபெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் ஆசிரியர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்தார்.



# புதிய இந்தியாவுக்கு
# அறிஞர் அண்ணா காட்டிய வழி

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரையார்

ஆட்சி மூலமாக, மேடையுரை மூலமாக, எழுத்து மூலமாக வருங் காலத் தமிழகத்துக்கு வழி காட்டியவர் வான்புகழ் அறிஞர் அண்ணா! ஆனால் திரைக்கலை மூலமாக, நாடகக்கலை மூலமாக அவர் வருங்கால இந்தியாவுக்கும் வருங்கால உலகத்துக்குமே புதிய ஒளி-வழி காட்டியுள்ளார். இதனையும் மூன்று வகைகளில் அவர் சாதித்துள்ளார்.

சேக்சுப்பியரின் நாடகங்களுடன் ஒப்பிடத்தக்க சிறிய வடிவில் அறிஞர் அண்ணா வீர சிவாஜியின் வாழ்க்கையை ஒரு சரித்திரக் காப்பிய நாடகமாக வடித்துக் காட்டியுள்ளார். அந்த நாடகத்துக்கு அவர் சிவாஜி என்று பெயர் சூட்டவுமில்லை. அதில் தாமே சிவாஜியாக நடிக்கவுமில்லை. அதற்குச் சந்திரமோகன் என சிவாஜியின் ஒரு வீரத் தளபதியின் பெயரையே சூட்டினார். அத்துடன் அதில் சிவாஜியாகத் தம் இயக்கத்தம்பியர் பலரையும் கலைத் தம்பியர் சிலரையுந்தான் நடிக்கவைத்தார். ஆசியாவின் சிறந்த நடிகராக நம்மிடையே இன்றும் உலவும் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் அந்நடிப்பின் மூலமே இன்று உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். அண்ணா வழியின் மற்றும் ஓர் ஒளியுருவாக மக்கள் திலகம் புரட்சித் தலைவரின் புகழாட்சி அமைந்துள்ளது. இந்த இரண்டு கலை ஒளி ஆட்சி ஒளிச் சித்திரங்களுக்கு இடையே அவற்றுக்குரிய வீர விளக்கொளியாக வருங்கால இந்தியாவுக்குரிய இந்திய வரலாற்றுப் படிப்பினையாக அந்நாடக முழுவதுமே விளங்குகிறது.

இரண்டாயிர, மூவாயிர ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் உலகமகா நாடகம்தான் இந்தியாவின் வரலாறு. அதில் அசோகன் அருளாட்சியைவிட, அக்பரின் சமரச ஆட்சியைவிட, எவ்வகையிலும் வரலாற்று முக்கியத்துவத்தில் குறைந்ததன்று, வீரசிவாஜியின் முழுநிறை தேசியப் புகழாட்சி! ஏனெனில் அது அசோகன் கனவும் அக்பர் கனவும் சென்றெட்டாத படிப்பினையைத் தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் உலகுக்கும் தருவதாகும்.

அறிவுப் படிப்பினையை அறிஞர் அண்ணா தம் சிவாஜி நாடக மூலம் காட்டுகிறார்.

உலக வல்லரசுகளிடையே தமிழகமும் இந்தியாவும்தான் முதல்வல்லரசுகள், முதன்மையான வல்லரசுகள் என்ற வரலாற்றுப் படிப்பினையை அறிஞர் அண்ணா சிவாஜி நாடக மூலம் நமக்கு நினைவூட்டுகிறார்

இதனினும் மிக்கதான இறுதிப் பட்டிப்பினை சிவாஜி நாடகத்தில் உண்டு. உயர்வுதாழ்வுவேற்றுமை உருவான - வருணாச்சிரம உருவான காகப்பட்டராகவே நாடகத்தில் அண்ணா நடிக்கிறார். அதை எதிர்க்கும் சமயப்பத்தி இயக்கத்தலைவராக ஒரு துறவி வருகிறார். அவர் நாத்திகம் பாடவில்லை. பத்தியே பாடுகிறார். ஆனால் அது இன்றைய போலி வருணாச் சிரம பத்தியன்று, உண்மையான சமதருமப் பத்தி ஆகும்.

இந்தத் துறவியின் வரலாற்றுப் பெயரையோ வரலாற்று வடிவத்தையோ அறிஞர் அண்ணா 'வீர மறக் கள வேள்வியால் பயனில்லை; பண்பார்ந்த அறக் கள வேள்வியே பயனுடையது' என்று சேரன் செங்குட்டுவனுக்கு அறிவித்தான் மாடலன் என்ற மறைவாணன் என்று சிலம்புக் காவியத்தில் இளங்கோ காட்டுகிறார். அதனினும் உயரியதோர் எதனையோ வெளிப்படக் குறிக்காமல், அந்த வேலையை வரலாற்றறிஞர்களுக்கு விட்டுச் சென்றுள்ளார்.



வரலாற்றாய்வாளரான டாக்டர் கிருஷ்ணசாமி, பேராசிரியர் ஜாதுநாத்சர்க்கார் ஆகியோர் அண்ணாவின் பத்திஇயக்கத் துறவி பற்றி நமக்கு விளக்குகிறார்கள். அவர்தான் பக்த ஞானேசுவரர், மராத்தியநாட்டின் வைணவ பத்தி இயக்கப் பேரொளி. பகவத்கீதையை மராத்தியில் ஆக்கித் தந்தவர் அவரே! வருணாசிரம தீமைகள் அழியும்வரை இந்தியாவுக்கு இராம ராச்சியம் வராது என்று கூறி, அந்தத் தீமை அழியும்வரை அதன் சின்னமாகவே அவரும் அவரது பத்தி இயக்கத் துறவிகளும் கறுப்பு அங்கி அணிந்திருந்தனர்.

புத்தரும் சங்கரரும் இராமானுசரும் சைதன்னியரும் ஞானேசுவரரும் முழுத்தோல்வியே கண்ட இந்தியாவில் தந்தை பெரியார்தாம் முதல் வெற்றிக்கு வழி காட்டினார் என்பதைக் குறிப்பாகக் காட்டுவதற்காகவே அறிஞர் அண்ணா இந்தப் பழங்காலப் பத்தி வடிவ 'ஈ.வெ.ரா.'வின் முழு உரு விளக்கத்தைத் தம் வரலாற்று நாடகத்தில் காட்டவில்லை என்னலாம்.

தன்னலமற்ற மக்கட்சேவையே துறவு, வாழ்க்கை மறுப்பு அன்று என்பதும், உயிர்களின் 'நலத்துக்காகத் தன்னைத் தியாகம் செய்வதே தவம், மூச்சுப் பிடிக்கும் செப்படி வித்தையன்று என்பதும் திருவள்ளுவர் பெருமான் காட்டும் ஆதிகாலச் சமய உண்மைகள் இவற்றை இடையிருட் காலச் சமயங்கள் மறந்து வருகின்றன. இவ் ஆழ்ந்த சமய உண்மைகளை வள்ளுவருக்குப் பின் வலியுறுத்த முன்வந்த முதல் உலக அறிஞர் அண்ணாவே! அதனை வலியுறுத்துவதற்காக பக்தஞானேசுவரர் பகவத் கீதையின் மராத்தி மொழியாக்கத்தைப்பயன்படுத்தியது போல, சிவாஜி வாழ்க்கை நாடகத்தைப் பயன்படுத்திய பேரறிவாளர் அறிஞர் அண்ணா.

இந்தியாவின் தேசிய வரலாற்றை ஆக்க விரும்புவோர் அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவாராக!



# பெரியாரின் உயர் பண்புகள்

ஏ. பி. சனார்த்தனம்

13 வயதில் அரை நிசாருடன் ஐந்தாம் படிவ மாணவனாக 1934-ல் வேலூர் கோட்டை வெளியில் ஈரோட்டுச் சிங்கத்தின் இடிமுழக்கத்தைக் கேட்டேன்.

அன்றிலிருந்து இந்த 1985 வரை அவரது கருத்துக்களுக்கு ஆதாரம் தேடுவதே என் இலட்சியப்பணியாகிவிட்டது.

வேலூர் ஊரீஸ் கல்லூரி நூலகத்திலிருந்து புதுதில்லி பாராளுமன்ற நூலகம் வரை பலப்பல நூல்களைஎடுத்துப்பயன்படுத்தி, பெரியாரின் சீரிய சிந்தனைகளை அந்தமானிலும், கொழும்பிலும் டோக்கியோவிலும் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

கூனிக்குறுகி, மண்டியிட்டு, மானமிழந்து, பிரிந்து, பாழாகி விட்ட மக்களுக்கு உணர்ச்சி, மானம், தெளிவு, ஏற்பட அவர் பட்டபாடு உலக வரலாற்றிலேயே சிறப்புடையது.

சாக்ரடீசாக, லிங்கனாக, மார்க்சாக, சன்-யாட்-சென்னாக அறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரைப் படம்பிடித்துக் காட்டும் போது கல்லூரிக் காளையர் கண் திறக்கக் கண்டேன்.

பெரியாரிடம் தான் பெற்ற பயிற்சியை, பெரியாருடன் தான் பல ஊர்களுக்குப் பயணம் செய்ததை, பக்கத்து சென்னிமலையிலிருந்து, இமயத்து ரிஷிகேசம் வரை, பம்பாய், புத்தகயை, கான்பூர், இரயிலில், காரில், கால் நடையில், நள்ளிரவுவரை பலப்பல கூட்டங்களில் கண்ட எதிர்ப்பு, ஆர்வமான தோழர்கள், எல்லாம் சுவைபட சொல்லியிருக்கிறார். சென்னையிலேயே தங்கசாலைத் தெருவில் பொம்மு செட்டி தெருவில், கருப்பண்ணன் தெருவில், செம்புதாஸ் தெருவில் (நாவலருக்குத் தெரியும்) விடிய விடிய எங்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பெரியார் பெருமையுடன் குறிப்பிட்டார், 'நான் தடுக்கி விழுந்தால் எம்.ஏ., பி.ஏ. மேல் தான் விழ வேண்டும், என்று! நாங்களெல்லாம் அவரிடம் துணை ஆசிரியர்களாக ஈரோட்டில் இருந்த நாட்கள், அவருடன் சிறையில் அடைபட்ட நாட்கள்!

காடு திருத்தி, கழனியாக்கியவர் பெரியார்; இன்றைய நம் ஏற்றத்துக்கு பாதை சமைத்தவர் பெரியார். அவர் அரும்பாடு பட்டுத் தோண்டி எடுத்த தங்கம் நமக்கு வற்றாத கருத்துக் [illegible].

பெரியாரின் பொன்மொழிகள் தாங்கிய கல்வெட்டுக்கள், மிகச் சிறந்த முறையில் பெரியாருக்கு நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள், பெரியாரின் பெயரில் மாவட்டம், பெரியாரின் பொன் மொழிகள் வெளியீடு, பெரியார், வாழ்க்கை சித்திர நூல் வெளியீடு பெரியார் வரலாறு, நாவலர் தலைமையில் எங்களுக்கெல்லாம் பெரியார் குழுவில் வாய்ப்பு, இத்தனைக்கும் வழி வகுத்த பரங்கிமலைப் பாரி வள்ளலுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தன் கருத்துக்களை மேடைகளில் ஓங்கி அடித்து வலியுறுத்திய பெரியார் தனக்கு மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களிடம் பண்பு, அன்பு, நெகிழ்ச்சியுடன் பழகினார், மன்னார்குடியில் கேள்விகள் எழுதியவரின் பென்சில் முனை ஒடிந்ததைக் கண்டு தன் பவுண்டன் பேனா தந்து கேள்விகள் எழுதச் சொன்னார்.

1938-ல் முதன் முறை அவருடன் சிறையில் அடைக்கப்பட்டேன். சலுகைகள் கேட்கக் கூடாது, பொறுமையுடன் எதையும் தாங்கவேண்டும் என்று உணர்த்தி, சிறையை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை ஆக்கினார்.

ஈரோட்டில் அலி சகோதரர்கள், பண்டித மோதிலால், பெரும் பெரும் தேசியத் தலைவர்களை தன் மாளிகையில் தாலாட்டியவர்; இந்தியாவிலேயே தன் மனைவியை, தங்கையை, முதன் முதல் சட்ட மறுப்பில் ஈடுபடுத்தியவர்; இராட்டினம் சுமந்து திரிந்தவர்; தன் தோப்புத் தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தவர்; காந்தியடிகளையே வியக்க வைத்தவர், தமிழகத்தில் காங்கிரசுக்கு அடித்தளமிட்டவர், என்பதை எத்தனையோ வடநாட்டு எம்.பி. களுக்கு எடுத்துக் காட்டினேன்.

பெட்ரோல், தீப்பந்தம், கத்தி என முழங்கினாரே தவிர ஒரு கிளர்ச்சியிலும் வன்முறையை அனுமதிக்கவில்லை. பாய்ச்சல் வேங்கைகளை எல்லாம் பக்குவமாக, கட்டில் வைத்திருந்தார்.

மட்ட ரகமாக யாராவது மேடையில் பேசினால் தடி தட்டி உட்கார வைத்தார்.

மரியாதை தருவதில் 'வாங்கள்' 'உட்காருங்கள்' என்பதில் 'மன்னிக்கனும்' என்று அடிக்கடி சொல்வதில் பச்சைப் பாசம் பொழிவதில், ஏழைத் தொண்டர்களுக்காகத் துடித்ததில், பெரியார் பிறவித் தலைவர்.

இறுதி வரை என்னிடம் பாசம் பொழிந்தார். நான் எவ்வளவு பேறு பெற்றவன்! அவர் வாயிலாக ஒரு நல்ல மனைவி! மிக உயர்ந்த குறிக்கோள்! பாசமிக்க தோழர்கள்!

அவரிடம் எல்லாம் வெளிப்படை! மறந்தும் பழிவாங்கல், குழி பறித்தல், சின்னத்தனம் கிடையாது.

ஏழைத் தோழர் தந்த எளிய உணவை ரசித்துச் சாப்பிட்டார்.

இறுதி வரை பொது மக்களுக்காகத் துடித்தார். 94 வயதிலும் எவ்வளவோ உபாதைகள் தாங்கி மேடைகளில் சிங்க முழக்கமிட்டார்.

எவ்வளவு முற்போக்குக் கருத்துக்கள்! 1928லேயே கருத்தடை பிரசாரம். 1930களில் சமதர்ம சங்கநாதம். 'இனி வரும் உலகம்' என்பதே 21ஆம் நூற்றாண்டுக்கு இழுத்துச் செல்வது. அவரது 'தத்துவ விளக்கம்' சிந்தனையாளர்களின் விருந்து. படிக்காத மேதை! ஆனால், படித்தவர்கள் அவர் குறித்து ஆராய்ச்சி செய்த வண்ணம் இருக்கிறார்கள்.

அவரிடம் இருந்த நாட்களில் நான் பெற்ற பயிற்சி எனக்கு உறுதியை, தன் மதிப்பை, முற்போக்குச் சிந்தனையை, நேர் வழியைத் தந்துள்ளது. உலகுக்கே உரியவர் அவர். பலப்பல நாடுகளில் அவரது சிறப்புகளைப்பறை சாற்றும் படிப்பாளிகள் உள்ளனர். தோண்டத் தோண்ட உயர் கருத்துத் தரும் பெரியார் புகழ் வாழ்க! வளர்க!!



# பெரியாரின் சிந்தனை!

திருவாரூர் கே. தங்கராசு

பெரியார்!

அவர் ஓர் சிந்தனைச் சிற்பி: சீர்திருத்தச்செம்மல் மட்டுமல்ல- பலரும் அரிதெனக் கைவிட்ட, சமுதாய மேம்பாட்டுப் பணியினைத் துணிவோடு ஏற்றுப் போராடி மாபெரும் வெற்றி கண்ட மாமனிதரும் ஆவார்.

அவர் தமது சிந்தனைக்கு எல்லை வகுத்ததில்லை! துணிவுக்கு வேலியிட்டதில்லை!

அவர்தம் இதயத்தில் பட்டதை எடுத்து வைத்திட எவர்க்கும், எப்போதும் அஞ்சியதில்லை! தன்னிலும் மேலாக எவரையும் ஏற்றியதுமில்லை - கீழாக எவரையும் தாழ்த்தியதுமில்லை!

பெரியார்! அவர் மனித குலத்திடை மலிந்து கிடந்த மாசுகளைக் களைந்திட இவண் வந்துதித்த ஓர் ஒளிக்கதிர்!

அதன் வெப்பம் பலரைச் சுட்டதுண்டு-ஆனால் அது குறிவைத்து எவரையும் சுட்டதில்லை!

அவர் கொடுமைகளைச் சாடியிருக்கிறார் - மிகக் கடுமையாக! ஆனால் எவருக்கும் கொடுமை விளைத்திட என்றுமே நினைத்ததில்லை!

பெரியார் - அவரைப் புரிந்தவர்கள் போற்றினர்! புரிந்து கொள்ள முயன்றவர்கள் வியந்தனர்! புரிந்தும் புரியாதது போலிருந்தவர்கள் வெறுத்தனர்!

ஆனால் அப் பேரொளியோ தன் போக்கில் என்றும் ஒளிர்ந்து கொண்டே இருந்தது.

அந்த ஒளியில் சிலரது கண்கள் கூசியிருக்கலாம். அந்த ஒளி பலரது இருட்பணிகளுக்கு இடையூறாக இருந்திருக்கலாம்.

அந்த ஒளி பல குருடர்களுக்கு வெப்பத்தை மட்டுமே கூட உணர்த்தியிருக்கலாம்.

ஆனால் அந்தப் பெரு ஞாயிறு தனது பல்வேறுபட்ட பணிகளை ஒளி தருதல் - வெப்பம் தருதல்- வையம் உயர்ந்திட மாமழை தருதல் ஆயபணிகளைக் குறைவின்றி வாரி வழங்கியவண்ணமே இருந்தது.

இன்று அந்தப் பேரொளி உருவினால் இல்லை. ஆகவே அங்குமிங்குமாக இருள் தோன்றி விட்டதாகச் சிலர் கருதக் கூடும்.

ஆனால் பகலவன் எப்படி மறைவதில்லையோ, அதே போன்று 'பகுத்தறிவுப் பகலவனாம்'. 'தந்தை பெரியார்' அவர்களும் வையம் உள்ளவரை இவ்வையத்தில் இருள்மதிபடைத்தோர் இருந்திடும் வரை- 'லட்சியப் பிழம்பாக 'கொள்கைப் பேரொளியாக ஒளிர்ந்தவண்ணமிருப்பார் என்பதினில் சிறிதும் அய்யமில்லை!

காரணம் - அவர் தனக்கெனவும் வாழவில்லை! தன்னைச் சார்ந்தோரை மட்டுமே உயர்த்திடவும் வாழவில்லை!

கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட மக்கள் எவராக இருந்தாலும்- அவர்களது கொடுமைகளைக் களைந்து-அவர்கள் 'மனிதர்கள்' என்ற சொல்லுக்குரிய முழுப் பொருளோடு வாழ்ந்திட தனது வாழ்நாள் முழுதும் பாடுபட்டவர்.

அறிஞர்கள் பலர் சிந்திப்பர், அத்தோடுஅவர்தம் பணி முற்றும் சிலர் தம் சிந்தனைகளை நூல் வடிவில் வெளியிடுவர்; சேர்ந்திட்ட நிதியைக் கணக்கிடுவதோடு அவர் தம் லட்சியம் நிறைவுறும்.

நம் தந்தை பெரியார் அவர்களோ சிந்தித்து, அவற்றை வெளியிட்டு, பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே பலரையும் அவற்றை ஏற்க வைத்து, பின்னர் தாமே முன்னின்று செயல் வடிவம் கொடுத்திடப் பெருந் துயரையும் ஏற்றுப் போரிட்ட ஒரே மாவீரராவார்கள்!

ஆகவேதான் பேரறிஞர் அண்ணா அவர்களே - தமது பரந்த அனுபவத்தில், ஆழ்ந்த ஆய்வில்-உலகிடைத் தாம் கண்டதும், கொண்டதும், ஒரே தலைவரைத்தான்-அவரே 'பெரியார்' என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள்.

பெரியாரை ஏற்று தமராகக் கொண்டோர் தரணியில் நிரம்ப உண்டு! ஆயினும் இன்னமும் அவரையும், அவரது இலட்சியங்களையும் ஒரு புதிர் போல் கருதிப் புரியாது இருப்போர்க்கு இவண் அவர் வாயிலாகப் பொழிந்த ஓர் கருத்தினைச் சுட்டிட விரும்புகின்றோம்!

''ஏழைகள் தங்கள் தரித்திரத்திற்கும், கஷ்டங்களுக்கும், கடவுளும் தலைவிதியும்தான் காரணம் என்று கூறிவிடுவார்களேயாகில், அவர்களால் எப்படி. தரித்திரத்தை நீக்கிக் கொள்ள முடியும் - கஷ்டங்களைப் போக்கிக் கொள்ள முடியும்? ஏழைகள் தங்கள் உழைப்பின் பயனை, யார் அனுபவிக்கிறார்கள்? ஏன் அனுபவிக்கிறார்கள்? என்று கண்டுபிடித்து அவைகளைத் தடுக்க வேண்டாமா?

இந்தக் காரியத்தைச் செய்ய எந்தக் கடவுளும் சம்மதிக்காது.

காரணம், கடவுள்களையும், தலைவிதியையும் பணக்காரனும் சோம்பேறிகளும்தான் உண்டு பண்ணுகிறார்கள்! ஆகவே அவர்கள் அவைகளைத் தங்களுக்குத் தகுந்த மாதிரிதான் உண்டுபண்ணிக் கொள்ளுவார்கள். இங்கு மாத்திரமல்ல, எல்லா தேசங்களிலும் நிலைமை இதுவேதான்!

பணக்காரர்கள் தங்கள் நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ள அதற்கேற்றவாறு கடவுள்களைச் சிருஷ்டித்து, அவற்றின் பெருமைகளைப் பிரச்சாரஞ் செய்ய — பிரச்சாரகர்களை - போதகர்களை - குருமார்களை ஏற்படுத்தி அவர்களுக்கு வேண்டிய பணம் கொடுத்தும் பாதுகாத்து வருகிறார்கள்!

# தொண்டரைப் போற்றிய தாயவர்


கோடம்பாக்கம் குமார்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.


நம்பியுடையான் படைக் கஞ்சான்' என்று தமிழிலே ஒரு பழமொழி கூறுவார்கள். இந்தப் பழமொழியினை யார் யாரோ எது எதற்கோ கூறுவார்கள்— அப்போதெல்லாம்இதிலேஅடங்கி யிருக்கும் பாசமும் வீரமும் முழு அளவில் வெளிப்படுவதில்லை. ஆனால், இந்தப் பழமொழியைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் மேடையிலே எடுத்துக் கூறும் போது மட்டும்தான் பாசத்தின் ஆழம் வெளிப்படும் - வீரத்தின் வேகமும் வெளிப்படும். ஏனென்றால், அவர் தம்பிகள் மீது பாசத்தை மழையெனப் பொழிந்தவர். தம்பிகளும் தமது ஆருயிர் அண்ணன் மீது அப்படி ஒரு பாசத்தை வைத்திருந்தனர்.



இன்று பேரறிஞர் அண்ணா நம்மிடையே இல்லை. எனினும் அவர் பொழிந்து சென்ற அன்பு மழை அவரின் அன்புத் தம்பி ஒவ்வொருவனின் இதயத்திலும் பாச வெள்ளத்தை இன்னமும் தேக்கி வைத்திருக்கிறது. என் போன்ற தம்பிகள் அந்த அன்பு வெள்ளத்திலேயே இரவு பகல் இருபத்தி நான்கு மணி நேரமும் ஆண்டின் முந்நூற்று அறுபத்து ஐந்து நாளும் மிதந்து கொண்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

பேரறிஞர் அண்ணா, தம்பிகள் மீது கொண்ட இந்தப் பாசமும் பேரறிஞர் அண்ணாமீது தம்பிகள் கொண்ட இந்தப் பாசமும் ஒருங்கிணைந்ததால் அன்றைய தமிழகத்தில் ஒரு புதுமொழியே தோன்றியிருந்தது. ''அண்ணா உடையான் அவைக்கு அஞ்சான்' என்பது அந்தப்புதுமொழி. அன்று தமிழகத்தின் அரசியல்மேடைக்கு ஒட்டு மொத்தமாகச் சொந்தம் கொண்டாடியது அண்ணாவின் இயக்கம் ஒன்றுதான். அண்ணாவை நேரில் கண்டு— அவர்தம் பேச்சாற்றலால் கவரப்பட்டுத் தாமும் பெரும் பேச்சாளராக மாறியவர் பலர். அண்ணா பாணியில்தான் தமிழகத்தின் அரசியல் மேடையே இன்று வரை நிலைத்து நின்று கொண்டிருக்கிறது. எனவேதான் இந்தப் புதுமொழி வனப்பும் வலிவும் கொண்டு திகழ்ந்தது.

பேரறிஞர் அண்ணாவுடன் ஒரே மேடையில் பேசும் வாய்ப்பு என்பது அன்று தமிழகத்தில் பொது வாழ்வில் ஈடுபட்ட ஒவ்வொருவரின் இதயத்திலும் நிரந்தரமாகக் குடிகொண்டிருந்த ஏக்கமாகும். இந்த வகையில் நான் மிகப் பெரிய அதிர்ஷ்டக்காரன் என்றுதான் கூறவேண்டும் நான் பேரறிஞர் அண்ணாவுடன் ஒரே மேடையில் பேசும் வாய்ப்பினைப் பல முறை பெற்றவன். மற்ற மேடைகளில் எங்களுக்கெல்லாம் அவர் தோன்றாத் துணையாக இருந்து எங்கள் பேச்சை முடுக்கிவிடுபவர்.

> உழைப்பே செல்வம்;
> உழைப்பவர்க்கே உரிமை;
> உழைப்பாளிக்கே உலகம்
> உரியது.
> —பேரறிஞர் அண்ணா

''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது'' என்றார் வள்ளுவர். தொண்டர்களின் பெருமையை எண்ணி அதனை மிகவும் இனியதாக ஏற்றுக்கொள்ளக் கூடிய குடும்பப் பாசத்துடன் கழகத்தை நடத்தினார். பேரறிஞர் அண்ணா. அந்த நாளில் நான் என் வாழ்வில் பெறற்கரிய பேற்றினைப் பெற்றேன்.

பேரறிஞர் அண்ணா பெருந்தன்மையின் மொத்த வடிவமாகத் திகழ்ந்தார்





# இராஜசேகரன் நினைவு ஓட்டம்

கனடா நாட்டைச் சார்ந்த டெரிபாக்ஸ் என்பவர் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு ஒரு காலை இழந்த நிலையிலும், தனது மற்றொரு காலினால் ஓடி அதன் மூலம் நிதியினைத் திரட்டி துன்புற்றவர்களுக்கு உதவிட அந்நிதியினைப் பயன்படுத்தினார். இந்த மனிதாபிமானக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் 'இராஜசேகரன் நினைவு ஓட்டத்தை' 11.8.85 அன்று இந்திய விளையாட்டுக் கழகமும் தமிழக இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையும் நடத்தின.

இராஜசேகரன் என்பவர் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் பிறந்த, இந்தியாவிற்காகத் தடகள விளையாட்டில் பல வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தனது இளம் வயதில் (42 வயது )இருதய நோயால் திடீரென மரணமடைந்த ஒலிம்பிக் வீரர். அதனாலேயே இந்த ஓட்டத்திற்குத் தமிழ்நாட்டில் இராஜசேகரன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.


தமிழகத்திலுள்ள நலிந்த விளையாட்டு வீரர்கள் - வீராங்கனைகளுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் உதவும்பொருட்டு ஒரு நிதியினைத் திரட்டும் நோக்கத்துடனேயே 'இராஜசேகரன்' நினைவு ஓட்டம்நடத்தப்பட்டது.

சாந்தோமில் செயின்ட் பீட்ஸ் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி காமராஜர் சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னம் வரை ஓட்டம் நடைபெற்றது. ஏறக்குறைய 15 ஆயிரம் பேர்கள் கலந்து கொண்டார்கள். ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தி ஓடினர். என்பதும், இதன் மூலம் 15 ஆயிரம் ரூபாய் நிதி கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள்.



* அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்!
* வீடு எங்ஙனமோ அங்ஙனமேதான் நாடு இருக்கும்!
* புரட்சி என்பது இயங்கும் சக்தி! புரட்சி வாலிபத்தின் கூறு: பகுத்தறிவாளர் ஆயுதம்!
* சட்டம் ஒரு இருட்டறை-வக்கீலின் வாதம் ஒரு விளக்கு!
* பித்தேறி-மேல் கீழ் என்று பேசுவோர் உறவு வேண்டாம்!
* இயக்கம் நமது வியர்வையிலும், கண்ணீரிலும் உழைப்பிலும் இருக்கிறது!
* பேச்சு—கருத்தின் தொகுப்பு!
* சிந்தனை — காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும்!
* தமிழே இசையுருவாக அமைந்தது. இசையே, தமிழில் முதன் முதலில் தோன்றியது!
* வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம்: இவை ஏன்?

—பேரறிஞர் அண்ணா



இந்தப் புரட்டுகளை பலரும் அறிந்திருந்தாலும் வெளியே துணிவாகப் பேசப் பயப்படுகிறார்கள்! ரஷ்யா தேசத்தில் தான் முதன் முதலில் இந்தக் கொடுமைகளைக் களைய துணிவாக மக்கள் முன் வந்தார்கள். அதே நிலைக்கு நாமும் வர வேண்டும். எல்லோரும் ஒரே நிலை, ஒரே குடும்பம் என்ற அளவுக்கு, சுரண்டலற்ற சமுதாயம் உருவாகிட வேண்டும்'' (9-2-1933 சென்னிமலை உயர் நிலைப் பள்ளிச் சொற்பொழிவு: குடியரசு 19-2-1933).

மேற்குறித்த பெரியார் அவர்களது உரையை, பொதுவுடமைச் சமுதாயம் மலர வேண்டும் — புதுமைகள்பல பூத்திடப் போரிட வேண்டும். — புதியதோர் உலகு உருவாக்கிட வேண்டும் என்று கூறிடும் சிலர் கூட இன்னமும் ஏற்றிட மறுப்பதோடு—அவரை ஒரு கடவுள் மறுப்புக்காரர்என்ற எல்லைக் கோட்டுள்ளுளேயே நிறுத்தி வைத்து தங்கள் பிள்ளை விளையாட்டுகளில் ஈடுபடுகிறார்கள்.

ஆனால் - பெரியார் அவர்களது அதே கருத்தை வேறு வடிவில் கூறியுள்ள நமது முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் அவர்களை மட்டும் 'தத்துவ மேதை' என்று ஏற்றிப் போற்றுகிறார்கள்.

மேதை டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்களது தத்துவங்களை, அவர்களில் படித்து அறிந்தோர் எத்தனைப்பேரோ யாம் அறியோம்!

எடுத்துக்காட்டுக்கு இங்கு ஒரு கருத்தினை மட்டும் சுட்டிட விரும்புகின்றோம்.

''நாம் (மனிதப் பிறவிகளாகிய) நமது தற்போதைய பக்குவமற்ற அறியாமை மிகுந்த நிலையிலிருந்து அமைதியை நோக்கி, இன்னும் எவ்வளவோ உயர வேண்டியிருக்கிறது.

மனத் தூய்மையாலும், அர்ப்பணிக்கும் உணர்வாலும் எல்லா மனிதர்களையும் நமது அன்புக்குரிய குடும்ப உறுப்பினர்களாகக் (உறவினர்) கருதுவதன் மூலமே, அந்த நிலையை அடையமுடியும் அதுவே மானிட சமுதாயம் அடைய வேண்டிய குறிக்கோளகும்.''

'Search for Truth'
Page 51

மானுடம் உயர்ந்திட-அன்பினால் இணைந்து ஒரே குடும்பமாய் வாழ்ந்திட இருபெரும் மேதைகளின் இருவேறு கருத்துக்கள் என்றாலும் அடிப்படையில் இரண்டும் ஒன்றேயாகும்!

ஒருவரை மெத்தப் படித்தவர்கள் மட்டுமே 'மேதை'என்று கூறிப் பாராட்டுகிறார்கள். மற்றவரை இன்னமும் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்; அல்லது 'சண்டித்தனம்' செய்கிறார்கள்.

ஆனால், இன்று ''யாதும்ஊரே யாவரும் கேளிர்'' என்னும் கணியன் பூங்குன்றனாரின் மொழிக்கு இலக்கியமாகவாழ்ந்து வரும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களது அரசு, தந்தை பெரியார் அவர்களது இலட்சியங்களைத் தெளிவாகப் புரிந்து - இயன்ற வழிகளிலெல்லாம் அவைகட்குவடிவம் ஈந்து புதியதோர் சமுதாயம்—சாதி உணர்வற்ற - மத மூடநம்பிக்கையற்ற எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை; யாருடைய உழைப்பையும் யாரும் சுரண்டிட இடந்தரோம். எனும் வழியில் செயல்பட்டு வருவது கண்டு நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

அவரது அரசு இன்னும் பல்வேறு புரட்சிமிகு சாதனைகளைச் செய்திட விழைகின்றோம்.

அதற்குத் தந்தை பெரியார் அவர்களது சிந்தனைகளும் — செயல்களும் உறுதுணையாக என்றும் நின்று நிலவிடும் என்ற உறுதியினையும் கூறுகின்றோம்.

''அரியவற்றுள் எல்லாம்அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்''

-திருக்குறள்

# அண்ணா உருவில்....

**திருமதி சுலோசனா சம்பத்**

பேரறிஞர் அண்ணா அவர்கள் அகிலத்திற்கே வகுத்தளித்த குடும்பப்பாச உணர்வின் இனிய தன்மைகள் ஈரோட்டில் கிளைத்தெழுந்து கவிதையாய், காவியமாய், திராவிட இயக்கக் குடும்பங்கள் அனைத்தும் ஒரு குடும்பம் அண்ணன்- தம்பி - அக்காள்- தங்கை என்ற நல்லுறவும், நல்லுணர்வும் பெற்றுத் திகழ்ந்த, இன்னும் நமது இயக்கத்திற்கே அந்தப் பெருமை - என்று மாற்றாரும் கூறத்தக்க மதிப்பு வாய்ந்த நிலை நமக்கெல்லாம் நம் அண்ணன் தந்த அரிய சொத்தாகும்!



அன்பும், பண்பும், இனிமையும் அறிவு மணமும் கமழத்தக்க குடும்பங்களாய் தமிழ்க் குடும்பங்ளை இனிமையாக்கி, இன்புற்றவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

ஒருமுறை கவியரசர் கண்ணதாசன் அவர்கள் கூறிய கருத்து ஒன்று என்நினைவுக்கு வருகிறது. அவர் சொன்னார்''தமிழ்மொழிக்குள்ள இனிமையையும், சுவையையும் முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால்-அண்ணா அவர்களையும், சம்பத் அவர்களையும் உரையாட விட்டுக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.''

எனது துணைவர் சம்பத் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, டில்லித் தலைநகருக்கு வருகை தந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், அங்கிருந்த எங்களது இல்லத்தில் பத்து நாட்களுக்கு மேலாகத் தங்கியிருந்தார்கள்.

அப்போது தனது தம்பி(சம்பத் அவர்களைப்) பற்றி எவரிடமும் தெரிவிக்க முடியாத மனச் சுமையை மனம்விட்டு என்னிடம் எடுத்துக் கூறுவார். தனக்கும்—தமது தம்பிக்கும் இடையே கருத்து வேறுபாடுகளை மூட்டி விடுவோர் மீது எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி, என்னிடம் பல தகவல்களைக்கூடச் சொன்னது உண்டு. அந்த அளவு அண்ணா அவர்கள் என்னிடம் நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதை இப்போதும்கூட எண்ணிப் பார்த்துப் பெருமைப் படுவது உண்டு நான்.

பேரறிஞர் அண்ணா கண்ட இயக்கத்தில், அண்ணனின் உண்மை வாரிசாக விளங்குகிறார் மாண்புமிகு முதல்வர் அண்ணன் புரட்சித் தலைவர் அவர்கள்.

மறைந்த தியாகத் தலைவர்களுக்கெல்லாம் பெருமை சேர்த்திடும் பெருநோக்கு, புரட்சித் தலைவர் அவர்களிடமே நிறைந்து காணப்படுகிறது.

அண்ணா இல்லாத உலகம்—அண்ணனின் இதயக்கனியாம் புரட்சித் தலைவரை அண்ணாவின் உருவில் கண்டு போற்றிப் புகழ் பாடுகிறது!

யெடுத்து வருகிறது. வரும் ஆண்டுகளில் மேலும் கூடுதலான குவாரிகளை இந்நிறுவனம் மேற்கொள்ளவிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் கிடைக்கும் சாம்பல் நிறப்பாறைகள் சில ஆண்டுகள் முன்புவரை ஏற்றுமதிக்கு உகந்ததல்ல என்று கருதப்பட்டு வந்தது. அப்பாறைகளை வெட்டி தமிழ்நாட்டிலிருந்து முதன்முறையாக மேற்கு ஜெர்மனிக்குத் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்தது. தொடர்ந்து அப்பாறைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலட்சக் கணக்கான ரூபாய்கள் அந்நியச் செலாவணியாகத் தமிழ்நாடு கனிம நிறுவனம் நாட்டிற்கு ஈட்டித் தருகிறது. தற்போது இந்நிறுவனம் 3 குவாரிகளில் சாம்பல் நிறப்பாறைகளை வெட்டியெடுத்து சுமார்3400கனமீட்டர் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடக்கத்தில் நான்கு சுரங்கங்களில் உயர் கனிமங்களை உற்பத்தி செய்துவந்தது. தற்போது ஒன்பது சுரங்கங்களில் உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. மேலும் பல சுரங்கங்களை மேற்கொள்ள தமிழ்நாடு கனிம நிறுவனம் தீர்மானித்துள்ளது. அதற்காக உரிமம் கோரி விண்ணப்பங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**புதிய திட்டங்கள்**

மணலியில் ரூ. 385 இலட்சம் செலவில் உருவாகிவரும் பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை ஒரு 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடையதாகும். இத்தொழிற்சாலை அமைக்க ரூ. 275 இலட்சம் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது வருவாய் வழிவகைகளிலிருந்து ரூ. 30 இலட்சம் ஒதுக்கி இத்தொழிற்சாலை அமைக்க மூதலனப் பங்காக அளிக்கிறது. தொழிற்சாலை கட்டுமானப்பணிகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதற்கான இயந்திரங்கள் யாவும் மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 50000 சதுரமீட்டர் மெருகிடப்பட்ட கற்பலகைகளும், 10000 சதுரமீட்டர் மெருகிடப்பட்ட நினைவுக் கற்களும் தயாரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். இத்தொழிற்சாலையில் வணிக முறையில் உற்பத்தி 1985ஆம் ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம், (1) கனிமத்தை வெட்டியெடுத்தல் (2) சுத்திகரித்தல் (3) கிராபைட்டைப் பயன்படுத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகுந்த கிராக்கியுள்ள மூசைகள், உராய்வுக்குறைப்புப் பொருள்கள், ஆகாய விமானத்தின் சில பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழில்களை அமைத்தல் -என்ற மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களுக்கு ரூ.340 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூ.240 இலட்சம் கடனுதவி அளிக்க இசைந்துள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது வருவாய் வழிவகைகளிலிருந்து ரூ. 30 இலட்சம் ஒதுக்கி மூலதனப் பங்காக அளிக்கிறது. இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பணிகள் முடிவடையும் தருவாயிலுள்ளது. கனிமத்தை வெட்டியெடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சுத்திகரிப்பாலை 1966ஆம் ஆண்டு அமைக்கப்படவிருக்கிறது கிராபைட்டைப் பயன்படுத்தி தொழில்கள் தயாரிக்கும்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான நவீன தொழில்நுட்பத்தை அமெரிக்கா மற்றும் மேற்கு ஜெர்மனியிலிருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கனிமத்தை அடிப்படையாகக் கொண்ட சில தொழில்களைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் நிறுவியுள்ளது. எண்ணூரில் ஆண்டொன்றுக்கு ரூ.25 இலட்சம் மதிப்புள்ள இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரத்தில் தரமான மணல் உற்பத்தி செய்யும் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அளித்து வருகிற தர மணல் தொழிற்சாலையாகும். இதர தொழிற்சாலைகளான அம்பத்தூரில் உள்ள வெர்மிகுலைட் விரிவுபடுத்தும் தொழிசாலையும், கிருஷ்ணகிரி கல் மெருகிடும் தொழிற்சாலையும் தேவையான இயந்திரங்கள் பொருத்தப்பட்டு பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. இன்னும் மூன்று மாதத்தில் அவற்றில் உற்பத்தி தொடங்க உள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குவாரிகளும், சுரங்கங்களும் பெரும்பாலும் காட்டுப் பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் அமைந்துள்ளதால் பின்தங்கிய கிராமப்புற மக்களுக்கே வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. 1984-85ல் 2,200 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

தொழிலாளர்களுக்குப் போனஸ் மற்றும் பிற சலுகைகள் அளிப்பதுடன், தமிழ்நாடு கனிம நிறுவனம் சில சமுதாய நலப்பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு அளித்துள்ள வருமான வரிச் சலுகைகளை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டு சமுதாயக்கூடங்கள் அமைக்கவும், குடிநீர் வசதி செய்யவும் முதல்வரின் சத்துணவு மையக் கட்டடங்கள் கட்டவும் நிதியுதவி அளித்துள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆண்டுக்கு ஆண்டு வருவாயைக் கூடுதலாக்கப் பெரிதும் முயன்று வருகிறது. அம்முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளது. அது நாட்டிற்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருகிறது. தமிழ்நாடு இந்தியக் கனிம வரைபடத்தில் இடம் பெற உதவியுள்ளது.

### தங்கப் பல்லுக்குப் பதில்...

செயற்கைப் பல் கட்டுவதற்குத் தங்கத்தைப் போலவே தோன்றும் வேறு கலப்பு உலோகத்தை சோவியத் நிபுணர்கள் தயாரித்திருக்கின்றனர். இவர்கள் கண்டுபிடித்துள்ள கலப்பு உலோகம் குணத்தில் தங்கம் போன்றது; மனித உடலுக்கு எந்த விதத்திலும் தீங்கு செய்யாதது. எவர்சில்வர் (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்), தங்கம், வேறு சில மூலகங்கள் முதலியவை இந்தக் கலப்பு உலோகத்தில் கலந்துள்ளன. நிறத்திலும் ஒளியிலும் இது தங்கம்போல் தோன்றுகிறது. ஆனால் தங்கத்தைவிட இது மிகவும் மலிவானது.

இந்தப் புதிய கலப்பு உலோகத்தினால் தயாரிக்கப்பட்ட செயற்கைப் பல்லை, இதைக் கண்டுபிடித்தவர்கள் முதலில் தங்களுக்கே பொருத்திக் கொண்டு சோதனை நடத்தினர். இந்தப் பற்கள் பொருத்தப்பட்டு எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்கள்மீது அவை எந்தவிதமான கெட்ட விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. இவை இன்னமும் புதியவை போலவே உள்ளன என்று அவற்றைத் தயாரித்த மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இங்குள்ள தொழிற்சாலை ஒன்று, ஆண்டுதோறும் இத்தகைய ஆயிரக்கணக்கான செயற்கைப் பற்களை உற்பத்தி செய்கிறது.




## இந்திய விடுதலைப் போரில் முதல் முழக்கம்

ஆசிரியர்: ந. இராசையா

வெளியீடு: இந்திராகாந்திஎழுத்தகம்
8, மதுரை வீரன் கோவில் தெரு,
தியாகை, சென்னை-600017

பக்கம் 114. விலை ரூ. 10

இந்திய நாட்டை வெள்ளையர்கள் ஆட்சி செய்து வந்த காலத்தில் அவர்களை எதிர்த்து முதற்குரல் எழுப்பியவர் நெல்லையை ஆட்சி செய்த புலித்தேவன் ஆவான். கட்டபொம்மன் ஆங்கிலேயர்களை எதிர்த்தவன் தான் எனினும் அவனுக்கும் 40 ஆண்டுகளுக்கு முன்பே புலித்தேவன் வெள்ளையரை எதிர்த்து புரட்சிக் குரல் எழுப்பிய செய்தியை அகச்சான்று, புறச்சான்றுகளுடன் தெரிவித்துள்ளார் ஆசிரியர்.

புலித்தேவனைக் குறித்த நூல் தான் என்றாலும், அவன் காலத்தில் தமிழகத்தின் நிலை, மக்களின் வாழ்க்கைமுறை போர்ப்பண்பு, போன்ற பல்வேறு செய்திகளைத் தெரிவித்திருக்கிறார். ஆசிரியர் ஆய்வு மனப்பான்மை கொண்டவர் என்பதும் கடுமையான ஆராய்ச்சிப் பணியாற்றியுள்ளார் என்பதும் இந்நூலின் மூலம் தெரிய வருகிறது.

—தமிழ்ப்பித்தன்.

## சுவாமி இராகவேந்திரரின் கதை

ஆசிரியர்: திருக்கோவிலூர் சிவசக்தி.

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்,
7 எம். கே. அம்மன் கோயில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

பக். 84. விலை ரூ. 6.

சுவாமி இராகவேந்திரரை மனதிற்கொண்டு வணங்கி மன நிம்மதி காணும் பக்தர்கள் பலரைக் காண்கிறோம். ஆனால் அவர்கள் எல்லோருமே அம்மகானின் வரலாற்றை அறிந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

அந்தக் குறைநீக்கும் விதத்தில் இந்த நூலைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர்.

சுவாமி இராகவேந்திரரின் இளமை தொடங்கி, 'எழுநூறாண்டுக்காலம் நான் உங்களோடுதான் இருப்பேன்' என்று கூறி அவர் நந்தவனத்துள் மறைந்தது வரை - எல்லார்க்கும் எளிதில் விளங்கும் வகையில் இந்த நூல் செய்யப்பட்டுள்ளது.

## வெளிநாட்டுப் பொருள்களும் சுங்க விதிகளும்:

ஆசிரியர்: அழகன் பெருமாள்,

வெளியீடு: தமிழ்க்கடல் பதிப்பகம், ஐ. 19 டர்ன் புல்ஸ் சாலை,
முதலாவது குறுக்குத் தெரு, நந்தனம்,
சென்னை 600 035.

பக். 124. விலை ரூ. 10

வெளிநாட்டிலிருந்து வரும் பயணி வரி செலுத்தாமல் எவ்வளவு பொருட்களை இந்தியாவிற்குள் கொண்டு வரலாம்? சுங்க வரித் துறையினரின் கடமை, பணிகள், அதிகாரம் யாவை? கடத்தல் குற்றத்திற்கான தண்டனை குறித்த சட்டவிதி என்ன? சுற்றுலாப் பயணி என்பவர் எப்படி வர வேண்டும்? வெளிநாட்டில் பணி புரிந்து இந்தியா திரும்பும் குடிமகன் எவ்வளவு கொண்டு வரலாம்? போன்ற வினாக்களுக்கான விடைகள் மட்டுமல்ல; வரிச்சலுகைக்கான நிபந்தனைகள், அயல்நாட்டில் குடியேறும் விதம், மோட்டார் கார் இறக்குமதி, விண்ணப்ப படிவ விவரங்கள் போன்றவைகளையும் வெளிச்சத்தில் காட்டும் நூல் இது.

வெளிநாட்டுத் தொடர்புடையவர்களெல்லாம் அவசியம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விவரக் களஞ்சியமாக இருக்கிறது இது. நல்ல முயற்சி.

## வீட்டைக் கட்டிப் பார்!

ஆசிரியர்: கட்டடக் கலை நிபுணர் சி. எச். கோபிநாதராவ்,

வெளியிட்டோர்: தமிழ்க் கடல் பதிப்பகம், ஐ-19, டர்ன்புலஸ் சாலை, முதலாவது குறுக்குத் தெரு, நந்தனம், சென்னை - 600 035.

பக். 224. விலை ரூ. 20

கட்டடக் கலை தொடர்பான பொறியியல் படிப்பில் பல்வேறு பட்டங்களைப் பெற்ற நூலாசிரியரின் நுணுக்கம் மிக்க அனுபவ முதிர்ச்சி புத்தகம் முழுதும் பரிணமிக்கிறது.

கட்டடம் கட்டுவதில் உள்ள அல்லல்-கட்டி முடித்தபின் ஏற்படும் ஆனந்தம், வீட்டு மனை வாங்குதல், கட்டடம் கட்டுவதில் உள்ளவிதிகளும் கட்டுப்பாடுகளும் பழைய வீட்டை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை, சொத்து மாற்றத்திற்கான பத்திரங்கள் தயாரித்தல், சோதிட அம்சங்கள், அறைகளின் அமைப்பு, கட்டுமானத்திற்கான புள்ளிக் கணக்குகள், கட்டுமானச் செயல் முறைகள், கட்டுமானப் பொருட்களின் விலைப்பட்டியல், அஸ்திவாரம், அளவுக் குறிப்பு வரையறைகள், கட்டடப் பணிகள், சிமெண்ட் தேவை, தண்ணீர் விநியோகமும் சுகாதார வசதிகளும், சென்னை-சென்னைப் பெருநகர் பற்றிய விவரம், நிலம்-கட்டடங்கள் கையகம், புதுமனை புக ஆலோசனை போன்ற பல விசயங்கள் ஒன்று விடாமல் இந்நூலில் முறையாக விளக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகச் சொல்லுவதானால் இவையெல்லாம் எளிய தமிழில் எல்லார்க்கும் விளங்கும்படி தரப்பட்டுள்ளன.

வீடு தொடர்பான எந்தப் பணியில் கால் வைப்பவரானாலும் இதை ஒருமுறை படித்தாலே போதும்-எல்லாம் அத்துபடியாகிவிடும். எந்தக் குழப்பமும் நேராது.

# செய்திகள் செய்திகள் செய்திகள்

## மீனவக் குடும்பத்துக்கு அரசினர் உதவி

இலங்கைஇராணுவத்தினரால் அடித்துக் கொல்லப்பட்டு கடலில் தூக்கி எறியப்பட்ட இராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர் ஜோசப் இல்லத்திற்குச் சென்று அவரின் மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் மாண்புமிகு மறுவாழ்வு அமைச்சர் திரு.டி. இராமசாமி அவர்கள் ஆறுதல் கூறி, தன் சொந்தப் பணம் ரூ. 1000 நிதியுதவி வழங்கினார்.

தமிழக, மத்திய அரசு அளிக்கும் மீனவர் நிவாரண உதவிகளைக் கொல்லப்பட்டவரின் மனைவி கஸ்மேரிக்கும், 2 வயது 6 மாத இரு குழந்தைகளுக்கும் இந்த நிவாரண உதவிகள் உடனே கிடைக்கும்படி சம்பந்தப்பட்ட மீன்துறை மற்றும் மறுவாழ்வுத் துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

## அண்ணாநகரில் பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவு வளைவு

சென்னை மாநகராட்சியின் சார்பில், பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவு வளைவுகள் கட்டப்பட்டு வருகிறது. ரூ. 6. இலட்சம் செலவில் கட்டப்படும் இவ்விரு வளைவுகள் 55 அடி உயரம் உள்ளவையாகவும், திராவிடச் சிற்பக் கலையை ஒட்டியும் அமைந்ததாக திரு கணபதி ஸ்தபதி அவர்களால் நிர்மாணிக்கப்பட்டு கட்டப்படுகிறது. கட்டி முடிக்கப்பட்டவுடன் இது இந்தியாவிலேயே மிகப் பெரிய உயரமான வளைவாக விளங்கும்.

## இராமநாதபுரம் மேம்பாட்டுத் திட்டம்

இராமநாதபுரம் நகரை ஒருங்கிணைந்த நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 85 இலட்சம் செலவில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் நகரில் ஓர் புதிய பேருந்து நிலையமும், நான்கு இடங்களில் சிறப்பு அங்காடிகளும், வாரச்சந்தைக் கூடும் இடங்களும், அமைக்கப்படும்.

இராமேசுவரம் தீவை அழகு படுத்தும் வகையில் ஓர் சிறப்புத் திட்டம் (மாஸ்டர் பிளான்) தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பாம்பன் சாலைப் பாலம் 1987ல் திறக்கப்பட்டதும் அதிகரிக்க உள்ள சுற்றுலாப் பயணிகளின் வருகையை முன்னிட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சிறப்புத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சுற்றியுள்ள தீவுகளுக்குச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் விசைப் படகுகள் கண்ணாடி இழைப் படகுகள் முதலியனவும் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 538 கைப்பம்புகளும், 230 விசைப்பம்புகளும் உள்ளன. இதன்மூலம் கிராமப்புற மக்களுக்குத் தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. மேலும் 110 கிராமங்களுக்கு உறைக் கிணறுகள் அமைப்பதற்காக ரூ. 4 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த உறைக் கிணறுகள் அமைக்கும் பணி இன்னும் 2 வாரங்களில் முடிக்கப்படும்.

இராமநாதபுரம் நகரில் அடுத்த ஆண்டில் ஓர் மத்திய பள்ளி அல்லது அரசு உயர்மேல்நிலைப்பள்ளி ஆங்கிலம், தமிழ் மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டு துவக்கப்பட வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது இத்தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ராஜீவ் வாலியா, இ.ஆ.ப. தெரிவித்தார்.

## உங்களுக்குத் தெரியுமா?

நாட்டில் கிளை மற்றும் துணை அஞ்சலகங்களை சேர்த்து 1,44,000 அஞ்சல் நிலையங்கள் உள்ளன. இதில் 3 இலட்சம் துறை ஊழியர்களும் மற்றும் 3 இலட்ச இதரத்துறை ஊழியர்களும் பணி புரிகின்றனர்.

அஞ்சலகங்களின் வாயிலாக இவ்வாண்டு 200 கோடி கடிதங்கள் பட்டுவாடா செய்யப்பட்டன. இவற்றில் 23 கோடி பதிவு செய்யப்பட்ட தபால்களும் 12 கோடி பண அஞ்சலும் மற்றும் 1.75 கோடி பார்சல்களும் அடங்கும்.

முதல் தர மெயிலில் அனுப்பப்படும் உறைகள், கடிதங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 4 சதவீதமும், இரண்டாவது மெயிலில் அனுப்பப்படும் மாதப்பத்திரிகைகள், வார இதழ்கள் எண்ணிக்கை 5 சதவீதமும் அதிகரித்து வருகின்றன.


அஞ்சலகங்கள் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கையைக் குறிப்பிடும்போது உலகில் மிகப்பெரிய அஞ்சலக நிர்வாகமாக இந்தியா விளங்குகிறது. உலகில் தபால் பட்டுவாடா செய்வதில் ஏழாவது இடத்தைப் பெற்றுள்ளது.

நாள்தோறும் சராசரியாக 460 இலட்சம் கடிதங்கள் அஞ்சல் செய்யப்படுகிறது. அதே அளவில் தபால் பட்டுவாடாவும் செய்யப்படுகிறது.

பம்பாய், கல்கத்தா, தில்லி மற்றும் சென்னை போன்ற பெரு நகரங்களில் நாள்தோறும் 94 இலட்சம் கடிதங்கள் அஞ்சல் செய்யப்படுகிறது. 1990ஆம் ஆண்டில் இது 119 இலட்சமாக அதிகரிக்கக்கூடும்.

ஆதாரம்: பத்திரிகைத் தகவல் அலுவலகம்





# மேலை நாடு செல்லும் தமிழகப் பாறைகள்!

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகச் சில முக்கிய குறிக்கோள்களுடன் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் துவக்கப்பட்டது. தமிழ்நாடு கனிம நிறுவனம் கரும்பாறை மற்றும் சாம்பல் வண்ணப்பாறைகளை வெட்டியெடுத்து ஜப்பான் மற்றும் மேற்குஜெர்மனி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இது மட்டுமல்லாமல் தொழில்களுக்குத் தேவைப்படும் கனிமங்களான சுண்ணாம்புக்கல், குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார், வெர்மிகுலைட், பயர்கிளே, சிலிகா மணல் ஆகியவற்றையும் வெட்டியெடுத்து தமிழ்நாட்டிலும் அண்டை மாநிலங்களிலும் உள்ள தொழிற்சாலைகளுக்கு அளித்துவருகிறது.

இந்நிறுவனத்தின் மூலதனப் பங்குகள் யாவும் அரசு வசம் உள்ளது. தொடக்கத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் வெறும் ரூ. 27.50 இலட்சமாக இருந்தது. பின்னர் ஆண்டுக்கு ஆண்டு இது கூடியது. 31.3.1985 அன்று செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 172.50 இலட்சமாகும். பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் மற்றும் சிவகங்கை கிராபைட் திட்டம் ஆகிய இரு புதிய திட்டத்திற்குத் தனியாக அளிக்கப்பட்ட ரூ.100 இலட்சம் மூலதனம் நீங்கலாக, கனிமத்தை வெட்டியெடுக்கும் பணிகளுக்கும் இதர நடைமுறைத் திட்டங்களுக்கும் அரசு ரூ.72.50 இலட்சம் மூலதன உதவியளித்துள்ளது. இந்த ரூ.72,50 இலட்சம் மூலதனத்தை வைத்து தமிழ்நாடு கனிம நிறுவனம் இது வரை ரூ. 267 இலட்சம் பெறுமான சொத்துக்களைச் சேர்த்துள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் மேலும் பல சுரங்கங்களை ஏற்று நடத்த அரசு ரூ.35 இலட்சம் கடனுதவியளித்துள்ளது. நிதி உதவி வங்கிகளிடமிருந்து-அரசு செலுத்துகின்ற மூலதனப் பங்கு உதவி வங்கிகளிடமிருந்து-அரசு செலுத்துகின்ற மூலதனப் பங்கீட்டுத் தொகைக்குத்தகுந்தவாறு பெறப்பட வேண்டிய மொத்தக் கடன் தொகையான ரூ. 515 இலட்சத்தில் 1984-85ஆம் ஆண்டு ரூ.169.50 இலட்சம் பெறப்பட்டுள்ளது. அரசிடமிருந்து இன்னும் வரவேண்டிய ரூ. 35 இலட்சம் மூலதனப் பங்கும், நிதியுதவி வங்கிகள் வழங்க வேண்டிய மீதி ரூ. 345.50 இலட்சம் கடனுதவியும் நடப்பாண்டு (1985-86) இறுதிக்குள்ளாகக் கிடைத்துவிடும் என்று கொள்ளப்பட்டு - கடன்-மூலதனப் பங்கு விகிதத்தைக் கணக்கிட்டாலும் கூட 1985-86ஆம் ஆண்டு இறுதிவாக்கில் 2.74:1 என்ற விகிதத்தில் சாதகமான நிலையிலேயே இருக்கும்.

1984-85ஆம் ஆண்டு தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூ.408 இலட்சம் வருவாயை எட்டியது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முக்கியப் பணிகளில் ஒன்று, கரும்பாறைகளை வெட்டியெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து மதிப்புவாய்ந்த அந்நியச் செலாவணி ஈட்டுதலாகும். கரும்பாறை வாணிபத்தில் தரக்கட்டுப்பாட்டையும் சீரான விலை நிர்ணயத்தையும் நிலை நிறுத்தும் நோக்குடன் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ஆலோசனையின்படி அரசு கீழ்க்கண்ட கொள்கையை வகுத்தது:

1. உலகம் முழுவதற்குமான டெண்டர்கள் கோரிப் பெற்று கரும்பாறை விலைகளை நிர்ணயித்தல்.

2. கரும்பாறைகளை வெளிநாட்டு வணிகர்களுக்கு மட்டும் ஏற்றுமதி செய்தல்.

3. கரும்பாறைகளின் விற்பனை விலைகளை அமெரிக்க டாலரில் பெறுதல்.

மேற்கண்ட கொள்கை கரும்பாறைகளுக்கு அதிகபட்ச விலை பெற பெரிதும் உதவிற்று. தொடக்கத்தில் 3 குவாரிகளை இயக்கி வந்த தமிழ்நாடு கனிம நிறுவனம் தற்போது 22 குவாரிகளில் கரும்பாறைகளை வெட்டி

## காகிதக் கனல்

ஆசிரியர் : கரு. நாகராசன்,

வெளியிட்டோர்: அன்புப் பதிப்பகம், 29. இராகவனார் தெரு, செங்கல்பட்டு-603 001.

பக்கம் 96. விலை ரூ.7.50.

அங்கிங்கெனாதபடி எங்கும் புதுக் கவிதை பரவத் தொடங்கிவிட்ட காலமிது. மரபுக்கவிதைகள் எல்லாமே எப்படி எடுபடுவதில்லையோ, அதைப்போல பெரும்பாலான புதுக்கவிதைகள் செல்லாக் காசாகவே ஆகிவிடுகின்றன. குறிப்பிடத்தக்க சிலரே அதிலும் தமது எழுத்து வன்மை காட்டுகின்றனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவராகவே இந்நூல் மூலம் தன்னைக் காட்டிக்கொண்டிருக்கிறார் நூலாசிரியர். மரபுக் கவிதைகள் எழுதித்தேர்ந்தவர் இவர் என்பதும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஏறத்தாழ இருபது தலைப்புகளில் இந்நூலில் புதுக்கவிதைகள் கடை விரிக்கப்பட்டுள்ளன. 'செத்துச் செத்துப் பிழைக்கும் சிலர் சுவாசிக்கும் அசுத்தக் காற்றுக்குப் பெயர்தான் அச்சம். 'இதயக் கோட்டையின் வெற்றி முரசம்தான் நாக்கு'...'ஜனநாயகத்திற்கும் பணநாயகத்திற்கும் பிறந்த லட்சியப்புத்திரர்கள் தான் லஞ்சமும் ஊழலும்' — என்பன போன்ற மின்னல்கள் இந்தப் பாட்டு வானில் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன.

அவர் வார்த்தைகளாலேயே இந்நூலைப் பற்றிச் சொல்லுவதானால்-'சமுதாய நோய்களுக்குச் சரியான மருந்து இது! இலக்கியச் சுவைஞர்க்கு இனியவிருந்து இது!'

—'இந்திரன்'

## சர்க்கரை நோயுடன் சகஜ வாழ்வு

ஆசிரியர்: ச.கு.கணபதி

வெளியீடு: பாரி நிலையம்,
164, பிராட்வே,
சென்னை600108.

பக்கம். 132 விலை ரூ. 7

'நோய் குறித்துப் பேசுவதற்கு டாக்டர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அந்த அளவு உரிமை நோயாளிகளுக்கும் உண்டு' என்று அமரர் அரசுக் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுவதுண்டு. அதைப்போல, சர்க்கரை நோய்க்கு ஆட்பட்ட காரணத்தால் இந்நூலை உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர்.

சென்னை கீழ்ப்பாக்க அரசினர் மருத்துவக் கல்லூரி நீரிழிவு நோய் ஆராய்ச்சி மருத்துவப் பிரிவின் இயக்குநர் டாக்டர் பி. கிலார் அகமத் எம்.டி., அவர்களின் சிறந்த முன்னுரையை ஏந்தி வரும் இந்நூலில், சர்க்கரை நோய் குறித்த எல்லா விவரங்களையும் தெரிவித்திருக்கிறார் ஆசிரியர். அந்நோய் வராமல் தடுப்பதற்குரிய வழிவகைகளையும் உடல்நலப் பாதுகாப்புக்கு உகந்த வழிமுறைகளையும் உணவு வகைகளையும் தெரிவித்திருக்கிறார். பல்வேறு அட்டவணைகளையும் கொடுத்து நோயை வெற்றிகொள்ளும் முறைகளை எடுத்துக் கூறியுள்ளார். தேர்வு எழுதுகின்ற மாணவர்களுக்குத் துணைவன் (Guide) உதவுவதுபோல, ஆன்மிக நெறியாளர்க்கு இறைவன் துதிப்பாடல் உதவுவதுபோல, சமையல் செய்ய விரும்புவோர்க்குச் சமையல்கலை நூல் பயன்படுவதுபோல, சர்க்கரை நோயாளிகளின் அச்சம் நீங்கவும், நோயிலிருந்து மீளவும் இந்நூல் உதவுகின்றது. சுருங்கச் சொன்னால் சர்க்கரை நோயாளிகளுக்கு ஒரு தன்னம்பிக்கை நூலாக இது திகழ்கிறது.

## சிவனடியார்கள் நால்வரின் கதை

ஆசிரியர்: திருக்கோவிலூர்சிவசக்தி

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்,
7, எம்.கே.அம்மன் கோயில்தெரு
மயிலாப்பூர், சென்னை,600004

பக்கங்கள்; 144 விலை ரூ.10

சைவ சமய குரவர்கள் என வழங்கப்பெறும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரின் வரலாற்றை எளிய நடையில் சுவை ததும்பும் வகையில் எழுதியுள்ளார் நூலாசிரியர். இடையிடையே தேவாரப்பாடல்களையும் இடம்பெறச் செய்திருக்கிறார்.

நால்வரைக் குறித்தும் சரிவர அறிந்து கொள்ளாதவர்களுக்கு இந்நூல் தெளிவூட்டுவது உறுதி. ஏராளமான செய்திகள் இருந்தாலும், தேவையான செய்திகளை மட்டும் தெரிவித்து-இளைய தலைமுறைக்கும் பெரியவர்களுக்கும் உதவும் வகையில் இந்நூலை எழுதியுள்ளார் ஆசிரியர். இந்து சமயத்தில் பிறந்த பலர் தங்களின் சமயத் தலைவர்கள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளில் எழுதப்பெற்றுள்ள இந்நூல் நிச்சயம் சமுதாயத்துக்குப் பயன்படும்.

எஸ். எஸ். சுந்தரம்

## டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு அறிஞர்கள் புகழ்மாலை!

தொகுப்பு: கழஞ்சூர்செல்வராஜி

வெளியீடு: குத்தூசி குருசாமி,

பதிப்பகம்: வேலூர்-9
வ.ஆ.மாவட்டம்.

பக்கம்: 151 விலை: ரூ. 15.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப்பற்றி தமிழறிஞர்கள், அரசியல் தலைவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாசிரியர்கள் முதலானோர் பல்வேறு சந்தர்ப்பங்களில் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்துரைத்த கருத்துக்கள் அழகுறத் தொகுக்கப் பெற்றுள்ளன.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா,மூதறிஞர் ராஜாஜி ஆகியோர் கூறிய கருத்துக்களும் தொகுப்பில் இடம் பெற்று இதயத்தைத் தொடுகின்றன.

ஏராளமான எண்ணக்குவியல்களைத் தாங்கிவெளிவந்திருக்கும் இந் நூலுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே, கல்வி நெறிக்காவலர் திரு.நெ.து.சுந்தரவடிவேலு ஆகியோர் அணிந்துரைகள் நல்கியுள்ளனர்.

—பி. வி. கிரி

### மறுபடியும் அன்பளிப்பு

ஜார்ஜ் பெர்னார்டு ஷா ஒரு முறை பழைய புத்தகக் கடை ஒன்றில் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டு இருந்தார். அவர் எழுதிய நாடகங்களின் ஒரு தொகுதி இருந்தது. அதை [illegible] பிரித்துப் பார்த்தார். அது ஒரு நண்பருக்கு அவர் அன்பளிப்பாகக் கொடுத்த நூல். நண்பரின் பெயரை எழுதி அன்பளிப்பு என்று பெர்னார்டுஷாவே தம் கைப்பட எழுதியிருந்ததைப் பார்த்தார்.

உடனே பெர்னார்டு ஷா அப்புத்தகத்தை விலைக்கு வாங்கி, "அன்பளிப்பு" என்று ஏற்கெனவே எழுதியிருந்ததன் கீழ் "புதுப்பித்த அன்பளிப்பு" என்று எழுதித் தம் கையெழுத்திட்டு, அப்புத்தகத்தை எந்த நண்பருக்கு முதலில் கொடுத்தாரோ, அந்த நண்பருக்கே அனுப்பி விட்டார்.



## இயற்கை அழகு

பொன்னா பொன்னி வாருங்கள்!
பூமியின் அழகைப் பாருங்கள்!
கண்ணைக் கவரும் புல்வெளிகள்
கருத்தை அள்ளும் நெல்மணிகள்.

தூரத்தில் தெரியும் நெடுமரங்கள்
தொலைவில் தெரியும் பசுமரங்கள்.
தூரிகை வரைந்த சித்திரம்போல்
தோன்றும் அழகைப் பாருங்கள்!

வெள்ளை மலையைப் பாருங்கள்.
விரிந்த வெளியைப் பாருங்கள்.
கல்லை அடுக்கி இயற்கைத்தாய்
கட்டிய அழகைப் பாருங்கள்!

தொலைவில் தெரியும் பனைமரங்கள்
துடைப்பக்குச்சியில் செய்தவை போல்
கலையாய் நிற்கும் அழகென்ன?
கனிவுடன வந்து பாருங்கள்!

இயற்கையின் அழகை ரசியுங்கள்
இனிதாய்ப் பொழுதைக் கழியுங்கள்
வயிற்றில் பசியும் வந்திடுமோ?
வந்தால் என்னிடம் சொல்லுங்கள்!

—நாகை மனோகரன்



## பள்ளங்கள் உள்ள சுக்கிரக் கிரகம்

சுக்கிரக் கிரகத்தின் மேற்பரப்பில் நூற்றுக்கு அதிகமான மிகப் பெரிய பள்ளங்கள இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்ற கிரகங்களில் தோன்றியது போலவே இந்தப் பள்ளங்களும் விண்-கற்கள் வீழ்ந்ததால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அவற்றில் மிகப் பெரிய பள்ளம் 140 கிலோ மீட்டர் குறுக்களவு உள்ளதாகும்.

சுக்கிரக் கிரகத்தில் இத்தகைய பள்ளங்கள் இல்லையென்று அண்மைக் காலம் வரை கருதப்பட்டது. அந்தக் கிரகத்தைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலம் ஊடுருவ முடியாமல் இருப்பதே இதற்குக் காரணம். இந்தப் பள்ளங்களின் அமைப்பில் ஓர் ஒழுங்கு இல்லை. இவற்றின் "வயது"களும் வேறுபடுகின்றன. இவற்றில் மிகப் பழமையானதாகக் கருதப்படும் பள்ளம், 100 கோடி ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

சூரியனைச் சுற்றும் கிரகங்களின் அமைப்பைக் கண்டுபிடிக்க, சுக்கிரக் கிரகம் பற்றிய இத்தகைய தகவல்கள் பயன்படுகின்றன. "வேஹா-15" மற்றும் "வேஹா-16" ஆகிய சோவியத் செயற்கைக் கோள்கள் அனுப்பிய ராடார் படங்களிலிருந்து இது தெரிகிறது.

## நாள்கள் எத்தனை நாள்கள்!

| | | |
|---|---|---|
| ஜனவரி 15 | — | இராணுவ தினம் |
| மார்ச் 8 | — | உலக மகளிர் தினம் |
| மார்ச் 21 | — | உலக வன தினம் |
| ஏப்ரல் 1 | — | முட்டாள் தினம் |
| ஏப்ரல் 7 | — | உலகச் சுகாதார தினம் |
| மே 1 | — | உலகத் தொழிலாளர் தினம் |
| அக்டோபர் 4 | — | தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் |
| அக்டோபர் 8 | — | ஆகாயப்படை தினம் |
| அக்டோபர் 24 | — | ஐ.நா. தினம் |
| டிசம்பர் 7 | — | கொடிநாள் |
| டிசம்பர் 10 | — | மனித உரிமைகள் தினம் |

தொகுப்பு: கே. நரசிம்மன்
12-ஆம் வகுப்பு,
இராம்பிரகாஷ் விஜயலட்சுமி அரசினர்
ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
ஒசூர்,
தருமபுரி மாவட்டம்.

### மாணவர் பக்கம்

## எவ்வளவு தண்ணீர்!

[illegible]

—வை. சமுத்திரக்கனி
[illegible]

# தமிழில் இருக்கிறது!



கோ. முத்துப்பிள்ளை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடுமுன்தோன்றி மூத்த குடியைச் சேர்ந்தவர்கள் தமிழர்கள். தொன்மையின் நன்மைகளையெல்லாம் துய்த்து வருபவர்கள் தமிழர்கள். சிந்தனைச் சிற்பிகளாகச் சிறப்புற்று வாழ்ந்தவர்கள் தமிழர்கள். புதிதாகப் பேசப்படும் எந்தக் கருத்திற்கும் இணையான பழைய கருத்து தமிழில் இருக்கும் அல்லது அதன் வேர் அங்கே கட்டாயம் முளைத்திருக்கும் என்பதே மகராசனின் மணியான கருத்தாகும். இதற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன.

Precedent என்னும் ஒரு சொல்லை எடுத்துக்கொள்வோம். இதனை இப்போது நாம் 'முன்முடிவு', 'முன்நிகழ்வு', 'முற்கோள்' என்றெல்லாம் மொழி பெயர்க்கின்றோம். இப் புதிய மொழிபெயர்ப்புகளைப் பார்த்த பிறகு இந்தக் கருத்து நமக்குத் தெரியாத புதுக்கருத்து என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. "முன்னோர் சென்ற வழி பின்னோர்' என்னும் பழமொழி நமக்கு நீண்டகாலமாகத் தெரிந்த நன்மொழியாகும். இந்த முன்னோர்தான் Precedent என்று சொல்லவும் வேண்டுமோ? இதையே மொழிபெயர்ப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. கருத்துக்கள் நமக்கு ஏற்கெனவே தெரிந்தவையாகும் என்பதை மனத்தில் பதித்துக் கொண்டால், அதுவே மகிழ்ச்சி தரும்.

ஒரு முறை, Help and Assistance என்னும் இரண்டு சொற்களும், இரட்டைக் குழந்தைகள் ஒட்டிக்கொண்டு பிறப்பதைப் போல ஒன்றாகச் சேர்ந்து காட்சி தந்தன. 'உதவியும் ஒத்தாசையும்' என்னும் உயரிய மொழி பெயர்ப்பை ஒரு நொடியில் வழங்கி மகிழ்ந்தார் சிறந்த அறிரும், சீரிய சிந்தனையாளருமான ஓ. எம். சிராஜ் அவர்கள்; மொழி பெயர்ப்புப் பணிக்கு அவர் செய்த உதவியும் ஒத்தாசையும் மிகவும் போற்றுதற்குரியன வாகும். அத்துடன் அன்னைத் தமிழையும் நாம் அகம் மகிழ்ந்து போற்ற வேண்டுமன்றோ?

என்னுடைய பழைய நண்பர் ஒருவர், தம்முடைய பேச்சுகளிடையே Unparliamentary words என்னும் தொடரை அடிக்கடி பயன்படுத்தி வந்தார். Un parliamentary words என்பதற்குத் தமிழ்ச் சொல் என்ன என்று யோசித்தேன். நினைவிற்கு வந்தது, 'அவை அல்கிளவி மறைத்தனர் கிளத்தல்' என்னும் தொல்காப்பிய நூற்பாவாகும். இதன் பொருள், 'நன்மக்களுட் கூறப்படாத சொல்லைக் கிடந்தவாறே சொல்லற்க; பிறிது வாய்பாட்டான் மறைத்துச் சொல்லுக' என்பதாகும். 'இடக்கர் அடக்கல்' என்னும் இலக்கணத்தை விளக்குவதே இந்த நூற்பா, ஆனால் இன்று இது புதுமைக்குப் புதுமையாய்ப் பொலிந்து தோன்றுகிறதே என்று கண்டு வியந்தேன். நல்லார் அவையின் கண்ணே சொல்லக் கூடாத சொற்கள்தாமே 'அவை அல் கிளவிகள்'. Unparliamentary words என்பதற்கு இதை விட விளக்கம் வேறு வேண்டுடுமோ? "மன்ற மரபிற்கு ஒவ்வாத சொற்கள்" என்னும் மொழி பெயர்ப்பு "ஆட்சிச்சொல் அகராதியில்" இருக்கத்தான் செய்கின்றது. எனினும் இது தமிழில் ஏற்கெனவே இருக்கிறது என்று எண்ணியபோது பொங்கிப் பூரித்தேன்.


Estate duty என்னும் தொடரை எடுத்துக்கொள்ளுவோம். இந்தத் தொடரைச் சொல்லும்போதே அதன் செம்மாந்த ஒலியினிலே சொக்கிப் போகின்றோம். தோட்டம் துரவுகள், நிலபுலன்கள், பயிர் பச்சைகள் ஆகிய அனைத்துமே Estate ஆகும். Estate என்பதைச் சுருக்கமாகச் 'சொத்து' என்று கூறிவிடலாம். ஆனால் Property என்னும் சொல்லுக்கு உரிய மொழிபெயர்ப்பாகச் 'சொத்து' என்னும் சொல்லை ஏற்கெனவே அமைத்துக்கொண்டுள்ளோம். Estate என்பதை 'ஆஸ்தி' என்று அமைத்துப் பார்த்தால், தமிழின் இனிய ஒலிக்கு இன்னல் ஏற்படுகின்றது. ஆகவேதான் அருமை நண்பர்கள் சிலர் Estate என்னும் சொல்லை நல்ல தமிழில் மொழி பெயர்த்தல் இயலாது என்று எடுத்துச் சொல்லி உள்ளம் பூரித்தனர்! நீலகிரியிலே நிறைய "எஸ்டேட்டுகள்" இருக்கின்றன. அவற்றைப் 'பண்ணைச்சொத்து' என்று பகர்கின்றோம். அண்ணா சாலையில் Govt. Estate அமைந்துள்ளது. அதனை 'அரசினர் தோட்டம்' என்று அழைத்து மகிழ்கின்றோம்.

இறுக்கி மூடிவிடாமல் இடத்திற்கு ஏற்ப, இனிய மொழி பெயர்ப்புகளை வழங்கி வருகின்றோம்.

வள்ளுவப் பெருந்தகையோடு சிறிது நேரம் உரையாடிப் பார்த்தால், கிடைக்காத மொழி பெயர்ப்புகளெல்லாம் ஒரு நொடியில் கிட்டிவிடும். வேண்டுங்கால் பெய்யும் வான்மழை போன்று உதவும் பெரியார் அவரேயன்றோ? எல்லா வகையான செல்வங்களையும் இனிது விளக்குகின்றார் வள்ளுவப் பெருந்தகை. "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" என்று போற்றுகின்ற அவர், குறிப்பாக இரண்டு பெருஞ் செல்வங்களைப் பற்றி எடுத்துப் பேசுகிறார். 'அருட்செல்வம்',







''பொருட் செல்வம்'' என்று இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுகிறார் அவர்.

''அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள'' என்று விளக்கி இருள் போக்குகிறார் வள்ளுவர். பொருட் செல்வந்தான் Estate என்று சொல்லவும் வேண்டுமோ? அவ்வாறாயின் பொருட் செல்வ வரிதான் Estate duty

பழந்தமிழ் நூல்களுடன் பழகிப் பழகி அவற்றுள் முழ்கி மூழ்கி ஊறிப்போனால்தான் உரிய மொழிபெயர்ப்புகள் ஊற்றெடுத்துவரும்.

தண்டனைகளைப் பொதுவாக மூன்றுவகைகளாகப் பிரிக்கலாம். அவை பணத்தண்டனை, சிறைத் தண்டனை, தூக்குத் தண்டனை என்பனவாகும். ஈண்டு, சிறைத் தண்டனையைப் பற்றி ஒரு சிறு செய்தியைச் சொல்ல விரும்புகின்றேன். மொழி பெயர்ப்புக் கடலில் நாங்கள் மூழ்கியிருந்தபோது, while he was undergoing imprisonment என்னும் தொடரை எதிர்ப்பட்டோம். இதனைச் சற்று விரித்துக் கூறுவதானால் while he was undergoing the punishment of imprisonment என்று அமைக்க வேண்டும். இதன் மொழிபெயர்ப்பை யாரும் எளிதில் கூறிவிடுவர். ''சிறைத் தண்டனையை அவர் அனுபவித்துக் கொண்டிருந்தபோது'' என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பாகும். எனினும் கொள்கை அடிப்படையில், சிறிய சிக்கல் ஒன்று ஏற்பட்டுவிட்டது! 'அனுபவித்தல்' என்னும் சொல்லை அகற்றிவிட்டு, அதற்கொரு அழகான தமிழ்ச்சொல்லை அமைக்கவேண்டும் என்பதே அப்போது கூறப்பட்ட கருத்தாகும். ''சிறைத் தண்டனையை அவர் துய்த்துக் கொண்டிருந்தபோது'' என்று எழுதிவிடலாமே என்று நான் எடுத்துச் சொன்னேன்! இதைக் கேட்ட நண்பர்கள் சிறிதும் சிந்தியாமல் சிறிப்பாய்ந்தனர் என்றுதான் சொல்ல வேண்டும்! 'இன்பத்தைத் துய்க்கலாம், துன்பத்தைக் கூட துய்க்க முடியுமோ' என்று எள்ளி நகையாடினர்! எனவே இதுகுறித்து மேலுமான கூட்டாய்வு தள்ளிப் போடப்பட்டது!

இன்பம் துய்க்க விழைபவர்கள் துன்பத்தைத் துய்க்க முன்வருவதில்லை! ஆயினும் அது தானாகவே வந்து சேர்கின்றது! துன்பத்தையும் துய்ப்பது சரிதான் என்பதற்கு இலக்கிய ஆட்சி கிடைத்தபோது ஏற்பட்ட இன்பத்திற்கு எல்லை சொல்லுதலும் இயலுமோ? கண்ணொளி இருப்பினும் கதிரவனின் ஒளியும் தேவையன்றோ? காலங்கடந்து வாழும் கலித்தொகை என்னும் நமதருமைக் கருவூலம் ஞாலத்திற்கெல்லாம் ஞானம் வழங்குவதாகும். கற்கண்டுக் கலித்தொகையைச் சற்றே சுவைத்துப் பார்ப்போம்.

''வெல்புகழ் மன்னவன்
விளங்கிய ஒழுக்கத்தால்
நல்ஆற்றின் உயிர்காத்து
நடுக்குஅற, தான்செய்த
தொல்வினைப் பயன்துய்ப்ப,
துறக்கம்வேட்டு எழுந்தாற்
போல''

என்று பாடிச் செல்கிறது அந்தப் பழம் பாடல். வினைப் பயனைத் துய்க்கும்செய்தி இங்கு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளதைக் காண்கின்றோம் துன்பத்தையும் துய்ப்பதற்கு இனிமேல் தடையில்லையன்றோ?

'சிறைத் தண்டனையை ஆற்றி வரும்போது' என்றும் செப்பமாகச் செப்பலாமன்றோ?

Rumour என்னும் ஒரு சொல் பல்லாண்டுகளாக எனக்குத் தொல்லை கொடுத்து வந்தது! என்னைப் பற்றிப் பல நண்பர்கள் பல Rumour களைத் தொடங்கித் தொல்லை கொடுப்பார்கள்! அதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லையாயினும், ''வதந்தி'' என்னும் சொல்லுக்கு மாற்றுச் சொல் இல்லையா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். ''வதந்தி'' என்னும் சொல்லின் ஒலி வண்டமிழுக்கு ஏற்றதாக இல்லை என்பதை எளிதில் உணரலாம். சில நண்பர்கள் இந்தச் சொல்லை மிகவும் கடுமையாக ஒலித்துக் காட்டி நமக்குக் கொடுமை செய்துவிடுவர்!

அந்தக் காலத்தில், அதாவது 1947ஆம் ஆண்டு வாக்கில், நான் தமிழ்க் கடல் மறைமலையடிகளாரின் இல்லத்திற்குப் பல முறை சென்றுள்ளேன். அப்போது ஒரு நாள் அடிகளாரைப் பார்த்து Rumour என்பதற்குத் தமிழ் என்ன என்று கேட்டுவிட்டேன். புன்னகை புரிந்து கொண்டே அவர், ''ஊர்ப்பேச்சு'' என்று உரைத்தார். பெருமகிழ்ச்சியடைந்தேன். இதனை மேலும் சுருக்கி மெருகேற்ற முடியுமா என்று ஆராய்ந்து கொண்டே இருந்தேன். அம்பல், அலர் என்னும் சொற்கள் துணைபுரியமாட்டாவா என்று எண்ணமிடலானேன். காதற்செய்தி சிறிதளவு வெளிப்பட்டுள்ள நிலையை ''அம்பல்'' என்கிறோம். பெரிதாகப் பரவிவிட்ட நிலையை ''அலர்'' என்று கூறுகின்றோம். இச்சொற்கள் Rumour என்னும் சொல்லோடு நேரடியாகப் பொருந்தி வரவில்லை.

பொறுப்பு
எத்தனையோசெயல்கள் ஆற்ற வேண்டியுள்ளது அதில் நாம் எடுத்துக் கொண்ட பொறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்ற வேண்டும்.
—பேரறிஞர் அண்ணா

நவம்பர் 1984-ல் இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிக்கு நானும் நண்பர் எஸ்.எஸ்.இராமசாமி அவர்களும் சென்றோம். சுற்றிவரும்போது ஒரு கடையில் ஓர் அகராதியைப் பார்த்தேன். என் கண்ணைக் கவர்ந்த அந்த அகராதியை மெல்லப் புரட்டிப் பார்த்தேன். ''ஓமல்'' என்னும் ஒரு சொல் கண்ணில் தென்பட்டது. அதற்குப் பொருளாக ஆங்கிலத்தில் Rumour என்னும் சொல் கொடுக்கப்பட்டிருந்தது! அதற்குப்பிறகு பல்கலைக் கழகப் பேரகராதியை எடுத்துப் பார்த்தபோது 'ஓமல்'' Compare 'அம்பல்'' என்று கொடுத்திருந்தார்கள். 'அம்பல்' என்னும் சொல் ஓமலாக உருமாறியிருக்கலாம். 'ஓமலிப்பு' என்னும் சொல்லை நாட்டுப் புறங்களில் நாம் நாள்தோறும் கேட்கின்றோமே!

ஓமல் - Rumour
ஓமலிப்பு - Spreading rumour

கடைசியாக, Commitment என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதற்கு 'ஏற்பிசைவு' என்னும் மொழிபெயர்ப்பை வழங்கி மகிழ்கின்றோம். இந்தக் கருத்து நமக்கு முன்னமேயே தெரிந்த கருத்துதானா என்றால், ''ஆம்' என்ற விடையே கிடைக்கும். 'அவர் பிடிகொடுக்காமல் பேசுகின்றார்' என்று சொல்கின்றோமல்லவா, அதுதான் Non-Committal reply என்பதாகும்! எல்லாம் இருக்கிறது தமிழில். விரிக்கிற் பெருகும். எனவே, ''இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என்று 'தமிழ்விடு தூது' ஆசிரியரோடு சேர்ந்து நாமும் பாடலாம்.



அறிவியல் சா

# செயற்கைச் சுவாசப்பை!



சின்னஞ்சிறிய செயற்கைச் சுவாசப்பை ஒன்றை, டோகியோவிலுள்ள மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவரும் செயற்கைச் சுவாசப்பைகளின் அளவில் பத்தில் ஒரு பங்கு அளவே கொண்டது இது. ஆகையால் இதை எங்கு வேண்டுமானாலும் சுலபமாக எடுத்துச் செல்லலாம். **இதை இருதய அறுவைச் சிகிச்சையின் போதும், சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகளுக்கும் பயன்படுத்தலாம்.** இதைப் 'பம்ப்' செய்ய வேண்டிய அவசியமில்லை. நாய்களுக்கு இதைப் பயன்படுத்திச் சோதனைசெய்ததில், நன்றாக வேலை செய்தது.

* * *

ஜப்பானில் 'சுகுபா 85' என்னும் கண்காட்சி நடக்கிறது. இந்தக் கண்காட்சிக்கு வரும் பார்வையாளரை 'உற்றுப் பார்த்து' அவரது உருவப் படத்தை ஓவியமாகத் தீட்டிக் காட்டும் அபாரத் திறன் கொண்ட 'ரோபோ' (இயந்திர மனிதன்) ஒன்று இங்கு இருக்கிறது. முதலில், படம் தீட்ட வேண்டிய பார்வையாளரின் முகத்தை ஒரு டெலிவிஷன் காமிரா மூலம் பார்க்கிறது. உரிய தகவல்களைப் பதிவுசெய்து கொண்டதும்; ரோபோவின் கையிலுள்ள தூரிகை வேலை செய்கிறது-திரையில் உருவப் படம் தோற்றமளிக்கிறது!

சூரிய கதிரிலுள்ள வெப்பம் மற்றும் கெடுதலான அம்சங்களை அகற்றி, இதமான ஒளியை மட்டும் தரும் நவீன சாதனம் ஒன்றும் கண்காட்சியில் வைக்கப் பட்டிருக்கிறது. 'வடிகட்டிய' சூரிய ஒளியை மருத்துவத்திற்கும், ஒளி அலங்காரத்திற்கும் மற்றும் பலப்பல காரியங்களுக்கும் பயன்படுத்தலாம்.

ஒரு அதிசயமான திரையரங்கு அனைவரையும் கவர்ந்தது. திரையில் விண்வெளிக் கலம் ஒன்று தெரிகிறது என்றால், அதைப் பார்வையாளர்கள் தம் விருப்பப்படி, எந்தத் திசையில் வேண்டுமானாலும் பறக்கச் செய்யலாம். ஒவ்வொருவர் இருக்கையிலும் ஒரு பொத்தான் இருக்கிறது. அதை அழுத்தினால் இந்த அற்புதம் நிகழ்கிறது. **இத்தகைய திரையரங்கு உலகிலேயே முதலாவதாகும்.**

* * *

பச்சைக் காய்கறிகளைப்பவுடராக நுணுக்கி (அதே நேரத்தில் அக்காய்களின் ஊட்டச்சத்துக்கள் குறையாமலும், நிறம் மாறாமலும்) பாதுகாத்து வைத்துக் கொள்வதற்கான விஞ்ஞான முறை ஒன்றை, ஜப்பானிலுள்ள வகமோடோ என்ற மருந்துத் தயாரிப்பு நிறுவனம் உருவாக்கி இருக்கிறது. இதுவரையுள்ள தயாரிப்புகளில் சில சத்துக்கள் குறைந்து போவதும், நிறம் மாறுவதுமான குறைபாடுகள் உண்டு- அவை புதிய தயாரிப்பில் இல்லை. இந்த முறையில், காரட், பூசணி 'பார்ஸ்லே' என்ற மசாலா வகைச் செடி முதலிய ஐந்து வகைகளில் 'பவுடர்' தயாரித்து விற்க முதலில் திட்டமிட்டிருக்கிறார்கள்.

புற்றுநோய் மருத்துவத்திற்கு மிக அருமையாகப் பயன்படக்கூடிய நவீன ரகக் கத்தியை ஜப்பானிய நிறுவனம் ஒன்று தயாரித்திருக்கிறது. உயர்ந்த விஞ்ஞான நுட்ப அடிப்படையில் கண்ணாடி இழையைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்தக் கத்தி, சாதாரணமாக, புற்று நோய்ச் சிகிச்சைக்கு, சதையைக் கிழித்துத்தான் மருத்துவம் செய்ய முடியும். புதிய முறையில் சதையை அறுத்து உள்வழியை உண்டாக்க வேண்டியதில்லை. புற்று நோய்க் கிருமிகளுக்கு வெப்பம் தாங்கும் சக்தி கிடையாது; ஆகையால் இந்தக் கிருமிகளை, லேசர் கதிர் மூலம் சுட்டுப் பொசுக்கும் முறை,நவீன கருவி மூலம் கையாளப்படுகிறது. ஜப்பானைச்சேர்ந்த மத்சுஉஷிடா தொழில் சாதன நிறுவனம், இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறது.

* * *

உலகிலேயே மிக மிகச் சிறியதான ஒலிப்பதிவு நாடாச் சுருள் (காஸெட்) ஜப்பானில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. 'பிகாகாஸெட்' என்ற இந்த நாடாச் சுருள் பெட்டியின் நீளம் 36 மில்லி மீட்டரும் அகலம் 25 மில்லி மீட்டரும் உடையது— அதாவது மனிதனின் பெருவிரல் அளவே உடையது. கனபரிமாண அளவில் பார்த்தால், இப்போது நடைமுறையில் உள்ள 'காஸெட் அளவில் 20ல் 1பங்கு இருக்கிறது. இதை ஜப்பானின் விக்டர் கம்பெனியும் அமெரிக்காவில் டிக்டாபோன் கம்பெனியும் சேர்ந்து தயாரித்துள்ளன.

இந்தக் 'குட்டி' நாடாவில், 60 நிமிட நேர நிகழ்ச்சிகளை (இரு வழிகளிலும்) ஒலிப்பதிவு செய்ய முடியும். இந்தக் கச்சிதமான 'காஸெட்'டில் ஒலிப்பதிவு செய்யவும், ஒலிபெருக்கி செய்யவும் வசதியாக ஒரு சின்னஞ்சிறு சாதனத்தை உருவாக்கியுள்ளார்கள். இது 45X108X17மி.மீ. அளவுடையது. தொடர்ந்து 10 மணி நேரம் இயங்கச்செய்ய இரண்டு நுண்ணிய பாதரச பாட்டரிகள் போதும்.

புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள 'பிகாகாஸெட்'டுகள் மூன்று கொண்ட ஒரு பெட்டியின் விலை ரூ. 240 கையில் வைத்துக்கொள்ளக்கூடிய ஒலிப்பதிவு ஒலிபெருக்கி சாதனத்தின் விலை ரூ. 4,700 இதில் இன்னொரு வகையின் விலை ரூ. 6,550 ஆகிறது.

* * *

நினைத்தபடி நிறத்தைமாற்றுவதற்கு வசதியான மெல்லிய உலோகத் தகடுகளை, ஜப்பானின் ஹிட்டாச்சி நிறுவனம் தயாரித்திருக்கிறது. இந்தத் தகடுகளைப் பல்வேறு வெப்ப நிலைக்குக் கொண்டு செல்வதன் மூலம், தகடுகளின் நிறங்கள் மாறுகின்றன. இருக்கிற நிறத்திலிருந்து புதிய நிறம் பெறும் இந்தத் தகடுகள், மீண்டும் பழைய நிறத்தைப் பெறச் செய்யலாம்.

இந்த மெல்லிய தகடுகள் எல்லாம், கலப்பு உலோகத்தால் ஆனவை. செம்பு, வெள்ளி, துத்தநாகம், அலுமினியம் ஆகியவை அடிப்படை உலோகங்கள்; இவற்றில் இரண்டு அல்லது மூன்று உலோகங்களைக் கொண்டு மெல்லிய தகடுகள் செய்யப்படும். வெள்ளி-துத்தநாக கலப்புத் தகடாக இருந்தால் அது வெள்ளியின் நிறத்தில்தான் இருக்கும். அதையே 300 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்திற்கு மேல் சூடேற்றி, உடனே சடாரென அறையின் வெப்பத்திற்குக் குளிரடையச் செய்தால், அது இளஞ்சிவப்பு நிறத்தைப் பெறுகிறது. பிறகு, அதை மறுபடியும் 100 முதல் 300 டிகிரி செ. கி. வெப்பத்திற்குச் சூடுபடுத்தினால், அந்த இளஞ்சிவப்பு நிறத் தகடு பழையபடி வெள்ளி நிறத்தைப் பெறுகிறது. இவ்வாறு மிக மெல்லிய உலோகத் தகடுகள், வண்ணம் மாறும் குணத்தைப் பெறச் செய்வதால், நினைவுத் தேக்க கண்ணாடிப் படிவங்கள் போன்றவற்றில் இந்த நூதனத் தகடுகளை உபயோகிப்பது பெரிதும் வசதியாக இருக்கும். பதிவு செய்தவற்றை வேண்டும்போது பார்க்கவும், வேண்டாதபோது மறையச் செய்யவும் இயலும்.

புதிய ரக செயற்கை இருதயம் ஒன்றை, ஒசாகா நகரைச் சேர்ந்த ஜப்பானிய டாக்டர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். ஒரு சிறிய மின்சார மோட்டாருடன் இதை, தன் உடம்பில் பொருத்தி வைத்துக் கொள்ளும் நபர், எவ்விதத் தொல்லையும் இல்லாமல், இயற்கை இருதயம் உள்ளவர் போலவே, சகஜமாக இருக்க முடியும்.

மனித உடலில் இரத்தத்தை இருதயத்திற்குள் இழுக்கவும் வெளியே அனுப்பவுமான நுண்ணிய வேலையைச் செய்ய இயற்கை இருதயத்தில் சுருங்கி விரியும் உட்குழிவுப் பள்ளங்கள் (வென்டிரிகிள்ஸ்) உள்ளன. இவ்வாறு இழுக்கவும் அழுத்தவுமான அமைப்பு. செயற்கை இருதயத்தில் இடம் பெற்றிருக்கிறது. மின்சார மோட்டாரை இயக்க சிறிய பாட்டரி ஒன்றும் இருக்கிறது. ஆனால், இந்த பாட்டரி சில மணி நேரத்திற்குத்தான் மின்சாரத்தை வழங்கும். ஆகையால், இந்தச் செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட நபருடன், பெரிய பாட்டரியும் இணைப்புக் குழாயும் எடுத்துக் செல்லப்படும்.

செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட நபர், சலனம் இல்லாமல் ஓரிடத்தில் அமர்ந்திருக்கும் போதும், நடந்து செல்லும் போதும் நிகழும் ரத்த அழுத்தத்திற்கு ஏற்ப, அவருடைய நாடித் துடிப்பைச் சரி செய்யவும் செயற்கை இருதயத்தில், மிக நுண்ணிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

பார்வை இல்லாதவர்களுக்கு, அவர்கள் விரும்பும் புத்தகங்களை படித்துக் காட்டக் கூடிய நூதனமான இயந்திரம் ஒன்றை ஜப்பானில் தயாரித்திருக்கிறார்கள். மருத்துவப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுச் சாதன ஆராய்ச்சி நிலையம் ஜப்பானில் இருக்கிறது. அந்த நிலையந்தான், புத்தகம் படிக்கும் இயந்திரத்தை உருவாக்கி இருக்கிறது.

புத்தகத்தில் இடம் பெற்றுள்ள வரிவடிவ எழுத்துக்களையும்— அவை ஒன்று சேர்ந்து ஏற்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்புகளையும் - ஒலி வடிவம் பெறச் செய்திருக்கிறது. படிக்கும் வேகத்தை, தேவைக்கேற்ப, அதிகப்படுத்திக் கொள்ளவோ குறைத்துக்கொள்ளவோ முடியும். சில பக்கங்களைப் படிக்கவேண்டாம் என்று இந்த இயந்திரத்திடம் 'சொல்ல' விட்டால், அதன்படியே அந்தப் பக்கங்களைப் படிக்காமல் விட்டுவிடும். இப்போது தயாரிக்கப்பட்டுள்ள படிக்கும் இயந்திரம். 'பாக்கெட் சைஸ்' என்று சொல்லப்படும் சிறிய புத்தகங்களை மட்டுமே படிக்கும். அதன் அமைப்பு அப்படி இருக்கிறது. மேலும் ஒரு பக்கத்தைப் படிக்க, இந்த இயந்திரத்திற்கு 25 நிமிட நேரம் தேவைப்படுகிறது. இந்த இயந்திரம் ஒன்றின் விலை ரூ. 15 இலட்சம் ஆகிறது. ஆனால், ஜப்பானில் உள்ள 3,36,000 பார்வையற்றோர், இதனால், எதிர்காலத்தில் பெரிதும் பயனடைவார்கள்.—'ஜப்பான் நியூஸ்'

ப[illegible]தாம்!

[illegible]

[illegible] ஜி [illegible]

[illegible]

[illegible]ட்டில் - [illegible]

[illegible] இருந்த[illegible] பொன்மனச் செம்மலின் [illegible] நேரில் கண்டது போல இருந்தது.

எஸ். [illegible]

அம்பாசமுத்திரம்.

[illegible] - செய்தியும் ஒரு புதுமையான, பயனுள்ள பகுதி! புதிய மாவட்டங்களைப் பற்றிய செய்தித் தொகுப்பு [illegible] குரியது!

[illegible]

புதுவை.

சூரிய ஒளி அடுப்பு [illegible] விளக்கம் [illegible] பக்கம் அருமையிலும் அருமை [illegible] அனைத்திற்கும் [illegible]

[illegible]

ச. சுப்பராஜூ,

குருவிகுளம்.

[illegible] உயிரியல் [illegible]





# ஓங்கிடும் ஊர் நலம்

தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கிராம வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் எட்டு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

1984-85ஆம் ஆண்டுக்காகப் புதிய வீடுகள் 3118 கட்டி முடிக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கின் கீழ் அட்கோ 3ஆம் திட்டம் இரண்டாம் பகுதியின் கீழ் 1241 வீடுகளும் வெள்ளம் தொடர்பாக பயனடைவோர்களுக்காக 747 வீடுகளும், நிலுவைத் திட்டங்களின் கீழ் 1130 வீடுகளும் கட்டி முடிக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. இலக்கின்படி அனைத்துத் திட்டங்களின் 3118 வீடுகளும் நிலுவைத் திட்டங்களின் தொடர்பாக மேலும் 7 வீடுகளும் ஆகக்கூடுதலாக 3123 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

வீடுகள் கட்டும்போது உறுப்பினர்கள் தங்களது மனைகளில் உள்ள மரங்களையே வகைப்படுத்தி, தேவைப்படும் மரச்சாத்துக்களாகவும், விட்டங்களாகவும் பயன்படுத்துகின்றார்கள். மேலும் அண்மையிலுள்ள பனை, தென்னை மரங்களை வாங்கி மரச்சாத்துகள் தயாரித்தும் பயன்படுத்துகின்றார்கள்.

உறுப்பினர்களே குழுக்களாகச் சேர்ந்துகொண்டு செங்கல் சூளை வைத்து, செங்கற்களைத் தயாரிக்கின்றனர். இவ்வாறாகத் தயாரிக்கும்போது வெளிமார்க்கெட்டில் செங்கல் 1000-க்கு ரூ. 200 முதல் ரூ. 240 வரை விற்பதை ரூ. 150 முதல் ரூ. 100-க்கே கிடைக்கப்பெற வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் உறுப்பினர்கட்கு ஓரளவுக்குச் சேமிப்புத் தொகை கிடைக்கிறது.

கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் அதன் மதிப்பீட்டிற்கே காப்புறுதி செய்யப்படுகின்றன. உறுப்பினர்கள் ஆறு திங்களுக்கு ஒருமுறை தங்களது தவணைத் தொகையினைச் செலுத்திட வேண்டும். ஆதிதிராவிடர்களாக இருப்பின் வழங்கப்படும் மொத்த கடன் உதவி ரூ. 4,500. இதில் ரூ. 1000 மானியத் தொகை. எனவே திருப்பிச்செலுத்தப்பட வேண்டிய அசல் தொகை மட்டும் ரூ.3,500. வட்டி சலுகை அளிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் வயதுக்கேற்பக் கடன் தொகை 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் அல்லாத உறுப்பினர்கட்கு 10 சதவிகிதம் கடன் தொகை ரூ. 4,500 வழங்கப்படுகிறது.

மேற்படி கடன் தொகைச் சலுகைகளைப்பெற்று'84-85ஆம் ஆண்டில் 3125 உறுப்பினர்கள் புதிய வீடுகள் கட்டிப் பயனடைந்துள்ளனர்.

பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள மக்களின் மேம்பாட்டிற்காகப் பொருளாதாரத்தை உயர்த்த வேளாண்மையை ஒட்டி ஆடு வளர்க்கும் திட்டங்களை அரசு மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றது. அதன்படி இம்மாவட்டத்தில் 20 அம்சத் திட்டத்தில் 7வது அம்சமாக ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் அடையும் வகையில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் 1984-85ல் 100 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக்கி அவர்களுக்கு ஆடு அலகுகள் வழங்கப்பட்டன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் இந்து ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 9,00,000 மதிப்புள்ள 200 ஆடு அலகுகள் 50 சதவிகிதம் மானியத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பின்னர் 100 ஆடு அலகுகளுக்கு



20 அம்சத் திட்டத்தில் வறண்டு தரிசாகக் கிடக்கும் நிலங்களைச் செம்மைப்படுத்தி நவீன தொழில் நுட்ப யுக்திகளைக் கொண்டு மண் மற்றும் நீர்ப் பராமரிப்பு செய்து கூடுதல் உணவு உற்பத்தி பெருக்கப்படுகிறது. சத்து மிகுந்த நல்ல மண்வளம், மழை நீரினால் அடித்துச் செல்லா வண்ணம் சம உயர வரப்பிடுதல், ராட்சத மண் தள்ளும் இயந்திரங்களைக் கொண்டு நிலத்தைச் சமன்படுத்துதல் போன்ற பணிகளினால் எடுக்கப்பட்டு, மண் வளமும் நீர்வளமும் அந்த நிலத்திலேயே தேக்கப்படுகின்றன. கோவை மாவட்டத்திலுள்ள விளை நிலங்கள் யாவும் சுமார் 1,000 ஏக்கர் பரப்புள்ள சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஐந்து அல்லது ஆறு நீர்ப்பிடிப்புப் பகுதிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த 1984-85ஆம் ஆண்டு கோவை, அவினாசி, பல்லடம் வட்டங்களில், மண் மற்றும்நீர்ப்பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பல விவசாயிகள் பலன் அடைந்ததுடன் 45 விவசாய, தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களும் பயன் பெற்றன.

மழைக்காலங்களில் ஓடைகளில் வெறுமனே ஓடி வீணாகும் நீர்க்கசிவு நீர்க்குட்டை மற்றும் தடுப்பணைகள் கட்டி தேக்கி வைக்கப்படுகிறது. இக்குட்டைகளுக்கு அருகிலுள்ள கிணறுகளிலுள்ள நீர்மட்டம் உயர்ந்து அதிகப்படியான நீர்வளம் கிடைக்க ஏதுவாகிறது. இதன் மூலம் மேலும் சில விளைநிலங்கள் பாசனத்திற்குக் கொண்டு வரப்படுவதோடு ஏற்கெனவே நீர்ப் பற்றாக்குறையினால் வாடும் பயிர்களுக்குத் தேவையான பாசன வசதியும் கிடைக்கிறது.

இத்திட்டத்தினால் 1984 85 வரை 6.431 இலட்சம் மனித நாட்கள் செயல்படுத்தப்பட்டன. இதில் தாழ்த்தப்பட்டோர் 2.6 இலட்சம் மனித நாட்கள் பயன் பெற்றனர். மொத்தம் 9871 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

### வயது வந்தோர் கல்வி

வயது வந்தோர் கல்வித் திட்டம் ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம், தொண்டு நிறுவனங்கள் உள்ளடங்கிய மையங்களின் எண்ணிக்கையைக் கொண்டு நடைபெறும் திட்டமாகும்.

இதில் ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தில் 300 மையங்களும், மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் 800 மையங்களும் தொண்டு நிறுவனத்தில் 60 மையங்களும் தற்போது செயல்பட்டுக் கொண்டுள்ளன.

இம் மையங்களில் ஆண்கள் 3326 பேர்களும், பெண்கள் 36,036 பேர்களும் சேர்ந்து மொத்தம் 39,362 பேர்கள் கற்போர்களாக உள்ளனர். இதில் தாழ்ந்தப்பட்டோர்கள் ஆண்கள் 2003, பெண்கள் 23,496 பேர்களும் ஆவார்கள். மலைவாழ் மக்களில் 617 பெண்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுகின்றனர். இத் திட்டத்தில் கல்வி அறிவு இல்லாத மக்களிடையே 15 முதல் 35 வயது வரம்பிற்குள் உட்பட்ட கற்போர்களுக்கு எழுதப்படிக்க, எழுத்தறிவு, எண்ணறிவு, விழிப்புணர்ச்சி, செயல்



திறன் ஆகியவைகள் இயக்ககத்தின் மூலம் வெளியிடப்பட்ட கற்பிப்புச் சாதனங்கள் மூலமாகப் பயன்பெறும் அடிப்படையில் பயிற்சி பெற்ற ஊக்குநர்களைக் கொண்டு எளிய முறையில் விரும்பிப்படிக்க ஏற்றவாறு பயிற்சிகள் தரப்படுகின்றன.

கற்பிப்புச் சாதனங்களாகிய மின் அட்டைகள், புத்தகங்கள், சிலேட்டுகள், எழுது பொருள்கள் இவைகள் அரசாங்கத்தால் இலவசமாகக் கற்போர்களுக்கு ஒவ்வொரு கட்டத்தில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் கற்போர் தையல்கலை, சோப்பு செய்தல், சோப்பு பவுடர், கிளீனிங் பவுடர், ஊதுவத்தி, ஊறுகாய், வத்தல் போன்றவைகள் சுகாதார முறையில் செய்யக் கற்றுக் கொள்கின்றனர். மேலும் குடும்பநலம் பொதுச் சுகாதாரம், விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கோழிப் பண்ணை போன்ற வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபாடு கொண்டு அத்திட்டங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றனர்.

### ஆடு பெருக்குத் திட்டம்:

கோவை மாவட்டத்தில் 1984-85ல் 100 ஆட்டுப் பட்டிகள் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் வாங்கி வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஒரு ஆட்டுப்பெட்டி 20 பெட்டை ஆடுகளும் 1 கிடாவும் கொண்டதாகும். இவ்வாறு 100 ஆட்டுப் பட்டிகள் 100 ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு ஆட்டுப்பட்டியின் விலை ரூ. 4,500 ஆகும். 100 ஆட்டுப்பட்டிகளுக்கு 50 சதவீதம் அரசு மான்யத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 50 சதவீதம் தொகை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனாக வழங்க கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர அரசின் வகையில் ஒரு ஆட்டிற்கு மருந்துச் செலவினத்திற்கு ரூ. 7 வீதமும், ஒரு ஆட்டுப்பட்டிக்கு ரூ. 65 காப்பீட்டுத் தொகையாகவும் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்கண்ட 100 ஆட்டுப் பட்டிகள் கோவை, உடுமலை, திருப்பூர், அவிநாசி வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் 84-85 நிதி ஆண்டிற்கு மொத்த ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 2,46,200 ஆகும்.

இத்தொகை இரண்டு தவணைகளாகத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்டது. இதில் மார்ச் 85 முடிய மான்யத்தொகையாக ரூ.2,24,877.50 ஆடு யூனிட்டுகளுள் நூறுக்குச் செலவிடப்பட்டுள்ளது. மேலும் மருந்து செலவில் நிதி ஒதுக்கீடு ரூ. 14,700-ம் மார்ச் 85 முடிய ரூ. 14,699.70 செலவிடப்பட்டுள்ளது. காப்பீட்டுச் செலவுக்கு அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ. 6,500-ல் 100 ஆடு யூனிட்டுகளுக்கு மார்ச் 85 முடிய ரூ. 6,237.50 செலவிடப்பட்டுள்ளது.

மொத்தமாக 1984-85ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுத்தொகை ரூ. 2,46,200ல் மார்ச் 1985 முடிய ரூ. 2,45,814.70 செலவிடப்பட்டு நிதி குறியீடு மற்றும் செயல் குறியீடு 100 சதவீதம் எய்தப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



மட்டும் ஆணைகள் • வழங்கப்பட்டு 100 ஆடு அலகுகள் நிறுவப்பட்டன.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாக ஆடு அலகுகளுக்கு இன்சூரன்ஸ் கட்டணத்தில் 50 சதவிகிதம் அல்லது ரூ. 65. இதில் குறைவான தொகை மானியத் தொகையாக வழங்கப்பட்டது. (ஒரு ஆடு அலகு என்பது 20 செம்மறிப் பெட்டை ஆடுகளும், ஒரு செம்மறிக் கிடாவும் கொண்டது).

ஒரு ஆடு அலகு அமைத்திட வங்கிக் கடனாக ரூ.4,500 தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்டு ரூ. 4250-க்கு இருபது செம்மறிப் பெட்டை ஆடுகளும், ஒரு கிடாவும் வாங்கிடவும் ரூ. 150-க்கு ஆடு கொட்டகை அமைத்திடவும் ரூ. 100க்கு உபகரணங்கள் பெறவும் பயன்படுத்தப்படுகின்றது.

எனவே, வழங்கப்பட்ட ஆடுகளை நன்கு வளர்த்து தொத்து நோய்த் தடுப்பூசி போட்டும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை குடற்புழுநீக்க மருந்து வழங்கி இத்தொழிலில் இலாபகரமாக்கிக் கொள்ளலாம். இத்திட்டத்தின்படி பிறக்கும் பெட்டைக் குட்டிகளை, அலகின் இருப்பில் சேர்த்து இருப்பு எண்ணிக்கையினை பெருக்கிக் கொள்ளவும், பிறக்கும் கிடாக்குட்டிகளையும் விற்று கடன் தொகையினைச் செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

1984-85-ஆம் ஆண்டில் எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலையினாலும், விவசாயிகள் நிலக்கடலை அதிகப் பரப்பில் சாகுபடி செய்த ஜே. எல். 24 ரகத்தைக் காலத்தில் எண்ணெய்வித்துத் துறையின் மூலம் விநியோகம் செய்ததாலும் வழக்கமான உற்பத்திக்கு அதிகமான உற்பத்தி கிடைத்துள்ளது.

மானாவாரிப் பருவத்தில் எக்டேருக்கு நிலக்கடலையில் 1032 கிலோவும், எள்ளில் 321 கிலோவும் கிடைத்துள்ளது. இறவைப் பருவத்தில் நிலக்கடலை எக்டேருக்கு 2431 கிலோ கிடைத்துள்ளது. பயிர் மதிப்பீட்டாய்வின்படி விருத்தாசலம் கோட்டத்தில் ஊரணி கிராமத்தில் ஜே.எல் 24 ரகத்தில் அதிகமான மகசூல் கிடைத்துள்ளது. எக்டேருக்கு 5060 (ஈரம்) கிலோ ஆகும்.

1984-85-ஆம் ஆண்டு இருபது அம்சத் திட்டத்தின் கீழ் எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கு அதிகமாக 30 சதவிகிதம் சாதனை எய்தப்பட்டுள்ளது. மேலும் எண்ணெய்வித்துச் சாகுபடிப் பரப்பு நல்ல சீதோஷ்ண நிலையின் காரணமாக வழக்கமான சாகுபடிப் பரப்பிற்கு அதிகமாக 21,000 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது.

இரயில்வே ரோடு காலனி நகரின் மையத்தில் இருந்து 2 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இங்கு முற்றிலும் ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்றனர். இங்குள்ள வீடுகள் 330ஆகும். இவை அனைத்தும் குடிசை வீடுகள். இங்கு வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 1736 ஆகும். இப்பகுதிக்குக் குடிநீர் வசதி, மின்சார வசதி ஆகியவை நகராட்சியால் செய்யப்பட்டுள்ளது. எனவே 1984-85-க்கு இப்பகுதிக்கு ரூ. ஒரு இலட்சத்தில் தார்தளம் அமைக்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வேலை 1050 மீட்டர் போடப்பட்டு செய்து முடிக்கப்பட்டுள்ளதால், இப்பகுதி மக்கள் அனைவரும் போக்குவரத்து வசதி பெற்றுப் பயன் அடைகின்றனர்.

மேலப்பாளையம் காலனி நகரின் மையப்பகுதியில் இருந்து 2கிலோ மீட்டர் தூரம். உள்ளது இங்கு முற்றிலும் ஆதிதிராவிட மக்கள் வாழ்கிறார்கள். இங்குள்ள வீடுகள் 90 ஆகும். இவை அனைத்தும் குடிசை வீடுகள். இங்கு வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 509 ஆகும். இப்பகுதியில் தண்ணீர் வசதி, மின்சார வசதி நகராட்சியால் செய்யப்பட்டுள்ளது. எனவே 1984-85ஆம் ஆண்டுக்குத் தார் தளம் அமைக்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. இச்சாலையின் நீளம் 525 மீட்டர். இச்சாலை போடப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் போக்குவரத்து வசதி பெற்றுப் பயன் அடைகின்றனர்.

ஆண்டிக்குப்பம் காலனி, நகரின் மையப் பகுதியில் இருந்து 2 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இங்கு முற்றிலும் ஆதிதிராவிட மக்கள் வாழ்கிறார்கள். இங்குள்ள வீடுகள் 161ஆகும். இவை அனைத்தும் குடிசை வீடுகள். இங்கு வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 704 ஆகும். இப்பகுதியில் குடிநீர் வசதி, மின்சார வசதி நகராட்சியால் செய்யப்பட்டுள்ளன. எனவே 1984-85-ஆம் ஆண்டுக்குத் தார் தளம் அமைக்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. இச்சாலையின் நீளம் 525 மீட்டர். இச்சாலை போடப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் வசதி பெற்றுப் பயன் அடைகின்றனர்.

ஆண்டிக்குப்பம் காலனியில் கட்டப்பட்டுள்ளது நவீன கழிப்பறையாகும். இதன் வடிவம் மிகவும் நேர்த்தியாக உள்ளது. ஆண், பெண் ஆகியோருக்குத் தனித்தனியாக இரண்டு, இரண்டு கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இக்கழிப்பறைக்குத் தண்ணீர் வசதிவேண்டி சிறியநீர் நிலைத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. எனவே கழிப்பறைக்கு 24 மணி நேரமும் தண்ணீர் வசதி உள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் சுகாதார வசதி பெற்றுள்ளனர். எனவே, இருபது அம்சத் திட்டத்தால் குடிசைப் பகுதி மக்கள் இது போன்ற அத்தியாவசியப் பயன்களை பெற்றுள்ளார்கள்.





# வளரும் கோவை

இந்தியப்பிரதமரின் 20 அம்சத் திட்டத்தினைச் செயல்படுத்த அரிய பல விரிவாக்கத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பலதரப்பட்ட மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தி அவர்களின் மேம்பாட்டுக்கு மறுமலர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல், இந்த 20 அம்சத் திட்டத்தின் சீரிய நோக்கமாகும். வேளாண்மை நம் நாட்டின் பொருளாதாரத்திலும், வளர்ச்சியிலும் முதன்மையிடம் வகிக்கிறது. இதன் அடிப்படையில் விவசாய மக்களின் வாழ்வு மலர்ந்திடவும் அவர்களால் சமூகம் மற்றும் பொருளாதார நிலை உயரவும் இத்திட்டம் வழிவகுக்கிறது.

நாட்டின் நில வளர்ச்சித் திட்டங்களிலும், புன்செய் நில நவீனமுறைச் சாகுபடிக்குத் தக்கபடி நில மராமத்துப் பணிகளிலும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதிலும் உள்ள செயலாக்கத் திட்டங்களில் வேளாண்மைப்பொறியியல் துறைமுக்கியப் பங்கேற்கிறது. இத் திட்டத்தில் இத்துறை இரண்டு பெரும் பங்கைத் தன்னுள் அடக்கியுள்ளது. (1) வறண்ட புன்செய் நிலங்களில் நீர்வளத்தைப் பெருக்குதல் (2) நீர்வளம் மற்றும் நிலவளத்தைப் பராமரித்தல் ஆகிய இவைகளைச்செயல்படுத்துவதில் உள்ள நன்மைகளைக் கருத்திற் கொண்டு பெரும்பான்மை விவசாயிகள் மிக அதிக அளவில் ஊக்கமும் ஆக்கமும் கொண்டுள்ளனர் என்பது இத்திட்டத்தின் வெற்றிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. கடந்த பல துறைகளில் செய்யப்பட்ட இப்பணிகளினால் நீர்வளம் நிலத்தில் சேர்க்கப்பட்டு மண் அரிப்பினின்றும் நிலம் பாதுகாக்கப்பட்டு உணவு உற்புத்தி கணிசமான அளவில் உயர்ந்துள்ளது என்பது விவசாயிகள் கண்கூடாகக் கண்டறிந்த உண்மை.

நீர்வளத்தைப் பெருக்கும் திட்டப்பணிகள் தனியார் ஆழ்துளைக்கிணறு திட்டம், கிணற்றில் துளையிடும் திட்டம் கிணற்றை ஆழப்படுத்துதல் போன்ற முறைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நவீன ஆழ்துளைக் கருவிகளைக் கொண்டு விவசாய நிலங்களில் 6'' முதல் 10'' குறுக்களவுள்ள ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து வெளிக் கொணர்ந்து அதிகப்படியான நிலங்கள் பாசனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. இத்திட்டத்தினால் 1984-85ஆம் ஆண்டு அமைத்த ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 124. பயனடைந்த நிலப் பரப்பு 920 எக்டேர்.


இது தவிர கிராமப்புறப் பகுதிகளில் குடிநீர் வசதிகளைப் பெருக்க அமைந்துள்ள குடிநீர் வடிகால் வாரியத்துடன் இத்துறை போதிய அளவு ஒத்துழைப்பும் நவீன ஆழ்துளை கருவிகளையும் நல்கி கிராமப்புற மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குகிறது. 20 அம்சத் திட்டத்தின் இந்தக் குறிக்கோள் எட்டாவது அம்சமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

போதிய நீர் வளமில்லாத திறந்த கிணறுகளில் துளையிட்டு நிலத்தடி நீர் அக்கிணறுகளில் தேக்கி வைக்கப்பட்டு பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் குறிப்பிட்ட காலத்தில் விளைவிக்கப்பட்ட பயிர்கள் நீர்ப்பற்றாக்குறையினால் வாடி அழியாமல் பாதுகாக்கப்படுவதோடு மேலும் சில கூடுதல் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. 1984-85ஆம் ஆண்டு பயனடைந்த நிலப்பரப்பு 243.20 எக்டேர். கிணறுகளின் எண்ணிக்கை 304.

பாறை வெடிக்கருவிகளைப் பயன்படுத்தி திறந்த கிணறுகளை ஆழப்படுத்தி நிலத்தடி நீர் மேலே கொணரப்படுகிறது. விவசாயப் பெருமக்களுக்கு ஆதரவுத் தொகைக்கு மேற்படிகருவிகள்வழங்கி மேலும் கூடுதல் நிலங்கள் விவசாயத்திற்குக் கொணரப்படுகின்றன. நீர்ப்பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்ட பயிர்கள் இதனால் பயன் பெறுகின்றன. 1984-85-ஆம் ஆண்டு பயனடைந்த கிணறுகள் 518. நிலப் பரப்பு 414.40 எக்டேர்.


"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்"
பார்த்தாலே தெரிகி
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676








# அண்ணா மாவட்டம் வெற்றிநடை போட வாழ்த்துகிறேன்



**மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் எம். ஜி. ஆர்.**

மக்களுக்கும், அரசுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு அமைவதைப் பொறுத்தே மக்கள் ஆட்சியின் வெற்றியும் அமைந்திடும். அதற்கு முதல்படியாக நிர்வாக நிலையங்கள் மக்களுக்கு எளிதில் எட்டக்கூடியதாக இருந்திடுவது தேவை. அதைக் கருத்தில் கொண்டே பெரிய மாவட்டங்களைச் சீரமைத்து, புதிய மாவட்டங்களை உருவாக்கிடவும், உருவாக்குகிற புதிய மாவட்டங்களுக்கு தமிழகச் சான்றோர் பெயர் சூட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு பேரறிஞர் அண்ணாவின் திருப்பெயரைத் தாங்கிய வண்ணம் அண்ணா மாவட்டம் செப்டம்பர் 15ஆம் தேதி அன்று உருவாகிறது.

திண்டுக்கல் பகுதி 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 1884 வரை நூறாண்டுக் காலத்திற்குத் தனி மாவட்டமாகவே இருந்து வந்தது. 1885ஆம் ஆண்டு முதல் கொண்டுதான் மதுரையும், திண்டுக்கல் பகுதியும் ஒன்றாக இணைக்கப்பட்டன.

சரியாக 100 ஆண்டுகள் கழித்து 1985ல் மீண்டும் திண்டுக்கல் பகுதி தனி நிர்வாக மாவட்டமாக அமைவது குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும்.

பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் செயல்படுத்துவதையே இலட்சியமாகக் கொண்டு பணியாற்றி வரும் எங்களுக்கு, மக்கள் தங்கள் மகத்தான ஆதரவை உறுதி செய்து பேரறிஞர் அண்ணாவின் வழியில் உண்மையாக நடை போடுகிறவர்கள் என்று எங்களை அங்கீகரித்து உலகறியச் செய்த பெருமை திண்டுக்கல் பகுதிக்கு உண்டு என்பதால் திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு அண்ணா மாவட்டம் அமைவதில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்ணாவின் பெயரால் அமைந்திடும் இந்தப் புதிய மாவட்டம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்து முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போட என் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழரசு
மலர் : 16 திருவள்ளுவர் ஆண்டு 2016 இதழ் : 7
குரோதன - புரட்டாசி 15
1-10-1985



# காந்தியடிகள் காணவிரும்பிய இலட்சிய பூமி



**பேரறிஞர் அண்ணா**

"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக் கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்யோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்" - இதுவே உலக உத்தமர் காந்தியாரின் இலட்சியம், என்று அறிவிக்கிறார் பண்டித நேரு.

விடுதலைப் போர் நடத்தப்படும் காலம், நாட்டின் வரலாற்றிலே சுவையுள்ள பகுதி-வீரச் செயல்கள், தியாக நிகழ்ச்சிகள் நிரம்பிய பகுதி. குன்றுகள் கோட்டைகளாகி, வீதிகள் போர் முகமாகி, வீடுகளெல்லாம் பாசறையாகி, நாட்டு மக்கள் வீரர்களாகும் வேளை அது. அப்போதெல்லாம் அவர்களின் ஒரே நோக்கம், ஒரே லட்சியம், தன்னாட்சி பெறுவது என்பதுதான்.




அடிமைப்பட்ட பல நாடுகளிலே, சுதந்திரம் வேண்டும் என்பது மட்டுமே பிரச்னை -இங்கோ சுதந்திரமும் வேண்டும், புது சமுதாய அமைப்பும் வேண்டும் என்று கேட்க வேண்டிய நிலைமை இருந்தது. இங்கோ, விடுதலை வேண்டும் என்று போராடத் தொடங்கியபோது, அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும் என்பது மட்டும் முழக்கமாக இல்லை-அந்த ஒரு முழக்கம் மட்டும் போதுமானதாகத் தெரியவில்லை. அன்னிய ஆட்சி மட்டும் தொலைந்தால் போதும் என்ற அளவுடன், நின்றுவிட மனமில்லை. ஏனெனில் இந்த நாட்டு அமைப்பு முறை, தேவையான வேறு பல இலட்சியங்களைக் கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டது.

ஏழை ஈடேறவேண்டும்
ஏழை உரிமை பெறவேண்டும்
ஜாதிபேதம் ஒழியவேண்டும்.
ஒற்றுமை மலரவேண்டும்

என்று காந்தியடிகள் கூறினதுடன், 'இத்தகைய இந்தியா உருவாக வேண்டும், அதுவே என் இலட்சியம், அதற்கே நான் பாடுபடுகிறேன்' என்றும் கூறினார். மற்ற நாடுகளில் நலிவு அன்னிய ஆட்சியின்போது, அதன் விளைவாகவே ஏற்பட்டதால், அந்த நாடுகளிலே தோன்றிய தலைவர்கள், நாட்டின் நலிவை நீக்க அன்னியரை விரட்டினாலே போதும் என்று கருதினர்-அவர்கள் அங்ஙனம் கருதினதில் தவறுமில்லை. அதுபோல இங்கு அன்னியர் விரட்டப்பட்டு, நாடு, தன்னாட்சி பெறுவது மட்டுமே போதும் என்று கருதினால், நிச்சயமாகத் தவறு -ஏனெனில் இங்கு, அன்னிய ஆட்சியினால் மட்டுமல்ல அதற்கு முன்பிருந்தே, நமக்கென்று தோன்றிய சில அரசர்களாலும் அவர்கள் அனுஷ்டித்த முறைகளாலும், நமது சமூக அமைப்பினாலும் அதன் பயனாக ஏற்பட்ட பழக்க வழக்கங்களாலும் நமது வாழ்க்கை இலட்சியத்தினாலும் அதை ஒட்டிக் கட்டிவிடப்பட்ட வெட்டி வேதாந்த முறைகளினாலும், நமது மத அமைப்பினாலும், அதைப் பயன்படுத்திக் கொண்ட தன்னலக்காரரின் போக்கினாலும் பலப்பல கேடுகள் முளைத்துக் காடெனக் கிடந்தன. எனவே அன்னிய ஆட்சி அகன்றால் நாட்டின் நலிவு நீங்கிவிடும் என்ற அளவோடு அடிகள் நிற்கவில்லை-அன்னிய ஆட்சியை நீக்குவதுடன், மக்களாட்சிக்கு, நல்லாட்சிக்குத் தடையாக உள்ள சகல கேடுகளையும் நீக்கியாக வேண்டும் என்று தெளிவாகக் கூறினார்.

அவர் காண விரும்பிய காட்சி இந்தியர் ஆளுகின்ற இந்தியா என்பது மட்டுமல்ல, தீண்டாமை அடியோடு ஒழிந்து, மதத்தின் மாசும் தூசும் போக்கப்பட்டு, ஜாதி பேதம் களைந்தெறியப்பட்டு, ஏழையின் வாழ்விலே புதியதோர் கிளர்ச்சி ஏற்பட்டு, நாடு, இலட்சிய பூமியாக இருக்க வேண்டும் என்பதாகும்.

("உலகப்பெரியார் காந்தி" நூலிலிருந்து...)





## தமிழ் வளர்ச்சித் துறை
## அண்ணா விருது
## 15-9-1985

### தகுதியுரை

தமிழக முதலமைச்சராக விளங்கும் மாண்புமிகு பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அறிஞர் அண்ணா விருதினை முதன்முதலாகப் பெறுகின்ற பெருந்தகையாளராகத் திகழ்கிறார்.


பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய பொலிவும், வலிவும் வாய்ந்த புதிய தமிழகத்தை உருவாக்கிக் காட்டியவர். அரசியல், பொருளியல், சமூகவியல், ஆட்சியியல், கலையியல், இலக்கியவியல், வரலாற்றியல் போன்ற பல்வேறு துறைகளிலும் தமிழகத்தின் பண்பாட்டு மரபையும் மாட்சியையும் நிலைநாட்டித் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு உணர்ச்சியும், எழுச்சியும் ஊட்டிய ஒரு பெரும் தலைவராவார். அண்ணா நினைவின் அடையாளமாக அறிஞர் அண்ணா விருது என்னும் புகழ் விருது தமிழக அரசால் வழங்கப் பெறுகிறது.

அறிஞர் அண்ணாவின் கொள்கை - குறிக்கோள் - கோட்பாடுகளின் நெறி நிற்பவர், அவற்றை நிலை நிறுத்துபவர், பரப்புகின்றவர், அவற்றை ஆய்வு செய்யும் ஆய்வாளர் என்னும் நான்கு வகையாலும் தகுதிபெறுவோரே இந்த விருதினைப் பெறுதற்கு உரியராவர். அறிஞர் அண்ணாவின் கொள்கைகளின் முழுவடிவமாக நெறிநிற்றல், நிலைநிறுத்துதல், பரப்புதல், ஆய்தல் என்ற பணிகளை முழுமையாக விழுமிய முறையில் நிறைவேற்றிவரும் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு இந்த ஒப்பற்ற விருதினைத் தமிழக அரசு பெருமையோடும் பெருமிதத்தோடும் வழங்கிப் பெருமகிழ்வு கொள்கிறது.

| | |
|---|---|
| செ. அரங்கநாயகம் | இரா. நெடுஞ்செழியன் |
| கல்வியமைச்சர் | நிதியமைச்சர் |



# அண்ணா மாவட்டம் மலர்ந்தது



தமிழ்நாடு அரசின் சார்பில் அண்ணா மாவட்டத் தொடக்க விழா, பேரறிஞர் அண்ணா அவர்களின் 77 வது பிறந்த நாள் விழா ஆகியவை 1985 செப்டம்பர் திங்கள் 14, 15 தேதிகளில் திண்டுக்கல் சிலப்பாடி காவல் துறை மைதானத்தில் அமைந்துள்ள 'பாண்டியன் அரங்கில்' மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதல்நாள் அன்று காலையில் (14-9-85) அரசுக் கலைஞர்கள் மதுரை திரு எம். பி. என். சேதுராமன், மதுரை திரு எம். பி.என். பொன்னுசாமி குழுவினரின் நாயன இசையுடன் நிகழ்ச்சி தொடங்கியது.

தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு, இ.ஆ.ப., கருத்தரங்கிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசுகையில், ''திண்டுக்கல் தமிழக வரலாற்றில் சிறப்பான இடம் பெறும். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னரே திண்டுக்கல் மாவட்டத் தலைநகராக இருந்தது. 26 பாளையக்காரர்களால் திண்டுக்கல் ஆளப்பட்டு வந்தது. 1788ல் திண்டுக்கல்லின் பெரும்பகுதி இப்போதைய சேலம் மாவட்ட சங்கரிதுர்க்கத்துடன் திப்புசுல்தானால் இணைக்கப்பட்டது என்பதும் வரலாறு தெரிவிக்கும் சுவையான செய்தியாகும்'' என்றார்.

நிலக்கோட்டைச் சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ. பாலுசாமி பேசுகையில், ''அண்ணா ஓர் அறிவாலயம், அண்ணாவைத் தமிழ்க்காவலர் என்றால் மிகையாகாது. அண்ணா அவர்கள் தான் நாட்டையும், மொழியையும் தன் இனத்தையும் காத்து வந்தார். அண்ணா பெயரில் மாவட்டம் அமைவதில் பெருமைப் படுகிறேன்'' என்றார்.

திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே. ஆர். நடராஜன் பேசுகையில், ''எல்லாத் துறையிலும் சிறப்பானவர்களை உருவாக்கினார் அண்ணா. அண்ணா ஜனநாயகவாதி, சமுதாய சீர்திருத்தவாதி. ஆகவே அவர் பெயரில் மாவட்டம் அமைவது பொருத்தமுடையது'' என்றார்.


பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு டி. முகமது சலீம் பேசுகையில், ''எங்கெங்கு தமிழர்கள் உள்ளனரோ அவர்கட்கு எல்லாம் தலைவர் பேரறிஞர் அண்ணா. அவர் பெயரில் மாவட்டம் அமைவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.'' என்றார்.

பழனி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பேசுகையில், ''தமிழகத்தின் மக்கள் மதிப்பைப் பெற்ற தலைவர் அண்ணா. அவர் பெயரில் மாவட்டம் அமைவது பொருத்தமுடையது. காந்தி கண்ட ராமராஜ்யத்தை இந்தப் புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. குப்புசாமி பேசுகையில், ''திண்டுக்கல் வரலாற்றுப் பெருமை பெற்றது. வரலாற்றில் புரட்சித் தலைவர் பெயர் இடம் பெறும். தமிழ் மொழிக்கு இருந்த பெருமையை வெளிக் கொண்டு வந்தவர் அண்ணா. பல ஆண்டுகளுக்கு முன்னர் இழந்த திண்டுக்கல் பெருமையை இன்று அண்ணா மாவட்டம் அமைவதன் மூலம் பெறுகிறோம்'' என்றார்.

சேடப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. முத்தையா பேசுகையில், ''இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா. எத்தனையோ எதிர்ப்புகளிடையே இந்த மாவட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பின்தங்கிய மாவட்டம், வளமான மாவட்டமாக வளரும்'' என்றார்.

திண்டுக்கல் சிலப்பாடி மைதானத்தில் அண்ணா மாவட்டத் தொடக்க விழா நடைபெற்ற பாண்டியன் அரங்கு.



பேரறிஞர் அண்ணா பற்றிய கண்காட்சியினைத் திறந்து வைத்து மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில். ''1977 ஆம் ஆண்டு அண்ணாவின் இதயக்கனி ஆட்சி ஏற்பட்டது. அண்ணாவின் 77-வது பிறந்தநாளில் அண்ணாவின் பெயரில் மாவட்டம் மலருவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். தமிழகத்தின் விடிவெள்ளி அண்ணா. நிர்வாகத்திறன் படைத்த புரட்சித் தலைவர் பல ஆண்டுகள் பிரிக்க முடியாமல் இருந்த மாவட்டங்களைப் பிரித்தார். பெரிய மாவட்டங்கள் பிரிப்பதன் மூலம் நிர்வாகம் செம்மையாக நடைபெறும். வர்க்கீஸ் குழுவின் அடிப்படையில் இந்த மாவட்டம் உருவாவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.'' என்றார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமையேற்றுப் பேசுகையில், ''அண்ணா சிறந்த ஆற்றல் படைத்தவர். பெரியாரின் கொள்கையைப் பின்பற்றியவர். ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்தவர் அண்ணா. ஆணவம் இல்லாதவர் அண்ணா,

''தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகும் எளிமையாக வாழ்ந்தவர் அண்ணா. அண்ணா எதிர்நீச்சலில் வாழ்ந்தார். எதையும் தாங்கும் இதயம் படைத்தவர் அண்ணா.

" பற்றுப் பாசத்தோடு வாழ்ந்த அண்ணாவின் காலத்தைப் பொற்காலமாகக் கருதுகிறோம். அண்ணா இல்லை என்றால் தமிழ் இல்லை. வரலாற்றில் இடம் பெறப்போகும் இந்த அண்ணா மாவட்டத்தை உருவாக்கித் தந்த புரட்சித் தலைவரைப் பாராட்டுகிறேன்'' என்றார்.

கருத்தரங்கின் முடிவில், மதுரை மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் நன்றி கூறினார். விழாவில் சிறப்புரையாற்றியவர்களுக்குத் தஞ்சாவூர்த் தட்டுக்கள் வழங்கப்பட்டன.



'அண்ணா விருது' பெறும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், ரூ. 10 ஆயிரம் ரொக்கத்தை வழங்குகிறார் மாண்புமிகு நிதிஅமைச்சர்.

மாலையில் பழனி நாயனப் பள்ளி மாணவர்களின் நாயன இசையுடன் கவியரங்க நிகழ்ச்சி தொடங்கியது.

கவியரங்கைத் தொடங்கி வைத்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் கூறியதாவது:

''பேரறிஞர் அண்ணா விழாவும், அண்ணா மாவட்டத் தொடக்க விழாவும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தாய் மாவட்டமான மதுரை மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனது வாழ்த்துகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு காலமும் எங்களோடு இணைந்திருந்த திண்டுக்கல் பகுதி பிரிகிறதே என்ற ஏக்கம் இருந்தாலும் மகளைத் திருமணம்முடித்து கணவன் வீட்டிற்கு அனுப்பும் மகிழ்ச்சியோடு அண்ணா மாவட்டத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''அண்ணாவின் கருத்துக்கள் பட்டுப்போகாமல் காத்து வருபவர் புரட்சித் தலைவர். ஆகவே அவருக்கு அண்ணா விருது வழங்கப்படுவது பொருத்தமுடைய செயலே ஆகும். அண்ணாவின் எழுத்துக்கள்-கருத்துக்கள் உவமை நயத்துடன் விளங்கும். இந்த அண்ணா மாவட்டத்தின் எழுத்துக்கள் வைர எழுத்துக்களால் பொறிக்கப்படும்.''

கவியரங்கத் தலைமை ஏற்ற அரசவைக் கவிஞர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள்,

''நாங்கள் பெரியார், அண்ணா பாசறையில் வந்தவர்கள். அறிவுக்கு அட்சய பாத்திரமாக விளங்கியவர் அண்ணா. தம்பிகள் மீது பாசமுடையவர் அண்ணா. திராவிடப் பல்கலைக் கழகத்தில் நாங்கள் ஓர் சரித்திரம். இங்கு அண்ணாவின் பெயரில் மாவட்டம் அமைத்துத் தந்த புரட்சித்தலைவருக்குக் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

கவிஞர் திருமதி குருவம்மாள் 'அண்ணாவும் சீர்திருத்தமும்' என்ற தலைப்பிலும், கவிஞர் முத்துராமலிங்கம் 'அண்ணாவும் அரசியலும்' என்ற தலைப்பிலும் சட்டமன்ற மேலவை உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் 'அண்ணாவும் தமிழும்' என்ற தலைப்பிலும் கவிஞர் இளந்தேவன் 'அண்ணாவும் ஆட்சியும்' என்ற தலைப்பிலும் கவி பாடினர்.

கருத்தரங்க நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., வரவேற்றுப் பேசுகையில்,

''நிர்வாக நலனுக்காக மாநிலங்கள் பிரிக்கப்பட்டதைப் போல மாவட்டங்களும் பிரிக்கப்பட்டன. அரசின் அனைத்து நலத்திட்டங்களும் ஏழை எளிய மக்களுக்கு முழுமையாக விரைவாகப் போய் அடைவதற்கு சிறிய மாவட்டங்கள் உகந்தது. இந்த ஆண்டு மார்ச்சுத் திங்கள் 15ஆம் நாள் காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்கள் துவக்கப்பட்டன. நாளை அண்ணா பெயரில் னியைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும். புதிய மாவட்டத்தில் அமைந்துள்ள வறட்சிப் பகுதிகளுக்குரிய சீரிய திட்டங்களைத் தீட்ட வேண்டும். கேரளாவின் நீரைத் தமிழகம் பயன்படுத்த வேண்டும். சொல்லுக்கும் செயலுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார் அண்ணா. அண்ணா நாமத்தை நிலைநிறுத்தி வரும் இந்த அரசைப் பாராட்டுகிறேன்' என்றார்.

மாநிலங்களவையின் உறுப்பினர் திரு காதர்சா பேசுகையில், ''இந்தத் திண்டுக்கல்லில் தோல் தொழில் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. இது, மேலும் சிறப்புப் பெறும் வகையில் அமைந்திட அரசு உதவிடவேண் காட்டினார். ஸ்டாலின் ஏழைகளைச் சிரிக்க வைத்தான் என்றார் அண்ணா. அதேபோல் இன்று புரட்சித்தலைவர் ஏழைகளை வாழவைத்துக் கொண்டிருக்கிறார். மேற்கே கடலில் பாயும் நீரை குடிநீர்த் திட்டங்களுக்காகத்தமிழகத்திற்குத் திருப்பிட மைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். புரட்சித்தலைவர், அண்ணா, காமராசர் ஆகியோர் மக்கள் மத்தியில் இருந்து வந்த தலைவர்கள்'

விழா இறுதியில் செய்தித்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூறினார்.

கலைமாமணி திரு கரிக்கோல்ராசு குழுவினர், பேரறிஞர் அண்



பேரறிஞர் அண்ணா புகைப்படக் கண்காட்சித் திறப்பு

மாவட்டம் மலர இருப்பது வரலாற்றுப் பெருமைக்குரியது'' என்றார்.

திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.பிரேம்குமார் பேசுகையில், ''சமுதாயத்தில் பல இலட்சங்கள், பல கோடிகள் பணம் இருந்தால் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் திண்டுக்கல் மாவட்டத் தலைநகர் ஆவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். மக்கள் மனத்தில் உள்ளவைகளை உணர்ந்து செயல்பட்டார் அண்ணா'' என்றார்.

பழனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ.சேனாபதி பேசுகையில், ''மீனாட்சி ஆண்ட மாவட்டம் பிரிகிறது. புதிய மாவட்டத்தில் பழனி அமைந்துள்ளது. பழடும். புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா பெயரில் மாவட்டம் அமைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

கருத்தரங்கிற்குத் தலைமையேற்று மாண்புமிகு சுற்றுலா-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் பேசுகையில்,

''அண்ணா ஒரு பெருந்தன்மையாளர், பண்பாளர் என்பதற்கு எவ்வளவோ சான்றுகள் உண்டு. மதிக்கவேண்டியவர்களை மதித்தார் அண்ணா. காமராசர், ஜீவா போன்றோர் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினார். தந்தை பெரியார் அண்ணாவை நமக்கு அடையாளம் ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தை,பார்த்தோர் பாராட்டும் வகையில் நடித்துக் காண்பித்தனர். இத்துடன் முதல்நாள் நிகழ்ச்சி முடிவுற்றது. திண்டுக்கல் நகரமே விழாவைக் காணக்கூடியிருந்தது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று அண்ணா பெயரில் மாவட்டம் அமைவது குறித்து நகர மக்களும் பல்வேறு இடங்களிலிருந்து வந்த பொதுமக்களும் அணி அணியாகத் திண்டுக்கல் சிலப்பாடி நோக்கிச் சென்று கொண்டிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இரண்டாம் நாள், 15-9-85 கவிஞர் சுப்பு ஆறுமுகம்





குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

பிறகு நடந்த கருத்தரங்கிற்கு வந்திருந்தோரை வரவேற்ற மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கி. இராசமாணிக்கம் ''செந்தமிழ் வரலாற்றில் இடம் பெறும் நாள். தூய தொண்டிலே மெழுகு வர்த்தி அண்ணா. மறைந்து விட்ட சரித்திரத்தை இன்று அரசு வெளிப்படுத்தி, புதிய திண்டுக்கல் மாவட்டத்தை உருவாக்கி உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள். கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''அண்ணா, இயக்கம் கண்டு தமிழர் நலம் காணப் பாடுபட்டு வெற்றி பெற்றார். தமிழ்நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணம் செய்த தலைவன் பெயரில் மாவட்டம் அமைவது குறித்து மகிழ்ச்சி. அவர் வழியில் புரட்சித் தலைவர் தமிழர் நலத்திற்காகப் பாடுபட்டு வருகிறார்.''

மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு க.இராசாராம் அவர்கள் தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''அண்ணா அவர்கள் தன்னுடைய நாவன்மையால் பண்டித நேரு, டாக்டர் ராதாகிருஷ்ணன், லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி போன்ற தலைவர்களைக் கவர்ந்தார்.

''புரட்சித் தலைவர் அரசியலைக் கட்டிக்காத்து வருகிறார். நோபெல் பரிசு பெற்ற அன்னை தெரசாவின் பெயரில் பெண்கள் பல்கலைக் கழகம் அமைத்தவர் புரட்சித் தலைவர் தான். உலகில வேறு எங்கும் இதுபோன்று அமையவில்லை.

''1969ல் அண்ணா அமெரிக்காவில் இருக்கும்பொழுது தமிழகத்தில் செயற்கை மழை தருவிக்கச்செயல்திட்டம் தீட்டினார். அதை இன்று புரட்சித் தலைவர் செய்து வருகிறார்''.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''திண்டுக்கல் என்றால் எங்களுக்கு யாத்திரைத் தலம். முஸ்லீம்களுக்கு மெக்கா, இந்துக்களுக்குப் பழனி. சொந்த சகோதர சகோதரிகளைச் சந்திக்க வருவது போல் நாங்கள் இங்கு வருகிறோம்.

''புரட்சித் தலைவர் முதன் முதலில் பெரியார் மாவட்டம் கண்டார். அதனை ஒட்டி

அண்ணா மாவட்ட அமைப்புப் பணிக்கான நினைவுப் பரிசை அரசு தலைமைச் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி, இ.ஆ.ப. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் பெறுகிறார்.



அண்ணா மாவட்டம் அமைவது குறித்து மகிழ்ச்சி யடைகிறோம்'' என்றார்.

விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம் பேசுகையில், ''அண்ணா எழுத்தாற்றல், பேச்சாற்றல், ஈர்ப்புச் சக்தி உள்ளவர் என்பதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. எதிர்க்கட்சி எதிரிக்கட்சி அல்ல என்று மக்கள் அறியும் வகையில் தன்னுடைய தொகுதிக்குப் பெருந்தலைவர் காமராசரைக் கூட்டிச் சென்றார். முதல்வர் பதவி ஏற்கும்முன் எல்லாக் கட்சித் தலைவர்களையும் சந்தித்தார் அண்ணா'' என்றார்.

திண்டுக்கல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு என்.வரதராசன் பேசுகையில், ''திண்டுக்கல் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும் மகிழ்ச்சி நன்னாள் ஆகும். இந்தப்பகுதியில் ஆழப்படுத்தி தண்ணீர் எடுக்க முடியாது. குழாய் மூலம்தான் தண்ணீர் கொண்டு வரவேண்டும். மார்க்சிஸ்ட் சிந்தனையில் அண்ணாவைக் காண்கிறேன்'' என்றார்.

உசிலம்பட்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். ஆண்டித்தேவர் பேசுகையில் ''மக்களுக்கு உள்ள அன்றாடப் பணிகள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு சிறிய சிறிய மாவட்டங்கள் தேவை. அந்த வகையில் மாவட்டங்கள் அமைகின்றன. இதன் மூலம் தொழில் வளம் பெருக வாய்ப்பு ஏற்படும்'' என்றார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு உக்கம் சந்த் பேசுகையில், ''உத்திரப்பிரதேசத்தில் பல மாவட்டங்கள் உள்ளன. அதேபோல் இங்கும் பல மாவட்டங்கள் அமைய வேண்டும்'' என்றார்.

தமிழ்நாடு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவரும்,

### திண்டுக்கல் குடிநீர்த் திட்டம்:

திண்டுக்கல் குடிநீர்த் திட்ட மதிப்பீடு ரூ. 897.20 இலட்சங்கள். ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.12.50 இலட்சங்கள். நீர் ஆதாரம் வைகை நதி (பேரணைக்கு மேல்புறம்),' திண்டுக்கல் நகரின் தற்போதைய குடிநீர்த்திட்டத்தின் மூலம் 2016ஆம் ஆண்டு வரை முழுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையும்.

இத்திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனாக ரூ.324 இலட்சமும். கிராமக் குடிநீர்த் திட்ட மானியமாக ரூ. 46 இலட்சமும், அரசு அளித்துள்ள கடனாக ரூ. 527.20 இலட்சமும் அடங்கும்.

இத்திட்டத்தினால் நிலக்கோட்டை, ஆத்தூர், திண்டுக்கல் போன்ற சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்கள், நகரங்கள் பயன்பெறும். ஏறத்தாழ நான்கு இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினருமான திரு குமரி அனந்தன் பேசுகையில், ''சிறுசிறு மலைகள் தெரிகின்றன. சிறுமலை கண்டால் எச்சல் ஊறும் பகுதியும் தெரிகிறது. திண்டுக்கல் மலையில் திப்புக் கோட்டையும் உள்ளது. புரட்சித் தலைவருக்கு ஆசி செய்த இடம். சுதந்திர வீரர் சிவா இந்த மாவட்டத்தைச் சார்ந்தவர். தெரசாவிற்கு மேற்கு வங்கத்தில் கூட பல்கலைக் கழகம் இல்லை; இங்கு இருக்கிறது. தமிழ்த்தாயின் தவப்புதல்வன் அண்ணா. நான் பார்க்கும் பார்வையில் வியப்பு மனிதர் அண்ணா.

''கோவாவைச் சார்ந்த ரானடேயை விடுதலை செய்யவேண்டுமென்று போப்பாண்டவரிடம் கேட்டார் அண்ணா. இந்த அரசு உழைத்தவர்களை மதிக்கிறது'' என்றார்.


தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் திரு திருப்பூர் வி.ஆர்.மணிமாறன், ''சமுதாயப் புரட்சியை உருவாக்கியவர் அண்ணா'. அண்ணாவின் பெயரில் இயக்கம் கண்ட புரட்சித் தலைவர் இந்த இடத்திற்கு அண்ணா பெயரில் மாவட்டம் அமைப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு என்.நல்லுசாமி அவர்கள் பேசுகையில், ''அண்ணா தமிழுக்குச் சொந்தம். அண்ணா பெயரில் இன்று மாவட்டம் உதயமாகிறது. மொழிக்காக இயக்கம் கண்டார் அண்ணா. கங்கை கொண்ட சோழபுரம் அமைக்கப் பட்டுள்ளது போல செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குப் புரட்சித் தலைவர் சென்றதன் காரணமாக இன்று இந்த மாவட்டத்திற்கு அண்ணா பெயரிடப் படுகிறது'' என்றார்.

அன்று மாலை பேகம்பூரிலிருந்து வருவாய்த்துறை ஆணையர் திரு ஹரிபாஸ்கர், இ.ஆ.ப. அவர்கள் ஊர்வலத்தைத் துவக்கி வைத்தார். ஊர்வலம் சிலப்பாடி மைதானத்தை அடைய ஏறத்தாழ 4 மணி நேரம் பிடித்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகே அமைக்கப்பட்டிருந்த அண்ணா சிலையைத் திறந்து வைத்தார். அதன் அருகே அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஊர்வலத்தைக் கண்டு களித்தார். கடல் அலைபோல் மக்கள் கூட்டம். அது கண்ட முதல்வர் முகத்திலோ மகிழ்ச்சி வெள்ளம்.

சிலப்பாடி மைதானத்தில் அமைந்திருந்த பாண்டியன் அரங்கு நிரம்பி வழிந்தது. டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

(தொடர்ச்சி 46-ஆம் பக்கம்)






# உத்தமர் காந்தி

—நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கனார்



உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைத்து விட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பம் தேக்குதடா

சித்தம் குளிர்ந்தன பித்தம் தெளிந்திடும்
சீரியன் காந்தியின் பேர் சொன்னால்
புத்தம் புதியன முற்றும் இனியன
பொங்கிடும் உணர்ச்சிகள் எங்கிருந்தோ!

கிளர்ச்சிகொண் டான்மா பளிச்சென மின்னுது
கிழவன் காந்தியின் பழமை சொன்னால்
தளர்ச்சிகள் நீங்கிய வளர்ச்சியில் ஓங்கிய
நாட்டிகம் உடலில் கூட்டுதடா

சோற்றையும் வெறுக்குது காற்றையும் மறக்குது
சுத்தனக் காந்தியின் சக்தி சொன்னால்
கூற்றையும் வெருட்டிடும் ஆற்றலைத் திரட்டிடக்
கூடுதடா மனம் தேடுதடா.

துக்கமும் கலைந்தது ஏக்கமும் குலைந்தது
துன்பக் கனவுகள் தொலைந்ததடா
வாழ்க்கையும் திருந்திட நோக்கமும் விரிந்தது
வள்ளலக் காந்தியின் நினைப்பாலே

வஞ்சனை ஒடுங்கிடும் வெஞ்சினம் அடங்கிடும்
வாய்மையன் காந்தியின் தூய்மை சொன்னால்
அஞ்சின மனிதரும் கெஞ்சுதல் இனியில்லை
ஆண்மையும் அன்பும் அருளுமடா

ஜீவர்கள் உலகுள யாவரும் சமமென
செய்கையில் காட்டிய காந்தியடா
பாவமும் பழிகளும் தீவினை வழிகளும்
பதுங்குமடா கண்டு ஒதுங்குமடா

எழுபதும் ஐந்தும் குழகுழ வயசினில்
என்னே! காந்தியின் இளமையடா!
முழுவதும் அதிசயப் பழுதறு வாழ்க்கையின்
முத்தனடா பெரும் சித்தனடா

காந்தியின் தவக்கனல் சூழ்ந்தது உலகினைக்
காம தகனமென எரிக்குது பார்
தீய்ந்தன சூதுகள் ஓய்ந்தன வாதுகள்
திக்குத் திசையெல்லாம் திகைத்திடவே

ஏழைகள் எளியரின் தோழன்அக் காந்தியை
எப்படிப் புகழினும் போதாதே
வாழிய அவன்பெயர் ஊழியின் காலமும்
வையகம் முழுவதும் வாழ்ந்திடவே.

(கவிஞர் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'கவிதாஞ்சலி' நூலிலிருந்து)

பட்டி மருத்துவமனை 25 படுக்கைகள் கொண்டதாகவிரிவாக்கப்படும்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பேசுகையில், "புரட்சித் தலைவரின் பூ முகத்தைப் பார்ப்பதற்குக் காத்திருக்கின்ற மக்களே! சோதனைக்காலத்தில் கைகொடுத்த



ஆண்டிப்பட்டி மக்களே! அழியாத அஜந்தா ஓவியம் போன்ற புரட்சித்தலைவரை காணத்துடிக்கும் மக்களே! இன்று ஆண்டிப்பட்டிப் பகுதியில் உள்ள 231 கிராமங்கள் பயன்பெறும் வகையில் பல திட்டங்கள் முதல்வரால் துவக்கிவைக்கப்பட உள்ளன" என்றார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்கள் பேசுகையில் இந்தத்தொகுதியில் உள்ளாட்சித் துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் துவக்கப்பட உள்ளன என்றார்.

விழாவிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு புரட்சித்தலைவரின் பேச்சைக் கேட்காமல், முகத்தை பார்க்காமல், அவர் புரூக்ளின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு இருந்தபோது நீங்கள் பல ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றிபெற வைத்தீர்கள். ஆண்டிப்பட்டி மக்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் இன்று அவர் இங்கு வந்திருக்கிறார்.

"புரட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்தபோது ரூ.780 கோடி வரவு செலவுத்திட்டமாக இருந்தது. ஆனால் இன்று ரூ.3,400 கோடி வரவு செலவு திட்டமாக உள்ளது.

"அண்ணா கூறியது போல வசதி படைத்தவரிடம் வரி போட்டு ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பான திட்டங்கள் பொது மக்கள் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு இந்த அரசில் நடைபெற்று வருகின்றன.

"எல்லா தரப்பு மக்களின் அரவணைப்புபைப் பெற்று நல்லரசை நல்லவர் நடத்தி வருகிறார். மாண்புமிகு முதல்வரால் அருப்புக்கோட்டை, மதுரை மேற்குத் தொகுதி புகழ்பெற்றதுபோல் ஆண்டிப்பட்டியும் புகழ்பெறுகிறது"— இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபொழுது தன்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும்பொருட்டு 24 பெயர்ப் பலகைகளைத் திறந்து வைத்தார். வாழ்வில் நலிந்தோர் நல் வாழ்விற்குக் கடன் தொகைகள் மற்றும் தொழிற்கருவிகளை வழங்கினார். வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கட்குப் பட்டா வழங்கினார். பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை அளித்தார். புதிய ஊராட்சி ஒன்றியங்களைத் திறந்து வைத்தார். 11 இடங்களுக்குப் பேருந்துகளைத் துவக்கிவைத்தார்.


> தவறை மன்னிக்கும் குணம் ஒருவனின் உயர்ந்த பண்பாட்டைக் காட்டுகிறது.
>
> — காந்தியடிகள்

மூதாட்டி ஒருவர் உற்சாகத்தோடு முதல்வருக்கும் முதல்வரின் துணைவியாருக்கும் ஆரத்தி எடுத்துத் திலகம் இட்டார். மூதாட்டி புகைப்படமும் எடுத்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினார்.

முதல்வர் அவர்கட்குப் புதிய ஊராட்சி மன்றம் சார்பாக அண்ணா திருவுருவம் உள்ள தஞ்சாவூர்த் தட்டை நிதியமைச்சர் வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் கோபுர நினைவுச் சின்னம் ஒன்றை முதல்வருக்கு வழங்கினார். பாண்டியன் போக்குவரத்துக் கழகச் சார்பில் வெள்ளி குத்துவிளக்கைப்போக்குவரத்துத்துறை அமைச்சர் முதல்வருக்கு வழங்கினார்.

வாரியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், முதல்வர் அவர்கட்குச் சால்வைகள் மற்றும் பரிசுப் பொருள்களைக் கொடுத்தனர்.

தொகுதி மக்கள் சார்பில் முதல்வருக்குப் பட்டாடை அணிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அமைச்சர்களுக்கும், வாரியத்




தலைவர்கட்கும் மற்றும்தொகுதியில் பணியாற்றிய தலைவர்கட்கும் பட்டாடைகள் போர்த்தினார்.

தன் மீது அன்பைப் பொழிந்த ஆண்டிப்பட்டி மக்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இ.ராஜமாணிக்கம் நன்றி கூறினார்.

மக்கள் கூட்டம் கண்ணுக்கு எட்டிய தூரம் இருந்தது. முதல்வரின் உற்சாகத்தைக் கண்டு மக்கள் அடிக்கடி ஆரவாரம் செய்தனர். ஆண்டிப்பட்டியில் ஆங்காங்கே அலங்கார வளைவுகளும், வண்ண விளக்குகளும் தோரணங்களும் அமைத்து இருந்தனர். வரவேற்புப் பதாதைகள் எங்கும் அணி செய்தன. ஆண்டிப்பட்டியே விழாக்கோலம் பூண்டிருந்தது. மதுரையில் ஆண்டுதோறும் நடைபெறும் அழகர் திருவிழா போன்றிருந்தது.

— அ. மருது

# முதல்வர் துவக்கி வைத்த திட்டப்பணிகள்

**குடிநீர் வடிகால் வாரியம்**

கண்டமனூர், எம்.சுப்புலாபுரம், மீனாக்கண்டு, முத்துரெங்காபுரம், ஒக்கம்பட்டி, அடைக்கம்பட்டி, பந்துவார்பட்டி பாலசமுத்திரம், எர்ரதிம்மக்கான் பட்டி ஆகிய ஒன்பது கிராமங்களுக்கு இணைந்த குடிநீர் விநியோகத்திட்டம் ரூ.76.13 இலட்சத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

பயனடைவோர்—13,268 பேர்

நரசிங்காபுரம், துரைச்சாமிபுரம், பாலூத்து மந்திச்சுனை, மூலக்கடை, முத்தாலம்மன் பாறை ஆகிய 5 கிராமங்களில் இணைந்த குடிநீர் விநியோகத் திட்டம் ரூ. 31 இலட்சத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

பயனடைவோர்-8,120 பேர்

**மக்கள் நல்வாழ்வுத்துறை**

கடமலைக்குண்டில் ரூ.14 இலட்சம் செலவில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்படவுள்ளது. இதில் தளவாடச் சாமான்கள் ரூ. 4.82 இலட்சம் செலவில் வைக்கப்பட உள்ளன.

பயனடைவோர்—63,500 பேர்

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம்**

மயிலாடும்பாறை, ஆத்தங்கரைப்பட்டி கண்டமனூர், அருப்புக்கோட்டை நாயக்கன்பட்டி ஆகிய 4 ஊர்களில் ரூ. 7.50 இலட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள 125 ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு திறந்துவைக்கப்பட்டன.

பயனடைவோர் —680 பேர்

ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் கன்னியப்பபிள்ளைபட்டியில் ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் திறந்துவைக்கப்பட்டது.

பயனடைவோர்—50 மாணவர்கள்

**ஊரக வளர்ச்சித்துறை**

வாலிப்பாறை, தங்கம்மாள் புரம், தர்மராஜபுரம், கோம்பைத்தொழு, காமன்நல்லூர் ஆகிய ஊர்களில் மொத்தம் ரூ. 2.80 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள ஐந்து சமுதாயக் கூடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

பயனடைவோர்—800 பேர்

ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.4.38 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர்களுக்கென கட்டிமுடிக்கப்பட்டுள்ள 73 குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டன.

பயனடைவோர்—373 பேர்

கடமலைக் குண்டுவில் ரூ. 1 இலட்சம் செலவில் கால்நடை மருந்தகம் கட்டப்படவுள்ளது.

பயனடையும் கால்நடைகள் சுமார்—2,500

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை நிர்வாக மேம்பாட்டுக்காக இரண்டாகப் பிரித்து புதிதாக அமையவுள்ள கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியங்கள் துவக்கி வைக்கப்பட்டன.

**நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை**

மேல்மங்கலத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கென ரூ. 6 இலட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள ஏழு குடியிருப்புகள் திறந்துவைக்கப்பட்டன.

பயனடைவோர்—33 பேர்

**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**

கன்னியப்ப பிள்ளைபட்டி உயர்நிலைப்பள்ளிக்கு ரூ. 1.50 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டப்படவுள்ளது.

பயனடைவோர்—60 மாணவர்கள்.

ஆண்டிப்பட்டி அரசுமேல்நிலை பள்ளிக்கு ரூ. 2.50 இலட்சம்செலவில் கூடுதல் கட்டடம் கட்டப்படவுள்ளது.

பயனடைவோர் 90 மாணவர்கள். அரசின் இச்சிறிய திட்டம் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒன்றாகும்.

**தமிழ்நாடு தீயணைப்புத்துறை**

ஆண்டிப்பட்டியிலும், மயிலாடும்பாறையிலும் புதிதாக ரூ.9.69 இலட்சம் செலவில் அமையவுள்ள தீ அணைப்பு நிலையங்களைத் திறந்து வைத்தல்.

பயனடையும் கிராமங்கள்: 256
பயனடைவோர்: —2,23,134 பேர்

**தமிழ்நாடு காவல்துறை**

வருசநாடு, கன்னியப்பபிள்ளைபட்டி, ஜெயமங்கலம் ஆகிய ஊர்களில் புதிய புறக்காவல் நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டன.

ராஜதானியில் ஏற்கெனவே அமைந்துள்ள புறக்காவல் நிலையத்தின் நிலையை உயர்த்தி காவல் நிலையமாக அமைத்தல்.

செலவினம்: ரூ.7.87 இலட்சம்

**பாண்டியன் போக்குவரத்துக் கழகம்**

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பதினொன்று புதிய வழித்தடங்களை ரூ. 33 இலட்சம் செலவில் துவக்கியுள்ளது. இதனால் 40க்கு மேற்பட்ட ஊர்கள் பயன்பெறும்.

**தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியம்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் காலனித் தொழிலாளர்களுக்கான மூன்று பணிக்கூடங்கள் ரூ. 22,500 மதிப்பிலும், மின் விசை செக்கு ஒரு நபருக்கு ரூ. 21,000 மதிப்பிலும், ஐந்து நச்சுத் தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் வழங்க ரூ.6000 மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளன.

பயனடைவோர்:9 தொழிலாளர்கள்.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

அன்னை சத்யா நகர், இராஜகோபாலன்பட்டி, சக்கம்பட்டி ஆதிதிராவிடர் காலனி, கொண்டநாயக்கன்பட்டி, சாமியார் மடம், சீத்தாராமதாஸ் நகர் மற்றும் குள்ளப்புரத்தெரு ஆகிய குடிசைப் பகுதிகளில் ரூ. 17.85 இலட்சம் மதிப்பீட்டில் 7,010 குடும்பங்கள் பயனடையும் வகையில் மேம்பாட்டுத் திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம் தனது பணிகளை சென்னை மற்றும் புறநகர்ப்பகுதிகளில் செயல்படுத்தி வருகிறது. முதன் முறையாக நகரப் பஞ்சாயத்துக்களில் குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுத்திட்டங்களை விரிவுபடுத்துகிறது ஆண்டிப்பட்டியில்.

**மருத்துவம் மற்றும் சுகாதாரம்**

ஆண்டிப்பட்டி அரசு மருந்தகத்தை 25 படுக்கைகள்கொண்ட மருத்துவமனையாக மாற்றவும் மற்றும் அறுவை அரங்கு, நுண் கதிர்ப் பிரிவு, இரத்தப் பரிசோதனை நிலையம் ஆகியவை ரூ. 15.4 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படவுள்ளன.

பயனடைவோர்—15,396 பேர்

**வருவாய்த்துறை**

பெரியகுளம், உத்தமபாளையம், உசிலம்பட்டி வட்டங்களைச் சேர்ந்த மக்கள் 717 பேர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது.

(17-9-85 அன்று ஆண்டிப்பட்டியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் துவக்கிவைத்த திட்டப்பணிகள்)

## ஆண்டிப்பட்டி தொகுதியில் நடைபெறும் வேலை விவரம்

| | அரசுத்துறை | | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சித்துறை | .. | 28.55 |
| 2. | வேளாண்மை பொறியியல் துறை | .. | 9:58 |
| 3. | கால்நடை பராமரிப்புத்துறை | .. | 0.81 |
| 4. | மீன் வளத்துறை | .. | 2.20 |
| 5. | நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை | .. | 26.44 |
| 6. | பொதுப்பணித்துறை | .. | 810.11 |
| 7. | கிராமியத் தொழில்துறை | .. | 0.46 |
| 8. | கைத்தறி மற்றும் துணி நூல் | .. | 55.92 |
| 9. | கிராமிய வீட்டு வசதித் திட்டம் | .. | 17.60 |
| 10. | குடிசைப் பகுதி மாற்று வாரியம் | .. | 17.42 |
| 11. | தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் | .. | 7.25 |



ஆண்டிப்பட்டிப் பகுதியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 18.7.84 அன்று தொடங்கி வைத்த ஆக்கப் பணிகள் வருமாறு:

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடமலைக்குண்டு-வெள்ளி மலைக்கு ரூ. 2 கோடியே 68 இலட்சம் செலவில் 41 கிலோ மீட்டர் சாலை அமைக்கும் பணி.

30 சிறு கிராமங்களை இணைக்கும் இப் புதிய சாலை மூலம் 10 ஆயிரத்திற்கும் மேலான மக்கள் பயன்பெறுவர்.

**சமுதாயக்கூடங்கள்**

ரூ. 8 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் உருவான 12 சமுதாயக் கூடங்கள்

**பள்ளிக் கட்டடங்கள்**

ரூ. 1 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பீட்டில்கட்டப்பட்ட 2 பள்ளிக் கட்டடங்கள்

**அண்ணா கூட்டுறவு நூற்பாலை**

ரூ. 7 கோடியே 144 இலட்சம்செலவில் ஆண்டிப்பட்டி-கண்டமனூர் விலக்கு அருகில் புதிதாக உருவாக்கப்பட்ட "அண்ணா கூட்டுறவு நூற்பாலை"

இதன் மூலம் சுமார் 700 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.



# ஆண்டிப்பட்டி அரசர்பட்டி ஆகிறது

ஆண்டிப்பட்டியை அரசர்பட்டியாக மாற்றும் வகையில் பல்வேறு ஆக்கப்பணிகளின் திட்டங்களைத் தொடங்கும் வகையிலும், அடிக்கல் நாட்டும் வகையிலும் ரூ. 14 கோடி செலவில் ஆண்டிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளித் திடலில் 17.9.85 அன்று மாண்புமிகு முதல்வர் தொடங்கி வைக்கும் விழா நடைபெற்றது.

மேடையின் முன் மாண்புமிகு முதல்வர் தோன்றியவுடன், அனைத்துப் பக்கமும் சென்று மக்களுக்கு வணக்கம் கூறினார். மலர்போல மக்கள் முகங்கள் முதல்வரைக் கண்டதும் மலர்ந்தன. திடலில் எழுந்த வாழ்த்தொலி அடங்க நீண்ட நேரமாயிற்று.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழாத் தொடங்கியது. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா. வரதராஜுலு இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றுகையில், "கடந்த நான்கு ஆண்டுகளில் ஆண்டிப்பட்டி பகுதிக்கு ரூ. 4 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஆண்டிப்பட்டிப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 1,02,107 பேரை மேம்படுத்த பல திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம்" என்றார்.

பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு பெ.செல்வேந்திரன் பேசுகையில், "கடமலைக்குண்டு பகுதியில் உள்ள வருசநாடு மிகவும் அடர்ந்த காட்டுப் பகுதியாகும். யானையின் தொந்திரவுகளும் காலரா நோய் போன்றவைகளும் உண்டு. மழைக்காலத்தில் தொடர்புகொள்ளமுடியாது. இன்று இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன" என்றார்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு என்.வி.என். செல்வம் பேசுகையில், "1984ல் சென்னையிலிருந்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டிப்பட்டி பகுதியிலும் குடிசைமாற்று வாரியப் பணிகள் முதன் முறையாக நடைபெற உள்ளன. சாக்கடை, கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்படும்" என்றார்.


'தாட்கோ' நிறுவனத்தலைவர் திரு அன்பழகன் பேசுகையில், 125 வீடுகள் இன்று திறக்கப்பட உள்ளன. மேலும் ஆண்டுக்கு 75 வீடுகள் வீதம் 375 வீடுகள் 5 ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்படும்." என்றார்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு கோடம்பாக்கம் எம். குமார் பேசுகையில், "நான் பொறுப்பேற்றதற்குப் பின் இந்த ஆண்டிப்பட்டிக்குத்தான் முதன் முதலில் வந்தேன். முதன்முதலாகப் பாடநூல் நிறுவன சார்பில் உயர்நிலைப்பள்ளிகளுக்கான வகுப்பறைகள் இங்கே கட்டப்படும்" என்றார்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் துணைத் தலைவர் திரு பட்டுக்கோட்டை எஸ்.பாப்பையன் பேசுகையில், "ஆண்டிப்பட்டியில் 100 கதர் நெசவுக்கூடங்களும் பல்வேறு பணிகளும் ரூ. 29 இலட்சத்தில் 1985க்குள் முடிவு பெறும். இதன் மூலம் 353 பேர் பயன் அடைவார்கள். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ரூ. 11 கோடியில் இருந்த வருவாய் இன்று ரூ.136 கோடியாக உயர்ந்துள்ளது" என்றார்.

தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத் தலைவர் திரு உக்கம் சந்த் பேசுகையில், "ஆண்டிப்பட்டி தொகுதியில் குடிநீர் வசதிகளுக்காக ரூ. 117 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது" என்றார்.

முன்னாள் அமைச்சர் திரு எஸ்.இராகவானந்தம் எம்.எல்.சி அவர்கள் பேசுகையில், "ஆண்டிப்பட்டி மக்களாகிய நீங்கள் புரட்சித்தலைவரை நம்பி வாக்களித்தீர்கள். வாக்களித்தபடி இந்த அரசு இன்று பல்வேறுபணிகளை ஆற்றி வருகிறது" என்றார்.



மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு ஒ.எஸ். எம்.பூசுப் அவர்கள் பேசுகையில், "இந்தத் தொகுதிக்கு ரூ. 8 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 8,000 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும் வகையில் கண்மாய்கள் கட்டப்படும். தூர்வாரும் பணிகளும் நடைபெற்று வருகின்றன" என்றார்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு திருப்பூர் இரா. மணிமாறன் பேசுகையில், "குடும்பத்தில் ஒருவருக்கு வீடு என்ற திட்டத்தின் அடிப்படையில் ரூ. 2 கோடி செலவில் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கட்கும் சாதாரண மக்களுக்கும் வீட்டு வசதி வாரியம் மூலம் விரைவில் ஆண்டிப்பட்டியில் வீடுகள் கட்டித் தரப்படும்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு ஏ. அருணாசலம் அவர்கள் பேசுகையில், "ரூ. 8 இலட்சம் செலவில் வீடுகள் ஆண்டிப்பட்டிப் பகுதியில் ஆதிதிராவிடர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் திறக்கப்படுகின்றன" என்றார்.

சேடப்பட்டி, சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. முத்தையா பேசுகையில், தொகுதி மக்களுக்குத்தேவையான திட்டப்பணிகள் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு - ஏன், இந்தியாவிலேயே இங்கு தான் நடைபெற்றுள்ளன" என்றார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு என். நல்லுசாமி அவர்கள் பேசுகையில், "இந்தியத் துணைக்கண்டத்திலே எவ்வளவோ முதல்வர்கள் இருந்தார்கள். தாங்கள் வெற்றிபெற்ற தொகுதியில் இது போன்ற திட்டங்களை ஒரே நாளில் அறிவித்து செயல்படவில்லை" என்றார்.


மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், "ஓராண்டிற்கு முன்னர் இந்தத் தொகுதியில் நூற்பாலையைத் திறந்தார் மாண்புமிகு முதல்வர். பல சரித்திரத்தைத் தமிழகத்தில் உருவாக்கி வருகின்ற புரட்சித் தலைவரை, நீங்கள் மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்ததற்கு நன்றி கூறுகின்றேன்" என்றார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் பேசுகையில், "தமிழகத்திலே யாரும் பெற்றிராத பலனை ஆண்டிப்பட்டி மக்கள் பெற்று இருக்கின்றீர்கள். இந்த ஆண்டிப்பட்டியில் 20 நகரப் பேருந்துகளும் 35 புறநகர்ப் பேருந்துகளும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் வந்து போகின்றன. இன்று துவக்கி உள்ள புதிய வழித்தடங்கள் 11ல் 9 பேருந்துகள் இந்த ஆண்டிப்பட்டியைத் தொட்டுச் செல்லும். இங்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகம் சார்பில் ஒரு புதிய பணிமனை நிறுவப்படும்" என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் பேசுகையில், "இந்த மாபெரும் கூட்டத்தைக் காணும்போது பெருமகிழ்ச்சியடைகின்றேன். 5000 ஜனத்தொகைக்கு ஒரு தாய்சேய் நல விடுதி என்ற அடிப்படையில் 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும். ஆண்டிப்





# குடும்ப நலத்தில் செங்கையின் சிறப்பான பணிகள்

"ஒன்று பெற்றால் ஒளிமயம்
இரண்டு பெற்றால் இன்பமயம்
அதிகம் பெற்றால் அல்லல் மயம்"

"குடும்பநலம்" என்று சொன்னவுடனே, குழந்தை பெறக்கூடாது என்பதற்கான பிரசாரம் என்று பலர் எண்ணிவிடுகிறார்கள். அப்படி அல்ல. குடும்ப நலத்தில் ஒரு வீட்டின் நலமும், நாட்டின் நலமும் அடங்கியிருக்கிறது.

"வீட்டைக் கவனிக்கத் தெரியாதவன் - வீட்டை ஆளத் தெரியாதவன் - வீட்டை நல்ல முறையில் கொண்டு செல்ல முடியாதவன் - நாட்டையும் நடத்திச் செல்ல முடியாதவன் ஆகிவிடுவான்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"மக்கள் தொகைப் பெருக்கம் மதுவைப் போலக் கேடு பயக்கும்" என்று. எச்சரித்துள்ளார்கள் நமது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள்.

குடும்பநலத் திட்டக்கொள்கை உலகளாவிய கொள்கை என்பதையும் அவர்கள் அழகாக வலியுறுத்தியுள்ளார்கள். "குடும்பநலத் திட்டம் என்ற கோட்பாடு தனிப்பட்ட எந்த நபரினுடைய கொள்கையும் அல்ல. அல்லது எந்தக் கட்சியினுடைய கொள்கையும் அல்ல. அது நாடு முழுமைக்குமான சமதாயக்கொள்கை. உலகளாவிய கொள்கை. அனைவரும் ஒருமித்த கருத்துடன் ஏற்றுச் செயல்படுத்த வேண்டிய கொள்கை. எனவே அதிலே அரசியல், சாதி, சமய, இன வேறுபாடுகளுக்கோ, வேற்றுமைகளுக்கோ இடமே இல்லை. எவ்வித வேறுபாடுமின்றி நாட்டு மக்கள் அனைவரும் 'சிறு குடும்ப நெறி' ஏற்க முன்வர வேண்டும்" என்பது நமது பேரன்புக்குரிய முதல்வரின் அமுதவாக்கு.

குடும்பநலத் திட்டத்தில் அரசு அலுவலர்களை முற்றிலுமாக ஈடுபடுத்தவும் இந்தத் தேசியப் பிரச்சனையில் மக்களின் முழு கவனத்தைத் திருப்பவும் 23-8-85 அன்று காஞ்சியில் வரலாறு காணாத குடும்பநலப் பேரணி மற்றும் குடும்ப நல உறுதியேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான அரசு அலுவலர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். அவர்களிடையே பொங்கிய பேரார்வம் ஊர்வலத்தைப் பார்த்த மக்களைப் பிரமிக்கச் செய்தது. 'ஊரே திரண்டது: அதைப் பார்க்கப் பாரே வந்தது' என்று சொல்லும் அளவுக்கு அன்றைய தினம் காஞ்சியில் குடும்பநலப் பேரணி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

---

**கே. ஏ. மாத்யூ, இ ஆ ப.**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**செங்கல்பட்டு மாவட்டம்**

---

விழாவுக்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள்,'காஞ்சியில் இப்படிப்பட்ட கருத்தாழமிக்க ஊர்வலம் இதுவரையில் நடைபெற்றதில்லை'என்று மனமாரப் புகழ்ந்துரைத்தார்.

காஞ்சி பச்சையப்பன் மகளிர் கல்லூரியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. குடும்பநல இணை இயக்குநர் திரு. கோ. இராதாகிருஷ்ணன் அதைத் தொடங்கி வைத்தார். அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் அரசு அலுவலர்கள், குடும்பநல உறுதியேற்பு விழா நடைபெற்றது. இந்த இரண்டு இடத்துக்கும் இடையே உள்ள தூரம் 3.5 கிலோ மீட்டர். இந்தத் தூரத்தை உற்சாகத்தோடு ஊர்வலம்கடந்து வந்தபோது சாலையின் இருமருங்கும் மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்து, கண்டு களித்தனர்; வாழ்த்தி மகிழ்ந்தனர்; ஊர்வலத்தின் நீளம் மட்டும் 2 கிலோ மீட்டர் இருந்தது என்றும் ஒரு இடத்தைக் கடந்து செல்ல 2 மணி நேரம் பிடித்தது என்றும் பத்திரிகையாளர்கள் மதிப்பிட்டனர்.

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் அரசு அலுவலர்களுக்குக் குடும்ப நல உறுதி மொழியைச் செய்து வைத்தார்கள். அந்த உறுதி மொழி பின்வருமாறு:

### உறுதி மொழி

"தமிழக அரசு ஊழியர்களாகிய நாங்கள் நமது அரசும்நாமும் முக்கியமாகக் கருதும் குடும்ப நலத்திட்டத்தின் அவசியம் குறித்து நன்கு உணர்ந்துள்ளோம். அத்திட்டத்தின் மகத்தான வெற்றிக்காக எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நாங்கள் எப்பொழுதும் அளித்திடுவோம் என்று உறுதி கூறுகின்றோம்.

"எல்லாவிதமான கருத்தடை முறைகளைப் பற்றி நாங்கள் அறிந்து கொள்வோம்.

"முதல் குழந்தைக்குப் பிறகு, இரண்டாவது குழந்தையைப் பெற்று வளர்ப்பதற்கான பொருளாதார வசதி, அன்பு, பாசம் தேவை ஆகியவை எங்களிடம் உண்டா என்பது பற்றி நாங்கள் எங்கள் மனைவிகளுடன் கலந்து ஆலோசிப்போம்.

"இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளமாட்டோம். ஆண்களாக இருந்தால் 33 வயதுக்கு முன்பாகவும், பெண்களாக இருந்தால் 25 வயதுக்கு முன்பாகவும் எங்களது கடைசிக் குழந்தையைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்வோம்.

"எங்கள் மனைவி, மக்கள் நலமுடன் ஆரோக்கிய வாழ்வுவாழும் வகையில் மனைவிக்கு 20 வயது ஆவதற்கு முன்னால், நாங்கள் எங்களது முதல் குழந்தையைப் பெற்றுக் கொள்ள மாட்டோம்.

"இந்த உயர்ந்த - உன்னத இலட்சியங்களை எங்கள் உற்றார் உறவினர்களுக்கும் இனிய நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்வோம்''.

குடும்பநலத்தில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்குக் காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு. வி. ஆர். இலட்சுமிநாராயணன், இ.கா.ப., சான்றிதழ்கள் வழங்கினார். குடும்ப நலத்தில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்குப் பரிசுகளையும் நலிந்தோர் நல்வாழ்வு பெறக் கடன் உதவிகளையும் திருமதி, மோளி அந்தோணி வழங்கினார்.

தலைமைச் செயலாளர், திரு டி.வி. அந்தோணி, இ.ஆ.ப. அவர்கள் எழுதிய 'குடும்ப நலத் திட்டத்திற்கான புதிய சிந்தனைகள்' என்ற நூலை, குடும்ப நல இயக்குநர் திருமதி ஓ. பி. சோசம்மா, இ.ஆ.ப. வெளியிட, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.ஏ. மாத்யூ, இ.ஆ.ப. பெற்றுக் கொண்டார்.

செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஏ. மாத்யூ, இ.ஆ.ப., எழுதிய ''குடும்பநலத்தில் செங்கையின் சிறப்பான சாதனை'' என்ற நூலை, குடும்ப நல இணை இயக்குநர் திரு. கோ. இராதாகிருஷ்ணன் வெளியிட, மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. எஸ். சரவணப்பெருமாள், இ.கா.ப. பெற்றுக் கொண்டார்.

திரு. கே. பாலாஜி எம்.எல்.ஏ. திரு. எல்ல. ராசமாணிக்கம், எம்.எல்.ஏ., திரு. கே. நரசிம்ம பல்லவன் எம்.எல்.ஏ., திரு. ஜி. அனந்தகிருஷ்ணன் எம்.எல்.ஏ., திரு. ஜி. கே.ஜே. பாரதி எம்.எல்.ஏ., திரு காஞ்சி பன்னீர் செல்வம் (பெருந்தலைவர், சென்னை-செங்கை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம்), திருமதி இலட்சுமி நாராயணன் ஆகியோர் சிந்தனையைத் தூண்டும் வகையில் சிறப்புரையாற்றினர்.

மக்கள் கல்வித் தகவல் அலுவலர் திரு. எஸ். அப்பர்சுந்தரம் வரவேற்புரையும், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மு. முத்துக்காளத்தி நன்றியுரையும் நிகழ்த்தினர்.

**உண்மையான பக்தன்**

கனவிலும் கூடத் தனது பக்திக்கு இறைவனிடம் கைம்மாறு வேண்டாதவனே இறைவனின் உண்மையான பக்தன் ஆவான்.

— காந்தியடிகள்


அரசு அலுவலர்கள் குடும்ப நல உறுதிமொழியேற்பு மற்றும் குடும்பநல ஊர்வலம் மிகச் சிறப்பாகவும் சீரிய குறிக்கோளுடனும் திட்டமிடப்பட்டு, எழுச்சியோடும் மக்கள் விழிப்படையும் வகையிலும் புதிய வரலாறு படைக்கத்தக்க முறையில் வெற்றிகரமாக நடந்து முடிந்ததற்குக் காரணம், பல்லாயிரக்கணக்கான அரசு அலுவலர்கள், அவர்தம் குடும்பத்தினர், அனைத்துத் துறையின் மாவட்ட அலுவலர்கள், கல்லூரி முதல்வர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், பொதுத் தொண்டில் ஈடுபட்ட சேவை நிறுவனங்கள், பல்வேறு அமைப்புகள், பெருந்திரளான பொதுமக்கள் ஆகிய அனைவரின் ஒருமித்த ஒத்துழைப்பே ஆகும்.

இந்த ஒத்துழைப்பு எங்களுக்குத் தொடர்ந்து கிடைத்து, அரசு செங்கை மாவட்டத்திற்குக் குடும்பநலத் திட்டத்தின் கீழ் அளித்துள்ள, இலக்கினை மிஞ்சி சாதனை புரிவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில் செங்கை மாவட்டத்தின் இலக்கும் சாதனையும் வருமாறு:

குடும்பநல அறுவைச் சிகிச்சை

| ஆண்டு | இலக்கு | சாதனை |
|---|---|---|
| 1980—81 | 8,500 | 17,437 |
| 1981—82 | 14,280 | 16,979 |
| 1982—83 | 12,600 | 15,812 |
| 1983—84 | 35,000 | 35,355 |
| 1984—85 | 49,600 | 51,301 |



❋ ஜெர்மனியில் ''ஹெம்லஸ் டார்பர்'' என்ற ஏரி உள்ளது. இதன் மேற்புரத்தில் உள்ள நீர் இனிப்பாகவும், உள்பக்கம் உள்ள நீர் கசப்பாகவும் உள்ளது.

❋ ஜப்பானிய டைப்ரைட்டிங் மிஷினில் உள்ள எழுத்துக்கள் மொத்தம் 2,863 ஆகும்.

❋ விமானத்தில் பயணம் செய்யும் பொழுது இரவு, பகல் என்ற வேறுபாடு தெரியாது.





# வளர்ச்சிப் பாதையில் தருமபுரி

**சே**லம் மாவட்டத்தில் ஒரு பகுதியாக இருந்த தருமபுரி 1965 அக்டோபர் மாதம் தனி மாவட்டமாக 16 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. காலம் காலமாக மழையின்மையாலும், வறட்சியாலும், பிற்பட்டுக்கிடந்த இம் மாவட்டத்தில் 12 வட்டாரங்கள் வறட்சிக்கு உட்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டு இப்போது வளர்ச்சிப் பணிகளைக் கண்டு வருகின்றன. 6வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 7 வது ஐந்தாண்டுத்திட்ட ஒதுக்கீடு இன்னும் இறுதியாக்கப்படவில்லை. எனினும், நடப்பு ஆண்டுக்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**வளர்ச்சிப்பணிகள்**

வறட்சியில் வாழ்ந்தாலும், இம் மாவட்டத்து மக்கள் கடும் உழைப்பாளிகள். மானாவாரியாக இருந்தாலும் நிலத்தையே நம்பி வாழும் விவசாயிகள் இங்கு அதிகம். மழைநீரைத் தேக்கி மண் வளத்தைப் பாதுகாத்து விளை நிலத்தில் பல நல்ல பலன்களை இவர்கள் கண்டு வருகின்றனர். நெல், கரும்பு, சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களைப் பயிரிட்டு இவர்கள் வருவாய்க்கு வழிதேடுகின்றனர். கூடவே, பட்டுப்புழு வளர்ப்பு, பழ மரங்கள் சாகுபடி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி ஆகியவற்றிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.


தருமபுரி மலைப் பகுதிகளிலே சந்தன மரங்கள் ஏராளமாக விளைகின்றன. ஆண்டுதோறும் ஐந்துகோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன மரங்கள் இங்கு கிடைக்கின்றன. இதுதவிர இங்குள்ள மரங்களில் முதலிடம் பெறுவது மாமரம். மாங்கனிகளில் ஒரு வகையான நீல மாம்பழத்திற்குப் பெயர்பெற்றது சேலமல்ல, தர்மபுரிதான். ஏறக்குறைய 11,000 எக்டேர் நிலத்தில் மாமரங்கள் படர்ந்துள்ளன. திராட்சை, உருளைச் சாகுபடி முதலியவற்றில் இம்மக்கள் ஈடுபட்டுள்ளனர். ஜீனூர் என்னும் இடத்தில் 80 எக்டேர் வெற்றுத் திடலில் இப்போது பல வகையான பழ மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன் தண்டு துளைப்பான் போன்ற பூச்சிகளால் மாமரங்கள் பாதிக்கப்பட்டபோது மரத்திற்கு 25 காசு வீதம் சிறு விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்டு பல்வேறு மாமரங்களும் பாதுகாக்கப்பட்டன. பெரும் விவசாயிகளிடமிருந்து மொத்த செலவில் ஒரு பாதி வசூல் செய்யப்பட்டு பூச்சி கொல்லி மருந்துகளின் மூலம்பயிர்ப்பாதுகாப்புமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏறத்தாழ 17,000 எக்டேர் நிலத்தில் வளர்ந்துள்ள மாமரங்கள் இதனால் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு இந்த ஆண்டு காய்த்துக் குலுங்கின.

இதைப் போலவே எண்ணெய் வித்துக்களிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுகிறது. 85000 எக்டேர் நிலப்பரப்பில் 60,000 எக்டேருக்கு மேல் வேர்க்கடலையும், 15,000 எக்டேர் நிலத்தில் எள்ளும் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் எண்ணெய் வித்துக்களின் மொத்த அளவு 60 டன்கள்.

**பட்டுப்புழு வளர்ப்பு**

தருமபுரி மக்களின் வாழ்வில் பசுமையூட்டி வரும் ஒரு அம்சம் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில். இங்கு நிலவும் தட்பவெட்ப நிலை இதற்கு மிகவும் சாதகமாக உள்ளது. 1979-80ல் 5,000 ஏக்கரா நிலத்தில்தான் முசுக்கட்டைச் செடிகள் பயிரிடப்பட்டன. இன்று 17,000 ஏக்கர் நிலத்தில் இந்தச்செடிகள் தழைத்து வருகின்றன. ஒரு ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டைச் செடி பயிரிட்டால் ஆண்டொன்றுக்கு 10,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். இந்த வருமானம் தொடர்ந்து 15 ஆண்டுகள் நீடிக்கும். இதற்காக அவர் ஏற்கும் இடுபொருள் செலவு 2,000 ரூபாய்தான். தருமபுரி மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் இன்று பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் இத்துடன் நின்றுவிடவில்லை. தங்களுடைய குழந்தைகளும் இத்தொழிலில் ஆர்வம் காட்டி வாழ்வில் முன்னேறவேண்டும் என்ற உறுதியோடு அவர்களைப்பட்டுநூல் சுற்றும் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பிவைக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பள்ளிப் படிப்பை முடித்த பெண்கள். அரசு இவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகை அளித்து முறையான பயிற்சியும் அளிக்கிறது. கிருஷ்ணகிரியில் உள்ள நிலையத்தில் மட்டும் சுமார் 200 பெண்கள் பயிற்சியில் தேறி வேலை செய்து வருகின்றனர். இவர்களில் 15 பேர் ஆதிதிராவிட வகுப்பினர். இந்த




EXISTING WATER SUPPLY SYSTEM
/SCHEMATIC/

# சென்னைக் குடிநீர் - ஐ.நா. தொழில் நுட்ப உதவி

**ஜெ. ஆர். இராமநாதன்**
**ஆணையர் மற்றும் அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறை தலைவர், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம்.**

சென்னைப் பெருநகருக்குக் குடிநீர்ப் பெருக்கும் முகத்தான் ஆரணி, கொடுதலையாறு மற்றும் பாலாறு படுகைகளில் நீர் ஆய்வு மற்றும் நில நீர் ஆய்வு செய்து உதவுவதற்கு ஐ.நா. தொழில் நுட்பக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக் குழுமம் ஒத்துக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1.1 மில்லியன் அமெரிக்கன் டாலர் உதவியும் தமிழக அரசின் பங்காக ரூ. 102 இலட்சமும் முதலீடாகும்.

இந்த ஆய்வு 1982ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. 1985 செப்டம்பர் திங்கள் வரையில் மூன்றாண்டுகளுக்குஇவ்வாய்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயலாக்குவதற்காக ஐ.நா. தொழில் நுட்பக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக் குழுமமும் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் - கழிவு நீரகற்று வாரியமும் நியமிக்கப்பட்டுள்ளன.

ஐ.நா. தொழில் நுட்பக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக் குழுமம் இந்த மூன்று ஆற்றுப் படுகைகளிலும் நில ஆய்வு மற்றும் நீர் ஆய்வுகள் விரிவாகச் செய்து புதிதாக- பூண்டி, கொடுதலை ஆற்றுப் படுகை மற்றும் கன்னிகைப்பேர் பகுதிகளில் நிலநீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்தனர்.

1983-ஆம் ஆண்டில் எழுந்த குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாக நகரின் குடிநீர்ப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகர் குடிநீர்ப்பெருக்கத்திற்கு இவ்வரசு நீண்டகால நடவடிக்கைகள் எடுத்ததோடு அல்லாமல் சில குறுகிய கால நடவடிக்கைகளும் எடுக்கத் திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக ஐ. நா. தொழில் நுட்பக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்குழுமம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து நில நீரையும் எடுப்பதற்கு ஒரு விரிவான திட்டத்தினை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. 1985 மார்ச்சுத் திங்களில் ஒரு விரிவான திட்டத்தை ஐ.நா. தொழில் நுட்பக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக் குழுமம் கொடுத்துள்ளது.



சென்னைப் பெருநகர் குடிநீர்ப் பெருக்கத்திற்கு நீண்ட கால செயலாக்கத் திட்டத்தைவிரைவு படுத்துவதோடு கூட உடனடியாகக் குறுகிய காலத் திட்டங்களை நகர குடிநீர் வழங்கலுக்குத் தடை ஏற்படாவண்ணம் இருக்க நடவடிக்கைஎடுப்பதும் அவசியம் ஆகும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்தக்குறுகிய கால நடவடிக்கைகளின் ஒரு கூறாக 15 கோடி ரூபாய் அளவில் தினம் 12 மில்லியன் காலன் நீரை ஐ.நா. தொழில் நுட்பக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக் குழுமத்தால் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து நீர் எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஐக்கியநாட்டு வளர்ச்சிக் குழு தொழில் மற்றும் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக் குழுவின் இறுதி அறிக்கை 25.7.'85 அன்று நடந்த நான்காவது ஐ.நா. வளர்ச்சி முத்தரப்புக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. தமிழக அரசு சார்பாக அரசு தலைமைச் செயலாளர் திருடி.வி.அந்தோணி இ.ஆ.ப. அவர்களும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணையர் மற்றும் செயலாளரும், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத் தலைவருமான திரு ஜே.ஆர். இராமநாதன் அவர்களும் ஐ. நா. வளர்ச்சித் திட்டக் குழுவின் 'சார்பில் திரு ஆர்.டி. மக்கர், ஐ.நா. வளர்ச்சித் திட்ட தொழில் நுட்பக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக் குழுவின் சார்பில் திரு. யூரி கொலானி மற்றும் டாக்டர் பான்ஸ்கி மற்றும் மைய அரசின் பொருளாதாரத் துறை சார்பில் திரு பாலசுப்பிரமணியன் அவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த ஐ.நா. வளர்ச்சித்திட்டக் குழுமம் உதவி பெறும் திட்டத்தின் நோக்கங்களையும் சாதனைகளையும் ஆய்வு செய்த பின் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து நீரினை இறைத்தெடுக்க ஆகும் முற்கட்டச்செலவான ரூ. 15 கோடிக்கு அனுமதி வழங்க எடுத்த நடவடிக்கையும் மற்றும் தமிழக அரசு இதற்குக் காட்டிவரும் ஆர்வத்தையும் பெரிதும் பாராட்டியது.

தற்போதுள்ள குடிநீர் வழங்கல் நிலைமையினை ஆய்வு செய்த பிறகும் நீண்ட கால நடவடிக்கைகள் செயலுக்கு வரும் கால கட்டத்தினைக் கருதியும் மற்றுமொரு கட்ட ஆய்வினை நடத்த உதவி செய்வதற்கு ஐ.நா வளர்ச்சித் திட்டக் குழுவிற்கு ஆணித்தரமாக முத்தரப்புக் குழு பரிந்துரைத்துள்ளது. தகுந்த நீர் நிர்வாகத் தொழில் நுட்பங்களால் தற்பொழுது கையிருப்பிலிருக்கும் நீர் ஆதாரங்களில் அதிக பயனைப் பெறுதல் இதன் நோக்கமாகும். நிலத்தடி நீர், தரைமட்ட நீர் ஆகியவற்றை ஒருங்கிணைந்துப் பயன்படுத்தும் முறை மற்றும் தொழில் உபயோகங்களுக்குச் சுத்திகரித்து மேம்படுத்தப்பட்ட கழிவுநீரைப் பயன்படுத்தும் முறை ஆகியவையே இதன் தலையாய நோக்கமாகும்.

1982ல் இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டபொழுது இரண்டாவது கட்ட ஆய்வு, முதல் கட்ட ஆய்வின் பரிந்துரைகளைச் செயலாக்குவதற்குச் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு எல்லாவித உதவிகளையும் கொடுக்க வேண்டும் என்பது சேர்க்கப்படவில்லை. முத்தரப்புக் குழு இரண்டாவது கட்டத்திற்கு ஐ.நா. வளர்ச்சித் திட்ட உதவி பெறுவதற்குக் கீழ்க்கண்டவையே மூல காரணமாக இருந்தன.


நாளுக்குநாள் பெருகிவரும் நகரின் நீர்த்தேவையினைச் சமாளிக்க எல்லாவிதமான தரை மட்ட மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து முடிந்த அளவு இறைத்தெடுத்துப் பயன்படுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

குடிநீரல்லாத மற்ற உபயோகங்களுக்குக் கழிவு நீரைச் சுத்திகரித்துப் பயன்படுத்துதல், உள்ளிட்ட நீர் நிர்வாகத் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்தல் அவசியமாகிறது.

நீண்டகால நடவடிக்கைகள் பயனளிக்க இன்னும் சிறிது காலமாகக்கூடும்.

இத்திட்டத்தின் முதல் கட்டத்தினை அரசு மிக்க ஆர்வம் காட்டி அனுமதித்ததோடல்லாமல் உண்மையிலேயே திட்ட செயலாக்கம் தொடங்கப் பட்டுவிட்டது. இந்த ஒரு திட்டம் தான் இந்தியாவிலேயே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு காலக் கெடு முடிவுறும் முன் செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை மகாஜன சபை




இந்திய தேசிய காங்கிரசு தோன்றுவதற்கு முன்பே இந்தத் தேசிய சபை சென்னையில் 1884 ஆம் ஆண்டு பொது மக்களின் கருத்துக்களை எடுத்துக்கூறும் அமைப்பாக உருவெடுத்து 'சென்னை மகாஜனசபை' என்ற பெயரையும் ஏற்றது. இன்று இதன் வயது 100.

மகாஜன சபைக்கும், இந்திய தேசிய காங்கிரசிற்கும் மிக நெருங்கிய தொடர்பு நிலவி வந்திருக்கிறது. 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் தொடங்கியபோது இந்த மகாஜனசபையின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டு ஓராண்டு முதல் ஈராண்டு வரை சிறைத் தண்டனை அடைந்திருக்கிறார்கள்.

1896-ஆம் ஆண்டு 26-ஆம் தேதி அண்ணல் காந்தியடிகள் மகாஜன சபையில் உரையாற்றியிருக்கிறார். பண்டித நேரு மகாஜன சபையின் பொன் விழாவைத் தொடங்கி வைத்திருக்கிறார். இந்தியத் தாய் பெற்றெடுத்த செல்வங்களான கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர், அன்னி பெசண்ட் அம்மையார், சி.ஆர். தாஸ், லாலா லஜபதிராய், பாபு இராஜேந்திர பிரசாத், இராஜாஜி, ஆசப் அலி ஆகிய பல தலைவர்கள் இந்த மகாஜன சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கின்றனர். இந்தச் சபையில் விலையுயர்ந்த 3000 நூல்கள் உள்ளன. வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கும் உள்நாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கும் இவை பெரிதும் உதவி வருகின்றன.

ஒரு நிலையத்திலிருந்து மட்டும் 40 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது. அதன் விலை மதிப்பு ரூபாய் 20,000. இதேபோன்ற மேலும் சில நிலையங்கள் இம் மாவட்டத்தில் விரைவில் நிறுவப்பட இருக்கின்றன.



**தேனீ வளர்ப்பு**

தருமபுரி மாவட்டத்தின் மலைவாழ் மக்கள் தங்கள் வாழ்வில் வளம் காண்பதற்காக தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் அவர்களுக்குத் தேனீ வளர்ப்பு நுணுக்கங்களைச் சொல்லித் தந்து தேன்கூடு முதலிய சாதனங்களையும் வழங்கியுள்ளது. ஒரு துளி தேன் கிடைக்கவேண்டுமானால் ஒரு தேனீ 160 மலர்களின் மீது அமர்ந்து, நுகர்ந்து, தேன் அடையில் சேகரித்து நமக்கு அளிக்கும் தேனின் சக்தியைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஒரு கிலோ தேனுக்குச் சமமான சத்துணவு கிடைக்கவேண்டுமானால் 65 முட்டைகள் அல்லது 13 அவுன்ஸ் பால் அல்லது 10 கிலோ பச்சைப் பட்டாணி அல்லது 12 கிலோ ஆப்பிள் அல்லது 20 கிலோ கேரட்டுகளை உண்ண வேண்டும். தேனின் பயன்கள் பல தரப்பட்டவை. அழகு, இளமை, நல்ல கண்பார்வை, இரத்தசுத்தி, நரையின்மை, நரம்புத்தளர்ச்சி இன்மை, இரத்தக்கொதிப்பு இன்மை, சிறுசிறு உபாதைகளின்மை, ஏன்? சுருக்கமாகச் சொல்வதானால் ஆரோக்கியமான வாழ்விற்கே அடிப்படை தேன்தான் என்று கூறலாம். இத்தகைய மலைத்தேன் எடுப்பதில் மலைவாழ் மக்கள் மிக்வும் முனைப்போடு செயல்படுகிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தில் மலைக்குடி மக்கள் வாழும்பகுதி சித்தேரி மலைத்தொடர் எனப்படுகிறது. இங்கு வாழும் பழங்குடி மக்கள் மலையாளிகள் எனப்படுகின்றனர். கேரளத்து மலையாளிகளுக்கும் இவர்களுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை. இவர்கள் மலையை ஆள்பவர்கள் என்ற பொருளில் மலையாளிகள் எனப்படுகின்றனர். 16ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த 6 சகோதரர்கள் தங்கள் தலைமையில் இந்த மலைவாழ் மக்களைக் கல்ராயன் மலைப் பகுதியில் பல்வேறு இடங்களில் குடியமர்த்தினர். கிழக்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த கல்ராயன் மலைப் பகுதியின் ஓர் அம்சமாக விளங்கும் சித்தேரி மலை தருமபுரி மாவட்டத்தில் கடல்மட்டத்திற்கு 305 மீட்டர் உயரத்திற்கு ஏறக்குறைய 23000 மக்களுக்கு வாழ்வளித்து வருகின்றது.

இங்குள்ள பல குக்கிராமங்களில் வாழும் மக்கள் மூங்கில், விறகு, சாதிக்காய், சந்தனம், நெல், சோளம், கேழ்வரகு முதலியவற்றை நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் மூலம் சுமார் 400 பழங்குடி மக்கள் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். இந்த மலைக்குடி மக்கள் உருவாக்கும் பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் அவர்களுக்குக் கடன் வசதிகளைச் செய்து தரவும், அத்தியாவசியமான பொருள்களை வழங்கவும், 'லாம்ப்' எனப்படும் பரவலான பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உதவி வருகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் அனைத்துப் பழங்குடி மக்களும் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.


சித்தேரி மலை வாழ் மக்கள் ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிக்கவர்கள். அவர்களிடையே பலதார மணம் முதலிய தீய பழக்க வழக்கங்கள் ஏதும் இல்லை. ஊர் கவுண்டர் என்ற தலைவரின் கட்டளைக்கு அனைவரும் கீழ்ப்படிகின்றனர். திருமண விழாவின் போதும் பண்டிகைக் காலங்களின் போதும் தான் இவர்களுக்கு அரிசி உணவு கிடைக்கின்றது. மற்ற நாட்களில் பெரும்பாலும் கேழ்வரகுதான். கணவன் மனைவி விவகாரத்து செய்துகொள்ள வேண்டுமென்றால், அதைக்கோரியவர் 650 ரூபாய் ஈட்டுத்தொகை அளிக்கவேண்டும். ஆனால், குழந்தைகள் கணவன் பொறுப்பில் விடப்படும். இராமாயணம், மகாபாரதம் முதலிய புராணக்கதைகளை நாட்டுப் பாடல்களாக் இவர்கள் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். எளிமையான வாழ்க்கை, உயர்வான பண்பு, அருமையான கலைநாட்டம் இவை மூன்றும் ஒருங்கே பெற்றுள்ள இந்த மலைவாழ் மக்களுக்கு அரசு நல்ல வீடுகள், கல்வி வசதி, மருத்துவ வசதி முதலியவற்றைச் செய்து தருகிறது. மலைவாழ் மக்களின் குழந்தைகள், இலவசமாகத் தங்கிப் படிக்க 13 பள்ளிக்கூடங்கள் உள்ளன. இவற்றில் உடை, உணவு, பாடப்புத்தகங்கள் எல்லாமே இலவசம். தருமபுரி மாவட்டத்தின் வளத்துக்கு இந்த மலைவாழ் மக்கள் பெரிதும் உதவி வருகின்றனர்.

**மீன் வளர்ப்பு**

தண்ணீர் இல்லை, வறட்சிப் பகுதி என்கிறீர்கள், மீன் வளர்ச்சியாவது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால்; வறட்சிப் பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளும்போது மீன் வளர்ப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. புதிய நுணுக்கங்கள், நவீன வழிமுறைகள், தருமபுரி மாவட்டத்தின் மீன் வளர்ப்புத்துறைக்கு ஆதாரமாய் இருக்கின்றன. கிருஷ்ணகிரி சின்னாறு, பாம்பாறு ஆகிய இடங்களில் மீன் வளர்ப்புக் குட்டைகள் அமைக்கப்பட்டு, தரம் வாய்ந்த மீன் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தின் மொத்தத்தேவையைச் சமாளிக்க 60 இலட்சம் மீன் குஞ்சுகள் தேவைப்படுகின்றன. இன்று 40 இலட்சம் மீன் குஞ்சுகள் கிடைக்கின்றன. கிருஷ்ணகிரி மற்றும் சின்னாறு மீன் வளர்ப்புப் பண்ணையில் ஆண்டுதோறும் மொத்தம் 30 இலட்சம் மீன் குஞ்சுகள் பெறப்படுகின்றன. பாம்பாறு பண்ணையில் 10 இலட்சத்துக்கு மேலான குஞ்சுகள் கிடைக்கின்றன. கிருஷ்ணகிரி பாலிதைலீன் குடுவை பொரிக்கும் முறையால் நூற்றுக்கு 90 முட்டைகள் மீன் குஞ்சுகளை அள்ளித் தருகின்றன. ஒகேனக்கல்லில் அருவிப் பகுதியிலும், மீன் வளர்ப்புப் பண்ணைகள் உருவாகி வருகின்றன.





**ஒகேனக்கல்**

இதுவரை தருமபுரி மாவட்டத்தின் விவசாயத் தொழில் வளர்ச்சியைப் பற்றியே குறிப்பிட்டு வந்தோம். கடின உழைப்பில் ஈடுபட்டுள்ள மக்கள் சிறிது இளைப்பாற வேண்டாமா? இதற்கு இங்கே இயற்கை வழி வகுத்துள்ளது. அதுதான் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி. கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டு எல்லைக்குள் நுழையும் காவிரிக் கன்னி இங்குதான் துள்ளிக் குதித்தோடி வருகிறாள். இங்கிருந்து 120 கிலோமீட்டர் தூரத்திலுள்ள மேட்டூர்நீர்த்தேக்கத்திற்கு அவள் செல்லும் அழகே அழகு!.

ஒகேனக்கல்லில் சுமார் 200 அடி உயரத்திலிருந்து காவிரி நீர் விழுவதைக் காணக் கண்கோடி வேண்டும்! 'ஒகேனக்கல்' என்ற சொல்லுக்கே 'புகையும் கல்' என்றுதான் பெயர். இந்தக் கல்லில் வரும் புகை,நீர்ப்புகை. அதாவது, நீர்த்திவலைகளால் உருவாகும் புகைமண்டலம். அருவியில் குளித்தால் நகர வாழ்வின் சோர்வு, மாயமாய் மறைந்துவிடுகிறது. இங்குள்ள பரிசல் ஓட்டிகள் துணிச்சல் மிக்கவர்கள்.

தருமபுரி மாவட்டத்தின் தண்பொழில் தலமான ஒகேனக்கல் விரைவில் பல நவீன வசதிகளைப் பெறவிருக்கின்றது. அருவிகளைப் பார்த்துவர வசதியாகப் பாலம், ஆற்றைக் கடக்க ஒரு அகலமான பாலம், குளியலறை, உடைமாற்று வசதிகள், மசாஜ் செய்துகொள்ளத் தனித்தனியான அறைகள், மலர்ப் பூங்காக்கள், விலங்குக் காட்சிச்சாலை முதலிய பல்வேறு வளர்ச்சி அம்சங்கள் விரைவில் இங்கே இடம் பெறும்.

ஒகேனக்கல்லின் அருகே எல்லோரையும் வியக்கவைக்க ஒரு முதலைப் பண்ணையும் உண்டு. இங்கே 321 முதலைகள் வளர்ந்து வருகின்றன. இங்கிருந்து பல முதலைகளை வேறு பல பண்ணைகளுக்கும், நீர் நிலைகளுக்கும் அனுப்பி உள்ளனர். யானை இறந்தால் ஆயிரம் பொன்; முதலை இறந்தால் 30,000 பொன் என்றும் சொல்லலாம். அதன் தோலுக்கு அவ்வளவு கிராக்கி. ஒரு சதுர அங்குலம் உள்ள தோல் ஏறத்தாழ 40 ரூபாய்க்கு விலை போகிறது என்றால் நீங்களே கணக்குப்போட்டுக்கொள்ளுங்களேன். முதலைத் தோல் கைப்பை, பணப்பை, பெல்ட் முதலியவற்றுக்கு அயல் நாடுகளில் அமோக வரவேற்பு.

வறட்சியால் வாடும் மாவட்டம் என்ற பெயரைப் பெற்றுவிட்ட தருமபுரி இன்று வளர்ச்சிப் பாதையில் வெற்றி நடைபோட்டு வருகிறது. பல்வேறு துறைகளிலும் தழைத்தோங்கத் துடிக்கும் தருமபுரி மாவட்ட மக்கள் தாங்கள் நினைத்த காரியத்தை முடிக்காமல் விடுவதில்லை. அதனால் தான் இன்று தருமபுரி என்றால் பட்டுத்துணியும், மலைத்தேனும் நீல மாங்கனியும், சுவையான திராட்சையும், மணம் நிறைந்த சந்தனமும் நம் நினைவுக்கு வருகின்றன. முயன்றால் முடியாதது இல்லை என்ற முதுமொழிக்கு முன்னோடியாக விளங்கும் கர்ம பூமி, தருமபுரி!

—பத்திரிகைத் தகவல் அலுவலகம்

## 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சீனக் குடுவைகள் வேதாரணியத்தில் கண்டுபிடிப்பு


**வேதாரணியத்திற்கு வடக்கில் பத்து கிலோ மீட்டர் தொலைவில் செம்போடை என்னும் ஊரில் சீன தேசத்துப் பீங்கான் குடுவைகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. சிறு அளவில் உள்ள இவ்விரு குடுவைகளும் திரு. ஆர். கண்ணன் என்பவரது வீட்டுக் கிணற்றைத் தோண்டும்போது 15 அடி ஆழத்திற்குக் கீழ் கிடைத்தன. இவற்றைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை ஆய்வு செய்த போது சீன தேசத்துக் குடுவை என்பது தெளிவாயிற்று. அண்மையில் கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழ்வாய்வு செய்தபோது சீன தேசத்துப் பீங்கான் ஓடுகள் கிடைத்துள்ளன. இவை 10-11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. சைனாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் சோழர் காலத்தில் இருந்த வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்பை இவை உறுதிப்படுத்துகின்றன.**

பேரறிஞர் அண்ணாவின் வழி நடக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் **எம்.ஜி.ஆர்** அவர்கள், மக்களுக்காக உழைத்த மாபெரும் தலைவர்களை மக்கள் மனத்தில் என்றென்றும் நிரந்தரமாக நிலை நிறுத்தும் வண்ணம், புதிதாக அமைக்கப்படும் மாவட்டங்களை அவர்கள் பெயரில் துவக்கும் திட்டத்தை தமிழகத்தில் முதல் முறையாகச் செயல்படுத்தினார்.


இச் சீரிய திட்டத்தின்படி, தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய பெருந்தகையோர்களின் பெயரில் 3 புதிய மாவட்டங்களை அமைத்தார்.

அதைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் 77வது பிறந்த நாளான **15-9-'85** அன்று மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திண்டுக்கல் நகரைத் தலைநகராகக் கொண்டு உருவாகியிருக்கின்ற புதிய மாவட்டத்திற்கு **அண்ணா மாவட்டம்** என்று பெயரிட்டுத் துவக்கி வைத்தார்.

**அண்ணா மாவட்டம்**







# பொலிவு பெறும் புதுக்கோட்டை

தற்பொழுதுள்ள புதுக்கோட்டை மாவட்டம் முன்பு சமஸ்தானமாக இருந்து, புதுக்கோட்டை மாவட்டமாக மாறியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தின் தலைமையிடமாக, புதுக்கோட்டை நகர் அமைந்துள்ளது. இங்கு சுமார் 1,00,000 மக்கள் வசிக்கின்றார்கள். இது முதல் தர நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 12.95 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

இந்நகரில் மச்சுவாடி, அடப்பன் வயல், காந்திநகர், போஸ் நகர், திருவள்ளுவர் நகர், நந்தன் நகர், பகுதிகள் பின்தங்கிய குடிசைப் பகுதிகளாக உள்ளன. இதில் முதலாவது கட்டமாக, காந்தி நகர், மச்சுவாடி, திருவள்ளுவர் நகர் பகுதிகளை, குடிசைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1983-84 மற்றும் 1984-85ஆம் ஆண்டுகளில் சாலை போடுவது, பாலம் அமைத்தல், நவீனக் கழிப்பிடம், சுவர் கட்டுவது முதலிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 1984-85ஆம் ஆண்டில் மட்டும் திருவள்ளுவர் நகர் மற்றும் மச்சுவாடிக் காலனிகளில் 11 சாலை வேலைகளும், 9 சுவர்களும் 2 பாலங்களும், 2 நவீனக் கழிப்பிட வேலைகளும் செய்யப்பட்டன.

இதற்கென அரசு மானியமாக ரூ. 4 இலட்சம் வழங்கப்பட்டு, ரூ. 4.2 இலட்சம் செலவில் மேற்கண்ட வேலைகள் செய்யப்பட்டன. உபரியாக 0.2 இலட்சம் இந்நகராட்சியின் நிதியில் இருந்து செலவு செய்யப்பட்டது. மேற்படி வேலைகள் செய்து முடிக்கப்பட்டதால் மச்சுவாடி துப்புரவுக் காலனி மற்றும் திருவள்ளுவர் நகர்ப் பகுதி மக்கள் சுமார் 3,000 பேர்களுக்கு நல்ல தூசியில்லாச் சாலைகள், நவீன கழிப்பிட வசதிகள், வடிகால்கள் கிடைத்து நல்ல சுகாதாரச் சூழ்நிலையில் வாழ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## குடிசை மேம்பாட்டுப் பணிகள்

இந்திரா நகரில் சுமார் 900 மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் மிகவும் பின்தங்கிய வகுப்பினர். அன்றாடம் தினக் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். இப்பகுதியில் அனைத்துச் சாலைகளும் இருபுறங்களிலும் முள் செடிகள் வளர்ந்து மேடும், பள்ளமுமாய் உபயோகிக்க மிகவும் கஷ்டமாக இருந்தது. பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் சுமார் 1,200மீட்டர் நீளத்திற்குக் கிராவல் பரப்பிக் கற்சாலைகள் அமைக்கப்பட்டன. குடிநீர் வசதிக்காக இங்குள்ள மக்கள் நகரின் இரண்டு கடைசித்தெருக்களிலும் சென்றுதண்ணீர் எடுத்து வந்தனர். இதை மாற்றி மேலும் இரண்டு இடங்களில் குடிநீர்க் குழாய் மையப் பகுதியில் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. இதனால் இங்கு வசிக்கும் மக்கள் அனைவருக்கும் தேவையான அளவு தண்ணீர் கிடைக்கிறது.

இங்கு வசிக்கும் மக்கள் அனைவரின் நீண்ட நாள் தேவையான நவீன கழிப்பிடம் மிகச் சுகாதார முறையில் கட்டப்பட்டுள்ளது. மேலும் சாதா மின் விளக்குகள் அனைத்தும் 4அடி குழல் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.

அண்ணா நகரில் சுமார் 435 மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். மிகவும் பின் தங்கிய வகுப்பினர். நகரின் பேருந்துநிலையம்மற்றும் மையப் பகுதியையும் இவர்கள் வசிக்கும் பகுதியுடன் இணைக்க இம்மக்கள் வசிக்கும் பகுதியில் புதிதாக 178 மீட்டர் நீளத்திற்குச் சாலைஅமைக்கப்பட்டது. மேலும் பல ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட சாலைகள் 245 மீட்டர் நீளத்திற்குத் திரும்பப் போடப்பட்டுள்ளன. சாதா விளக்குகள் அனைத்தும் புதிய 4 அடி குழல் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. கூடுதலாக இரண்டுபொது குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன. பொதுமக்களின் நீண்ட நாள் தேவையான நவீன கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது.



இந்திய இளைஞர்கள் கிராம வாழ்வை ஏற்றுக் கொள்ள விரும்புவார்களே யாயின், அவர்கள் தங்களின் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் தங்களது விடுமுறை நாட்களில் ஒவ்வொரு நாளையும் தங்களது பள்ளி, கல்லூரி ஆகியவற்றிற்கு அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களில் கழிக்க வேண்டும். படித்து முடித்தவர்களாயினும் சரி, படியாதவர்களாயினும் சரி அவர்களனைவரும் கிராமத்தில் குடியேற வேண்டும்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆ அவர்கள் 15-9-85 அன்று மதுரையில் பேரறி அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார்.





## வெளிநாட்டில் தமிழக முதல்வர்

ஜப்பானில் 'தமிழ் அண்ணா' கப்பலைப் பெற்றுக் கொண்ட பிறகு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், மாலுமிகளைச் சந்திக்கிறார்.



...ஷிங்டனிலுள்ள இந்தியத் ... திரு பாஜ்பாய் அவர்களின் ...லத்தில் இந்திய விடுதலை ...ன்று (15-8-85) அளிக்கப் ... தேநீர் விருந்தின்போது...



அமெரிக்காவிலுள்ள டிஸ்னி லேண்டில் தமது துணைவியாருடன் மாண்புமிகு முதல்வர். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, டாக்டர் பெரியசாமி, டாக்டர் நரேந்திரன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# செய்திகள் செய்திகள் செய்திகள்

### சென்னை மாவட்டத்தில்...

குஜராத் பல்கலைக் கழகச் சரித்திரப் பட்டதாரி திரு ஸ்வப்பன்குமார் தற்கால இந்தியக் கலாச்சாரப் பண்பாட்டை நேரில் கண்டறிய 2.2.1977ல் நடைப்பயணம் மேற்கொண்டார். 16 மாநிலங்களைக் கடந்தபின் (குஜராத், மகாராஷ்டிரம், அரியானா, பஞ்சாப், காஷ்மீர், மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம், மேற்குவங்கம், பீகார், அசாம், நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா, அந்தமான் நிக்கோபர், ஒரிசா, ஆந்திரப்பிரதேசம்) 10.9.85 அன்று சென்னை வந்தார். தமிழ்நாட்டில் நடைப்பயணத்தை முடித்துக் கொண்டு, பாண்டிச்சேரி, கேரளா, கோவா முதலிய இடங்களைக் கடந்து தமது நடைப்பயணத்தை இன்னும் இரண்டு ஆண்டுகளில் முடித்துக் கொள்வார்.

சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு.க.மாதவ சர்மாவை திரு ஸ்வப்பன்குமார் தாம் சந்தித்தார். சிறப்பு அலுவலர் மாநகராட்சி சார்பில் அவருக்கு அன்பளிப்பாக ரூ. 150 வழங்கி வாழ்த்துக் கூறினார்.

பிரான்ஸ் நாட்டுத் தொழில் நுட்ப நிபுணர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று 13.9.85 அன்று சென்னைக்கு வருகை தந்தது. தமிழ்நாட்டைச் சேர்ந்த பொறியியல் தொழில் அதிபர்களை, அக்குழுவைச் சேர்ந்தவர்கள் சந்தித்துப் பேசினார்கள். இந்தியப் பொறியியல் தொழில்கள் சங்கத்தின் தென் மண்டலப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் திரு கே. எஸ். ஸ்ரீராம் பேசினார். பிரான்ஸ் மிகவும் தொழில் நுட்ப ஆலோசனையை இந்தியத் தொழில் துறையினருக்கு வழங்கும்போது, இந்திய நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு அதுகுறித்த தக்க பயிற்சி அளிக்கவும் முன்வர வேண்டும் என்று அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

எலக்ட்ரானிக்ஸ், அணு மின் உற்பத்தி, பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக நுட்பமான மற்றும் நவீனமான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருப்பதாகத் தூதுக்குழுவின் தலைவர் திரு பவுல்லி தெரிவித்தார். மேற்கு மற்றும் தென்னிந்தியப் பகுதிப் பிரெஞ்சுத் தொழில் ஆணையர் திரு கேஜஸ் காசிரியர், சென்னையில் உள்ள பிரஞ்சு துணை கான்சல் திரு கே.ஆர். கோபாலன் ஆகியோர் பல்வேறு துறைகளில் பிரான்சில் இருந்து தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்து கொள்ள இந்தியாவுக்கு நல்ல வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தார்கள்.

பிரான்சில் உள்ள பொறியியல் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆண்ட்ரே மடார், வெர்டியர், ஜோய்ல்கான், ஜான்லுக் ஜௌக் ஆகியோர் தங்களது நிறுவனத் தயாரிப்புகளை விளக்கிப் பேசினார்கள்.

சென்னை 126 வது கோட்டம் சத்தியமூர்த்திநகர் ஏரிக்கரை நந்தனம் பகுதியில் 12.9.85 அன்று பிடித்த தீயில் 1000 குடிசைகள் சாம்பலாயின. சென்னை மாநகராட்சி குடிசை இழந்தோருக்கு 4000 உணவுப்பொட்டலங்கள் வீதம் 5 வேளைக்கு வழங்க ஏற்பாடு செய்தது. வீடிழந்தோர், அருகில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும் விளக்கு வசதியும் மாநகராட்சியால் செய்யப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் திருமதி சாந்த ஷீலா நாயர் ஆகியோர் விரைந்து செய்யப்பட்டிருந்த நிவாரணப் பணிகளைக் கண்காணித்தனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்....

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 1984ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் மிகச் சிறப்பான திட்டம் ''ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவிச் சிறப்புத் திட்டம்'' ஆகும்.

தமிழ்நாட்டிலுள்ள 18 வயது முதல் 58 வயதுக்குட்பட்ட அனைத்து விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் சொற்ப நிலமுள்ள உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், வண்டி இழுக்கும் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் மற்றும் முடி திருத்துவோர் ஆகியோர்களுக்கு ஈட்டுறுதி மற்றும் ஓய்வு உதவி என்ற இரு பெரும் நன்மைகளை வழங்க வல்ல சிறப்புத் திட்டமாகும் இது.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் திங்களில் இத்திட்டத்தில் சேருகின்ற உறுப்பினர்களுக்குத் திட்டத்தின் பயன்கள் அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்து கிடைக்கும். முதல் தவணை ரூ.10 மட்டும் வங்கியில் செலுத்தி சிறப்பு வட்டாட்சியருக்கு விண்ணப்பித்திடல் வேண்டும்.

இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் இறந்து விடுவாரேயானால், இறந்தவரின் நியமனதாரருக்கு ரூ. 5,000மும், அவர் செலுத்திய பங்குத் தொகையின் கால அளவிற்கேற்ப ஒரு தொகையையும் அரசு வழங்கி வருகிறது.

இச்சிறப்புத் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 1985 ஆகஸ்டு மாதம் 5ந்தேதி வரை 20,200 பேர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். மேலும் 75,000 உறுப்பினர்கள் நடப்பு ஆண்டில் சேர்க்கப்பட உள்ளனரென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரிஜேசவர் சிங், இ.ஆ.ப. தெரிவித்துள்ளார்.

ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவித் திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்களில், 21 உறுப்பினர்கள் இறந்துவிட்டதை ஒட்டி அவர்களது நியமனதாரர்கள் 21 நபர்களுக்கு 15.8.85 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற விடுதலை நாள் விழாவின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு பிரிஜேசவர் சிங், இ.ஆ.ப. காசோலைகளை வழங்கினார்.

### தருமபுரி மாவட்டத்தில்....

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு திருப்பூர் மணிமாறன் 9.8.85 அன்று தர்மபுரி மாவட்டத்தில், நடைபெறும் வாரிய வேலைகளைப் பார்வையிட்டார். [illegible] உதவியுடன் 91.5[illegible] மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 131

85350



## நெல் நோய் ஆராய்ச்சிக்கு புதிய கண்ணாடி ஆய்வகம்

நெல்நோய்களைப் பற்றிய ஆராய்ச்சிக்காக, வேளாண்மைப் பல்கலைக்கழகம், 3 இலட்ச ரூபாய் செலவில் கண்ணாடி ஆய்வகம் ஒன்றினை உருவாக்க இருக்கிறது. இக்கண்ணாடி ஆய்வகத்தில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். நெல்லில் தோன்றும் குலை நோய், துங்குரோ, செம்புள்ளி நோய், இலை உறை அழுகல், பேக்டீரிய இலைக்கருகல் நோய் ஆகியவற்றுக்கான எதிர்ப்புத்திறன் கொண்ட நெல் இரகங்களைக் கண்டறிந்து கருச்சேர்க்கை மூலம் எதிர்ப்புத் திறனை உயர் விளைச்சல் இரகங்களில் புகுத்துவதற்குப் பயன்படுத்தப்படும்.

துங்குரோ நச்சுயிரி நோய்க்கும் அதனைப் பரப்பும் பூச்சிக்கும் உள்ள தொடர்பினைக் கண்டறியும் ஆய்வு தீவிரப்படுத்தப்படும். நெல் ரகங்கள் துங்குரோ நச்சுயிரி நோய்க்கும் அதனைப் பரப்பும் பூச்சிக்கும் எதிர்ப்புத் திறனுள்ளவையா என்பதும் கண்டறியப்படும். துங்குரோ நச்சுயிரியால் பாதிக்கப்படும் களைச் செடிகள், புல்கள், நெல் ரகங்களில் துங்குரோ நச்சுயிரியின் அடர்த்தி, துங்குரோ நச்சுயிரியை எளிதில் பயிரில் கண்டறியும் முறைகள், தாவரப் பொருட்களையும் இரசாயனப் பொருட்களையும் பயன்படுத்தி அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். குலைநோயினை ஏற்படுத்தும் பைரிகுலேரியா ஒரைசே என்ற பூசணத்தின் இனங்களைக் கண்டறிந்து அந்த இனங்கள் யாவற்றிற்கும் எதிர்ப்புத்திறன் கொண்ட நெல் ரகங்களைக் கண்டறியும் ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

குடியிருப்புகள் எண்ணிக்கை கொண்ட நடுத்தர வருவாய்ப்பிரிவினருக்கான திட்டத்தையும், 37 குடியிருப்புகள் எண்ணிக்கை கொண்ட உயர் பிரிவினருக்கான திட்டத்தையும் பார்வையிட்டார். மற்றும் ஹட்கோ நிதி உதவியுடன் 41.72 இலட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் 242 குடியிருப்புகள் கொண்ட குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான திட்டத்தையும், 41.20 இலட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் 239 குடியிருப்புகள் கொண்ட குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான திட்டத்தையும் பார்வையிட்டார்.

தருமபுரியில் ஹட்கோ நிதி உதவியுடன் 27.56 இலட்ச மதிப்பீட்டில் 28 குடியிருப்புகள் எண்ணிக்கை கொண்ட உயர்வருவாய் பிரிவினருக்கான திட்டத்தையும், 11 எண்ணிக்கை கொண்ட நடுத்தரவருவாய் பிரிவினருக்கான திட்டத்தையும் பார்வையிட்டார். மற்றும் ஹட்கோ நிதி உதவியுடன் 31.88 இலட்ச மதிப்பீட்டில் 95 குடியிருப்புகள் எண்ணிக்கை கொண்ட நடுத்தர வருவாய்ப்பிரிவினருக்கானதிட்டத்தையும் பார்வையிட்டார். வாரியத் தலைவருடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத் தென் வட்டாரத் தலைமை அதிகாரி திரு சுரேஷ், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேற்பார்வையாளர் மற்றும் நிர்வாகப் பொறியாளர் ஆகியோரும் உடன் இருந்தனர்.

### நீலகிரி மாவட்டத்தில்....

குன்னூர், தமிழ்நாடு தேயிலைக் தோட்டக் கழகத்தில், இது வரை 416.44 எக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இத்துடன் வனத்துறையில் கொளப்பள்ளி சோட்டத்தில் பயிரிடப்பட்ட தேயிலைத் தோட்டங்கள் 347 எக்டேர் பரப்பும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

இந்தக் கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 2383 தொழிலாளர் குடியிருப்புகளில் (ஜூன் 1985 வரை) 2246 வீடுகள் கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்கத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனத்துறையிலிருந்து இக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட கொளப்பள்ளித் தேயிலைத் தோட்டத்தில் மொத்தம் கட்டப்படவேண்டிய 230 தொழிலாளர் குடியிருப்புகளில் 130 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஜூன் மாதத்தில் மட்டும் 17,02,329 கி.கி. தேயிலைக் கொழுந்து உற்பத்தி ஆயிற்று.

### கன்னியாகுமரி மாவட்டத்தில்

கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கணபதிபுரம் பேருராட்சிக்குட்பட்ட பிள்ளைத்தோப்பு கிராமத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.3.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைக் குடிநீர்த் தொட்டியை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்கள் 4.8.'85 அன்று திறந்து வைத்தார். இவ்விழாவிற்கு குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மா. கருப்பையா, இ. ஆ. ப., தலைமை தாங்கினார். குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு எப்.எம். இராஜரெத்தினம் முன்னிலை வகித்தார்.

கன்னியாகுமரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே.பெருமாள்பிள்ளை, பிள்ளைத்தோப்பு பங்கு தந்தை மறைதிரு ஜி.மெல்கியாஸ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிநீர்த்தேக்கத் திட்டத்தைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

இத்திட்டம் 1983-84 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இப்போது நிறைவு பெற்றுள்ளது. பிள்ளைத் தோப்புகிராமத்தில் தற்போதைய மக்கள்தொகை 3050 ஆகும். நபருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் வீதம் தினசரி 1,22,000 லிட்டர் குடிநீர் வழங்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.





# நூல் நயம்

### பாரதிதாசன் படைப்புக்கலை

ஆசிரியர் : டாக்டர்
ச. சு. இளங்கோ

வெளியீடு: அகரம் சிவகங்கை-623 560.

விலை ரூ. 45. பக்: 558

இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வரிசையில் பாவேந்தர் பாரதிதாசன் சிறப்பிடம் பெறுகிறார். அவர் தமிழுக்குத் தந்த படைப்புகள் அழியா வரம் பெற்றவை. அவரது கதைப் பாடல்களையும் - பெண் பாத்திரப் படைப்புகளையும் - கதைப் பாடல் தோன்றிய வரலாற்றையும் - கதைக் கோப்புகளையும்- பாட வேறுபாடுகளையும் ஆய்ந்து இந்நூலை உருவாக்கியுள்ளார் நூலாசிரியர்.

மற்ற ஆய்வு நூல்களுக்கும் இந்த நூலுக்கும் அடிப்படையிலேயே ஒரு வேற்றுமை உள்ளது. பொதுவாக ஆய்வு நூல்கள் அச்சு வாகனத்தில் ஏறிய நூல்களைக் குறித்தே அமைவதுண்டு. ஆனால் இந்நூலைப் பொறுத்தவரை நூலின் கையெழுத்துப் படிகளை வைத்தே ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது என்பது சிறப்புச் செய்தியாகும். கல்வெட்டு ஆய்வாளர் - அகழ்வாய்வாளர் ஆற்றுகின்ற பணிக்கு ஈடாக உள்ளது - கையெழுத்துப் படி ஆராய்ச்சி என்று குறிப்பிடலாம்.

'கவிஞனை அவனது கையெழுத்துப் படிகளின் மூலம் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியும்' என்று ஆங்கிலக் கவிஞர் டய்லன் தாமஸ் சொல்லிய பொன்மொழியை அடித்தளமாக வைத்து இந்த ஆய்வைத் தொடங்கியிருக்கும் ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை இந்தப் பெருநூல் எடுத்துக் காட்டுகிறது.

பாவேந்தரின் எழுத்து நடை காலத்திற்கேற்ப எவ்வாறெல்லாம் மாறியுள்ளது என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருக்கும் நூலாசிரியர், வடமொழி அறியாத பாவேந்தர் பில்ஹணீயத்தைத் தமிழில் எவ்வாறு எழுதியுள்ளார் என்பதைத் துப்பறிவாளர் நெறியில் நின்று எடுத்துக் காட்டியுள்ளார்.

பெண் பாத்திரப்படைப்பு என்ற பகுதியில், உலக நாடுகளில் எல்லாம் பெண்களின்நிலை எந்த அளவு மோசமாக இருந்தது என்பதையும் இந்தியாவில் பெண்ணுரிமை கோரிச் செயல் புரிந்த அமைப்புகள், சான்றோர்கள் ஆகியோரைக் குறித்தும் வரலாறு பூர்வமாக விரிவாகத் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

சேக்ஷ்பியர், பெர்னாட்ஷா, ஷெல்லி போன்ற மேல்நாட்டவர்கள் தங்கள் நாடகங்களில் பெண்மைக்கு - பெண்ணுரிமைக்குச் சிறப்பிடம் தந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

'பெண் பிறப்பது கூடாது' என்று அதர்வண வேதம் சொல்லியிருக்க, 'பெண்ணைக் கண்ணுள் வைத்துக் காப்பேன்' என்று பாவேந்தர் குறிப்பிடும் அழகை எடுத்துக் காட்டி, பெண்மையைப் பெருமைப்படுத்தும் பாவேந்தரின் பெருந் தன்மையை - மனத்திட்பத்தை உலகுக்கு உணர்த்துகிறார் ஆசிரியர்.

பாடவேறுபாடு - தவிர்க்க முடியாதது என்பதைத் தக்க வகையில் நிறுவியுள்ளார். கதை அமைப்பிலும், பாவேந்தர் வெற்றி பெற்றுள்ள செய்தியைச் சொல்லி 'கதை - எழுத்தாளன் தனது கருத்தைச் சொல்ல உதவும் கருவி' என்று பாவேந்தர் குறிப்பிட்ட வாசகத்தையும் நினைவூட்டியுள்ளார்.

மொத்தத்தில் பாவேந்தரின் பெருமை - திறமை - அனைத்தையும் எடுத்துரைக்கும் அற்புத நூலாக இது அமைந்துள்ளது.

—தமிழ்ப்பித்தன்

### எனது வானில்....

ஆசிரியர் : ஏர்வாடி
எஸ். இராதா
கிருஷ்ணன்.

வெளியீடு: சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

விலை ரூ. 6.50. பக்:80

பல்வேறு தலைப்புகளின் கீழான புதுக்கவிதைப் பூக்களின் தொகுப்புக் கதம்பம் இது.

'நான் விமர்சிக்கப் படுவதற்காக வீதிக்கு வரவில்லை..'

'புலமைகளைப் புலப்படுத்தப் பாடல்களல்ல...'

என்றெல்லாம் முதல் பாடலிலேயே நூலாசிரியர் வைத்திருக்கும் சில வரிகள், எழுத்துக்களை எடைபோடும் நம்முடைய குணத்தில் இடியாப்பச் சிக்கலை உண்டாக்குகின்றன. இருப்பினும்—

'கலியுகக் கண்ணன்கள் இப்போது கீதமா இசைக்கிறார்கள்... உயிருக்குச் சேதமன்றோ இழைக்கிறார்கள்-' என்று நூலின் எங்கோ ஒரு மூலையில் எதற்காகவோ எழுதப்பட்ட அடிகளால் சற்று அமைதியடைந்து படிப்பைத் தொடர்கிறோம்.

'காதலிக்கும்போது அவர்
கண்ணே உனக்காக
உயிரையே தருவேன்'' என்றார்.
சொன்னபடியே
செய்துவிட்டார்;
அவர் தந்த உயிர்
என்னுள் வளர்கிறது!'

—போன்ற புதுக்கவிதைகள் சில ஆங்காங்கே மணக்கின்றன. அவ்வகைத் தேனுக்கு அலையும் வண்டுகள், இந்த 'எனது வானில்...' இன்புற்றுச் சிறகடிக்கலாம்.

### புண்ணிய பாரதத்தின் புராணக் கதைகள்

ஆசிரியர் : நாகர்கோயில்
கிருஷ்ணன்.

வெளியீடு:
மயிலவன் பதிப்பகம்,
எம். கே. அம்மன்
கோயில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை ரூ. 5.00. பக்:96.

வந்தால், மூலச்சூடு தணியும், தாது கட்டும் ,சொறி, நமை, சோகை முதலியவை நீங்கும்.

**ரணம், வயிற்றுவலி, மாந்தம், வயிற்றுப் பொருமல், வயிற்றில் புண், வாயுத் தொல்லை நீங்க:**

கற்றாழையின் சோற்றை எடுத்துக் கொண்டு, அதாவது சுமார் ஒரு கிலோ போல் எடுத்து சிறுசிறு (நெல்லி) அளவில் அல்லது துண்டுகளாக வெட்டிக் கொண்டு, இத்துண்டுகளைப் பல முறை தண்ணீர் விட்டுக் கழுவி எடுக்க வேண்டும். காரணம் அவற்றின் பசிய நீர்ச்சத்துள்ள கொழ கொழப்பான சதைப் பகுதியில் உள்ள நாற்றம் அகலும் வரை கழுவி வேண்டும். பின், ஒரு கெடாயில் கற்றாழைத் துண்டுகளைப் போட்டு, அரை கிலோ பனங்கற் கண்டுடன், வெள்ளை வெங்காயத்தை இடித்து அதன் சாறு, அரை டம்ளர், சீரகம் 5 கிராம் சுத்தமான விளக்கெண்ணெய் ஒரு கிலோ ஆகியவற்றைக் கடாயில் ஊற்றி அடுப்பில் வைத்து சிறு தீயாக எரிக்கவும். சாறு சுண்டி சடசட எனும் கொதி சத்தம் அடங்கும் வரை வைத்திருந்து, பின் இறக்கி ஆறிய பிறகு காலி பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு, வேளைக்கு ஒரு கிராம் வீதம் காலை-மாலை அருந்திவர மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

**இரத்தமும் சீதமும் கலந்தபேதி குணமாக..**

தேவையான சோற்றுக் கற்றாழையின் இளமடலைக் கொண்டு வந்து, தோல் நீக்கி தண்ணீரில் நன்றாக அலம்பி, பிறகு அந்தச் சோற்றையும் கொஞ்சம் சீரகம், கற்கண்டு ஆகியவற்றைத் தகுந்தாற்போல் வைத்து எல்லாவற்றையும் அம்மியில் வைத்து அரைத்து, காலையில் சாப்பிட மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

பால்-

இதை, கண் இரப்பையில் உண்டாகும், புண்களுக்குத் தடவலாம்.

**உடல் சூடு நீங்க மேக அனல் மாற, உடல் பெருக..**

கற்றாழைச்சோறு 100 கிராம். சிற்றாமணக்கெண்ணெய் 350 கிராம். இவைகளை ஊற வைத்து அரைத்து, ஒரு கெடாயில் ஊற்றி, வெந்தயம் ஒன்பது கிராம், வெள்ளை வெங்காயம் ஒன்று அரிந்து போடவும். எல்லாவற்றையும் கெடாயில் போட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டி, ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு காலையில் அல்லது இரவில் படுக்கைக்குப் போகும் முன்னராகிலும் ஓர் உச்சிக் கரண் அளவு சாப்பிட்டு வர மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

**கண்களில் ஏற்படும் சிகப்புநிறம் மாற..**

சோற்றுக் கற்றாழை மடல் சிறிது கொண்டு வந்து, தோல் நீக்கி, அந்தச் சதையைத் தண்ணீர் விட்டு நன்றாக அலம்பி, சதையைக் கண்களில் வைக்கும் அளவுக்கு வட்டமாக அறுத்து, இரவு படுக்கு முன் கண்ணின் மேல் வைத்து, துணி கொண்டு கட்டி விட வேண்டும். காலையில் எழுந்த பிறகு எடுத்துவிடவேண்டும். இவ்விதமாகத் தொடர்ந்து மூன்று நாட்கள் செய்யும் பட்சத்தில் கண்களில் ஏற்படும் சிகப்பு நிறம் மாறும்.

**முடி கருமையாக வளர..**

தேவையான, கற்றாழைச் சோற்றை எடுத்து தேங்காயெண்ணையில் சேர்த்துக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்து வந்தால் முடி கருகருவென நீளமாக வளரும். இந்த எண்ணெயில் தலை முழுகி வந்தால் கண் குளிர்ச்சி உண்டாகும்; நல்ல நித்திரையும் வரும்.

சோற்றுக் கற்றாழையின் சதைப் பகுதியை எடுத்து இரவில் தலையில் சொட்டை பாகத்தில் நன்றாகத் தேய்த்துவிட்டு காலையில் சீயக்காய் தேய்த்து தலை முழுகச் செய்ய வேண்டும். ஒரு நாள்விட்டு ஒருநாள் இப்படிச் செய்து வந்தால் முடி வளரும். இந்த மருத்துவம் வயதானவர்களுக்குப் பலன் தராது. முடி வளர்வதற்கு நல்ல ரத்த ஓட்டம் இருக்கவேண்டும்.

**எலும்புருக்கி நோய் குணமாக..**

எலும்புருக்கிப் பிணியிலும், உடல் நலிவடையும் நோய்களிலும் கற்றாழைச் சோற்று எண்ணெய் நல்ல பலன் அளிக்கிறது. அரை லிட்டர் விளக்கெண்ணெயில் சுமார் 70 கிராம் எடை உள்ள கற்றாழைச் சோற்றை ஊற வைத்து அரைத்துக் காய்ச்சி நீர்ச்சத்து மாறிய உடன் இறக்கி வைத்துக் கொண்டு, காலை மாலை இருவேளைகளில் ஒரு தேக்கரண்டி வீதம் அருந்தி வர, உடல் அனல் மாறி, மேனி பளபளப்பாகத் தெரியும். கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும். நீண்ட கால மலச்சிக்கல் நீங்கும். இந்த எண்ணெய்யைப் பெண்கள் சாப்பிட்டு வந்தால், மாதாந்திர ருதுவை ஒழுங்குபடுத்தும்.

குறிப்பு:

இந்த எண்ணெய்யை, கர்ப்பம் தரித்த பெண்கள் சாப்பிடக் கூடாது.

**மூலம் நீங்க..**

கற்றாழையை எடுத்து மேல் தோலை நீக்கி, அந்தச் சதையை நன்றாகக் கழுவி, அதில் உள்ள சோற்றை எடுத்து இரண்டு பிடி முருங்கைப் பூ எடுத்து இரண்டையும் அம்மியில் வைத்து அதில் பசுவின் வெண்ணெய் விட்டு அரைத்து எலுமிச்சம் பழ அளவில் எடுத்து 3 நாள் சாப்பிட மூலம் பிரமியானது நீங்கும்.

குறிப்பு: கடும் பத்தியம் வேண்டுடும்.

**மூலச்சூடு, ஆசன எரிவு, காமாலை, கண்எரிச்சல், அரிப்பு, மந்தம் இவை நீங்க ..**

கற்றாழையைக் கொண்டு வந்துதோல்நீக்கி, அச்சோற்றைத் தண்ணீரில் போட்டு பல தடவை நன்றாகக் கழுவி, பிறகு அரிவாள் மனையில் எலுமிச்சை அளவில் அரிந்து எடுத்து வைத்துக்கொண் அரை லிட்டர் பசுவின் பாலில் போட்டு வைத்துக் கொள்ளவும்.

அதிகாலையில் பல் துலக்கி, வெறும் வயிற்றில் அருந்தி வரும் பட்சத்தில் மேற்படி பிணிகள் நீங்கும். இதுபோல் 10 நாட்கள் தொடர்ந்து அருந்த வேண்டும்.

குறிப்பு

இந்த மருத்துவம் சஞ்சீவி போன்றது எனலாம்.

நம்நாட்டு இலக்கியங்களிலும் சாத்திரங்களிலும் பண்டைக் காலத்தவர்கள் பல தத்துவங்களைத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள் என்றால், நாம் ஏன் இக்கற்றாழையை உபயோகிக்கக் கூடாது?

> ✽ நீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத் தக்கது குடி என்ற சாபக்கேடுதான்.
>
> — காந்தியடிகள்





# திராட்சை சாகுபடிக்கு பந்தல் அமைத்தல்

**இரா. செ. அழகியமணவாளன், நாராயணன்**
**பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம்**

தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு, மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் திராட்சை ஒரு பணப் பயிராகப் பயிரிடப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களுக்குத் தக்கவாறு பன்னீர் திராட்சை, அஜாப்-இ-சாகி, தாம்ஸன், சீட்வெல், பச்சைத் திராட்சை, மங்களூர் போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. திராட்சை ஒரு கொடி வகையைச் சேர்ந்ததினால் அதன் வளர்ச்சிக்கு பந்தல் அமைத்து, பருவத்திற்குப்பருவம் கவாத்து செய்வதால் பலன் கிடைக்கிறது. திராட்சைக்குப் பந்தல் அமைக்க கருங்கல் தாங்கலும், துருப்பிடிக்காத இரும்புக் கம்பிகளும் உபயோகப் படுத்தப்படுகின்றன. பொதுவாக பந்தல் அமைக்கும் பொழுது பந்தலில் நான்கு புறமும் திறந்த வெளியாக வைப்பது வழக்கத்தில் உள்ளது. இதனால் நடைமுறையில் நிறைய இடர்பாடுகள் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு தர்மபுரி மாவட்டம், பையூரிலுள்ள தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக் கழக மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் திருந்திய பந்தல் முறை ஒன்று அமைக்கப் பட்டது. இதன்படி பந்தலின் நான்குபுறமும்கம்பிகள் கீழிறக்கப்பட்டு தரையுடன் பின்னப்பட்டிருக்கும். அக்கம்பிகளின் மீதும் திராட்சைக் கொடிகளைப் படரவிட வாய்ப்புள்ளது. இம்முறையினால் அநேக நன்மைகளும் உள்ளன. அவைகளாவன:

திராட்சைச் சாகுபடிக்குகாற்று ஒரு முக்கிய எதிரி. அதிகக் காற்று வீசும்பொழுது திராட்சைக்கு நிறையச்சேதம் உண்டாகிறது. சுற்றுப்புறத்திலுள்ள சாம்பல் நோய் பரப்பும் பூஞ்சாள வித்துக்கள் காற்றின் மூலம் திராட்சைப் பந்தலுக்குள் புகுந்து திராட்சைக்கு நிறையச்சேதத்தை விளைவிக்கின்றன. பந்தல் நில மட்டத்தின் அளவில் அமைந்துள்ளதால் பந்தலுக்குள் பக்கவாட்டிலிருந்து வீசும் காற்று, தடுக்கப்பட்டுச் சாம்பல் நோய் தாக்குதலினின்று கொடிகளைக் காக்கிறது.

காற்று அதிகமாக வீசும் காலங்களில் நிலத்திலுள்ள ஈரம் அதிக அளவில் வெளியேறி நிலம் காய்ந்துவிடும். இதனால் திராட்சைக்கு அடிக்கடி நீர்ப்பாசனம் செய்ய வேண்டியுள்ளது. இம்முறைப் பந்தலினால் பக்கவாட்டிலிருந்து வீசும் காற்று தடுக்கப்பட்டு நிலத்திலுள்ள ஈரம் பாது காக்கப்படுகிறது.

பூ மலரும் காலத்தில் பக்கவாட்டிலிருந்து வீசும் காற்றினால் 30-40 சதவிகிதம் பூக்கள் வாடி உதிர்ந்து விடுகின்றன. இம்மாதிரி சமயங்களில் விவசாயிகள் பந்தலைச் சுற்றித் தடுப்புகளைக் கொண்டு அடைத்து விடுகின்றனர். இது ஒரு தற்காலிக பாதுகாப்பே ஆகும். ஒவ்வொரு பருவத்திற்கும் இம்மாதிரி தடுப்புகளைக் கொண்டு அடைப்பதினால் செலவு அதிகமாகிறது. பந்தலைக் கீழிறக்கி அமைப்பதினால் பக்கவாட்டிலிருந்து வீசும் காற்று முற்றிலும் தடுக்கப்பட்டு பூக்களும், பழங்களும் உதிராமல் தடுக்க ஏதுவாகிறது.

திராட்சை குலைகளிலுள்ள காய்கள் முற்றி, பழமாகும் சமயத்தில் பறவைகளின் சேதம் மிகுதியாக இருக்கும். பந்தலின் நான்கு புறமும் திறந்தவெளியாக இருப்பதால் சுமார் 10-20 சதவிகித சேதம் பறவைகளினால் உண்டாகிறது. பந்தலைக் கீழிறக்கிக் கட்டும்பொழுது பறவைகள் பந்தலுக்கும் செல்ல வழியில்லாததினால் சேதத்தைத் தவிர்க்கலாம். பந்தலுக்கு மேலே இருக்கும் பழங்களை மட்டும் (5 சதவிகிதம்) சேதப்படுத்துவதுடன் பறவைகளின் தொல்லை நின்றுவிடும்.

நாய், நரி போன்ற விலங்கினங்கள் திராட்சை பலனளிக்கும் சமயத்தில் சேதம் விளைவிக்கின்றன. பந்தல் கீழிறக்கி அமைப்பதால் இச்சேதத்தையும் தவிர்க்கலாம். இம்மாதிரி பந்தல் அமைப்பதின் மூலம் நுழைவதற்கு மட்டும் ஒரே ஒரு நுழைவாயில் வைத்துவிட்டு அந்த வழியையும் கதவு போட்டுப் பூட்டிவிடுவதினால் பழங்கள் திருடு போகாமல் தடுக்கலாம்.

கொடிகள் பக்கவாட்டில் படரும்பொழுது இவைகளின் மேல்பாகம் மிகவும் தெளிவாகத் தெரியும். சாம்பல் நோய், அடித்தேமல் நோய் இலைகளைத் தாக்கும் சமயத்தில் அதனை மிகவும் எளிதாகக் கண்டுபிடித்து தடுப்பு முறைகளைக் கையாளலாம்.

மேலும் கொடிகள் பந்தலில் பக்கவாட்டிலும் படர்வதினால் நிறைய மகசூல் கிடைப்பதற்கும் ஏதுவாகிறது. அதனால் வருமானமும் பெருக வாய்ப்பு உள்ளது.

திருந்திய பந்தல் முறையினால் நிறைய அனுகூலங்கள் இருக்கும் பொருட்டு இனி புதியதாக அமைக்கும் திராட்சைத் தோட்டங்களுக்குப் பந்தல், நில மட்டத்தில் அளவில் கீழிறக்கி அமைக்க வேண்டும். இந்தப் புதிய யுக்தியினால் அதிக வருமானமும் நிறைந்த பாதுகாப்பும் இருப்பதால் திராட்சை விவசாயிகள் அதிக லாபம் அடைய வாய்ப்புள்ளது.



# ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழ்நாட்டில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அமைப்பில் தனிச் சிறப்புவாய்ந்தவை. இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல் விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களைப் போட்டி விலைக்கு விற்பனை செய்யக்கூடிய மையங்களாக அவை திகழ்கின்றன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூட விதிகளின்படி எல்லா வகையான இடையீடுகளும் தவிர்க்கப்படுகின்றன. விவசாயிகள் தங்கள் பொருள்களுக்கு உரிய தொகைகளை உடனே பெற்றுக் கொள்ளலாம். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சேமிப்பு மற்றும் தரம் பிரித்தல் தொடர்பான எல்லா வகையான வசதிகளையும் விவசாயிகளுக்குக் கட்டணம் ஏதும் இல்லாமல் வழங்குகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 13 விற்பனைக் குழுக்களும், 665 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும் உள்ளன.

ஒவ்வொரு விற்பனைக் கூடத்திலும், பொருள்களை விற்பனை செய்வதற்காக, கூடங்கள், உலர்த்தும் கூடங்கள், சேமிப்புக் கிடங்குகள், பணத்தை வழங்குவதற்கான கவுண்டர்கள், ஓய்வுக் கூடங்கள், சுகாதார வசதிகள், இன்னும் சொல்லப் போனால் வேளாண்மைப் பொருள்களின் முறையான வர்த்தகத்துக்கு உதவ விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் வங்கி வசதிகள் கூட உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் ஓராண்டில் சுமாராக 300 கோடி ரூபாய் மதிப்புள்ள 6 இலட்சம் டன்கள் உற்பத்திப் பொருள்களைக் கையாளுகின்றன.

ஊரகப் பகுதிகளில் சேமிப்புக் கிடங்கு வசதிகளை அதிகரிப்பதற்காக, ஒவ்வொன்றும் 100 டன்கள் கொள்ளளவு உள்ள 89 ஊரகச் சேமிப்புக் கிடங்குகள் தமிழகத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு விற்பனைக்குழு நிதி, மத்திய— மாநில அரசு மானியத்தொகைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சேமிப்புக் கிடங்குகள் தயாரானதும் இவற்றில் விவசாயிகளுக்கு குறிப்பாக சிறிய நடுத்தர விவசாயிகளுக்கு அடகுக் கடன் வசதிகளும் செய்து தரப்படும்.

வேளாண்மைப் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டின் நோக்கம் தூய, தரம் பிரிக்கப்பட்ட பொருள்களை நுகர்வோருக்கு வழங்குவதை உறுதி செய்வதாகும். நுகர்வு மற்றும் வர்த்தகப் பொருள்களுக்கு 'அக்மார்க்' முத்திரை வழங்கும் பணியினை மாநில வேளாண்மைப் பொருள் விற்பனைத் துறை, இந்திய அரசின் விற்பனை மற்றும் சோதனை இயக்குநர் அகத்தின் ஒத்துழைப்போடு நிறைவேற்றி வருகிறது.

ஒரு பொருளின் மீது உள்ள 'அக்மார்க்' சீட்டு பொருளின் தரம், தூய்மை, எடை குறித்து உறுதி வழங்குகிறது. தாவர— எண்ணெய்கள், தேன், தூளாக்கப்பட்ட சமையல் பொருள்கள், அரிசி, பருப்புகள், சீரகம், மஞ்சள் மற்றும் பிற பொருள்களைமாநில விற்பனை நிறுவனம் தரம் பிரிக்கின்றன. இரசாயன ஆய்வு மூலம் தரம் பிரிக்கப்பட வேண்டிய பொருள்கள் மாநிலத்தின் பல பகுதிகளிலும் உள்ள 36 மாநில 'அக்மார்க்' ஆய்வகங்களில் தரம் பிரிக்கப்படுகின்றன. அத்தகைய பொருள்களை உற்பத்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட 800 உற்பத்தியாளர்களின் பொருள்களை இந்த ஆய்வகங்கள் தர நிர்ணயம் செய்கின்றன. 60 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் 5 இலட்சம் குவிண்டால் எடையுள்ள பொருள்களுக்குத் தமிழகத்தில் 'அக்மார்க்' தர நிர்ணயம் வழங்கப்படுகிறது.

பாலவிநாயகர், நாரதர், ஜமதக்னி, சிவம், பரமன், பிச்சாடணர், பராசக்தி போன்றோரை மைய இழையாகக் கொண்ட புராணச் சம்பவங்களைத் தன்னுள் அடக்கிய ஒன்பது எழுத்தோவியங்களைத் தொகுத்து நூலாக்கித் தந்திருக்கிறார் ஆசிரியர்.

பலதரப்பட்ட புராணங்களைத் தேடிப் பிடித்துப் படிக்க நேரமில்லாதவர்கள் நெஞ்சம் இந்நூலைப் படிப்பதன் மூலம் நிம்மதியடையலாம். எளிய நடையில் இனிப்புப் பந்தி படைக்கப்பட்டிருக்கிறது.

பக்தர்கள் படித்துப் பரவசப்படலாம்.

—இந்திரன்

## சுலபமான முறையில் சிறு தொழில்கள்

ஆசிரியர் : ஜனார்த்தனம்

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்
7, எம். கே. அம்மன் கோயில் தெரு,
சென்னை-600004.

விலை: ரூ. 7.50 பக்கம்: 104

படித்துப் பட்டம் பெற்றவர்கள் அல்லது ஓரளவு படித்தவர்கள் வேலை இல்லாமல் வீணே பொழுதைப் போக்குவதை விட, தாங்களே ஏதாவதொரு வேலையைத் தேடிக் கொள்வதன்மூலம், வேலையில்லாப் பிரச்சினையை ஓரளவு தவிர்ப்பதற்கு உதவியவர்களாகவும் ஆவார்கள்.

இந்நூலில் சிறுதொழில்கள் செய்முறைகள் விளக்கப்பட்டுள்ளவ. சாந்து, கண் மை, முகப்பவுடர், பாக்குத்தூள், பற்பொடி, ஊறுகாய், பூட் பாலீஷ், ஃபினாயில் இப்படி 40 சிறுதொழில்கள் செய்முறைகள் மிகத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அத்துடன், அப்பொருள்களை விற்பனை செய்யும் முறையையும் ஆசிரியர் கூறியுள்ளார்.

குடும்பத்தில் வருமானத்தைப் பெருக்க, இல்லத்தரசிகள் கூடத் தமக்கேற்ற தொழில்களை வீட்டிலிருந்தபடியே செய்யலாம். அதற்குச் சிறந்த கையேடாக விளங்குகிறது இந்நூல். —பி. வி. கிரி



# பிணி அகற்றும் கற்றாழை

ஏ. ஆர். என். துரைராஜ்

நம் நாடு முற்றிலும், ஆற்றங் கரைகளிலும், சதுப்பு நிலங்களிலும், தோட்டங்களிலும் கற்றாழை பயிராகும். சிலர் தமது வீட்டிலும் கூட வளர்ப்பதுண்டு.

பலவகைக் கற்றாழைகள் இருக்கின்றன. சிறு கற்றாழை, பெருங் கற்றாழை, பேய்க் கற்றாழை, கருங்கற்றாழை எனப் பல வகை இருப்பினும், இதன் செய்கை முதலியன சற்றேறக்குறைய ஒத்தே இருக்கும்.

**கற்றாழைச் சோறு, பூ**

கற்றாழையைப் பிளந்து நடுவில் பார்க்க, பசிய நீர்ச்சத்துள்ள கொழ கொழப்பான சதைப் பகுதி காணப்படும். இதனையே சோறு என்பர். சோறு மிகுந்த இக்கற்றாழை சோற்றுக் கற்றாழை என்றே அழைக்கப் பெறும். இதன் பூ வெண்மை நிறமுடையது. மருத்துவச் சாத்திரங்களில் இதற்குக் குமரி என்றும், கன்னிஎன்றும் பெயர் சொல்லப்படுகிறது.

**தீரும் நோய்:**


கண் சம்பந்தப்பட்ட கண் நோய், கண்சிகப்பு, கண் அரிப்பு, நீர்வேட்கை, மாந்தம், உடல், எரிவு, நீர்ச்சுருக்கு, உள்வேட்கை, உட்சூடு, மேகஅனல், கல்லீரல் நோய், உடல் அரிப்பு, கற்றாழை நாற்றம், முளை மூலம், மூலக் கடுப்பு, மூலச்சூடு, சொறி, சோகை, கால் எரிச்சல், சிறுநீர் எரிச்சல், மலச்சிக்கல், உடல் பலவீனம், தொழுநோய், வாத மேகம், கருமேகம், ஆகியவை கற்றாழையினால் தீரும்.

**கண்நோய் நீங்க:**

கண்களில் இருக்கும் நோய் நீங்க, சோற்றுக் கற்றாழையின் மேல் தோலை உரித்து அதன் உள்ளிருக்கும் சோற்றை எடுத்து நன்றாகக் கழுவி சுத்தம் பார்த்து, அதில் பொரித்தபடி காரம்சிறிது வைத்து அதிலிருந்து வரப்பட்ட நீரைக் கண்ணில் விட கண்ணோய் நலம் பெறும் என்பது சித்தவைத்திய மூதாதையர்களுடைய கைபாகம்.

**கண்நோய், கண்சிகப்பு, கண்ணருகல், மற்றும் பிற நோய்கள் குணமாக...**

கற்றாழையின் மேல் தோலை நீக்கி, அச்சோற்றை எடுத்துப் பலமுறை கழுவ வேண்டும். ஏன் என்றால், நாற்றம் போக நீக்க வேண்டும். கொஞ்சம் சோற்றை எடுத்து, கர்சீப் அதாவது (வெள்ளை நிறமுள்ள கர்சிப்) கைக்குட்டை போன்ற துணியில் வைத்து, கூட சீனா கற்கண்டு சேர்த்து, முடிந்து தொங்கவிட அதில் நீர்வடியும். அந்த நீரைப் பிடித்துக் கண்களில்விட, கண் சிகப்பு, கண்ணருகல் ஆகியவை மாறும். வெப்பத்தைத் தணிப்பதற்காகும் பற்பச் செந்தூரம் தயாரிப்பதற்கும் இச்சாற்றைப் பயன்படுத்துவார்கள் சித்த மருத்துவர்கள். இதுவே, பற்பச் செந்தூரஞ் செய்யவும் உதவும். இந்த



குமரி (என்ற) சோற்றுக்கற்றாழை

சாற்றை வெதுப்பி மாந்த நோய்களுக்கும், ஊழியால் காணும் நீர்வேட்கைக்கும் கொடுக்கலாம். தாபிதங்களுக்கும், வீக்கங்களுக்கும் பூச, அவை தணியும். நல்லெண்ணெய் ஓர் எடையாகக் கலந்து காய்ச்சித் தலையில் தடவி வர தூக்கம் உண்டாகும். வெண்ணெய், கற்கண்டு, வால் மிளகுத்தூள் இவைகளைச் சாற்றுடன் சேர்த்து உண்ண நீர்ச்சுருக்கு, உடல் எரிப்பு, உட்வேட்கை நீங்கும்.

**உடல் உஷ்ணம், அரிப்பு, சிறுநீர் எரிவு நீங்க...**

தேவையான, கற்றாழையின் சாதத்தை எடுத்து நன்றாக, சுத்தம் பார்த்துக் கழுவிவிட்டு, பிறகு அதோடு பனங்கற்கண்டு போதிய அளவு சேர்த்துச் சாப்பிடும் பட்சத்தில் மேற்கண்ட நோய்கள் நீங்கும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பு:

இப்பவும் கிராமப்புறங்களில் இதனை வழக்கமாக உண்டு வருகிறார்கள். இன்றும் இது கை கண்டமருந்து.

**உடல் பலவீனம், மலச்சிக்கல், உடல் உஷ்ணம், கல்லீரல்நோய் ஆகியவை குணமாக**

கற்றாழைச்சோறு (எலுபது கிராம்) அளவில் எடுத்து, நன்றாகக் கழுவிச் சுத்தம் பார்த்து, உரலில் போட்டு அரைத்து எடுத்துக் கொண்டு, சிறிய கெடாயில் போட்டு 400 மி.லி. விளக்கெண்ணெய் கலந்து, காய்ச்சி, நீர்ச்சத்து மாறியவுடன் இறக்கி வைத்துக் கொண்டு, தேவைப்பட்டபோது காலை மாலை வேளைகளில் ஒரு கிராம் வீதம் அருந்தி வர மேற்கண்ட நோய்கள் விலகும். தவிர, உடல், உஷ்ணம் நீங்கி உடம்பு மினுமினுப்பாய் காணும். கல்லீரல் கூட நன்றாகக் காணப்படும். மலச்சிக்கல் அறவே ஒழியும்.

குறிப்பு:

ஒரு கிராம் அளவு என்பது, ஒரு தேக்கரண்டி அளவு ஆகும்.

**தீராத சூடு, வெள்ளை நீங்க...**

கற்றாழையைக் கொண்டுவந்து மேல் தோலை நீக்கி, அச்சோற்றைப் பலமுறை கழுவி எடுத்து, நெல்லின் அளவு எடுத்து அதில் டைமண்ட் கற்கண்டு அல்லது சர்க்கரை சேர்த்து அதன்கூட கல்நார் பஸ்பம் வைத்துச் சாப்பிடவும். இந்த விதமாகக் காலை மாலை இருவேளையும் 2 வாரம் சாப்பிட மேற்கண்ட் நோய்கள் நீங்கும்.


கற்றாழையின் சோற்றை எடுத்து நன்கு கழுவி, சுத்தம் பார்த்து அதை முளை மூலத்துக்கு மேல் வைத்துக்கட்ட மூலக் கடுப்பு நீங்கும். வெளிவந்த மூலம் உள்ளே இழுத்துக் கொள்ளும்.

**மூலச்சூடு-சொறி-நமை-சோகை நீங்க...**

கற்றாழையின் சோற்றை நன்கு கழுவி சுத்தம் பார்த்து, சோறும் ஆவின் பாலும் கலந்து சாப்பிட்டு







# குடும்பத்திற்கு ஒரு வீடு

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் வீட்டுவசதித் திட்டங்கள் சிறப்பாக நிறைவேறுவது மூலம் அகில இந்திய அளவில் தமிழகம் நற்பெயரைப் பெற்று வருகிறது

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்களுக்கிணங்க பொருளாதாரத்தில் நலிவுற்றோர். குறைந்த வருவாய் பிரிவினர், நடுத்தர வருவாய் பிரிவினர் மற்றும் உயர் வருவாய் பிரிவினர் ஆகியோருக்காக அடிப்படை வசதிகளுடன் தனித்தனி வடிவமைப்புகளில் வீடுகளை கட்டித் தருகின்றது.

மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் ஒரு பெரிய நகரம். மேலும் அது தொழில் வளர்ச்சியடைந்த நகரமானதாலும் மக்கள் பெருக்கம் அதிகமான நகரமானதாலும் திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டம் ஏற்படுத்திட வேண்டுமென்று முன்கூட்டியே உத்தேசித்து நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திண்டுக்கல் நகரத்தில் வீட்டுவசதியினைப் பெருக்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தைப் பணித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கருத்தினைச் செயலாக்கும் முகமாக வீட்டுவசதி வாரியம் இதுவரை 182 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி அதில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு 40 வீடுகளும், குறைந்த வருவாயினருக்கு 74 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்கு 100 வீடுகளும் மற்றும் உயர் வருவாயினருக்கு 24 வீடுகளும், திட்ட மதிப்பு ரூ. 161 இலட்சங்களில் கட்டி முடித்துள்ளது.

மேலும் கட்டம் இரண்டில் நடுத்தர வருவாயினருக்கு 180 குடியிருப்புகளும், உயர் வருவாய் பிரிவினருக்கு 25 குடியிருப்புகளும் ரூ. 74 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது. ரூ. 178 இலட்சங்கள் மதிப்பீட்டில் நடுத்தர வருவாயினருக்கு 204 குடியிருப்புகளும் மற்றும் உயர் வருவாயினருக்கு 96 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகிறது. இதுதவிர, திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தின் தலைநகரமாவதை மனதில் கொண்டு வரும் ஆண்டுகளில் வீட்டுவசதியைப் பெருக்க நடுத்தர வருவாயினருக்கு 924 குடியிருப்புகளும் உயர் வருவாயினருக்கு 340 குடியிருப்புகளும் திட்டமதிப்பு ரூ. 858 இலட்சங்களில் கட்ட உத்தேசிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுதவிர மேலும் சுமார் 381 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வரும் நடப்பாண்டுகளில் திண்டுக்கல்லில் சுமார் 1264 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டங்கள் பூர்த்தியடையும் முன்பாக மக்களின் அடிப்படைத் தேவையான மருத்துவமனை, கல்விக்கூடம், தபால் அலுவலகம், திருமண மண்டபம், விளையாட்டு அரங்கம், அங்காடி மையங்கள் ஆகியன ஏற்படுத்திக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு ஊழியரின் வீட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு அரசு ஊழியர் குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக கட்ட பணித்துள்ளார்கள். இந்தியாவிலேயே அரசு ஊழியருக்கான வாடகைக் குடியிருப்புத்திட்டம் தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் கட்டப்பட்டுள்ளது. திண்டுக்கல்லில் ஏற்கனவே 72 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 130 இலட்சங்கள் திட்ட மதிப்பீட்டில் 114 அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கட்டிடத்தின் வாடகை மதிப்பு அதிக அளவு மதிப்பிடப்பட்டாலும் அரசு ஊழியர்களுக்கு உதவும் பொருட்டு தமிழ்நாடு அரசு குறைந்த வாடகையில் ஒதுக்கீடு செய்து வருகிறது. அதாவது ரூ. 1386 வாடகை மதிப்பீட்டில் உள்ள ஒரு குடியிருப்புக்கு அரசு ஊழியர் செலுத்தும் வாடகை ரூ. 214 மட்டுமே.

இது தவிர கூட்டுறவு சங்கங்களுக்கு "ஹட்கோ" நிதியுதவியுடன் உறுப்பினர் கட்டுமான மதிப்பீட்டில் 30 சதவீதம் பணம் பெற்றுக்கொண்டு வீடுகளைக் கட்டும் திட்டமும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்படுகிறது. தற்சமயம் ஒட்டன் சத்திரத்தில் இதன் அடிப்படையில் ரூ 102 இலட்சங்கள் செலவில் 180 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்டு வருகின்றது.

அண்ணா மாவட்ட வருவாய்க் கோட்டங்களில் ஒன்றான கொடைக்கானலில் 6.00 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 480 குடியிருப்புகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் நிலக்கோட்டையில் 50 ஏக்கர் நிலமும் பழநியில் 34 ஏக்கர் நிலமும் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



# முதலமைச்சர் விருது வழங்கு விழா

சிறப்பான சேவை செய்த காவல், தியணைப்பு, சிறை மற்றும் ஊர்க்காவல் படையின ருக்கு ஆண்டுதோறும் அண்ணா பிறந்த நாவில் முதலமைச்சரின் விருது வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டு நடைபெற வேண்டிய விழாவும் இந்த ஆண்டு விழாவும் துரை நகர ஆயுதப் படைத் திடலில் 16-9-85 அன்று மாலையில் நடைபெற்றது.


ஆயுதப்படைத் திடலில் அமைக்கப்பட்டிருந்த காவலி முழுவதும் மக்கள் கூட்டம் அலை மோதியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தான் தங்கியிருந்த 'அசோக்' ஓட்டலிலிருந்து திறந்த காரில் விழா நடைபெறும் இடத் திற்கு அழைத்து வரப்பட்டார். குதிரைப்படையைச் சேர்ந்த பத்து குதிரை வீரர்கள் முன்னும் பின்னும், பக்கவாட்டிலும் வர, அவரை அழைத்து வந்தனர். திட லில் முதல்வர் நுழைந்தவுடன் கூடி யிருந்த அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர். கூடியிருந்த பொதுமக்களைப் பார்த்து கை அசைத்து, கை கூப்பி வணங்கினார்.

விழா மேடை அருகே கார் நின்றவுடன் காவல்துறைத் தலைவர்கள் வரவேற்றனர். விழா மேடையில் நின்று அணிவகுப்பு





மரியாதையை ஏற்றுக் கொண்டார். திறந்த வெள்ளை நிற ஜீப்பில் ஏறி திடலை மெதுவாகச் சுற்றிவந்து காவலரின் மரியாதையை ஏற்றார். பின்னர் விழா மேடையில், பணியின்போது தீரச் செயல் புரிந்து உயிர்நீத்தவரின் துணைவியார்கட்கு விருதுகளையும், ரூபாய் 3,000 ரொக்கத்தையும் வழங்கினார். மேலும் பணியின்போது தீரச்செயல் புரிந்த காவலர்கட்கு விருதுகளையும், ரூ. 3,000 ரொக்கத்தையும் வழங்கினார்.



விருது பெறுவோரின் பெயர்களை ஒலிபெருக்கி மூலம் தெரிவித்தனர். ஒவ்வொருவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களே விருதுகளை வழங்கினார். விருது வழங்கும் நிகழ்ச்சி மட்டும் ஒரு மணி நேரம் நடைபெற்றது. தமிழகம் முழுவதும் விருது பெற்றோர் 234 பேர்களாவர்.

விழா மேடைக்குப் பின்புறம் அமைக்கப்பட்டிருந்த இருக்கையில் முதல்வர் அவர்கள் அமர்ந்து காவலர்களின் வாத்தியக்குழு நடத்திய இசை நிகழ்ச்சியை ரசித்துப் பார்த்தார். வாத்தியக் குழுவினரின் அணிவகுப்பையும் ஏற்றுக்கொண்டார். உயர் காவல்துறை அலுவலர்கள் முதல்வருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.


இசை நிகழ்ச்சி முடிந்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உள்துறைச் செயலர் திரு டி. வி. வெங்கட்டராமன், இ.ஆ.ப., மூலம் இசைக்குழுவினர் 220 பேருக்கும் தலா ரூ. 500-ம், சிறப்புச் சான்றிதழும் அரசு வழங்கும் என்று தெரிவித்தார்.

பல வண்ணங்களில் நடைபெற்ற வாணவேடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரசித்தார். பிறகு தனது துணைவியாருடன் காரில் திடலைச்சுற்றிக் கூடியிருந்த மக்களைக் கண்டு களித்தார்.

விழாவில் மாண்புமிகு முதல்வரின் துணைவியார், மாண்புமிகு அமைச்சர்கள், காவல்துறைத் தலைவர்கள், வாரியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாநகராட்சி ஆணையர், செய்தித்துறை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் வசதியாக விழாவைக்காணச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் இடமின்மையால், மக்கள் மரங்களிலும் வீட்டின் கூரைகள் மீது இருந்தும் நிகழ்ச்சிகளைக் கண்டனர். காவல் துறை வரலாற்றிலேயே இது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி என்றால் மிகையாகாது.

அ. மருது



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கோவையைச் சார்ந்த மறைந்த காவலர் இராஜரத்தினத்தின் மனைவிக்கு விருது வழங்கும் போது அவர் கண்ணீர் விட்டார். கண்ணீரைத் தனது கைக்குட்டையால் முதல்வர் துடைத்தது அனைவரையும் மனம் நெகிழச் செய்தது.

மதுரை வருவாய்க் கோட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 10 ஆயிரம் ஏழைகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை மாண்புமிகு நிதி மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழங்கி விழாப்பேருரை நிகழ்த்திப் பேசுகையில் கூறியதாவது:


''10 ஆயிரம் பேருக்கு வீட்டு மனைப்பட்டா ஒரே இடத்தில் வழங்குவது என்பது பாராட்டிற்குரியதாகும். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். இட்ட ஆணைக்கு ஏற்ப இது நடக்கிறது. தமிழ்நாட்டில் ஏழ்மைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் நூற்றுக்கு 52 பேரும், வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் நூற்றுக்கு 18 பேரும் உள்ளனர்.

''1977க்குப் பின்பு ஏழைகளுக்கு அதிக வீட்டுமனைப் பட்டா கொடுத்து வருகிறோம். இது அதற்கு முன்பு 25 ஆண்டுகளில் கொடுத்த மொத்த எண்ணிக்கையை விட அதிகமாகும். இந்தப் பட்டாக்களை 10 ஆண்டுளுக்கு விற்கக்கூடாது எனச் சட்டமிட்டுள்ளோம். காமராஜர் ஆட்சிக்காலத்தில் சுமார் 16 ஆயிரம் பேருக்கு ஒய்வூதியம் அளிக்கப்பட்டது. தற்போது சுமார் 2 இலட்சம் பேர் முதியோர் உதவித் தொகையைப் பெறுகின்றனர்.

''தற்போது கொடுக்கப்படும் 10 ஆயிரம் பட்டாக்களில் சுமார் 4 ஆயிரம் பட்டாக்கள் ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்படுகின்றன. ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டக் கடன் தருகிறோம். அவர்களுக்கு கல்வி இலவசமாக அளிக்கிறோம். குறைந்த வட்டியில் கடன் கொடுக்கிறோம். இதை எல்லாம் அவர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு அதிக ஆதிதிராவிடர் மேல்படிப்புக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

''பாங்குகள் தரும் கடன்மூலம் புதிய தொழில்தொடங்க முயற்சி செய்யவேண்டும். சென்ற ஆண்டு 52 பாங்குகள் தொழில்தொடங்க ரூ. 162 கோடி கடன் வழங்கியுள்ளது. இதனால் 5 இலட்சம் பேர் பயன் பெற்றனர். இந்த ஆண்டு தொழில் தொடங்குவதற்காக ரூ.250 கோடி கடன் வழங்க பாங்குகள் முடிவு செய்துள்ளன.''

விழாவிற்குத் தலைமை உரையாற்றிய மாவட்ட ஆட்சியாளர் திரு. இரா. வரதராஜுலு, இ.ஆ.ப. பேசும் போது குறிப்பிட்டார்:



# ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா

''மதுரை வருவாய்க்கோட்டத்தில் 10 ஆயிரம் பேருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்படுகிறது. இதில் 7 ஆயிரம் பேர் ஏற்கெனவே இருப்பவர்கள். இதைத்தவிர 3 ஆயிரம் பேருக்குப் புதிதாக வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் 1977 முதல் இன்றுவரை சுமார் 1 இலட்சத்து 54 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர சுமார் 12 ஆயிரத்து 900 பேருக்கு 25 ஆயிரத்து 309 ஏக்கர் நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**கே.பி. நல்லதம்பி**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.

''மதுரை மாவட்டத்தில் 1 இலட்சத்து 58 ஆயிரத்து 119 பேர் வறுமைக்கோட்டின் கீழுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டும் என்பது அரசின் எண்ணம். கடந்த ஒரு ஆண்டில் 36 ஆயிரத்து 800 பேருக்கு வீட்டுமனை பட்டா கொடுத்துள்ளோம். இன்னும் 1 இலட்சத்து 21 ஆயிரத்து 380 பேருக்கு மனைப்பட்டா கொடுக்கவேண்டியுள்ளது. இதற்குச் சுமார் 3 ஆயிரத்து 700 ஏக்கர் நிலம் தேவைப்படும். தற்போது அரசிடம் உள்ளது ஆயிரத்து 150 ஏக்கர்தான். இதை டிசம்பரில் கொடுப்போம். இதைத் தவிர 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டும். இதற்காகச் சுமார் ரூ.1 கோடி ஆகலாம்''



# இராயப்பேட்டையில் ஓர் இனிய விழா

சென்னை, இராயப்பேட்டையில் அமைந்துள்ள அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் - சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில், அருள்மிகு பழனியாண்டவர் முன்மண்டபத் திறப்புவிழாவும், அருள்மிகு ஐயப்ப சுவாமி சன்னிதி கால்கோள் விழாவும் 9.9.85 அன்று சிறப்புற நடைபெற்றது.

அவ்வமயம், அருள்மிகு துர்க்கையம்மன் முன்மண்டபத்தையும் யாகசபை மண்டபத்தையும் சமூக நலத்துறைச் செயலாளர் திரு.கு. ஆளுடையபிள்ளை இ.ஆ.ப. அவர்களும், சலவைக் கல்லால் புதுப்பிக்கப்பெற்ற நவக்கிரக சன்னிதியை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு ந.சுவாமிநாதன் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

## வரவேற்புரை

விழாவிற்கு வந்திருந்தோரைத் திருக்கோயில் தக்கார் திரு எம். பழனியப்பன் வரவேற்றுப் பேசுகையில், ''சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பாக இராயப்பேட்டை வாழ் ஆத்திகப் பெருமக்களால் உருவாக்கப் பெற்றது இத் திருக்கோயில். தமிழ்த் தென்றல் திரு. வி. க., மகாகவி பாரதியார் முதலான தமிழ்ச் சான்றோர்கள் வழிபட்ட தலமிது'' என்று பெருமையோடு குறிப்பிட்டார்.

தற்போது புதியதாகக் கட்டப்பெற்ற அருள்மிகு பழனியாண்டவர் முன் மண்டபம், யாகசாலை மண்டபம், பிரகாரத் தரை அமைத்தது, சலவைக்கல்லால் நவக்கிரக சன்னிதி புதுப்பித்தது போன்ற பணிகள் ரூ. 1,25,000 மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அருள்மிகு துர்க்கையம்மன் மண்டபம், இராயப்பேட்டை திரு.வி.முனுசாமி என்பாரின் ரூ. 8500 நன் கொடையால் கட்டி முடிக்கப்பட்டது.

## ஆலய வருமானம்

இக் கோயிலின் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாயாகும்.

இத் திருக்கோயிலுக்குச் சொந்தமாக-கதீட்ரல் சாலையில் காலியாக இருந்த மனையில் 1972ஆம் ஆண்டில் கல்யாண மண்டபத்திற்குக் கால்கோள் விழா நடத்தி, பின்னர் 1979ஆம் ஆண்டில் சமயப் பிரச்சாரக்கூடமாகத் துவங்கி நின்று விட்டதை, 1982ஆம் ஆண்டில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனைப்படி திருக்கோயிலுக்கு நிரந்தரமான வருவாய் தொடர்ந்து கிடைக்கும்வண்ணம் அழகிய கட்டடமாக ரூ. 5 லட்சம் மதிப்பீட்டில் பூர்த்திசெய்து, 1.4.85 அன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டடம், லட்சுமி விலாஸ் வங்கிக்கு மாதமொன்றுக்கு ரூ. 13,848 வாடகைக்கு விடப்பட்டதின் மூலமாக ஆண்டொன்றுக்கு ரூ. 1,66,000 வருவாய் இக்கோயிலுக்குக் கூடுதலாகிறது. இதனால் இத்திருக்கோயிலின் மொத்த வருமானம் இவ்வாண்டில் ஒரு லட்சம் ரூபாய் என்பதிலிருந்து 3 லட்ச ரூபாயாக உயர்கிறது.

மாநிலத்திலேயே அதிகமான வாடகை பெறும் திருக்கோயில் கட்டடம் இதுவே என்று கருதப்படுகிறது.

விழாவிற்குத் தலைமை தாங்



னார், சமூகநலத் துறை செய லாளர் திரு கு.ஆளுடையபிள்ளை இ.ஆ.ப; அவர் இத்திருக்கோயில் நிர்வாகத்தையும், சொத்துக்கள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

**மாண்புமிகு அமைச்சர் உரை**

விழாவில் பேருரையாற்றிய மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டதாவது—

''இராயப்பேட்டை பகுதியில் ஒரு தொன்மை வாய்ந்த இந்த ஆலயத்திலே திருப்பணியை முடித்து புதிய திருப்பணியைத் துவக்குகின்ற ஒரு விழாவை-என்னுடைய 60வது பிறந்த நாளில்-இன்றைக்கு கலந்து கொள்ளுகிற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நான் இறையருள் என்றே எண்ணுகிறேன்.

''இதற்கு முழுமுதற் காரணமாக அமைந்திருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, நான் இந்த முதல் நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் துணை ஆணையர் திரு ந.சுவாமிநாதன், தென்னிந்திய அர்ச்சகர் சங்கப் பொதுச் செயலாளர் திரு டி.எஸ்.சாம்பமூர்த்திசிவாச்சாரியார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**ஏழைகளுக்கு உணவு**

விழாவிற்கு, தமிழக மேலவை அரசுக்கொறடா திரு ஜேப்பியார் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் சைதை. துரைசாமி, மயிலை வே.தமிழ்மணி ஆகியோரும் வந்திருந்தனர்.

திருக்கோயில் நிர்வாக அலுவலர் திரு.தெ.ப.ஏகாம்பரம் விழா முடிவில் நன்றி கூறினார்.

பின்னர் திருக்கோயிலில் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு சுற்றுலா-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் உணவு வழங்கினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**இல. இராசேந்திரன்**





# பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்....

சிவகங்கையினைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மிகவும் முனைப்போடு மக்களுக்கு வீடு கட்டும் பணியினைச் செயல்படுத்தி வருகிறது.

அரசு அலுவலர்களுக்குச் சலுகை வாடகைக் குடியிருப்புக்கள் சிவகங்கையில் 288 வீடுகள் ரு. 242 இலட்சம் செலவிலும், காரைக்குடியில் 36 வீடுகள் ரூ.31 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்காக சிவகங்கையில் 230 ஏக்கர் நிலத்தில் 7,300 குடியிருப்புக்கள் ரூ.2,300 இலட்சத்திலும், காரைக்குடியில் 155 ஏக்கர் நிலத்தில் 4,500 வீடுகள் ரூ. 1,.10 இலட்சத்திலும் தேவகோட்டையில் 100 ஏக்கர் நிலத்தில் 3,000 வீடுகள் ரூ.1000 இலட்சத்திலும், மானாமதுரையில் 100 ஏக்கர் நிலத்தில் 3,000 வீடுகள் ரூ. 1,000 இலட்சத்திலும் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் குறைந்த மற்றும் நடுத்தர உயர்தர வருமானமுள்ளவர்களுக்காக ஐந்து ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்க திட்டமிட்டு, அனைத்துப் பூர்வாங்கமான பணிகளும் துரிதமாக்கப்பட்டு வருகின்றன.

சிவகங்கையில் அரசு அலுவலர்களுக்கான குறைந்த வாடகை வீடுகள் கட்டப்பட்டு வருவதை 17.9.85ஆம் நாளன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு திருப்பூர் மணிமாறன், பார்வையிட்டு கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்துமாறு பொறியாளர்களுக்கு ஆணையிட்டார்.



# ஆண்டிப்பட்டியில் ஆக்கப்பணிகள்

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் இவ்வாண்டு கீழ்க்காணும் திட்டப்பணிகள் எடுத்துச்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம்:—**

இத்திட்டத்தின் கீழ் 7.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவரை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 111 குடும்பத்தினர், பயனடைந்துள்ளனர். ரூ.0.99 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் 11 ஆதிதிராவிடர் குடும்பத்தினர் பயன்பெற்றுள்ளனர். மேலும் 12 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**வேளாண்மை உற்பத்திப் பெருக்குத்திட்டம்:**

இத்திட்டத்தின் மூலம் 312 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 42 பேர் தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர் ஆவார்கள். ரூ. 3.11 இலட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் :**

கிராமப்புற மக்கள் வாழ்வு மலரவும் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அமைக்கும் நோக்கோடு 139 வேலைகள் ரூ. 14.19 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன. இதில் 7 வேலைகள் முடிவுற்றன. இதுவரை 26000 மனித நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டம் :**

இவ்வாண்டு விடுக்ஸ ஆதிதிராவிடர்களுக்கு அவர்களின் உழைப்பைப் பயன்படுத்தியும், அவர்களது வாழ்வு மேம்பாடு அடையும் நோக்கோடு 65 வீடுகள் ரூ. 3.90 இலட்சத்தில் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

**வேளாண்மைப் பொறியியல் (மண்வளப்பாதுகாப்பு)**

மண்வளப்பாதுகாப்புத் திட்டத்தின்கீழ். 1,300 ஏக்கரில் மண்வளப்பாதுகாப்பு வேலைகள் மற்றும் 13 தடுப்பு ஆணை வேலைகளும் ரூ. 3.34 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 12 கசிவுநீர்க்குட்டைகள் ரூ.5.92 இலட்சங்களில் செயலாக்கத்தில் உள்ளன.

**கால்நடை பராமரிப்பு**

கால்நடை மேம்பாட்டு முனைப்புத்திட்டத்தின்கீழ் ஆண்டிப்பட்டியில் ஒரு செயற்கை முறை இனவிருத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இத்துறையில் மொத்தம் 72,115 கால்நடைகளுக்குக் கருவூட்டல் செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 42,475 கன்றுகள் பிறந்துள்ளன.

கன்று மானியத் திட்டத்தில் மொத்தம் 875 நபர்களுக்கு ரூ. 87,052 மானியம் வழங்கப்பட்டுள்ளது. தீவனப்பெருக்கத் திட்டத்தின் அடிப்படையில் 15,05,000 புல். புல்கரணைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

**மீன் வளத்துறை**

ஆண்டிப்பட்டி தொகுதியிலுள்ள வைகை அணை மீன் விதைப்பண்ணையில் கூடுதலாக 12 சிமிண்ட் நர்சரித் தொட்டிகள் ரூ. 22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுப்பணி நடைபெற்று வருகிறது.

**உயர்இன மீன் வளர்ப்புத் திட்டம் (வைகை அணை)—**

இவ்வாண்டு வைகை அணையில் 15 இலட்சம் உயர் இன மீன் குஞ்சுகள் இருப்பு



செய்யப்பட்டு வருகின்றன. இதன்மூலம் இவ்வாண்டு 55 டன் மீன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

**விரால் வளர்ப்புத்திட்டம் (மஞ்சளார் அணை)**

இவ்வாண்டு விரால் வளர்ப்புக்குளத்தில் 1,600 விரால் குஞ்சுகள் இருப்பு செய்து வளர்க்கப்பட்டுவருகின்றன. இதன்மூலம் ரூ. 6,000 வரை வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

**மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம்**

ஆண்டிப்பட்டிச் சட்டமன்றத்தொகுதியில் கீழ்க்காணும் மூன்று உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. வைகை மீனவர் கூட்டுறவுச் சங்கம்
2. குள்ளப்புரம் மீனவர் கூட்டுறவுச் சங்கம்
3. பெரியகுளம் மீனவர் கூட்டுறவுச் சங்கம்

மேற்கண்ட மூன்று சங்கங்களில் மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம் அமல் படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினால் மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர் மீன்பிடிக்கும்போது உயிரிழைப்பு நேர்ந்தால் ரூ. 15,000 பெறவும், கை, கால் இழப்பு நேரிட்டால் ரூ. 5,600 பெறவும் வழிவகை உள்ளது.

**நெடுஞ்சாலைப் மற்றும் ஊரகப்பணித்துறை**

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் ஊரகப்பணித்துறை மூலம் ரூ.26.44 இலட்ச செலவில் சாலை வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கிராமியத் தொழில்கள்**

ஆண்டிப்பட்டி தொகுதியில் நடப்பு ஆண்டில் 7 தொழில் முனைவோருக்கும் விசைச்செக்கு அமைப்பதற்கு மொத்தம் ரூ.46,450 கடன் வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய தொழில்கள் திட்டத்தின் கீழ் ஆண்டிப்பட்டித் தொகுதியில் மொத்தம் 46 பல்வேறு தொழில்கள் (செங்கல் காளவாசல், பேக்கரி, விசைச்செக்கு) துவங்கப்பட்டுள்ளன.

**கிராமிய வீட்டுவசதித் திட்டம்**

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் பெரியகுளம் கோட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச்சங்கம்மூலம் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய 4,016 ஆதி திராவிடர்களுக்கும், 982 ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்கும் முறையே ரூ. 121.56, ரூ. 38.37 இலட்சம் செலவில் 4,998 குடிலுக்கும் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஆண்டிப்பட்டித் தொகுதியில் 14 நபர்கள் விதவை மகள் திருமணத்திட்ட நிதி உதவியின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**விதவைகள் நல்வாழ்வுத்திட்டம்:**

அ. இத்தொகுதியில் விதவைகள் சுய தொழில்புரிந்து அவர்கள் வாழ்வு மேம்பட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 560 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு உள்ளது.

ஆ. இத்தொகுதியில் தையல் தொழில் கற்றுக்கொண்ட விதவைகளுக்கு 25 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இ. இத்தொகுதியில் 1 முதல் 2 வரை படித்துக்கொண்டிருக்கும் 34 விதவைத்தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

ஈ. இத்தொகுதியில் உள்ள 15 உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள் வாங்குவதற்காக உதவித்தொகை தலா ரூ. 25 வழங்கப்பட்டுள்ளது.

உ. இத்தொகுதியில் 65 விதவைப் பெண்கள் விடுதியில் உள்ள குழந்தைகளுக்குச் சீருடை தைக்கும் பணியின் வாயிலாக ஆண்டிற்கு ரூ. 1000 முதல் ரூ. 3000 வரை வருமானம் பெற்று வருகின்றனர்.

ஊ. ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் கல்வி மற்றும் இலவச சத்துணவு கூடங்கள் 131 நடைபெற்று வருகின்றன. இவைகளை நர்சரிப்பள்ளிகளாக மாற்றி 73 நபர்களுக்கு 2 மாதகாலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**ஊட்டச்சத்துத் திட்டம்:**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் 1981ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இவ்வட்டாரத்தில் மொத்த மக்கள் தொகை 1,51,523. ஒவ்வொரு மாதமும் 5 முதல் 36 மாதக் குழந்தைகளின் எடை எடுக்கப்பட்டு வருகிறது.

**இலவச பாடநூல் வழங்குதல்:**

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 1 முதல் 8ஆம் வகுப்புவரை கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட பாடநூல்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 3.25 இலட்சமாகும்.

# வெள்ளி விழா ஆண்டில் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம்

நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப.
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

கிராமத்துக் கைவினைஞர்களின் ஏழ்மைத் துயரினைப் போக்க கதர் கிராமத் தொழில் துறை ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வந்தது. இச்செயல்பாடு மேலும் சிறந்து விளங்க 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாரியம் ஏற்பட்டு 25 ஆண்டுகள் 15.9.85ல் முடிந்து தன் சிறப்பான வெள்ளி விழா ஆண்டினைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

கடந்த 25 ஆண்டுகளில் இவ்வாரியம் கிராமத்து வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளுதல், கிராமத்துக் கைவினைஞர்களின் அன்றாட வருமானத்தை அதிகப்படுத்தல், வருமானத்தைப்பெருக்கும் வகையில் அவர்களின் திறனை அதிகப்படுத்தப் பயிற்சிகள் அளித்தல், நவீன கருவிகள் வழங்குதல் போன்ற பணியினை முக்கியக் கொள்கையாகக் கொண்டு அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

கதர் உற்பத்தியில் தமிழ்நாடு சுமார் 11.08 கோடிக்கு உற்பத்தி செய்து ரூ.10.74 கோடிக்கு விற்பனை செய்து இந்தியாவிலேயே தமிழகம் உத்திரப் பிரதேசத்திற்கு அடுத்த இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியில் சுமார் 106.37 கோடிக்கு மேல் உற்பத்தி செய்து தமிழ்நாடு சுமார் 102. கோடி விற்பனை செய்து அனைத்திந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறது.



தமிழகத்தில் 6.46 இலட்சம் மக்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுவருகிறது. குறிப்பாக வறுமை நிலையிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கும், மலை வாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் கீழ்க் கண்ட விவரப்படி வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

| | நபர்கள் |
|---|---|
| 1. ஆதிதிராவிடர்மக்கள் | 79,484 |
| 2. மலைவாழ்மக்கள் | 8,216 |
| 3. பெண்கள் | 1,97,085 |
| 4. இதரர்கள் | 3,60,985 |
| மெத்தம் | 6,45,770 |

ஆண்டு ஒன்றுக்குக் கதர் வாரியத்தின் மூலம் தமிழ்நாட்டில் சுமார் 50,000 புதிய நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகின்றன. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் தமிழக அரசும் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கி வருவதனாலேயே தமிழ்நாட்டில் கதர்த்துறை இந்த அளவிற்குச் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளது.

தமிழக அரசு சட்ட விதிமுறைகளுக்கு அளித்துள்ள விதிவிலக்குகள் பின்வருமாறு:

விற்பனை வரியிலிருந்து கதர் கிராமத் தொழில் பொருட்களுக்கு விலக்கு.

இலவம் பஞ்சு மற்றும் மணிலா வித்து ஆகியவைகளுக்குக் கொள் முதல் வரியிலிருந்து விலக்கு.

வாடகை மற்றும் குத்தகைச் சட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் தயாரிக்கும் பொருட்களை அத்தியாவசியப் பொருட்கள் என அறிவித்தது.


கதர் அங்காடிகளை அக்டோபர் 2-ம் தேதி திறந்து வைக்க ஏதுவாகத் தேசிய விழா மற்றும் விடுமுறைச் சட்டத்தின் கீழ் விலக்கு.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் உதவி பெற ஏதுவாகப் பதியப்படும் பத்திரங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு.



அரசாங்கத் துறைகள், அதன் பொது நிறுவனங்கள் போன்றவைகளுக்குத் தேவையான பண்டங்களைக்கதர் கிராமத்தொழில் வாரியத்திலிருந்து வாங்கிட வேண்டும் என்ற ஒதுக்கீடு முறை அமல் செய்யப்பட்டது.

மரமேறுபவர்களுக்கும், பனை வெல்லம் காய்ச்சும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசின் பொதுப் பணித்துறையைச் சார்ந்த பனை மரங்களைக் குத்தகைக்கு விடுதல்.



25 கிராமங்களைத் தத்தெடுத்து ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது 200 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

தற்போது தயார் நிலையில் உள்ள 100 புதிய தொழிற்கூடங்கள் கட்டிடங்கள் திறப்பு விழா.

2.10.85 முதல் 6.10.85 வரை சென்னை கலைவாணர் அரங்கில் கதர் மற்றும் கிராமத் தொழில் செயல்முறை விளக்கங்கள் மற்றும் கண்காட்சி கலை நிகழ்ச்சி, சொற்பொழிவு முதலியன நடத்துதல்.

மாவட்டங்களில் 5 இடங்களில் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை நடத்தி இந்த வட்டாரத்தில் உள்ள கட்டடங்கள் திறப்பு விழா செய்தல்.

2.10.85 அன்று வெள்ளிவிழா துவக்கத்தின்போது கதர் மற்றும் கிராமத் தொழில் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மிக முக்கிய நபர்களைக் கௌரவித்தல்.

1. திரு ஏகாம்பரம்-அம்பர் ராட்டைக் கண்டுபிடித்தவர்.

2. திரு. ஆர். பாலசுந்தரம்-புது உலோக ராட்டை கண்டுபிடித்தவர்.

திரு. எம். பக்தவச்சலம்-முன்னாள் தமிழக முதல்வர்-வாரியத்தின் முதல் தலைவர்.

திரு. வி. பத்மநாபன்-முன்னாள் முதல் செயலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

நூற்போர், அதிக ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரியும் நெய்வோர், நூற்போர் மற்றும் கைவினைஞர்களைக் கௌரவித்தல்.

குறளகத்தில் உள்ள கதர் அங்காடியில் காந்தி சிலை திறப்பு விழா.

குறளகத்தில் உள்ள கதர் அங்காடியில் மளிகைப் பொருள் விற்பனை திறப்பு விழா.



புதுரக பாலியஸ்டர் புடவைகள் விற்பனையைத் துவக்கிவைத்தல்.

கதர் விற்பனையில் சிறந்து விளங்கிய ஊராட்சி ஒன்றியம் மற்றும் கல்வித் துறை அலுவலர்களுக்குப் பரிசளித்தல்.

இராமநாதபுரம் மாவட்டத்தைக் கதர் கிராமத் தொழில் மாவட்டமாக மாற்றியமைத்து கதர் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

கோவையில் தொழில்பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்து கதர் கிராமத் தொழில் வல்லுநர்களை உருவாக்கத் திட்டமிடல்





அரசுத்துறை மற்றும் அதன் பொது நிறுவனங்களுக்குத் தேவைப்படும் துணி வகைகளுக்கு 50%கதரிலிருந்தும் 50%கைத்தறியிலிருந்தும் வாங்கிட வேண்டும் என்ற ஒதுக்கீடு முறை அமல் செய்யப்பட்டது.

ஆண்டுதோறும் கதர் விற்பனையில் கதர் ஆணைக்குழு வழங்கும் சதவிகிதத்துடன் கூடுதலாக 10 விழுக்காடு தள்ளுபடி 90 நாட்களுக்கு அளித்தல்.

ஆண்டுதோறும் 60 நாட்களுக்குப் பாலிவஸ்திரா விற்பனைக்கு 10 விழுக்காடு தள்ளுபடி தமிழக அரசால் அளிக்கப்படுகிறது.

பனைமரத் தொழிலாளர்கள் பனைமரம் ஏறும்போது விபத்துக்குள்ளானால் ரூ. 10,000 வரை குடும்ப நல நிதி கொடுக்கப்படுகிறது.

கதர்த் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களில் பெரும்பாலோர் பெண்களே. ஒரு கிராமிய நூற்பு நிலையத்தில் 30 பேர் வீதம் சுமார் 560 கிராமிய நூற்புநிலையங்களில் சுமார் 17,000பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1985-86ல் மேலும் 2100 பெண்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சுமார் 53 கிராமிய நூற்பு நிலையங்கள் ஏற்படுத்த அரசு முன்னரே அனுமதி வழங்கியுள்ளது.

கிராமிய நூற்பு நிலையங்களில் உற்பத்தியாகும் நூலினை நெசவு செய்யும் பணியில் சுமார் 6000க்கு மேற்பட்ட பரம்பரை நெசவாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு கதர்த் துணி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. நெசவாளர் குடும்பத்தைத் தவிர இதர குடும்பங்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டு வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. நெசவாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் புதியதாக நேப்பாளி தறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



ஆதிதிராவிடர் போன்ற வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு நேப்பாளி தறிகளில் போதுமான பயிற்சி அளித்து அவர்களுக்கு ஒரு நல்ல மாற்றுத் தொழிலாக இந்த நெசவுத் தொழில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு அரசுத் திட்டங்கள் மூலம் இதுவரை 52 நேப்பாளித் தறி அலகுகளும், கதர் ஆணைக்குழு மூலம் 16 தறி அலகுகளும்-மொத்தம் 68 தறி அலகுகள் அனுமதிக்கப்பட்டு அவற்றை அமைத்து ஆரம்பிக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 3400 நபர்களுக்கு நெசவு வேலை ஏற்படுத்திக் கொடுக்க வாய்ப்பு உள்ளது.

நேப்பாளி அலகு ஒன்று ரூ.7½ இலட்சம் வீதம் 68 அலகுகளுக்கு ரூ.510 இலட்சம், அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் செலவிடப்பட்டு வருகிறது.

கதர் வாரியம் சுமார் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள கதர்த் துணிகளை ஏற்றுமதி இணையங்களின் மூலம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

கதர் ரகத்தில் பாலியஸ்டர் கதர் உற்பத்தி செய்ய வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்து இதற்கான நூற்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆண், பெண்களுக்குத் தேவையான புதிய நவீன பாலியஸ்டர் ரகங்கள் தயார் செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை இரண்டரை இலட்சம் மீட்டர் பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

35 பாலியஸ்டர் நூற்பு நிலையங்கள் தற்சமயம் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

2.10.85ல் புது ரக பாலியஸ்டர் புடவைகள் முதல் முறையாக விற்பனைக்கு வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தி தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் சிறப்பான முறையில் செய்யப்பட்டு வருகிறது. சுமார் 1200 பட்டு நெச



வாளர்கள் நிரந்தர வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600 முதல் ரூ. 700 வரை வருமானம் கிடைக்கிறது. இவர்கள் கூலி சென்ற ஜனவரி '85-ல் 10 சதவீதம் முதல் 15 சதவீதம் வரை உயர்த்தப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு (1984-85) சுமார் ரூ. 2.75கோடி மதிப்புள்ள பல்வேறு விதமான பட்டு ரகங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அகில இந்திய அளவில் ஒரு தனி நிறுவனம் பட்டு உற்பத்தியில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 3 கோடிக்கு உற்பத்தி செய்வது தமிழ்நாட்டில் மட்டும்தான். அதற்கு ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 1600 கிலோ தங்க ஜரிகை தேவைப்படுகிறது.

அத் தேவையினைப் பூர்த்தி செய்யத் தமிழ்நாட்டில் ஓர் ஜரிகை உற்பத்தி அலகு துவங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கதர் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள 26 கிராமத் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சுமார் 16 கிராமத் தொழில்களை ஏற்று நடத்தி வருகிறது.

சோப்புத் தொழில் மிகவும் சிறப்பான முறையில் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது. 38 இலாகா அலகுகளில் ரூ. 355 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் கோபுரம் மார்க் சோப்புகளுக்குக் கேரளம் போன்ற வெளி மாநிலங்களில் நல்ல கிராக்கி உள்ளன. சலவை சோப்புகள் தவிர வேம்பு மற்றும் சந்தனக் குளியல் சோப்புகளும் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

திருச்சி அருகில் இருக்கும் நாந்தலூர் என்ற ஊரில் மாதம் ஒன்றுக்கு 20 டன் எடையுள்ள சலவை சோப்புத் தயாரிக்கும் அலகு திருச்சி 'பெல்' நிறுவன ஒத்துழைப்புடன் இந்த வாரியம் வெகு விரைவில் துவங்க இருக்கின்றது. இங்கு உற்பத்தி ஆகும் சலவை சோப்பு அனைத்தையும் திருச்சி 'பெல்' நிறுவனமே வாங்கிக் கொள்ளும்.

தமிழ்நாட்டில் 28 தோல் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை மூலம் காலணிகள், தோல் பைகள், பெல்ட்டுகள், இதர ஆடம்பர தோல் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள் சாலை ஓரங்களில் கடும் வெயிலிலும், மழையிலும் துன்பப்படுகிறார்கள். அவர்களது துயர் துடைக்க சுமார் 7500- மதிப்பில் இரும்பினால் ஆன பெட்டிக் கடைகள் வடிவிலான பணிக்கூடங்கள், தையல் மிஷின் மற்றும் தேவையான இதர உபகரணங்கள் ரூ.500 நடைமுறை மூலதனம் ஆகியவைகள் இனாமாக வழங்கப்பட்டுள்ளன. இவ்விதம் 1982-83ல் 37.50 இலட்சத்தில் 500 பெட்டிக்கடைகளும் 1983-84ல் ரூ. 36.50 இலட்சத்தில் 500 பெட்டிக்கடைகளும், வழங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ. 52.65 இலட்சத்தில் 750 பெட்டிகள் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் நிலையிலிருந்து ஏழை காலணி தொழிலாளர்கள் மாதம் ரூ.600 முதல் ரூ. 700 வரை சம்பாதிக்கிறார்கள். இத்திட்டம் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றாகும்.

இவை தவிர வாரியம் 4,802 காலணி தொழிலாளர்களுக்கு ரூ. 114 -இலட்சமும், 1075 தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு சுமார் 50 இலட்சமும் கடன் மற்றும் மான்யமாக அரசு மூலம் உதவிகள் வழங்கப்பட்டு காலணி தொழிலாளர்களின் துயர் துடைக்கப்பட்டுள்ளது.

கிராமத் தொழில்களில் பனைத் தொழில் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள 8 கோடி பனை மரங்களில் தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 5 கோடி மரங்கள் உள்ளன. பனைமரத்தின் ஒவ்வொரு பகுதியும் மக்களுக்குப் பயன்படுகின்றன. இதனால்பனை மரத்தினை ''மாநில அரசு மரமாகத்'' தமிழக அரசு அறிவித்துள்ளது.

மாவட்டந்தோறும் பனைப் பொருள் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பனஞ்சர்க்கரையைக் கொண்டு தயாரிக்கப்படும் ''பாம்டா'', 'பாம்கூலா' பானங்கள் தமிழ்நாட்டில் மக்களுக்கென ஓர் புகழை எட்டியுள்ளன. சாக்லேட், மிட்டாய், பனங்கற்கண்டு ஆகியவை பெருமளவில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

பனை நார் மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஆண்டு தோறும் ரூ.47.09 இலட்சம் மதிப்பிற்கு ஏற்றுமதியாகின்றன. சமீபத்தில் பனைத்தும்பு எடுக்க ஒரு இயந்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் பனைத்தும்பு உற்பத்தி துரிதமாக ஏற்படுவதுடன் தொழிலாளர்களுக்கு வருமானம் கூடுகிறது.

தமிழகத்தில் 10 கைமுறைக் காகித அலகுகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கூட்டுச் சிறப்புத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கென 15 நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 1500 அரிஜன மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது.

இவ்வாண்டு தமிழக அரசு 250 மெட்ரிக் டன் (பேப்பர்) மேல் அட்டைக் காகிதங்களும், 250 மெட்ரிக் டன் படி எடுக்கும் தாள்களும், தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடமிருந்து வாங்குவதற்கு உத்தரவு வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த உத்தரவின் மூலம் வாரியத்தில் கைமுறைக் காகிதத்தொழில் மேலும் சிறப்பாக வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பெரிய தொழிற்சாலைகளும், கிராமத்தொழில்களும் இணைந்து செயல்பட்டால், கிராமத் தொழில்கள் சிறப்புற முன்னேற்றம் அடைய பெரும் வாய்ப்பு உள்ளது. இந்தக் கருத்தில் திருச்சி பெல் (BHEL) நிறுவன ஒத்துழைப்புடன் இந்த வாரியம் திருச்சிக்கு அருகில் ஒரு கைமுறை







காகித அலகு வெகுவிரைவில் துவக்க இருக்கிறது.

**கிராமத் தொகுப்பு வளர்ச்சித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 856.20 இலட்சம் அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு 12,371 நபர்கள் பயனடையக் கூடிய வகையில் பல்வேறு தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களுக்கு இதுவரை ரூ. 35.14 இலட்சம் அரசிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டு 2208 நபர்கள் பயனடையக்கூடிய வகையில் பல்வேறு தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 36.40 இலட்சம் அரசிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டு 875 நபர்கள் பயனடையும் வகையில் பல தொழில் திட்டங்களை வாரியம் செயல்படுத்தியுள்ளது.

**ஒருங்கிணைக்கப்பட்ட மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்:**

ரூ. 35.67 இலட்சம் செலவில் பல்வேறு தொழில் திட்டங்கள் மூலம் 1832 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். 7வது திட்ட காலத்தில் ரூ.83 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மேற்குமலைத் தொடர் வளர்ச்சித் திட்டம்:**

ரூ. 5,000 இலட்சம் செலவில் 1500 மலைவாழ் மக்கள் பயன் பெறத்தக்க வகையில் பல்வேறு தொழில் திட்டங்கள் 7வது திட்ட காலத்தில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**கிழக்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

ரூ. 50 லட்சம் செலவில் 1500 மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில் தேனீ வளர்ப்பு பிரம்பு-மூங்கில், கற்றாழை நார் முதலிய தொழில் வளர்ச்சித் திட்டங்களை 7வது திட்ட காலத்தில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 7வது திட்ட காலத்தில் ரூ. 1.20இலட்சத்தில் 1200 பேருக்கு வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



6வது திட்ட காலத்தில் வாரியத்தில் சிலிகேட் உற்பத்தி, மரம் அறுக்கும் தொழிற்சாலை, அண்ணா எண்ணெய்ப் பரிசோதனை நிலையம் ஆகியவற்றைச் செயல்படுத்த ரூ. 62 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 7வது திட்ட காலத்தில் மேலும் பல திட்டங்கள் செயல்படுத்த ரூ. 115 இலட்சம் செலவிடப்படவுள்ளது.

**அரிசன நலத்திட்டம்:**

நீலகிரி, ஜவ்வாது மலையில் உள்ள அரிசன மக்களுக்குத் தேன் எடுக்கும் தொழிலில் பயிற்சி அளித்திட 0.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் வெள்ளிவிழா காணும் இத்தருணத்தில் மாவட்டங்கள் தோறும் ஒரு குறிப்பிட்ட கிராமத்தைத் தத்தெடுத்து அம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் கிராமத்தில் சுமார் 200 பேர்களுக்கு கதர் மற்றும் கிராமத் தொழில்திட்டங்களின் மூலம் வேலை வாய்ப்புக் கொடுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



# அண்ணலின் அமுத மொழிகள்

● தீண்டாமை என்பது நுட்பமான பல ரூபங்களில் நம்மைப் பிரித்து வைத்திருக்கிறது. அதனால் வாழ்க்கை இன்பமற்றதாயும், கஷ்டமுடையதாயும் இருந்து வருகிறது.

● மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல; அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சியா என்றால் அதுவுமில்லை. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்றுகூடினால்தான் மனிதனாகிறான். இம்மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.

● இந்த உடலைப் புலனின்பச் சாக்கடையாகவும் நடத்தலாம். பேரின்பக் கோயிலாகவும் ஆக்கலாம். உடலைப் பேரின்பக் கோயிலாக ஆக்க விரும்புபவன், கட்டுப்பாடான வாழ்க்கைக்கு உட்பட்டே திரவேண்டும்.

● எந்தச் சீர்திருத்த இயக்கத்திற்கும் எதிர்ப்பு ஏற்பட்டே தீரும். ஆனால் ஒரு எல்லை வரையிலும் சமூகத்தில் கிளர்ச்சியும் எதிர்ப்பும் உண்டாவது சமூக வளர்ச்சியையே குறிக்கும்.

● திட சித்தத்தாலேயே பலம் சம்பாதிக்கலாம்; கொழுத்த சரீரத்தாலல்ல.

● சிறைச்சாலைகள், கைதிகளைத் திருத்தும் சீர்திருத்தச் சாலைகளாக மாற வேண்டும். கைதிகளை, சிகிச்சை பெற வந்திருக்கும் நோயாளிகளாகப் பாவிக்க வேண்டும்.

● காதல் இன்பம் கணவன் மனைவி இருவரையும் ஐக்கியப்படுத்தி பரிபூரணமுடையவர்களாகச் செய்கிறது.

● மனதை அலட்டிக் கொள்வதுபோல உடலைக் கரைப்பது வேறு எதுவும் இல்லை.

● நியாயமான தேவைகளுக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாகப் பொருளைத் தேடுவதையும், சேர்த்து வைப்பதையும் திருட்டென்றே கூற வேண்டும்.

● கடலில் இருந்து பிரிந்துபோன நீர்த்துளிகளுக்கு ஓய்வு இருக்கலாம். ஆனால் அவை கடலிலேயே இருந்திருந்தால் ஓய்வு கிடையாது.

● அகிம்சை வீரத்தைக் கோழைத்தனத்திலிருந்து பயிராக்க முடியாது. இம்சைக்கும், அகிம்சைக்கும் தீரம் இன்றியமையாதது. உண்மையில் இம்சையைவிட அகிம்சைக்குத் தீரம் அதிக அவசியம். அகிம்சை, தீரத்தின் கிரகமாயில்லாவிட்டால் பயனற்றதாகும்.

● நமக்குப் பிறர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதையே நாமும் பிறருக்குச் செய்வோமாக.

● மக்கள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடு அமைத்துக் கொண்டு எல்லாவற்றிலும் சுயநலத்தைத் துறந்து நடப்பதே சுதந்திர ஆட்சி-மக்கள் ஆட்சி என்கிறோம்.

● உடல் வளர்ப்பதைவிட மனத்தூய்மையே ஒருவனுக்கு மிக்க அவசியமானது.

● உண்மையும் அகிம்சையும் மனித சமூகத்தை விட்டு விட்டுத் தனியாக உட்கார்ந்து கொண்டு அனுஷ்டிக்கவேண்டிய அறங்களல்ல. அவை மனிதவர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

● சத்தியாகிரகி தன்னிடம் மறைந்து கிடக்கும் குறைகளை ஈவிரக்கமின்றி களைந்து எறிய, சதாகாலமும் ஆத்மசோதனை செய்து கொண்டே இருக்க வேண்டியவனாவான். அப்படிச் செய்தால்தான் தான் மேற்கொண்ட சேவையைச் செய்வதற்கான ஆற்றலை ஆயிர மடங்கு அதிகமாகப் பெறுவான்.

● மக்களிடையே பலாத்காரம் மறைமுகமாகவேனும் பரவுவதற்கு உதவும் எல்லா நடவடிக்கைகளையும் மனித முயற்சியாலான அளவிற்கு விலக்குவதே எனது நோக்கம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்ப இயக்குநர் சென்னை



(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலைச் சந்திரன் உதித்த வேளையில் அண்ணா மாவட்டத் தொடக்க விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி.அந்தோணி,இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிந்து புதியதாக அண்ணா மாவட்டம் உருவாகிறது. கொடைக்கானலில் வேளாண்மை தொழிலும், திண்டுக்கல்லில் தோல் தொழிலும், வேடசந்தூரில் சிமெண்ட் தொழிலும்,வாடிப்பட்டியில் திராட்சைத் தொழிலும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

அமைச்சர் பெருமக்களுக்கும், விழாவில் சொற்பொழிவு ஆற்றியோருக்கும் ஜவ்வாது மாலையும் அண்ணாவின் புத்தகங்களும் அளிக்கப்பட்டன.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில், ''காலத்தின் கட்டாயமாக இங்கு அண்ணா மாவட்டம் அமைந்துள்ளது. கான்பூர்,தோல் தொழிலுக்குச் சிறப்புப் பெற்றது. அதேபோல் திண்டுக்கல் ஓர் கான்பூராகத் திகழும். அதன் மூலம் பலகோடி அந்நியச்செலாவணி கிடைக்கும்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு எம்.பழனியாண்டி பேசுகையில், ''அண்ணா மதிநுட்பம் உடையவர். மைய அரசுடன் அண்ணா வழியில் புரட்சித்தலைவர் செயல்படுகிறார். திண்டுக்கல்லில் மேலும் பல தொழில்களைத் தொடங்க வேண்டும்'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் பேசுகையில், ''ஆளுங்கட்சி கொண்டு வரும் நல்ல திட்டங்களை எதிர்க்கட்சிகள் ஆதரிக்க வேண்டும். அண்ணா மாவட்டத்திற்கு என்னுடைய வாழ்த்துக்கள். ரஷ்ய நாட்டில் லெனின் விருதுபோல் இன்று அண்ணா விருது புரட்சித் தலைவருக்கு வழங்கப்படுகிறது'' என்றார்.


முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற மேலவை உறுப்பினருமான திரு எஸ்.இராகவானந்தம் அவர்கள் பேசுகையில், ''அ.இ.அ.தி.மு.க. அரசியல் அந்தஸ்து பெற்றது, இந்தத் திண்டுக்கல்லில் தான் என்றால் மிகையாகாது, என்றார்.

மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர் திரு மு.தம்பித்துரை அவர்கள் பேசுகையில், ''மாவட்டங்கள் பிரிப்பது வளர்ச்சிப் பணிகள் வேகமாகச் செயல்படத்தான். மக்கள் தொகை பெருகியுள்ளதாலும் மாவட்டங்கள் பிரிக்கப்படவேண்டியுள்ளது. இந்த மாவட்டம் மேன்மேலும் சிறப்படைய என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச.இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், ''அறிஞர் அண்ணாவுக்கு விழா எடுத்தால் மட்டும் போதாது; விழா யாருக்கு எடுக்கிறார்கள், யார் எடுக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். புரட்சித் தலைவர் காரில் சென்றபோது இருமருங்கும் ஏழை எளிய மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். புரட்சித் தலைவர் நின்றால் மக்கள் கூட்டம்; நடந்தால் ஊர்வலம். இந்தத் திண்டுக்கல்லுக்குப் பல்வேறு நலத்திட்டங்கள் வர உள்ளன'' என்றார்.

மாண்புமிகு நிதிஅமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அண்ணா மாவட்டத்தொடக்கவிழாவிற்குத் தலைமையேற்றும், பேரறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்தும் அறிஞர் அண்ணா விருதை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வழங்கியும் உரையாற்றுகையில் கூறியதாவது:

''பேரறிஞர் அண்ணா சிந்தனை மூலம் நாட்டு மக்களைச் செயல்படத் தூண்டினார். அண்ணாவின் சிந்தனைக்கு ஏற்ற வழியில் செயல்படுகிறார் புரட்சித் தலைவர். கனிவு, பணிவு, துணிவு வேண்டுமென்றார் அண்ணா. வேட்டு முறையில் நம்பிக்கை இல்லை. ஓட்டுமுறையில் தான் நம்பிக்கை உண்டு என்றார் அண்ணா.



அண்ணா மாவட்ட அமைப்புப் பணிக்கான நினைவுப் பரிசை வருவாய்த்துறை நிர்வாக ஆணையர் திரு. என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் பெறுகிறார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''அண்ணா அதிக அதிகாரம் தமிழகத்திற்குத் தேவை என்றார். புரட்சித் தலைவர் மாவட்டங்களைப் பிரித்து அதிகாரங்களை வழங்கி வருகிறார். இதனால் நிர்வாகம் நல்லமுறையில் செயல்படும். பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தி உள்ளார். சென்னை உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவு மதுரையில் அமைய வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார். சுப்ரீம் கோர்ட்டின் ஒரு பிரிவு தென்னகத்தில் அமைய வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார். அண்ணாவின் கொள்கைகளைப் புரட்சித் தலைவர் நிறைவேற்றி வருகிறார்'' என்றார்.

''இந்த அண்ணா மாவட்டத்தில் 45 மாவட்டத்துறை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் போன்றவற்றின் வசதிக்காக ரூ. 6கோடி நிதி ஒதுக்கித்தரப்பட்டுள்ளது. மேலும் இன்னும் இரண்டு ஆண்டுகளில் ரூ. 4 கோடி ஒதுக்கித் தரப்படும்.

''குடிநீர்த்திட்டம், வீட்டுவசதித் திட்டம் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இன்று முதல் தமிழகம் முழுவதும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு முதற்கொண்டு அண்ணா விருதை அரசு வழங்கும். முதன் முதலாக இவ்விருதை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் பெறுகிறார்.

''பல்வேறு வகையில் புரட்சித் தலைவரை அண்ணா பாராட்டியுள்ளார்கள். உழைப்பின் பலனை பல நற்பணிகட்குச் செய்பவர் புரட்சித் தலைவர். 'புரட்சித் தலைவர் அரசியலில் பொறுப்பு ஏற்றால் தனித்தன்மையோடு விளங்குவார்' என்றார் அண்ணா. இதன் மூலம் அண்ணா விருதைப் பெறத் தகுதிபடைத்தவர் புரட்சித்தலைவர் ஆவார்.

''இந்தியாவில் தோன்றிய மூத்த பல்கலைக் கழகமான சென்னைப் பல்கலைக் கழகம் அதனுடைய நூற்றாண்டு விழாவின்போது புரட்சித் தலைவருக்கு டாக்டர் பட்டம் தந்து கௌரவித்தது. லெனினுக்கு ஸ்பீட்டர் கிரேட் வித்திட்டது. அதேபோல் புரட்சித் தலைவருக்கு அண்ணா மாவட்டம் வித்திட்டது.''

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி.அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் மாண்புமிகு முதல்வருக்கு ஜவ்வாது மாலை அணிவித்தார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் அண்ணாவின் நூல்களை வழங்கினார்.



'அண்ணா விருது' பெறக் கூடிய தகுதியுரையை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் படித்தார். மாண்புமிகு முதல்வருக்கு அண்ணா விருதை வழங்கிப் பொன்னாடை போர்த்து, கேடயம் வழங்கினார் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்படும். 1.4.86 முதல் துவங்கும். மறைந்த பாரதப் பிரதமர் பெயரில் 'இந்திரா' போக்குவரத்துக் கழகம் என்று பெயரிடப்படும். டெல்லியில் உள்ள குழுவினிடம் திருமதி இந்திரா பெயர் வைக்க அனுமதியும் கேட்டுள்ளோம்.'' என்றார்.

திண்டுக்கல்லில்கட்டப்பட்டுள்ள வீட்டுவசதிவாரியக்குடியிருப்பிற்கு, ராணி மங்கம்மாள் பெயரைச் சூட்டுமாறு மாண்புமிகு முதல்வர் தெரிவித்ததாக மாண்புமிகு நிதியமைச்சர் அறிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் திண்டுக்கல் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

புதியபேருந்துவழித்தடங்களைத் துவக்கினார். புதிய வருவாய்க் கோட்டங்களைத் திறந்தார். வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளைத் திறந்தார், இலவசச் சீருடைகளையும் புத்தகங்களையும் வழங்கினார்.

அண்ணா மாவட்டத் துவக்க விழாவிற்குரிய சிறப்பு ஏற்பாடுகளைச் செய்த அலுவலர்கட்கு நினைவுப்பரிசுகளை வழங்கினார்.

மாண்புமிகு நிதியமைச்சர், ''முதல்வர் நன்றி தெரிவித்துப் பேசுவார்'' என்று அறிவித்தவுடன் மக்கள் கைதட்டலும் ஆரவாரமும் அடங்கச் சில நிமிடங்கள் பிடித்தன.

கூட்டத்தைப்பார்த்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழக்கம்போல் கையை அசைத்து அமைதியாக இருக்கச் சொன்னார். அவரது அன்பு ஆணைக்குக் கட்டுப்பட்டு இலட்சோப இலட்ச மக்கள் அமைதியாக இருந்தனர். மாண்புமிகு முதல்வர் நன்றி தெரிவித்துப்பேசினார்.

இறுதியில், அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எம்.மாதவன் நம்பியார்,இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

அண்ணா மாவட்டத்தொடக்க விழா கண்ணில் நிறைந்து கருத்தில் கலந்து, கவின்பெற்றுத் திகழ்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.


—அ. மருதவிநாயகம்

## பத்தொன்பது மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் ஏற்கனவே 18 மாவட்டங்கள் உள்ளன.

புதியதாக உதயமாகி உள்ள அண்ணா மாவட்டத்தையும் சேர்த்தால் தமிழ்நாட்டில் மாவட்டங்களின் எண்ணிக்கை 19 ஆக உயருகிறது அவை வருமாறு.

1. சென்னை
2. செங்கல்பட்டு
3. வட ஆர்க்காடு
4. தென் ஆர்க்காடு
5. சேலம்
6. தருமபுரி
7. கோவை
8. பெரியார்
9. நீலகிரி
10. திருச்சி
11. தஞ்சை
12. புதுக்கோட்டை
13. மதுரை
14. இராமநாதபுரம்
15. காமராஜர்
16. பசும்பொன் முத்துராமலிங்கம்
17. நெல்லை
18. கன்னியாகுமரி
19. அண்ணா மாவட்டம்.



என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

அண்ணாவின் வழியில் என்னை நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே!

மிக்க நன்றி! வணக்கம்!

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

*(15,9.85 அன்று அண்ணா மாவட்டத் தொடக்க விழாவில்)*





# தமிழும் தமிழரும்

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப்போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல் வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது, மனங்கவரும் ஓர் இனிய மொழி.

* * *

தமிழ் மக்களுள் பண்டைய நாளிலும்— இந்நாளிலும் கூடப் பல அறிஞர் இருந்தனர்— இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக் கிடைக்கின்றது. இந்தியாவில் ஓரினம் ஏற்படவேண்டுமாயின் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவர்களும் தமிழுணர்தல் வேண்டும்.

* * *

தமிழ்மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன் பிறந்தவர் போலத் தோன்றுகிறார்கள்.

* * *

இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆசையேயாகும்.

* * *


தமிழ்மொழியில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினானில்லை. அது குறித்து நான் அடையும் வருத்தத்திற்கு ஓர் அளவில்லை.

* * *

தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ்பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளை விடக் கூட முதன்மையாகக் கருதுதல் வேண்டும்.

—அண்ணல் காந்தியடிகள்

## உள்ளத்தாற் பொய்யாத உத்தமர்



நேரு

மகாத்மா காந்தி உண்மையையே உயிராகக் கொண்டிருந்தார். அதனால்தான் நல்ல குறிக்கோளை எய்த வேண்டுமானால் நாம் நல்ல வழிமுறையிலேயே செல்ல வேண்டும் என்பதை இடைவிடாது எடுத்தோதி வந்தார். அவர் உண்மையையே போற்றிவந்ததால் எங்கெங்கு தீமையும் பொய்மையும் காணப்பட்டனவோ அங்கெல்லாம் அவர் எதிர்த்தார். இவ்வாறு உள்ளத்தாற் பொய்யாது ஒழுகி வந்ததால் தான் அவர் அமர்ந்திருந்த இடங்கள் ஆலயங்கள் ஆயின. அவர் திருவடி தீண்டிய இடங்கள் திருத் தலங்கள் ஆயின.



## இலட்சியத்திற்காக வாழ்ந்த பெரியார்

தந்தை பெரியார்

உலக மக்கள் எல்லோராலும் போற்றப்படும் பெரியார் காந்தியார். அவர் உலகில் வாழும் மாபெரும் பெரியார்கள் வரிசையில் ஒருவராக இருந்தார். அவரைப் போலப் பொதுத் தொண்டையே தமது வாழ்நாள் தொண்டாகக் கொண்டவர்களையும், தமக்கென எதுவும் இன்றி ஒரு லட்சியத்திற்கே வாழ்ந்து வந்தவர்களையும் காண்பது அரிது.

ஒரு இலட்சியத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது என்பதும் அதில் ஏற்படும் எப்படிப்பட்ட துன்பங்களையும் வெற்றி தோல்விகளையும் லட்சியம் செய்யாமல், மற்றவர்கள் என்ன சொல்வார்கள், எப்படி நினைப்பார்கள் என்பதைப் பற்றியும் கவலையில்லாமல் தொண்டாற்றுவது என்பதும் எல்லோராலும் ஆகும் காரியம் அல்ல!

## ஈடற்ற தலைவர்



பேரறிஞர் அண்ணா

ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏக காலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள் தனித்தனித் தலைவர்கள் கொள்ள வேண்டிய குணத்தை அவர் கொண்டிருந்தார். உலக வரலாற்றிலே இதற்கு வேறு ஈடு கிடையாது!



# இலங்கைத் தமிழர் துயர் துடைக்க

## முதலமைச்சரின் வேண்டுகோள்

இலங்கைத் தமிழர் நலத்திலும், நல்வாழ்விலும் தமிழ்நாட்டு மக்கள் கொண்ட பரிவும் பாசமும் அனைவரும் அறிந்துள்ளனர். அவர்கள் துயருற்று வாடி நிற்கும் இந்த வேளையில் நம் நெஞ்சங்கள் புண்ணாகியிருப்பதும் யாவரும் அறிந்ததே. நாடுகள், நாடுகளின் எல்லைகள், கடல்கள் போன்ற பூகோளப் பிரிவுகள் நம்மிடையே இருக்கும் அன்பையும், பாசத்தையும் பிரித்துவிட முடியாது. சர்வதேச சட்ட மரபுகள் காரணமாக அவர்கள் பிறந்து வாழும் அவர்கள் நாட்டுப் பிரச்சினையில் நம்மால் தலையிட இயலாது என்றாலும், அவர்கள் மானத்தோடும், கவுரவத்தோடும் வாழ நாம் அனைவரும் அகமும் புறமும் வேண்டிக்கொண்டேயிருக்கிறோம். அமைதியாக அவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண பல்லாற்றானும் முயன்று கொண்டேயிருக்கிறோம்.

எனினும், திம்புவில் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னும் இலங்கைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிற கொடுமையான சம்பவங்கள் நம் மனத்தை வருத்துகின்றன. இந்த சம்பவங்களைக் கண்டிக்கும் வகையிலும் இலங்கைத் தமிழ் சகோதரர்கள் பால் நமது உள்ளக் கிடக்கையைக் காட்டும் வகையிலும் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் 24–9–1985 ஒரு நாள் உண்ணா நோன்பு இருப்பது என்று அனைத்துக் கட்சி தலைவர்கள் கூடி செய்த முடிவை தமிழ்நாட்டு மக்களின் முன் வைக்க நான் விழைகிறேன்.



''தற்போது சுமார் 117 கோடி ருபாய் அளவுக்காகும் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய உற்பத்திப் பொருள்களின் விற்பனையை மேலும் அதிகரிக்க மண்டல மற்றும் மாவட்ட அளவில் பரவலான விற்பனை அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.''

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், நூறு தொழிற்கூடங்களைத் திறந்து வைத்தல் - 25 கிராமங்களை ஏற்பு செய்தல்-இராமநாதபுரம் மாவட்டத்தைக் கதர் கிராமத் தொழில் மயமாக்குதல் - கண் காட்சியைத் திறந்து வைத்தல்- கதர் பாலியஸ்டர் புடவைகள் விற்பனைக்கு வெளியிடுதல்- கதர்த்துறையில் சிறந்து விளங்கியவர்களுக்குப்பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தல் முதலான நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் (வாரியத்தின் முதல் தலைவர்), திரு வி. பத்மநாபன் (வாரியத்தின் முதல் செயலாளர்), திரு ஏகாம்பரம் (அம்பர் ராட்டை கண்டுபிடித்தவர்), திரு பாலசுந்தரம் (உலோகராட்டை கண்டு பிடித்தவர்) ஆகியோர் விழாவில் சிறப்பிக்கப்பட்டனர்.

மாண்புமிகு முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் பேசுகையில், ''காந்தியடிகளின் கொள்கைகளைப் புரட்சித் தலைவர் அரசு நல்லபடியாக நிறைவேற்றுகிறது. எனக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவப்படுத்தியதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்'' என்றார்.



**20 அம்சத் திட்டம்: தமிழகம் முதலிடம்**


மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் 1984-85-ஆம் ஆண்டு கதர் விற்பனையில் சிறந்து விளங்கிய ஊராட்சி ஒன்றியம் மற்றும் கல்வித் துறை அலுவலர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசுகையில், ''தமிழக அரசு கிராமத் தொழில்களுக்குப் பாதுகாப்பும் ஆதரவும் அளித்து வருகிறது. கதர்ப் பொருட்களுக்குப் பொது மக்கள் ஆதரவு நல்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள், கதர் விற்பனையில் கடந்த 25 ஆண்டுகளில் சிறந்துவிளங்கிய ஊராட்சி ஒன்றியம் மற்றும் கல்வித்துறை அலுவலர்களுக்குப்பரிசு வழங்கிப் பேசுகையில், ''காந்தியடிகளின் எளிமை - தூய்மை - வாய்மை இம்மூன்றும் அவருக்கு வெற்றியைத் தேடித் தந்தன'' என்றும், 'அவர் ஏழைகளின் இதயத்தில் இடம் பிடித்தார்'' என்றும், '20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது'' என்றும் குறிப்பிட்டார்.

**நிரந்தரத் தொழிலாக மலர...**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், சிறந்த வாரிய அலகுகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''கிராமப்புறங்களைத் தன்னிறைவு அடையச் செய்யும் கதர் கிராமத் தொழில்களை மத்திய



அரசின் திட்டக்குழு நிரந்தரத் தொழிலாகக் கருதித் திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

''புரட்சித் தலைவர் ஆட்சியில் கதர் கிராமத் தொழில் முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழகத்தில் 6.46 இலட்சம் மக்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது''.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள், சிறந்த நூற்போர்களுக்கும், நெய்வோர்களுக்கும் பரிசுகள் வழங்கிப் பேசுகையில், விடுதலைப் போர்க் காலத்தில் கதர் ஒரு சிறந்த சின்னமாக விளங்கியது என்று கூறி, கதரின் அருமை பெருமைகளை எடுத்துச் சொன்னார்.

பம்பாய் கதர்கிராமத்தொழில் ஆணைக் குழுத் தலைவர் திரு. ஏ. எம். தாமஸ் அவர்கள் கதர் விற்பனையைத் தொடங்கிவைக்க முதல் விற்பனையை திரு சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் பெற்றுக் கொண்டார். பிறகு திரு தாமஸ் அவர்கள் பேசுகையில், ''கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தியில் அகில இந்திய ரீதியில் தமிழகம் தான் முன்னணியில் உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் துணைத் தலைவர் பட்டுக்கோட்டை திரு பாப்பையன், டி. கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமத் தலைவர் திரு டி. குருசாமி நாடார், காதி கிராமோத்யாவின் நிர்வாகி திரு சி.டி. வி. ராகவலு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய இணை இயக்குநர் திரு எஸ். வி. ஆர். பட்டாபிராமன் நன்றி நவின்றார்.

**காந்தியடிகள் கனவு**

அக்டோபர் திங்கள் 3-ஆம் நாள் கைவினைஞர் தினமும், 4-ஆம் நாள் மகளிர் தினமும், 5-ஆம் நாள் இளைஞர் தினமும், 6-ஆம் நாள் நிறைவு விழாவும் சிறப்புற நடந்தன.

ஐந்து நாட்கள் நடந்த இந்த விழா, அண்ணல் காந்தியடிகளின் கனவை நனவாக்கத் தமிழக அரசு செயல்பட்டு வரும் சிறப்பினைச் சொல்லாமல் சொல்லியது என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**பி. வி. கிரி**

## கதர் வாரிய ஊழியர்களுக்குச் சலுகைகள்

- தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பணியாற்றி வருபவர்கட்கு, இது வரை ஆண்டுதோறும் ரூ. 25 மதிப்புக்குக் கதர்த்துணிகள் வழங்கப்பட்டு வருகிறது. வெள்ளி விழா ஆண்டான இந்த ஆண்டில், காந்தியடிகள் பிறந்த நாளை ஒட்டி, இவ்வாண்டு ரூ. 50 அளவுக்குக் கதர்த் துணிகளை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.
- நல்ல வடிவமைப்பு உருவாக்குபவர்கள் அல்லது வடிவமைப்புக்கு ரூ 1000 அன்பளிப்பு வழங்கப்படும்.

—கதர் வாரிய வெள்ளி விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள் அறிவித்தவை.

## ஏற்பு செய்யும் கிராமங்கள்

தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியம், தனதுவெள்ளி விழாவினையொட்டி 25 கிராமங்கள் ஏற்பு செய்யப்பட்டன. மாவட்டந்தோறும் கிராமங்களின் பெயர்கள் வருமாறு:

செங்கற்பட்டு மாவட்டம்—1. திருமங்கலம்.
வட ஆர்க்காடு மாவட்டம்—2. நாகவேடு
3. தேவிகாபுரம் 4. களர்பட்டு
தர்மபுரி மாவட்டம்—5. பாப்பாரப்பட்டி
சேலம் மாவட்டம்—6. எஸ். கபாலம்
பெரியார் மாவட்டம்—7. ராயர்பாளையம்
கோவை மாவட்டம்—8. வடுகனூர்
நீலகிரி மாவட்டம்—9. குனூர்க்கல்
தென்ஆர்க்காடு மாவட்டம்—10. காணை
11. திருச்சிற்றம்பலம், 12. பகடுப்பட்டு
தஞ்சாவூர் மாவட்டம்—13. களுகப்புளிக்காடு
14. வெள்ளூர்
புதுக்கோட்டை—15. கிரமங்கலம்
16. வல்லத்தராக் கோட்டை
திருச்சி மாவட்டம்—17. வளநாடு
முத்துராமலிங்கம் மாவட்டம்--18. குன்னக்குடி
இராமநாதபுரம் மாவட்டம்—19. கமுதி
காமராஜ் மாவட்டம்—20. ரெங்கப்பநாயக்கன்பட்டி
அண்ணா மாவட்டம்—21. பொருளூர்
மதுரை மாவட்டம்—22. ஆண்டிப்பட்டி
திருநெல்வேலி மாவட்டம்—23. ராதாபுரம்
24. எட்டயாபுரம்.
கன்னியாகுமரி மாவட்டம்—25. கடவாயல்




இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்காக 23.9.85 அன்று தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற அரசு அலுவலர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து கொண்டு இலங்கைத் தமிழர் நல நிதிக்கு உண்டியலில் பணம் வழங்கியபோது. இதற்கெனத் தயாரித்த கொடி பொருத்தப்பட்டது.

வீடிழந்து, நாடிழந்து அகதிகளாக வந்த வண்ணம் உள்ள இலங்கைத் தமிழ்க் குடும்பங்களின் மறு வாழ்வுக்கென இந்த உண்ணா நோன்பு நாளில் நம்மால் இயன்ற நிதியுதவியை கொடையாகச் செலுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணியில் ஈடுபடும் நண்பர்கள் தமிழ்நாடு அரசின் அனுமதி பெற்ற உண்டியல்களை எடுத்துக்கொண்டு 24–9–1985 லிருந்து தங்களை அணுகும்போது தாராளமாக தங்கள் உதவியை நல்குமாறு [illegible]றேன். மாவ[illegible] ஆட்சித் தலை[illegible] மூலமாகவும் தங்கள் உத[illegible] இந்த நற்பணிக்கு தாராளமாக உதவ [illegible] தங்களை விரும்பி அழைக்கின்றேன்.

தங்கள் அன்புள்ள,

எம். ஜி. இராமச்சந்திரன்,

முதலமைச்சர்.





# அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

சென்னை மாநகராட்சியின் மேற்பார்வையில் பராமரித்து வந்த உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகள், பறவைகள் சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் எழும் புகையினால் பாதிக்கப்பட்டன. இத்தகைய நிலையை உணர்ந்த அரசு மிகப்பெரிய அளவில் இயற்கைச் சூழ்நிலையில் விலங்குகள், பறவைகள் வாழவும், பொதுமக்கள் பொழுது போக்கவும் வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் வண்டலூரில் பல்வேறு தனிச்சிறப்புக்களோடு உருவாக்கக் கருதியது. 510 எக்டேர் பரப்பளவில் ரூ. 7 கோடி செலவில் உருவாக்கப்பட்ட ''அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை'' மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 24.7.1985 அன்று திறந்து வைத்தார்கள்.

அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கம், புலி, கரடி, குரங்கினம், நீர்யானை போன்ற 28 வகை மிருகங்கள் 205-ம், 61 வகைப் பறவைகள் 353-ம், 8 வகை ஊர்வன வகைப் [illegible] 32-ம் இப்பூங்காவில் உள்ளன.

[illegible]டும் 168 வகைப் [illegible] சேர்க்கப்பட்டன. [illegible]ாக அழியக் [illegible] கருதப்படும் [illegible] மின்மான், [illegible] திரேலிய பறவை. [illegible] கொண்டைகொக்கு. [illegible] போன்ற எண்ணற்ற [illegible]குள்ளன. [illegible]விலேயே சிறந்த பூங்காவாக

இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து நமது கவலையைத் தெரிவிக்கும் வகையில், இலங்கைத் தமிழர் நிவாரணத்துக்காகக் கொடிகளை விற்று உண்டியல் மூலம் நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சியாளர்கள் தலைமையில் உண்டியல்கள் மூலம் நிதி வசூல் செய்யப்பட்டது.

உண்டியல் வசூல் மூலம் ரூ. 1 கோடி நிதி வசூல் செய்யத் திட்டமிடப்பட்டது. ஆனால் இந்த மாதம் (அக்டோபர்) 3ந் தேதி நிலவரப்படி இந்த வசூல் தொகை 2 கோடியே 89 ஆயிரத்து 70 ரூபாய்.

இந்தத் தொகை முடிவான தொகை அல்ல. மேலும் வசூலாகும் தொகை இந்தத் தொகையோடு கணக்கிடப்படும். அரசு ஊழியர்கள் ஒருநாள் சம்பளம் கொடுத்த தொகையும் மற்றவர்கள் கொடுத்ததும் இதில் சேர்க்கப்படவில்லை.

செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும் 21 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் உண்டியல் மூலம் வசூலாகியுள்ளது. கோவை மாவட்டத்தில் 20 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வசூலாகியுள்ளது.

இதுவரை கிடைத்த தகவல்படி மாவட்ட வாரியாகக் கிடைத்த நிதி வசூல் விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | வடஆர்க்காடு | ... | 13,08,000 |
| 2. | கோயம்புத்தூர் | ... | 20,30,000 |
| 3. | தருமபுரி | ... | 5,59,005 |
| 4. | தஞ்சாவூர் | ... | 11,30,154 |
| 5. | தென்ஆர்க்காடு | ... | [illegible] |
| 6. | செங்கல்பட்டு | | [illegible] |
| 7. | கன்னியாகுமரி | | [illegible] |
| 8. | நீலகிரி | | [illegible] |
| 9. | இராமநாதபுரம் | | [illegible] |
| 10. | திருநெல்வேலி | | [illegible] |
| 11. | பெரியார் | | [illegible] |
| 12. | அண்ணா | ... | [illegible] |
| 13. | புதுக்கோட்டை | ... | [illegible] |
| 14. | சேலம் | ... | [illegible] |
| 15. | [illegible]பொன் | | [illegible] |

# இலங்கைத் தமிழர் இன்னல் போக்கிட....

சென்னை மூர் அங்காடியில் கடைகள் வைத்திருந்த வியாபாரிகளுக்கு, அல்லிக் குளத்தில் நவீன பல மாடி அங்காடி ரூ. 5.93 கோடி செலவில் கட்டப்பட உள்ளது. இதற்கு ரூ. 35.93 கோடியை அரசு கடனாக வழங்கும். கீழ்த் தளத்திற்கும் முதல் மாடிக்குமாக ரூ. 1.4 கோடி ஏற்கெனவே கடனாக வழங்கப்பட்டுள்ளது. அல்லிக் குளத்தை நிரப்புவதற்கு ரூ. 14 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில், 11.25 இலட்சம் செலவில் 225 அரிசி ஆலைகள் நவீனப் படுத்தப்படுகின்றன. ஒவ்வோர் ஆலைக்கும் தமிழக அரசு ரூ. 2500, மைய அரசு ரூ 2500 உதவித் தொகையாக வழங்குகின்றன.

---

[illegible] அரசு தலைமைச் செயலாளர் திரு [illegible] அந்தோணி இ.ஆ.ப. கோட்டையில் [illegible]0.'85 அன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து:

# பாக்கெட் பால்



நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் (1 லட்சத்து 20 ஆயிரம் கால் லிட்டர் பாக்கெட்பால்) அக்டோபர் முதல் விற்பனை செய்யப்படுகிறது.

ஆயிரம் விளக்குப் பகுதியில் கொச்சின் இல்லம் காவலர் குடியிருப்பில் பெண்கள் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கத்தையும், ரூபாய்க்கு கால் லிட்டர் பால் வழங்கும் திட்டத்தையும் 2.10.85 மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் துவக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது :—

"காவலர் குடியிருப்பில் உள்ள பெண்கள் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தையும், சென்னை நகரமக்களின் தேவை தீர்க்க ரூபாய்க்கு கால் லிட்டர் பால்வழங்கு திட்டத்தையும் காந்தியார் பிறந்த நாளில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கடந்த 6, 7 மாதங்களுக்கு முன் தானியங்கி பால் விற்பனை நிலையத்தைத் துவக்கி வைக்க வந்தபோது தாய்மார்கள் என்னிடம் மனு ஒன்றைக் கொடுத்தார்கள். கூட்டுறவு தையல் தொழில் சங்கத்தை ஏற்படுத்தித் தருமாறு கோரினர். இன்று அந்த நல்ல தொடக்கம் ஆரம்பமாகிறது. இந்தக்கூட்டுறவு சங்கம் வளரும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வசதி படைத்தவர்களுக்கு பால்வள நிறுவனம் 1 லிட்டர், அரைலிட்டர் பால் கூப்பனில் வழங்குகிறது. வசதியற்ற ஏழைகளுக்கு நாங்கள்தான் சில்லறை விலையில் பால் தருகிறோம் என்று கால்நடை வைத்திருப்பவர்கள் கூறுகிறார்கள். அதனால்தான் சாதாரண ஏழை, நடுத்தர மக்களுக்கு 1 ரூபாய்க்கு கால் லிட்டர் பால் வழங்கும் திட்டம், முதல் கட்டமாக இன்று துவங்கப்படுகிறது.

**சீருடைத் திட்டம்:**

தமிழ்நாட்டில் 500 தொழில் கூட்டுறவு சங்கங்களை [illegible]ரக தொழிலமைச்சர் பொறுப்பில் இருந்த போது துவக்கி வைத்தேன். பெண்கள் கூட்டுறவு முறையில் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டனர். பாலிதீன் பை தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பல இடத்தில் செயல்பட்டு வருகிறது. முதலமைச்சர் வழங்கும் சீருடைத்திட்டத்தின் கீழ் இந்த சங்கத்தினர் சீருடை தயாரிக்க இருக்கிறார்கள். அதே வகையில் பாலிதீன் கூட்டுறவுச் சங்கத்தை நீங்கள் துவங்க வேண்டும்.

இத்திட்டம் இங்குள்ள தாய்மார்களிடம் நம்பிக்கை இருப்பதால் நிச்சயம் வெற்றி பெறும். இதன் மூலம் இந்தக் குடியிருப்பில் 500 பேருக்கு 1 வருடத்தில் நிச்சயமாக பாதுகாப்பு கொடுக்க முடியும்.

**பிரச்சினை இல்லை:**

கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிக்கு நாணயமான, திறமையான தலைமை வேண்டும் என்றார் அண்ணா. அப்படிப்பட்ட தலைமை உங்களுக்குக் கிடைத்துள்ளது.



நாட்டுக்கு ஏற்றம்
தருவது
பெண்களின்
முன்னேற்றமே.
—பேரறிஞர் அண்ணா,

முதலமைச்சர் சீருடைத்திட்டத்தில் உங்களுக்கு மூலப் பொருள் வழங்கும் பிரச்சினையோ, அவற்றை விற்பனை செய்யும் பிரச்சனையோ, அதற்காக அலையும் பிரச்சினையோ இல்லை.

வீட்டில் இருக்கும், வேலைவாய்ப்பு வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் இச்சங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



# மா வளர்ச்சியில் புதிய அணுகு முறை

தருமபுரி, சேலம் மாவட்டங்களில் மா மரங்கள் சுமாராக 26,000 ஏக்கர் நிலப் பரப்பில் பயிராகின்றன. பொதுவாக "தருமபுரி சேலம் மாம்பழம்" என்றாலே தனிச்சிறப்பு உண்டு. இவ்விரு மாவட்டங்களிலும் வறட்சியான பகுதிகளில் நல்ல சூரிய வெப்பத்தில் காய்த்துப் பழுப்பதால் பழங்கள், நல்ல எடுப்பான வண்ணத்தில் அதிகச்சுவையுடன் கிடைக்கின்றன. இங்கே மிகக்குறுகிய இடைவெளியில் கரடுமுரடான வறண்ட நொரம்பு கலந்த மண்ணில் பல வகையான இரகங்கள் பயிரிடப் படுகின்றன. இம்மாவட்டங்களில் மழையளவு சுமார் 800 முதல் 900 மி.மீ. ஆகும்.

டாக்டர் எம். இராமசாமி
டாக்டர் அ. நாராயணன்
பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம்

பொதுவாக செம்மண், கருமண், நொரம்பு கலந்த பூமியில் மா நன்கு பலனளிக்கிறது. இப்பகுதியில் தருமபுரிமாவட்டத்தில் தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வு செய்த வகையில் குறைந்த மண் வளப் பகுதியில் வறட்சிப் பகுதியில் இப்பழச்செடி நன்கு பயிராகிறது. இப்பழங்களின், ருசிக்கு இம்மண்ணும், தட்ப வெப்ப நிலையும் தான் காரணம்.

'மா'வில் பல இரகங்கள் உள்ளன. தருமபுரி-சேலம் மாவட்டங்களில் பொருளாதார ஆய்வில் 40 சதவீதம் நீலமும், 40 சதவீதம் பெங்களூராவும், 10 சதவீதம் ருமானியாவும் மற்ற இரகங்களான மல்கோவா, அல்போன்சா, காதர், பீட்டர், பங்கனப்பள்ளி, காலப்பாடு, செந்தூரா, பாதிரி, நாட்டு இரகங்கள் சுமார் 10 சதவீதம் இருக்கின்றன. இவைகளில் வியாபார ரீதியில் நீலமும், பங்களூராவும் அதிக அளவில் பயிராகின்றன.

### நடவுப் பதியன்கள் தேர்வும் நடவும்

நன்கு ஒட்டுக்கட்டிய 18 மாதங்கள் நிறைந்த பதியன்களைத் தேர்வு செய்து நட வேண்டும். பதியன்கள் நன்கு சேர்ந்திருக்கின்றனவா என்று கவனித்துத் தேர்வு செய்யவேண்டும்.

### நிலத்தேர்வும் நடுதலும்

செம்மண் கலந்த தண்ணீர் தேங்காத மேட்டு நிலம் ஏற்றதாகும். தேர்வு செய்த நிலத்தில் சுமார் 10மீ × 10மீ. இடைவெளியில் சுமார் 100 கன்றுகள் அல்லது 5மீ×5மீ இடைவெளியில் 400 கன்றுகள் ஒரு எக்டரில் நடவு செய்வதற்கு குழிகள் எடுக்க வேண்டும். குழியின் அளவு 2 மீட்டர் நீளம், அகலம், ஆழமும் கொண்டதாக இருத்தல் நலம். தருமபுரி மாவட்டத்தில் "தாய்ப்பாறை"(Parent Rock) மிக மேலாக இருப்பதால், கூடிய வரை அதனைத் தகர்த்து விடுதல் நலம். "நொரம்பு" (Unearthed Soil) இருப்பது கெடுதல் செய்வதில்லை. நடவுக்குழிகளில் சுமார் 10-20 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் இட்டு 10 சதம் பி.எச்.சி. தூள் நடவு செய்யவேண்டும்.

பதியன்கள் நடும்போது, குறிப்பாக பதியன் அல்லது ஒட்டுபாகம் 20 செ.மீ. தரைக்கு மேலாக இருக்கவேண்டும். இளஞ்செடிகள் காற்றில் ஒடியாமலும், வளைந்து போகாமலும் இருக்குமாறு நான்கு பக்கங்களிலும் முட்டுக்கொடுந்து இலேசாகக் கட்டி வைக்க வேண்டும். பையூர் மண்டல ஆராய்ச்சிப் பண்ணையில் 20 லிட்டர் தண்ணீர் கொள்ளும் பானையினை, ஒட்டுக் கன்றுகளின் அருகில் புதைத்து ஆய்வு செய்தல், கன்றுகளுக்கு, ஒரு பானை அளவு தண்ணீர் 8 நாட்களுக்கு பானையின் அடியிலிருக்கும் சிறு துளைகள் மூலம் கொடுக்கிறது. ஆனால் அருகில் தண்ணீர் மேலாக விடப்பட்ட கன்றுகள் இரண்டு அல்லது மூன்று நாட்களில் தண்ணீரை செடி எடுத்தது போக, மீதம் ஆவியாதல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே தண்ணீர்ப் பற்றாக்குறைப் பகுதியான தருமபுரி மாவட்டத்தின் விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய சிக்கனத் தண்ணீர் கட்டுப்பாட்டு முறையாகும்.

### உரத்தேவையும், செடி பராமரித்தலும்

இளங்கன்றுகளை அவ்வப்போது கவனித்து பூச்சி, பூஞ்சாண நோய்கள் தாக்காமலும், நடுப்பகுதியின் கீழே கொட்டைச்செடியிலிருந்து துளிர் வந்தால் உடனுக்குடன் கிள்ளி எடுத்தும் பாதுகாக்கவேண்டும்.

மானாவாரியில் மழைக் காலத்தில் அல்லது தண்ணீர் இறைக்க வாய்ப்பிருப்பின் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் உரமிடலாம். உரமிட்டவுடன் உடனடியாகத் தண்ணீர் அவசியம் இறைக்க வேண்டும். உரத்தை மரத்திலிருந்து 1½ -2 அடி தள்ளி வைக்கவேண்டும்.

### பின் செய் நேர்த்தி

'மா'வில் நல்ல பலனைக் காண சரியான பின் செய் நேர்த்தி முறைகளை முறையாகச் செய்யவேண்டும். அவற்றில் முக்கியமானவை:



மாண்புமிகு மத்தியத் தொழிலமைச்சர் திரு என்.டி. திவாரி அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை இராமாவரம் சென்று 5.10.85ல் சந்தித்தார்.

செடிகள் குட்டையாகவும், கிளைகள் தன்னிச்சையாகக் கண்ட பக்கம் போகாமலும் இருக்கும்படி கவாத்து செய்து ஒற்றை அடி மரமாகப் பாதுகாக்க வேண்டும்.

மரத்தின் நடுப்பகுதியில் வெய்யில் படும்படி குறுக்கு நெடுக்காகவும் போகும் சிறு கிளைகள் மற்றும் செத்த சிறுவாதுகளைக் களைதல் வேண்டும்.

சிறு கன்றுகளில் முதல் மூன்று ஆண்டுகள் வரை பூக்களை உதிர்த்து மரத்தின் வீரியத்தைக் காக்க வேண்டும் என்பது நவீன முறையாகக் கருதப்படுகிறது.

முதிர்ந்து வயதான மரங்களை 'மறுமலர்ச்சி' ( Rejuvenation ) உண்டாக்க கவாத்துசெய்தல் வேண்டும். இந்த கவாத்து செப்டம்பர் மாதங்களில் செய்யவேண்டும். முக்கியமாக மரத்தில் காய்க்கும் முனி சிம்புகளில் இரண்டு நல்ல திடமான சிம்புகளை விடுத்து மற்ற வீரியமற்ற சிம்புகளை நீக்கிவிடவேண்டும். இந்தச் செய்முறை ஆண்டிற்கு ஒரு முறை செய்யவேண்டும்.

### பயிர்ப் பாதுகாப்பு:

**"மா" தண்டு துளைப்பான்:** இந்தப் பூச்சியின் 'புழு' சுமார் 10 முதல் 15 சதவீதம் 'மா' மரத்தில் சேதத்தை விளைவிக்கிறது. பொதுவில் பெங்களூரா இரகம் அதிகம் பாதிக்கப்படுவதாக விவசாயிகளின் கூற்று. ரம்பத் தூள் போன்ற சிறு சிறு துகள்கள் மரத்தின் அடிப்பாகத்தில் இருப்பதைக்கொண்டு இப் புழுவின் சேதத்தைக் கண்டுபிடிக்கலாம்.

1. தாக்கப்பட்ட பகுதிகளையும், காய்ந்த கிளைகளையும் நீக்கி அழித்துவிட வேண்டும்.

2. வண்டுகளின் புழுக்களைப் பிடித்து அழிக்க வேண்டும்.

3. மரத்தின் அடிப்பகுதியில் தாய்ப்பூச்சி முட்டையிடாமல் தடுக்க மருந்துக் கலவையைத் தடவலாம்.


4. தண்டில் காணும் துவாரங்கள் மூலம் செல்பாஸ் ஒரு வில்லை மருந்தை இட்டு காற்றுப் புகாவண்ணம் ஈரக்களிமண்ணால் மூடிவிடுதல் வேண்டும்.

5. நுவான் 0.1 சதம் (அ) நுவக்ரான் 2.5மி.லி (அ) சோலோன் 2.5 மி.லி. மருந்துக் கரைசலை ஒரு மரத்திற்கு 5 முதல் 20 மி.லி. அளவில் வண்டு தாக்கிய துவாரத்தில் ஊற்றினால் வண்டின் புழுப்பருவத்தை அழிக்கலாம்.

6. டி.டி.டீ. 0.5 சதம் (20 கிராம்-லிட்) மருந்தை மரங்களின் கிளைப்பகுதியில் பூசி வண்டின் தாக்குதலைத் தவிர்க்கலாம்.

### "மா" தத்துப் பூச்சிகள்

"மா" பூக்கும் தருணத்தில் அதாவது டிசம்பர் முதல் பிப்ரவரி வரை மா தத்துப் பூச்சிகளில் சேதம் அதிகம் இருக்கும். பூவின் சாற்றை உறிஞ்சி சேதம் விளைவிக்கும். இதனைத் தடுக்க 2.0 கிராம் செவினுடன்2.0 கிராம் கந்தகமும் கலந்து மூன்று, நான்கு முறை, விடாமல் அடிக்கவேண்டும். இதில் பூச்சிக்கட்டுப்பாடு தெரியாவிடில் 0.5 மில்லி டெமக்ரான் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து மாற்றி மாற்றி மூன்று முறை அடிப்பது சிறந்த பயனைக் கொடுத்து உள்ளது. இந்தப்பூச்சிகளைப் பூச்சிகளால் அல்லது பூஞ்சாணத்தினால் (வெர்டி-சீலியம்லெக்கானிஐ) அழிக்கும் முறை இப்பண்ணையில் பூச்சியியல் பிரிவில் ஆய்வில் உள்ளது. டி.டி.



வங்கிப் பணியாளர்களுடன் சங்கத் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் இணைந்து ஒத்துழைப்பு நல்கியதன் காரணமாக 1982-83 கூட்டுறவு ஆண்டில் மாநிலத்திலேயே மூன்றாவது இடத்திலும், 1983-84 மற்றும் 1984-85 ஆகிய இரு கூட்டுறவு ஆண்டுகளிலுமே முதல் இடத்தையும் பெற்றுள்ளது.


வங்கியின் கிளைகள் 3-2-82-ல் 21 ஆக இருந்தன. 21-10-82ல் மத்தியப் பேருந்து நிலையம் (ஈரோடு), 9-5-83-ல் சிவகிரி கிளை ஆகியவை திறக்கப்பட்டன. வங்கியின் கிளைகளை அரச்சலூர், ஒலகடம், அவல்பூந்துறை பெரியார் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் காம்ப்ளெக்ஸ் (சித்தோடு) மற்றும் விட்டு வசதி வாரியம் (ஈரோடு) ஆகிய 5 இடங்களில் திறப்பதற்குப் பதிவாளர் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**கட்டடங்கள் மற்றும் இடம் வாங்குதல் :**

தலைமையலுவலக வங்கியியல் பிரிவு, சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வங்கியின் தாராபுரம், கோபி, காங்கேயம், தாளவாடி, கொடுமுடி, சத்தி, ஊத்துக்குளி, பெருந்துறைக் கிளைகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சென்னிமலைக் கிளைக்குக் கட்டடம் கட்டும் பணி விரைவில் புளியம்பட்டி, சிவகிரி, வெள்ளக்கோவில், மொடக்குறிச்சி, மூலனூர், கவுந்தப்பாடி, பவானி கிளைகளுக்கு இடம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள் :**

கூட்டுறவு மூலமாக நலிவுற்ற பிரிவினர் பயன்பெறும் வகையில் அரசால் தீட்டப்படும் திட்டங்களை அமல்படுத்திச் செயலாற்ற வங்கி திட்டமிட்டுள்ளது. சிறு தொழில் புரிபவர்களுக்கும் கிராமக் கைவினைஞர்களுக்கும், நெசவாளர்களுக்குத் தறிகளை நவீனமாக்கவும் தறிக்கொட்டகைகள் அமைக்கவும் கடன் வசதியளிக்க வங்கி திட்டமிட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் விவசாயிகளுக்குப் பயிர்க்கடனாக ரூ. 1,500 இலட்சமும் மத்திய காலக் கடனாக ரூ. 100 இலட்சமும் கடன் வழங்க, குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் பழங்குடியினர்களுக்கு மொத்த குறுகிய காலக் கடனில் 9 சதவிகிதத்திற்குக் குறைவில்லாமலும், மத்தியகாலக் கடனில் 18 சதவிகிதத்திற்குக் குறைவில்லாமலும் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கிக்கு இணைக்கப்பட்டுள்ள சங்கங்களில் விவசாயக் குடும்பங்களையும், அரசு பங்குத் தொகை உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட குடும்பங்களையும் அதிக அளவில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கடன் வசதியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சங்கங்கள் அளவில் நகைக்கடன் வழங்க ரூ. 700 இலட்சம் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிட்டங்கி இல்லாத கிராமச் சங்கங்களில் 6 சங்கங்களுக்கு அரசு நிதியுதவியுடன் கிட்டங்கி கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

**சமூக சேவைகள் :**

ஒவ்வொரு ஆண்டு கூட்டுறவு வார விழா சிறப்புடன் நடைபெற இவ்வங்கி உறுதுணையாக இருந்தது. இவ்விழாவின் குழு சார்பாகப் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தி, போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி-கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி, கிராம மற்றும் நகர்ப்புற மக்களிடையே கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புவதன் மூலம்புகழ்பெற்று விளங்குகிறது. மேலும் நாட்டு நலப்பணிகளிலும் இவ்வங்கி தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பணிபுரிந்து வருகிறது.

மாநிலத்தில் இவ்வங்கியைத் தவிர அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளும் தனி அதிகாரிகளின் கீழ் இயங்கி வருகின்றன. இவ்வங்கி மட்டும் தமிழக அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரப் பற்றற்ற 15 நபர்களைக்கொண்ட நிர்வாகக் குழுவின் கீழ் செயல்பட்டு வருகிறது. இதன் தலைவராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சத்தியமங்கலம் திரு. ஆர். ரங்கசாமி பணியாற்றுகிறார்.



# நோயை அறிவோம்!



எல்லோருக்கும் நோயைப் பற்றிய பயம் இருப்பது சிறந்ததாகும். முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த பயம் உதவுகிறது.

காலரா, பிளேக், மூளைக்காய்ச்சல் போன்ற நோய் ஏற்படும்போது மக்கள் பீதியடைகிறார்கள். சிலநோய்கள் மக்களின் தோற்றத்தைக் குலைத்துவிடுகிறது. தொழுநோய் இத்தகைய நோய்களில் ஒன்று. புற்றுநோய் தாங்க முடியாத வலியினைத் தருகிறது.

நோயின் உபாதை, அதனுடைய பின் விளைவுகள் பயத்துக்குக் காரணமாக அமைகின்றன.

நோய்களைப் பற்றி பல கருத்துக்கள் உலவுகின்றன. சில நோய்கள் தெய்வங்களின் கோபங்களாகக் கருதப்படுகின்றன. சிலவகை உணவுகளைச் சாப்பிடுவதால் சில நோய்கள் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. அதனால் சத்து நிறைந்த அந்த உணவுப் பொருள்களை மக்கள் நிராகரித்து விடுகிறார்கள்.

தொழுநோய், காசநோய் இவைகளை இப்பொழுது குணப்படுத்த முடிகிறது. அதனால் நோய்களைப் பற்றிய பயம் நீங்கி விடுகிறது.

மது அருந்துவோர் தங்கள் ஈரல் பாதிக்கப்படும் என்று அஞ்சுகிறார்கள். ஆனால் வைட்டமின் மாத்திரைகளைச் சாப்பிடுவதால் அதனைத் தவிர்க்க முடியும் என்று நினைக்கிறார்கள். அதனால் அவர்கள் சீர் செய்ய முடியாத அளவு பாதிக்கப்படுகிறார்கள்.



நோய் எதனால் ஏற்படுகிறது? இதை அறிந்து கொள்வது நல்லபலன் தரும். அதனால் நோயைத் தடுப்பதோடு பயத்தை வெற்றி கொள்ள முடியும்.

நோய்த்தடுப்பு முறைகளைக் கையாள்வதன் மூலம் சில நோய்களைத் தவிர்க்க முடியும்.

மரபணுவியல் ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் சில நோய்களைத் தவிர்க்கலாம்.

சமூக உணர்வினை வளர்ப்பதன் மூலம் பொதுச் சுகாதாரத்தைப் பேணச் செய்து நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.

சூழ்நிலைகளுக்கு ஒத்துப்போக முடியாத காரணத்தால் சில நோய் ஏற்படுகின்றன. நிலைமையைத் தீர ஆய்வு செய்வதன் மூலம் இவற்றைத் தவிர்க்கலாம்.

நோய் காரணமாக பயம் அதிகரிக்கும் போது சில நேரங்களில் அதுவே நோய் ஆகி விடுகிறது!

தீர்க்க இயலாத நோயால் பாதிக்கப்பட்ட சிலருக்கு மரண பயம் ஏற்படுகிறது. அதனால் உலகில் பற்றற்ற நிலை ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் மதத் தொடர்பான நூல்கள் அவர்களுக்கு உறுதுணையாக உள்ளன.

நோயைப் பற்றி முறையாக அறிந்திருப்பதும், மருந்தின்மீது நம்பிக்கை வைப்பதும் நோய்களுக்குச் சிறந்த சிகிச்சையாகும்.

**பத்திரிகைத் தகவல் அலுவலகம்**

## சென்னை உரத் தொழிற்சாலை :

சென்னை - மணலியில் இருக்கும் மத்திய அரசு நிறுவனமான 'சென்னை உரத்தொழிற்சாலை (எம். எஃப் எல்)' மேலும் விரிவாக்கப்படும்; இதற்காக ரூ. 550 கோடியில் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மட்டும் 7 இலட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் உரம் இங்கு உற்பத்தியாகியுள்ளது. இதன் மதிப்பு ரூ. 208 கோடியாகும். இதன் மூலம் இத்தொழிற்சாலை இவ்வாண்டில் ரூ. 12 கோடியே 83 இலட்சம் இலாபம் பெற்றிருக்கிறது.

இவர்கள் தயாரிப்பான 'விஜய் உரம்' விவசாயிகளிடம் பெரும் மதிப்புப் பெற்றிருக்கிறது. சென்னை உரத் தொழிற்சாலை 234 கிராமங்களைத் தத்தெடுத்து விவசாயிகளுக்குத் தகுந்த ஆலோசனைகளை அளித்து வருகிறது. இதன் மூலம் 83 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயன் பெறுகின்றன.

இது மத்திய அரசு நிறுவனமாயினும், பொதுத்துறை நிறுவனம் ஆகும். இதில் பங்கு முதலீடு செய்திருப்பவர்களுக்கு இந்த ஆண்டு இலாபத்தில் 25 சதவிகிதம் பிரித்து வழங்கப்படும்.

—இவ்வாறு எம். எஃப். எல். தலைவர் திரு ஜோசப்குரியன் அவர்கள் (1-10-85) கூறினார்.

## அனல் மின் நிலையம் :

சென்னை - பேசின் பிரிட்ஜிலிருந்த அனல் மின்சார நிலையம் மூடப்பட்டுவிட்டது.

இந்த அனல் மின் நிலையம் அதன் சக்திக்கு ஏற்ப உற்பத்தி செய்யவில்லை; உற்பத்தி குறைவாகவும், உற்பத்திச் செலவு அதிகமாகவும் இருந்தது. இந்நிலையம், நகரின் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகவும் இருந்தது.

—இதுவே பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையம் மூடப்படக் காரணம் என்று தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு பி. விஜயராகவன், இ.ஆ.ப. அவர்கள் (1-10-85) தெரிவித்திருக்கிறார்.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி

வட ஆர்க்காடு மாவட்டம் காட்பாடியில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் வெடிமருந்து தொழிற்சாலை அமைத்துள்ளதல்லவா? ரூ. 22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இதற்கான கட்டடங்களை விரைவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் திறந்து வைப்பார்.

இத்தொழிற்சாலை மூலம் அங்கே ஏறக்குறைய இரண்டாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

அத்தொழிற்சாலையினருகே ரூ. 23 கோடி செலவில், புதிதாக ஒரு வெடிமருந்து திரித்தொழிற்சாலையும் ரூ. 21 கோடி செலவில் 'அமோனியம் நைட்ரேட்' ரசாயனத் தொழிற்சாலையும் அமைக்கத் திட்டமிருக்கிறது. ரூ.200 கோடி செலவில் 16 புதிய தொழில்களைத் தொடங்குவது பற்றிப் பரிசீலனை நடக்கிறது; இதன் மூலம் 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிட்டும்.

1965-ல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் இதுவரை ரூ. 600 கோடி செலவில் 42 தொழிற்கூடங்கள் அமைத்துள்ளது. 16 ஆயிரம் பேர் அவற்றின் மூலம் வேலைவாய்ப்புப்பெற்றுள்ளனர்.

—இவ்வாறு தமிழ்நாடுதொழில் வளர்ச்சி நிறுவனத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் (30-9-85) கூறினார்.

## உலகச் சுற்றுலா நாள் :

தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் சென்னையில் 'உலகச் சுற்றுலா நாள் விழா' கொண்டாடப்பட்டது(28-9-85).

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் -"சுற்றுலாத் துறையைச் சேர்ந்த போக்குவரத்து மற்றும் ஓட்டல் பிரிவுத் தொழிலாளர்களுக்கு இனி அகவிலைப்படி அடிப்படை சம்பளத்தில் சேர்த்து இணைத்து வழங்கப்படும். மேலும், போக்குவரத்துப் பிரிவில் வேலை பார்ப்போருக்கு ரூ. 65-ல் இருந்து ரூ. 105 வரை ஊதிய உயர்வும் ஓட்டல் பிரிவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சம் 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை சம்பள உயர்வும் அளிக்கப்படும்; மற்றவர்களும் அவரவர் தகுதிக்கேற்ப ஊதிய உயர்வு பெறுவர். இந்த ஊதிய உயர்வு 1-4-85 முதல் கணக்கிட்டுத் தரப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்" என்றார்.

உலகச் சுற்றுலா நாள் விழாத் தொடக்கத்தில் பள்ளி, கல்லூரி மாணவ - மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. ஓவியப் போட்டியும் நடைபெற்றது. போட்டிகளில் வென்றோருக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசளித்தார்.

## பாடநூல் நிறுவன நிதி

மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் துவக்கப்பட்ட பின்பு, படிக்க வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதனால் பள்ளிக் கட்டடங்களை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அரசுக்கு இவ்வகையில் ஒத்துழைக்கத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் முன் வந்துள்ளது.




தமிழ்நாட்டிலுள்ள மேநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக வகுப்பறைகளைக் கட்டுவதற்காகத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 25 இலட்சம் ரூபாய் நிதிவழங்கியுள்ளது. இதற்கான தொகையை அந் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு கோடம்பாக்கம் எம். குமார் அவர்கள் தமிழக அரசிடம் வழங்கினார்.

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்

இக்கழகத்தில் இதுவரை 2,416.44 எக்டர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இத்துடன் வனத்துறையில் கொளப்பள்ளிக் கோட்டத்தில். பயிரிடப்பட்ட தேயிலைத் தோட்டங்கள் 347 எக்டர் பரப்பும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பராமரிக்கப்படுகிறது.

இந்தக் கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 2383 தொழிலாளர் குடியிருப்புகளில் (ஜூன் 1985 வரை) 2246 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க, துரித நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனத்துறையிலிருந்து இக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட கொளப்பள்ளித் தேயிலைக் கோட்டத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 230 தொழிலாளர் குடியிருப்புகளில் 130 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஜூன் மாதத்தில் மட்டும் 17,02,329 கி.கி. தேயிலைக் கொழுந்து உற்பத்தி ஆயிற்று.

## சின்கோனாத் துறை

இந்த ஆண்டு ஆனைமலை மற்றும் நீலகிரிப் பிரிவுகளில் மருந்து மற்றும் நறுமணம் தரும் செடிகள் 80 எக்டர் பரப்பில் நடத்த, திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கெதிராக 3 எக்டர் பரப்பில் புதிய நடுகை மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் உள்ள இரண்டு தொழிற்சாலைகளை நவீனப்படுத்த, தேவையான புதிய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க, இவ்வாண்டு திட்ட ஒதுக்கீடு ரூ. 2.00 இலட்சம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 25 தொழிலாளர்கள் குடியிருப்புக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. சென்ற ஆண்டுகளில் கட்டி முடிக்காத வீடுகளைகட்டிமுடிக்கவும், தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கவும், தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆனைமலையில் ஒரு பாலம் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ. 10.20 இலட்சம். இம்மாதம் ரூ. 1.29 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

கபீன் தயாரிக்க உபயோகப்படுத்த கொதிகலன் உலோகக் கூறு முறைகளின்படி பரிசோதிக்கப்பட்டு உற்பத்திக்கு உகந்தது இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே புதிதாக ஒரு கொதிகலன் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதிய கொதிகலன் நிர்மாணிக்கப்பட்ட பின்பு கபீன் உற்பத்தி தொடங்கும்.

இந்த ஆண்டில் குறியீட்டு நடுகை 27 எக்டர். இதற்கான நடுகை மற்றும் முன் நடவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தக ரீதியில் டயாஸ்டெனின் தயாரிக்க, தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 14.78 இலட்சம். இம்மாதம் ரூ.4.27 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

## பார்த்தோம்—படித்தோம்



16.8.85 இதழ் 20 அம்சத் திட்டச்சிறப்பு மலராக மலர்ந்ததைக் கண்டு பேருவகை கொண்டேன். அ ன் மூலம் 20 அம்சத் திட்டம் பற்றி முழு விவரங்களையும், அத்திட்டத்தின்படி துரிதமாகச் செயலாற்றி வரும் தமிழகத்தின் பெருமையும் தெளிவாகப் புரிந்து கொண்டேன்.

-என். ஜி. தஸ்தகீர் சாஹிப்,
நாகூர்.

20 அம்சத்திட்டச் சிறப்பு மலர் மணம் வீசியது, நுகர்ந்தேன்.

-ஆர். இராஜேந்திரன்,
கருவலூர், கோவை.

20 அம்சத் திட்டத்தைப் பற்றி சிறப்புக் கட்டுரைகளைத் தொகுத்தளித்த 'தமிழரசுக்கு' என் இதயங்கனிந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

-எ. இரவிக்குமார்,
உரியூர், வடார்க்காடு
மாவட்டம்.

20 அம்சத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முதலிடம் வகிக்கும் தமிழக அரசின் சாதனைகளை விளக்கிச் "சிறப்பிதழ்' வெளியிட்ட தமிழரசின் பணி பாராட்டுக்குரியது.

-செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.

முதுமையிலும் தமிழ் கற்ற பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் பற்றிய புகைப்படங்களையும், நூற்றாண்டு விழாத் தொடக்க நிகழ்ச்சிகளையும் தொகுத்து அளித்ததற்கு நன்றி.

-எம் பி. இளங்கோ.
மேட்டுப்பாளையம்.

16.9.85 இதழில் இடம் பெற்ற அறிவியல் சாரம் (ஜப்பான் நியூஸ்) அருமை. அண்ணா மாவட்டம் பற்றிய தகவல்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்பட்டுள்ளன. பேரறிஞரைப் பற்றிய மாண்புமிகு அமைச்சர்களின் கட்டுரைகள் சிறப்பாய் இருந்தன. மொத்தத்தில் இவ்விதழ் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய கருத்துக் கருவூலம்.

-'குறிஞ்சி' வானொலி
மன்றம். கரியணம்பட்டி.
மதுரை மாவட்டம்

டீ.0.1 சதம் (2 கிராம்-லிட்டர்) மருந்துக் கலவையை மூன்று முறை 10 நாட்கள் இடைவெளியில் பூங்கொத்து உண்டான உடன் தெளிப்பதன் மூலம் நல்ல பயன் அடையலாம். இத்துடன் நனையும் கந்தகத்தையும் கலந்து தெளிப்பது பூங்கொத்துகளில் காணப்படும் பூசாண நோயையும் கட்டுப்படுத்தும். கார்பரில் 0.1 சதம் (2 கிராம் -லிட்) கரைசலையும் உபயோகப்படுத்தலாம். டி.டி.டீ.5 சதத்தூள் அல்லது 10 சதத்தூள் மருந்தையும் தூவி இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

''மா'' தத்துப்பூச்சிகளை இன்னும் சிறந்த முறையில் கட்டுப்படுத்த மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூரில் பூச்சி இயல் பிரிவில் ''சிந்தடிக் பைரித்ராய்டு'' பென்னலரேட் பெர்மித்ரின் சைபேர்மித்ரின் மற்றும் டெல்டாடமித்ரின் என்ற மருந்துகளை விவசாயிகள் தோட்டத்தில் உபயோகித்து பூச்சிக் கட்டுப்பாட்டுத் திறனை ஆய்வு செய்ய இருக்கிறார்கள்.

இதன் புழுக்கள் சதைப்பகுதியைக் குடைந்து கொட்டைகளின் உட்பாகத்தைச் சேதப்படுத்துவதால் காய்கள் முழு வளர்ச்சியாகாமல் பழுத்து விடுகின்றன. இந்தச் சேதத்தைத் தடுக்க, காய்பிடித்து சுமார் 45 நாட்களில் 15 நாட்களுக்கு ஒரு முறையாக மும்முறை லெபாசிட் 1 மில்லி அல்லது மாலத்தியான் 2 மில்லி மருந்தையும் 4 மில்லி டி.டி.டீ. திரவ மருந்தையும் சேர்த்து ஒரு லிட்டர் நீரில் கலந்து, மருந்துக்கலவையைத் தெளிப்பதன் மூலம் இவ்வண்டு தாக்குதலையும் கட்டுப்படுத்தலாம்.

இப்பகுதியில் இரண்டு ஆண்டுகளுக்குச் சேர்ந்தோ அல்லது மூன்று ஆண்டுகளுக்கோ மாந்தோப்புகளைக் குத்தகைக்கு விடுவது வழக்கமாக உள்ளது. ஓராண்டு நன்கு காய்த்து, மறு ஆண்டு காய்ப்புத்தன்மை குறைந்தும் இருப்பது மாவில் காணும் ''தாய்வழி இனவழி'' மரபியலாகும். மார்ச்சு முதல் ஜூன் இறுதிவரை பழங்கள் அதிக அளவில் விற்பனைக்குச் சுமார் 100-120 டன்கள் கிருஷ்ணகிரியிலிருந்து லாரிகள் மூலம் மகாராஷ்டிரா, சென்னை, புதுதில்லி போன்ற தூரப்பகுதிக்கும், பாகலூர், ஓசூர், பெங்களூரிலிருக்கும் பழப்பதனிடும் தொழிற்சாலைக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மா பூக்கும் தருணத்தில்தான் குத்தகைக்கு விடப்படுகிறது. எனவே குத்தகைக்காரர்கள் தான் தங்களின் இலாபம் கருதி பூச்சி பூஞ்சாண மருந்துகளை அடிக்கின்றனர். இதனால் தாய் மரத்தின் செழுமையான சுகாதாரம் குத்தகைதார்களால் பாதுகாக்கப்படுவதில்லை. இதுவே மா மரம் ஆண்டுக்காண்டு பலனளிக்கும் தன்மை குறையக் காரணம். பொதுவில் மா விளைவிப்பவர்களைவிட ''இடைத் தரகர்கள்'' அதிக இலாபம் பெறுகின்றனர்.

**மா வளர்ச்சிக்கு புதிய அணுகுமுறைகள்**

1. தோப்பினைச் சுகாதாரமான சூழ்நிலையில் பாதுகாத்தல்.

2. ஏற்றுமதி இரகங்களான அல்போன்சா போன்ற இரகங்களை அதிக அளவில் பயிரிடுதல்.

3. வறட்சியினையும், பூச்சி பூஞ்சாள நோயினையும் தாங்கி வளரும் இரகங்களை அறிமுகம் செய்தல்.

4. குட்டை ரகங்களைத் தேர்வு செய்தல்

5. பழப்பதனிடும் தொழில்கள் வளர அதிக அளவில் பழப்பதனிடும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரகங்களை உற்பத்தி செய்தல்.

இவை போன்ற புதிய அணுகுமுறைகள் மூலம் மாவின் பெருக்கத்திற்கு வழிகோலி, அந்நியச் செலாவணியைப் பெருக்கலாம்.



புதிய 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகத்தில் முதலிடம் வகிப்பதற்காக வடஆர்க்காடு மாவட்டம், முதல் பரிசைப் பெற்றுள்ளது. 14-10-85 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் இந்தப் பரிசினை வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இ.எட்டானியல் குணாநிதி, இ.ஆ.ப., மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் பெறுகிறார்.

# வாழ உதவும் வங்கிக் கடன்





**கோ**யம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து பிரிக்கப்பட்டு 11-7-80-ல் பதிவு செய்யப்பட்டு 31-1-81-ல் ஆரம்பிக்கப்பட்ட பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி 3-2-82 முதல் தனது வங்கியியல் பணிகளைத் தொடங்கி நடத்தி வருகிறது.

**உறுப்பினர்கள் மற்றும் பங்குத் தொகை**

30-6-85-ல் இவ்வங்கியில் 920 கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக ரூ. 223.48 இலட்சம் பங்குத் தொகையுடன் இருப்பதுடன், தமிழ்நாடு அரசும் ஓர் உறுப்பினராகி ரூ. 50 இலட்சம் பங்குத் தொகையாகச் செலுத்தியுள்ளது. நகைக்கடன் பெறவும் பாதுகாப்புப் பெட்டக வசதி, தனி நபர் அதிகப்பற்று வசதி முதலியவற்றிற்காக 56,000 'பி' வகுப்பு உறுப்பினர்கள் ரூபாய் 56,000 பங்குத் தொகையாகச் செலுத்தியுள்ளார்கள்.

**வைப்புத்தொகைகளும் கடன்களும்**

வங்கியியல் பணிகளைத் துவங்கிய 3-2-82-ல் ரூ. 1565 இலட்சம் வைப்புத் தொகையாகக் கொண்டிருந்தது. 30-6-85-ல் இவ்வங்கியின் வைப்புத் தொகை ரூபாய் 3020 இலட்சம் ஆகும். வங்கி, பல சிறப்பு வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் அதிக வைப்புத் தொகைகளைச் சேகரித்து வருகிறது. தேசிய கிராம வளர்ச்சி வங்கி, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மற்றும் தமிழக அரசு ஆகியவற்றிடமிருந்து இவ்வங்கி பல்வேறு காரியங்களுக்கு ரூபாய் 1177 இலட்சம் கடன் வசதி பெற்றுள்ளது.

**நடைமுறை மூலதனம் :**

வங்கியின் நடைமுறை மூலதனம் 30-6-85-ல் ரூ. 4529.85 இலட்சம் ஆகும்.

**வழங்கிய கடன்கள் :**

30-6-85-ல் இவ்வங்கி குறுகிய கால விவசாயக் கடனாக ரூபாய் 1157.56 இலட்சமும், மத்திய, நீண்ட காலக்கடனாக ரூபாய் 200.07 இலட்சமும் வழங்கியுள்ளது. நகைக்கடன்கள் சங்கங்களின் மூலமாக ரூ. 408.52 இலட்சமும், கிளைகள் மூலமாக ரூ. 110.79 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு மாறுபட்ட வட்டி விகிதமான 4 சதவிகித வட்டியில் ரூ. 4.40 இலட்சமும், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 106.48 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர நெசவாளர் சங்கங்கள், நூற்பாலை, பெரியார் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை மற்றும் நிலவள வங்கிகளுக்கு முறையே ரூ. 1257 இலட்சம் ரூ. 125 இலட்சம், ரூ. 96.48 இலட்சம், ரூ. 83.30 இலட்சம் மற்றும் ரூ. 28 இலட்சம் காசுக் கடனாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

**இன்ஸ்யூரன்சு திட்டங்கள் :**

விவசாயிகள் கடன் பெற்றுக் கறவை மாடு, ஆடு போன்றவை வாங்கும்போது நோயினால் அல்லது விபத்தினால் அவை இறந்து போனால் இன்ஸ்யூரன்சு நிறுவனங்கள் மூலம் கடன தொகையை ஈடு செய்ய வழி செய்யப்பட்டுள்ளது. அரசு குறிப்பிட்ட பகுதிகளில் பயிர்களுக்கு பயிர் இன்ஸ்யூரன்சு செய்யப்பட்டு விளைச்சல் பாதிக்கப்பட்டால் ஈடு செய்யும் திட்டம் அமலில் உள்ளது. வைப்புகளுடன் இணைந்த கிராமிய விபத்து பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நிரந்தர மற்றும் பொற்குவியல் திட்ட வைப்புதாரர்கள் ஆண்டுக்கு ரூ. 4 மட்டுமே பிரிமியம் செலுத்தி விபத்துக் காலங்களில் ரூ. 6,000 வரை இழப்பு ஈடு பெறலாம்.


பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள மற்றும் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சிறு, குறு விவசாயிகளுக்குக் கறவை மாடு, வண்டி, எருது, வெள்ளாடு போன்றவைகள் வாங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கி வரும் திட்டம் 1982ஆம் ஆண்டு முதல் செயலில் உள்ளது. இதில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் குறு விவசாயிகள் ஆகியோர்களுக்கு 33 1/3 சதவிகிதமும், சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும் உயர்ந்த பட்சமாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000-க்கு மேற்படாமல் அரசு மானியம் பெற்று வழங்கி வருகிறது.

**கடன் வசூல் விவரம் :**

கடன் வசூல் பணியில் இவ்

> எனது நம்பிக்கையின் முதல் படி அகிம்சை; கடைசிப் படியும் அகிம்சையே.
> — காந்தியடிகள்

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!





போராடிப் பொழுதெல்லாம்
உழைத்தபின்...ஜோராக ஆடிய பின்,
நீராடுவீர் லைப்பாய் கொண்டு...குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர் சுத்தமே
உருவான ஆரோக்கிய மலர்ச்சி!

**லைப்பாய்**
அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

LINTAS L 95 2317 TM.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்...

நலிந்த பிரிவினர் நல்வாழ்வு பெற்றிட அரசு பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

இருபது அம்சத்திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் வாழ்க்கைத் தரம் உயரப் பலப்பல உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில், அவ்வாறு உதவி பெற்றவர்களைச் சந்தித்தபோது கூறினார்கள்.

**பரமத்தி வட்டாரம், வசந்தபுரத்தைச் சேர்ந்த திரு ஆ. சதாசிவம் கூறுகிறார்.**

"என்னுடைய அப்பா பழைய சைக்கிள் நான்கு வைத்து வாடகைக்கு விட்டுத் தொழில் நடத்தி வந்தார். 1972ல் பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வு பெற்று வேலையற்றவனாக-அப்பாவுக்கு உதவியாக இருந்து வந்தேன். என்றாலும் வருமானம் வளர்ந்தபாடில்லை. வறுமைக்கோட்டின் கீழ் உழலும் எங்கள் குடும்பம், ஊர் நல அலுவலர் கண்ணில் பட்டது. அவர் என் நிலையைப் பார்த்து மனம்நொந்தார். 'உமக்கு நல்ல வழி பிறக்கும்' என்று கூறி, புதிய சைக்கிள் வாங்க விண்ணப்பம் எழுதிப் பெற்றார். இந்தியன் வங்கி எனக்கு 2500 கடன் தந்து உதவியது. அதன் மூலம் 5 புதிய சைக்கிள்கள் பெற்றேன். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் மூலம் ரூ. 833 மானியமும் கிடைத்தது.

"எனக்குக் கிடைத்த கூடுதல் வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி, தவணை தவறாமல் பேங்குக்குக் கடனை அடைத்துவந்தேன். பிறகு மாவு அரைக்கும் இயந்திரம் ஒன்றும் ரூ.5000 கடன் உதவி மூலம் வாங்கினேன். இப்போது மாதம் ரூ. 150 வரை எனக்கு வருமானம் கிடைக்கிறது."

**நாமக்கல் வட்டாரம், கோனாம் பரப்புப் பகுதியைச் சேர்ந்த திரு கந்தன் கூறுகிறார்.**

"விவசாயக் கூலி வேலையே எங்கள் குலத் தொழில் என்று சொல்லலாம். வறுமை எங்களை வாட்டியது. தாழ்த்தப்பட்ட எங்கள் குடும்பத்திற்கு, எங்கள் ஊர் கிராம நல அலுவலர் கறவைமாடு வாங்கப்பேருதவி செய்தார். யூகோ வங்கி மூலம் ரூ. 2500 கடன்





# குமரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

இந்தியத் திருநாட்டின் தென் கோடி எல்லை கன்னியாகுமரி. அதன் இயற்கை எழிலைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது

சுற்றுலாப் பயணிகளின் பெருக்கத்தை மனத்தில் கொண்டு அவர்களுக்கு உரிய வசதிகளைச்செய்து கொடுப்பதில் தமிழக அரசு முனைப்பாகச் செயல்பட்டு, இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது.

1971-ஆம் ஆண்டு சராசரி நாள் ஒன்றுக்கு 2,000 பயணிகள் கன்னியாகுமரிக்கு வருகை புரிந்தனர். ஆனால் இப்பொழுது நாள் ஒன்றுக்கு 4000 வீதமும் அக்டோபர் மாதம் முதல் ஜனவரி முடிய நாளொன்றுக்கு 12,000 பயணிகள் குமரியின் எழிலைக் காண வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் வருகை கூடி வருவதால் சுற்றுலாப் பயணிகளுக்குரிய எல்லா வசதிகளைச் செய்து கொடுப்பதில் அரசால் அனுமதிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளை அமல்படுத்துவதில், கன்னியா குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தனிக் கவனம் செலுத்தி வருகிறார்.

**வளர்ச்சிப் பணிகள்.**

ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டில் அங்காடிகள் கட்டப்பட்டு வருகின்றன. ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் திரையரங்கம் கட்ட மதிப்பீடு தயார் செய்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ரூபாய் 2 இலட்சம் செலவில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் நேசமணி போக்குவரத்துக் கழகத்தார் 7.33 ஏக்கர் பரப்பில் ஒரு நவீன பேருந்து நிலையம் அமைக்கும் பணி, விரைந்து நடைபெற்று வருகிறது. ரூபாய் 2.50 இலட்சம் செலவில் 18 நவீன கழிப்பிடமும், 8 குளியலறைகளும் கட்டப்பட்டு, பயணிகள் வசதிக்காக விடப்பட்டுள்ளன.

ரூபாய் 61 ஆயிரம் செலவில் சிறுவர் பூங்காவிலும் சுற்றியுள்ள புல் வெளியிலும் மின் விளக்குகள் அமைக்கும் பணி விரைந்து நடை பெற்று வருகிறது.

கடற்கரைச் சாலைநெடுகிலும் ரூ. 9,320 செலவில் சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ரூபாய் 2 இலட்சம் செலவில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு தங்கும் விடுதிகள் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 88 ஆயிரம் செலவில் 13 நவீன கழிப்பிடமும், 13 குளியலறைகளும் கட்டும்பணி முடிவடைந்துள்ளது.

ரூ. 30 இலட்சம் செலவில் மீன் காட்சிச் சாலை கட்டத் திட்டம் தீட்டப்பட்டு அரசு ஆணைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ரூ. 5 இலட்சம் செலவில் சுற்றுலாத்துறையினரால் பயணிகள் தங்க, பேருந்துகள் நிறுத்த, தமிழ்நாடு விடுதி வளாகத்தில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

சுற்றுலாத்துறையினரால் ரூ. 23.90 இலட்சம் செலவில் தமிழ் நாடு விடுதி வளாகத்தில் 64 படுக்கைகள் கொண்ட ஒரு கட்டடம் கட்டும் பணி திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

> உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதுபோல ஆத்மாவுக்குப் பிரார்த்தனை மிகவும் அவசியம்.
>
> — காந்தியடிகள்

சுற்றுலா வாரியத்தால் ரூ. 15 இலட்சம் செலவில் கலையரங்கம் ஒன்று கட்டப்படத் திட்டம் தீட்டப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ரூ. 31.08 இலட்சம் செலவில் குடிநீர் வசதிக்காகத் திட்டம் தீட்டப்பட்டு பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. மேலும் சுற்றுலாத் துறையினரால் ரூ. 3 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

---

பெற்று மாடு வாங்கினேன். ஊரக வளர்ச்சித் திட்டத்திலிருந்து ரூ. 1250 மானியமாகக் கிடைத்தது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பால் விற்பனை செய்கிறேன். இப்போது எங்கள் குடும்பம் வறுமை இல்லாமல் இருக்கிறது.''


**பரமத்தி வட்டாரம் வேப்பநந்தம் புதூரைச் சேர்ந்த செல்வி சாந்தி கூறுவதாவது—**


''எட்டாம் வகுப்புவரை படித்துவிட்டு, இரண்டு ஆண்டுகள் வீட்டில் இருந்தேன். 5 பேர்கள் உள்ள எங்கள் குடும்பம் குறைந்த வருமானத்தில் ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் ஊர் கிராம நல அலுவலர் அவர்கள் மூலம் அச்சுக்கோத்தல், புத்தகம் பைண்டிங் செய்தல் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டேன். இதற்காக நாமக்கல் நகரில் உள்ள ஓர் அச்சகத்தில் பயிற்சி பெற்றுத்தேர்ந்தேன்.

"அதே அச்சகத்தில் இன்று மாதம் ரூ200 ஊதியம் பெற்று எங்கள் குடும்ப வருமானத்தைப் பெருக்கியுள்ளேன். இதற்குத் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் எனக்குப் பெரும் உதவி புரிந்துள்ளது."









சீன தங்க நிறக் கோழி
Chinese Golden Pheasant



சீன வெள்ளி நிறக் கோழி
Chinese Silver Pheasant



கிண்டி காந்தி மண்டபத்தில் காந்தியடிகள் பிறந்த நாளையொட்
செய்யப்பட்ட கண்காட்சியினை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரா
2.10.1985 அன்று திறந்து வைத்தார்.



# திருநெல்வேலி மாவட்டத்தில்...

திருநெல்வேலி மாவட்டத்தில் 1984-85-ஆம் ஆண்டிற்கான வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 4-7-84 அன்று ஊரக வளர்ச்சித் துறையால் ரூபாய் 248.00 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மத்திய அரசு ரூ. 124 இலட்சங்களும், மாநில அரசு ரூ. 124.00 இலட்ச்ங்களும் வழங்கி உள்ளன. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திட்டங்களை வட்டாரங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடித்து உள்ளனர். இதோ! சில புள்ளி விவரங்கள்—

அரசிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ. 248 இலட்சம். 31-3-1985 வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 247.91 இலட்சம். இத்திட்டத்தில் மானியம் இணைந்த கடன் மூலம் பயன் அடைந்த குடும்பங்கள் எண்ணிக்கை 21,775.

கிராம இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றோர் 1197. பயன் அடைந்த ஆதிதிராவிடர் குடும்பங்கள் எண்ணிக்கை 9295.

1984-85-ஆம் ஆண்டிற்கான தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. 1984-85-ஆம் ஆண்டிற்கு இம்மாவட்டத்திற்கு அரசு 313.15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து வழங்கியது.

31-3-1985 வரை ரூபாய் 298.77 இலட்சம் செலவு செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டத்தைக் கிராமப் பகுதிகளில் செயல்படுத்தியதன் வாயிலாக 26.49 இலட்சம் மனித நாட்திறன் பயன்படுத்தப்பட்டு உள்ளது. 2712 வேலைகள் 1984-85ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

1984-85ஆம் ஆண்டிற்குக் கிராமப்புற நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கென திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ. 338.28 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

31-3-1985 வரை ரூ. 324.80 இலட்சம் கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

1. மண்வளப் பாதுகாப்பு, நீர்த்தேங்கும் குட்டைகள் அமைத்தல்: ரூ.36.79 இலட்சங்கள். 2. கிராமப்புற இணைப்புச் சாலைகள் அமைத்தல்: ரூ.197.50 இலட்சங்கள் 3. மேற்புறச் சிறு பாசன வேலைகள்; ரூ. 11.01 இலட்சங்கள், 4. ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்குத் தொகுதி வீடுகள் கட்டுதல்; ரூபாய் 74.70 இலட்சங்கள். 5. கசிவுநீர்க் குட்டைகள் (ஊராட்சி ஒன்றியங்கள்) ரூ. 4.8 இலட்சங்கள் ஆகமொத்தம் 324.8 இலட்சங்கள்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்தியதன் வாயிலாக 20.72 இலட்சம் மனித நாட்திறன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சிறு நீர்ப்பாசனம் மற்றும் நிலச்சீர்திருத்தத் திட்டங்களுக்கென இதுவரை அரசிடமிருந்து ரூ. 88.46 இலட்சம் பெறப்பட்டு உள்ளது. இதில் முந்தைய ஆண்டின் செலவிடப்படாதத் தொகை ரூ. 43.36 இலட்சமும் அடங்கும். இந்தத் தொகையில் ரூ. 62.37 இலட்சம் சிறு நீர்ப்பாசனத் திட்டத்திற்கும், ரூபாய் 13.49 இலட்சம் நிலச்சீர்த்திருத்தத் திட்டத்திற்கும் 31.3.85 முடிய செலவு செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக 6905 குடும்பங்கள் பயன் பெற்று உள்ளன.

கிராமப்புற நிலமற்றோர் வேலை உத்தரவாதத் திட்டத்தின் கீழ் குப்பகுறிச்சிக் கிராமத்தில் 1984.85ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் குடியிருப்புக்காக 10 வீடுகள் கட்டப்பட்டன.

இந்த வீடுகள் கட்டப்பட்ட மனைகள் அரசாங்கத்தால் இலவசமாக ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டு ஒவ்வொன்றும் ரூ. 6,000 மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது.


கிராமப்புற நிலமற்றோர் வேலை உத்தரவாதத் திட்டத்தின் கீழ் சுத்தமல்லி கிராமத்தில் 1984-85ஆம் ஆண்டில் 12 வீடுகள் ஆதிதிராவிடர்கள் குடியிருப்புக்காக கட்டப்பட்டது.

வொரு இனத்தின் தன்மையைப் பொறுத்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சிறிய, நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளைக் கணக்கிட்டு, சரியாக வரிசைப்படுத்துவதன்மூலம், வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள வேளாண் மக்களுக்கு இலவச மின் விநியோகம் கிடைக்கச் செய்யும் அரசின் குறிக்கோளை இத்திட்டம் நிறைவேறச் செய்கிறது.

ஊரக மக்களுக்கு, கிராம மட்டத்தின் வேலை வாய்ப்பைக் கணிசமான அளவில் இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு பொதுமக்களுக்கும் நிர்வாகத்திற்கும் பெரும் அளவில் பயன்படும் இந்த நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத்திட்டம் தமிழக அரசினால் விவசாயிகளுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும்.



புனர் அமைப்புக்கான தேசிய நிறுவனம், ஐதராபாத்தில் நடத்திய நிலஅளவைக் கருத்தரங்கு ஒரு எக்டேர் பரப்பளவுள்ள நிலத்தின் ஆவணங்களை மேம்படுத்த ஆகும் செலவு ரூ. 150 எனக் கணக்கிட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில், அச்சுச் செலவு உட்பட இந்தத் திட்டத்தின்படி ஆகும் செலவு ஒரு எக்டேருக்கு ரூ.40 மட்டுமே! எனவே, சிக்கனமான முறையில் நிறைவான பயன்களைத் தரக்கூடிய திட்டமாக இந்த நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத்திட்டம் அமைந்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டில் பட்டாவும் மற்றும் தங்கள் நிலத்திற்கான வரைபடமும் பெற்றுப் பயன் அடைந்தோர் இதுவரை சுமார் 76 இலட்ச விவசாயிகள் ஆவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# தருமபுரி மாவட்டத்தில்

## குடும்ப நலம்

தருமபுரி மாவட்டம் 9517 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது. 1981-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி 19,97,060 மக்கட் தொகை கொண்டதாகும். சதுர கிலோ மீட்டருக்கு 207 மக்கள் வசித்து வருகின்றனர். பிறப்பு விகிதம் 30.9; இறப்பு விகிதம்: 10.7; சிசு மரண விகிதம்: 62.7 ஆகும். 1971-ஆம் ஆண்டு மக்கட் தொகையை ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது 1981-ஆம் வருடத்திய மக்கட் தொகை 1000 மக்கட் தொகைக்கு ஒவ்வொரு ஆண்டும் 18.81% உயர்ந்துள்ளது. ஆண், பெண் விகிதம் 961:1000 ஆகும். தகுதி வாய்ந்த தம்பதியர்களில் 33.4 சதவிகிதத்தினர் குடும்ப நலத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டுள்ளனர். இம்மாவட்டத்தில் பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் தலையாய திட்டமான குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் உள்ள 9 அரசு மருத்துவ மனைகளும், 16 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் 3 அரசு கிராமிய மருந்தகங்களும் ஆண் அறுவைச்சிகிச்சை செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பெண் அறுவைச் சிகிச்சைக்கென 8 அரசு மருத்துவமனைகளும், 3 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் அங்கீகரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. அனைத்து அரசு மருத்துவ மனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தற்காலிக முறைகளான, நிரோத், கருத்தடை மாத்திரை விநியோகித்தல் மற்றும் கருத்தடை வளையம் பொருத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

''சிறிய குடும்ப நெறி'' யின் அவசியம் பொதுமக்களுக்குக் குடும்பநலத் திரைப்பட மூலமும் குடும்ப நலத் தலைவர்கள் பயிற்சி முகாம்கள், நாடகங்கள் கலைநிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள் ஆகியவைகள் மூலமும் எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

இம் மாவட்டத்தில் 1984-85ல் அடைந்துள்ள முன்னேற்றம் வருமாறு:

பெண் அறுவைச் சிகிச்சை ஏற்றுக் கொண்டவர்கள் : டியூபெக்டமி : 10,865. லேப்ராஸ்கோப் : 7,380.

ஆண் அறுவைச் சிகிச்சை ஏற்றுக் கொண்டவர்கள் :— 391 பேர்; நிரோத் உபயோகிப்போர் 7913 பேர்; கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர், 2798 பேர். கருத்தடை மாத்திரை உட்கொண்டோர் 1665 பேர்.

## பிணைத் தொழிலாளர் மீட்பு

இம்மாவட்டத்தில் இதுவரை 175 குடும்பங்களைச் சேர்ந்த 531 பேர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அண்டை மாநிலங்களான ஆந்திரம் மற்றும் கர்நாடகத்திலிருந்து மீட்கப்பட்டனர். அவர்களுள் 139 குடும்பத்தினர் பிற்பட்ட வகுப்பையும், 20 குடும்பத்தினர் ஆதிதிராவிடர் வகுப்பையும் சேர்ந்தவர்களாவர்.

இதுவரை விடுவிக்கப்பட்ட பிணைத்தொழிலாளர்களுள் பெரும்பாலானவர்கள் கல் உடைத்தலைத் தொழிலாக உடைய போயர் இனத்தவர்கள். எனவே அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக்கு இம்மாவட்டத்தில் தின்னப்பட்டி மற்றும் மூக்கனூரில் இரண்டு கல் உடைப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க முன்மொழிவு ஒன்று அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகிறது.

விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளர் தமக்கு நிரந்தர வீட்டுவசதி மற்றும் பொருளாதாரக் குறைபாடு காரணமாக அவர்கள் தம் நிலையில் உறுதிப்படாமல் மீண்டும் பிணைத் தொழிலாளர்களாக மாறும் நிலையைத் தவிர்க்க விரும்பி அவர்களின் மறுவாழ்வுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கு ரூ. 4,000 வீதம் அரசு அனுமதி தந்துள்ளது.




# ஒரு புதிய உலகை நோக்கி

எஸ். தீனதயாளன்.
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
காமராஜர் மாவட்டம்.

ஆண்டுகள் உருண்டோடின.. புகைப்படக்கருவிகள் அடிக்கடி மின்னலிட்டன. ஆங்காங்கே எழுத்துலகம் சிங்காரமிட்டது. சிலர் அழுதார்கள்.. பலர் ஓசை எழுப்பினார்கள். ஆமாம். தற்போதைய பின்தங்கிய மாவட்டமான காமராஜர் மாவட்டத்தின் ஒரு மூலையிலிருந்து எழுந்த நினைவலைகளே இவை..! இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டம் அமலுக்கு வருமுன் ... மேலே கண்ட இந்த அவலநிலைகள் எல்லாம் யாராலும் கண்டு கொள்ளப்படவில்லை.

ஆண்டாள் அவதரித்த திருவில்லிப்புத்தூர் நகரிலிருந்து 10 கி.மீட்டர் தொலைவில் உள்ளது தான் செண்பகத்தோப்பு எனும் கிராமம்...



இங்குதான் ''புலியர்கள்'' எனப்படும் மலைவாழ் பழங்குடியினர் கொத்தடிமைகளாய் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் பற்றிய தகவலை ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் திருவில்லிப்புத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. தாமரைக்கனி எடுத்துரைத்தார். இச்செய்தியை வெளியிட்ட ஒரு ஆங்கில நாளிதழினை அடிப்படையாகக் கொண்டு, ஒரு தனியார் சமூக நிறுவனம் எடுத்த மேல் நடவடிக்கையின் தொடர்பாக, அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ். குருமூர்த்தி அவர்களின் தீவிர முயற்சியால் கொத்தடிமைகளாய் மேற்கு மலைத்தொடர் காட்டுப் பகுதிகளில் தினசரி அரைப்படி அல்லது 1 கி.கிராம் அரிசியைத் தனது குடும்ப ஊதியமாகப் பெற்றுவந்த அந்த அடிமைகளை, இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் விடுவித்தார். அதன்படி 30 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் திருவில்லிப்புத்தூர் அருகேயுள்ள செண்பகத்தோப்பு மலையடிவாரத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். தமிழ்நாடு அரசு எடுத்த தீவிர நடவடிக்கையின் காரணமாக, இன்று அவர்கள் தங்கள் வாழ்வில் ஒரு புதிய பாதையைக் காணத் துவக்கியுள்ளார்கள். இன்று இவர்களுக்கென—

1. 20 கறவை மாடுகள் 50% மானியத்தில் கடன் ரூ.50,000 வழங்கப்பட்டு, அக்கடன்களெல்லாம் இந்த ஓராண்டில் அவர்கள் திருப்பிக் கட்டியதால் அவர்களுக்கே சொந்தமாகிவிட்டன. தற்போது இக்கறவை மாடுகள் பால் அளிக்கும் திறன் குன்றியதால் இவர்களுக்கு 2-வது கறவை மாடுகள் 50% மானியத்தில் 3.7.85 அன்று ரூபாய் 50,000 வழங்கப்பட்டுள்ளது.

2. இவர்கள் குடியிருப்புக்கென இலவச வீடுகள் 12 கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும் 8 வீடுகள் இந்த ஆண்டு கட்டித் தரப்படுகிறது.

3. இவர்கள் குழந்தைகள் 24 பேருக்கென ஒரு ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இக்குழந்தைகளுக்குத் தமிழக முதல்வரின் சத்துணவு வழங்கப்படுகிறது. ஊட்டச்சத்துணவும் தரப்படுகிறது. இந்த உதவி, முதியோர்களுக்கும் இங்கு கிடைக்கிறது.

4. இவர்களுக்கு நிரந்தர வருமானத்தை உருவாக்கும் பொருட்டு 30 ஆண்களுக்குத் தேனீ வளர்க்கும் தொழிலும், 20 பெண்களுக்கு கூடை பின்னும் தொழிலுக்கும் 6 மாதப் பயிற்சி தரப்பட்டுள்ளது. இப்பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு மாதாந்தர உதவித் தொகையாக ரூபாய் 125 வழங்கப்பட்டது.

5. ஆட்டுப்பண்ணை வைத்துக் கொள்ள 5 குடும்பங்களுக்குக் கடனாக ரூபாய் 20,000 வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 6,666 மானியம் ஆகும்.

6. பெட்டிக்கடை ஒன்று வைத்துக்கொள்ள ஒரு பெண்ணுக்கு ரூபாய் 1000 கடன் அளிக்கப்பட்டுள்ளது. இதில் மானியம் ரூ.333.

# நலம் பயக்கும் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

**ஆர். ஸ்ரீராம், இ.ஆ.ப.**
**இயக்குநர்**
**நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்.**

நிலம் என்பது மனிதனுடைய விலை மதிக்க முடியாத சொத்தாகும். ஒவ்வொரு நில உரிமையாளரும் தன்னுடைய நிலத்தின் எல்லைகளிலும் அதில் தனக்குள்ள உரிமையிலும் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார். நிலங்களை அளந்து வருவாய்த் துறை ஆவணங்களிலும் சப்-ரிஜிஸ்திரார் அலுவலகப் புத்தகங்களிலும் நில உரிமையாளரின் பெயரில் அவற்றைப் பதிந்து அவர்களுக்குப் பட்டா வழங்குவதன் மூலமே அரசு நில உரிமையாளரின் இந்த அக்கறையை உறுதிப் படுத்திச் செய்யப்பட்டதாக ஆகும்.




தமிழ்நாட்டில் 1937 ஆம் ஆண்டில் மறு நிலவரித்திட்டம் கொள்கையளவில் கைவிடப்பட்டது. மறு நிலவரித்திட்ட நடவடிக்கைகள் தொடராத காரணத்தால் நாற்பது-ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட செட்டில்மெண்டுப் பதிவேடுகள் பழமையாகப் போய்விட்டன. நிலங்களின் உரிமைகளில் ஏற்பட்ட எண்ணற்ற மாறுதல்கள் ஏதோ ஒரு காரணத்தினால் செட்டில்மெண்டு, சிட்டா பதிவேடுகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை.

கிராமங்களிலுள்ள நிலப் பதிவேடுகள் பழமையானவையாகி இன்றைய நிலையைப் பிரதிபலிக்காத காரணத்தால் விவசாயிகளுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டுள்ளன.

உதாரணமாக, ஒரு விவசாயி, அரசாங்கத்திடமோ கூட்டுறவு வங்கியிடமோ கடன் பெற விரும்பினால் அவர் தனக்குச் சொந்தமான நிலத்தின் சிட்டா, பட்டா புத்தகம்போன்றவற்றின் நகலைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும். அப்பதிவேடுகளில் அவர் பெயர் இருந்தால் தான் உடனடியாக அவர் கடன் பெற இயலும். அவ்வாறு இல்லாமல் அவரது தந்தையின் பெயரிலோ மற்றும் வேறு சிலரது பெயர்களுடன் கூட்டுப் பட்டாவாகவோ பதிவேடுகளில் பதியப்பட்டிருந்தால் அவரால் எளிதில் கடன் வாங்கிட முடியாது.

கூட்டுப்பட்டாவாக நிலங்கள் இருந்தால் நிலத்தில் குறிப்பிட்ட நபரின் உரிமை எவ்வளவு என்பதை அறிவது கடினமான காரியமாகும்.

மேலும் ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் உள்ள கிணற்றுக்கு மின் இணைப்புக் கொடுக்க விரும்பினால் அவர் மின் துறைக்கு மனுச்செய்ய வேண்டும். தனிப் பட்டாவாக உள்ள நிலங்களுக்கு மின் இணைப்பு எளிதில் கிடைக்கிறது. ஆனால் கூட்டுப் பட்டாவாக இருந்தால், எல்லாக் கூட்டுப் பட்டாதாரர்களின் ஒப்புதலையும் பெற்ற பிறகே தான் மின் இணைப்புக் கிடைக்கும். மேலும், ஒரு நிலம், பலருடைய பேரில் கூட்டுப்பட்டாவாக இருந்தால் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய நிலவரிப் பாக்கி எவ்வளவு என்று சரிவர அறிய வாய்ப்பிருக்காது. விற்பனை, பரிவர்த்தனை போன்றவற்றால் ஏற்படும் உட்பிரிவு மாற்றங்கள், நிலப் பதிவேடுகளிலும் சரிவர மேற்கொள்ளப்படாமல் இருப்பதால், நிலத்தை அனுபவிப்பவர்களின் பெயருக்கும், நிலப் பதிவேட்டில் உள்ள பெயருக்கும் சம்பந்தம் இல்லாமல் போய்விடுகிறது. இத்தகைய நிலங்களில் நிலத்தின் அனுபோகதாரர்கள் எளிதில் கடன் வசதி பெறமுடியவில்லை. எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை தமிழக அரசு அமல்படுத்தியுள்ளது. சிறிய அளவில் முதலில் தொடங்கப்பட்ட இத்திட்டம், எளிய, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இதனால் விளையும் பயன் கருதி தமிழகத்தில் பெரும் பகுதிக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசால் விரிவாக்கப்பட்டது.

இத்திட்டம் இந்திய அரசின் புதிய 20 அம்சத் திட்டத்தின் 4-வது இனத்தில் கூறப்பட்டவைகளைச் செயல்படுத்தும் திட்டமாகவும் அமைகிறது.

இத்திட்டத்தின்படி ஒரு கிராமத்தில் நிலப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முழுப்புலம் அல்லது உட்பிரிவுகளின் உரிமையாளர்களின் பெயர்கள் சரிபார்க்கப்பட்டு அதன் பின்னர் தற்போதைய நில உரிமையாளரின் பெயருக்குப் பதிவு மாற்றம் செய்யப்படுகிறது. அனுபோகத்தின் அடிப்படையிலும் பத்திரங்களைப் பார்த்தும் தேவையான இடங்களில் மேலும் புதிய உட்பிரிவுகளை உண்டாக்கி, அதன் தொடர்பான பெயர் மாற்றங்கள் கிராம ஆவணங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. தவிரவும் ஒரு நிலத்தின் வரப்புகளில் நில அளவுத் துறையினரால் நடப்பட்டுப் பராமரிக்கப்படவேண்டிய எல்லைக் கற்கள், பூமியில் உள்ளனவா என்பதைப் பரிசீலித்து; காணாமற்போன கற்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

கூட்டுப்பட்டாவாக உள்ள



நிலங்கள் பிரித்து அளக்கப்பட்டு, அனுபோகப்படி தனிப்பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு பட்டாதாரருக்கும், நிலத்தின் உரிமைச் சான்றான பட்டாவுடன் அவரது நிலத்திற்கு எல்லைகளின் அளவுகளைக் குறித்து ஒரு வரைபடமும் பட்டாவுடன் இணைத்துத் தரப்படுகிறது.

சாதாரணமாக ஒருவர், தன்னுடைய நிலத்திற்குப் பட்டா பெற வேண்டுமானால், சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை வட்ட அலுவலகத்திற்குச் சென்று விண்ணப்பம் எழுதிக்கொடுத்து, தானே சென்று பட்டா பெற வேண்டியிருக்கிறது. ஆனால், இத்திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்தின் நிலஅளவை முடிந்து எல்லாப் பட்டாதாரர்களையும், வரவழைத்து, ஒரு பொது நிகழ்ச்சி ஏற்பாடு செய்து, நில உடைமையாளர்கள் அனைவருக்கும் பட்டா வழங்கப்படுகிறது. மேலும், அந்த நாளில் நேரில் பட்டா பெற இயலாதவர்களுக்கு, அவரவர் இல்லம் தேடிச் சென்று பட்டா வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினால், விவசாயிகள் தங்கள் நில உரிமை எல்லைகள் பற்றிய விவரம், அவருடைய நிலத்தின் புல எண், பரப்பு செலுத்த வேண்டிய தீர்வை ஆகியவைகளைச் சரிவர எளிதில் அறிந்து கொள்ள முடிவதுடன் தங்கு தடையின்றி வங்கிகளில் கடனுதவி பெறவும், விவசாய வளர்ச்சிக்காக அரசுத் தரப்பில் தரப்படும் சலுகைகளைப் பெறவும் முடிகிறது. இத்தகைய சலுகைகளும், கடனுதவிகளும் எளிதில் பெறும் விவசாயி, தன்னுடைய நிலத்தில் பம்புசெட் அமைக்கவோ, விவசாயத்திற்குத் தேவையான நவீன கருவிகள், உரங்கள் போன்றவற்றை வாங்கவோ முடிவதால், நல்ல முறையில் நிலத்தின் விளைச்சலைப் பெருக்க முடிகிறது. இந்த உற்பத்திப் பெருக்கம், விவசாயிக்கு நல்வாழ்வினைத் தேடித் தருவதுடன், மொத்தத்தில் நாட்டின் தன்னிறைவுக்கும் வழிஏற்படுத்துகிறது.

இத்திட்டத்தின்படி மேற்கொள்ளும் நில அளவையில் தொடக்கத்திலிருந்து இறுதி வரை நில உடைமையாளர்களுக்கு விவரம் அறிவிக்கப்பட்டு, அவரது முழு ஒத்துழைப்பும் பெறப் படுகிறது. ஒவ்வொரு முறை பணி துவங்கும் பொழுதும், திட்டத்தின் முக்கிய அம்சங்கள், தேவை. அதனால் விளையும் பயன் ஆகியவற்றை, கிராம மக்கள் புரிந்து கொள்ளும்விதத்தில் ஒரு தொடக்கவிழா ஏற்பாடு செய்யப்படுகிறது. இத்தொடக்க விழாவில் கிராமத்தில் பெருங்குடி மக்கள் அனைவரும் கலந்துகொள்ளவும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் இணைந்து செயல்படத் தகுந்த வகையிலும் இந்நிகழ்ச்சி பற்றிய அறிவிப்புகள் தண்டோரா மூலம் தெரிவிக்கப்படுகின்றன. மேலும் இதற்கான தனி அறிக்கையும் முக்கியமான பொது மக்களின் பார்வைக்கு ஒட்டப்படுகிறது.

தொடக்கவிழா நிகழ்ச்சியன்று திட்டத்தின் பயன் பற்றிய துண்டு வெளியீடுகள் விவசாயச் சங்கம் கடன் வழங்கும் நிறுவனங்கள், கிராம அலுவலகங்கள் ஆகிய அமைப்புகளுக்கு விநியோகிக்கப் படுகின்றன. மேலும் ஒரு தனிப் பட்டா விளம்பரமும் குறிப்பிட்ட படிவத்தில் ஒவ்வொரு நில உடைமையாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் இத்திட்டத்தினால் தாங்கள் பெறும் நன்மைகளைப் புரிந்து கொண்டு இத்திட்டத்தின் வெற்றிக்கு அவர்களின் முழு ஒத்துழைப்பையும் தர வகை செய்யப் படுகிறது. விவசாயிகள் அளிக்க வேண்டிய ஒத்துழைப்பு எல்லாம் தங்கள் நிலத்தின் உரிமைகள், எல்லைகள் இவற்றைப் பற்றிய தகவல்களைச் சரியாக நில அளவைப் பணியாளர்களுக்குத் தெரிவிப்பதுதான். மேலும் தங்கள் நிலத்தை அளக்கும் பொழுது உடனிருந்து நல்ல முறையில் தங்கள் நிலத்தின் எல்லை சரியாக அளவு செய்யப்படுகிறது என்பதை அவர்கள் உறுதி செய்து கொள்ள இயலும். அவ்வாறு நில அளவை நடக்கும் பொழுது உடனிருக்க இயலாதவர்கட்கு அளவைப்பணி முடிந்தவுடன் ஒரு அறிக்கை அனுப்பப்பட்டு, அது கிடைத்து மூன்று மாத காலத்திற்குள் அளவுப் பணியில் ஏதும் குறைகள் இருப்பதாகக் கருதினால் அவர்கள் அதற்கான முறையீடு செய்து கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. பெயர் மாற்றம் மட்டுமே தேவைப்படும் இனங்களில் இந்த அவகாசம் ஒரு மாதகாலமாகும். இந்த அறிக்கைக்கு 9(2) அறிக்கை எனப் பெயர். இதன் மீதான முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு, குறைகள் தீர்க்கப்படுகின்றன.



கூட்டுப் பட்டாதாரர்கள், அவர்களுக்குரிய தனி உரிமை நிலத்தை உட்பிரிவு செய்து தனிப்பட்டா கொடுக்க ஏதுவாக தங்கள் நிலத்திற்குரிய வரப்பு இடும்படி கோரப்படுகிறார்கள். அதன் அடிப்படையிலேயே, அவர்களின் தனி உரிமை நிலம் உட்பிரிவு செய்யப்படுகிறது. ஒருவருடைய நிலத்தின் உரிமையைச் சரிவரத் தெரிந்து பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மிகுந்த அக்கறை காட்டப்படுகிறது. இத்தகைய பயன் தரும் திட்டத்திற்காக ஒவ்வொரு விவசாயிடமும் வசூலிக்கப்படும் தொகை ஒரு ஏக்கருக்குச் சுமார் ரூ.18 மட்டுமே ஆகும். அரசு கணிசமான தொகையை ஏற்றுக் கொள்கிறது.

மேலும் இத்திட்டம் அரசுத் தரப்பிலும் பலவிதத்திலும் நன்மை பயப்பதாக உள்ளது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டு மிகவும் கிழிந்த நிலையிலும், வழக்கொழிந்த நிலையிலும் உள்ள நில நிர்வாகத்தின் அடிப்படை ஆவணங்கள் ஆன செட்டில்மெண்டு பதிவேடுகள், புலஅளவுச்சுவடிகள், கிராமப்படம், சிட்டா ஆகியவை தற்போது புதிதாக மெட்ரிக் முறையில் தயாரிக்கப்படுகின்றன. கிணறு, கால்வாய், பாதை போன்ற அமைப்புகள் தற்போது பூமியிலுள்ளவாறு ஆவணங்களில், முக்கியமாக கிராமப் படத்தில் குறிக்கப்படுகின்றன.

இதன் மூலம் பூமியில் உள்ள இன்றைய நில அளவை, ஆவணங்களில் பிரதிபலிக்கப்படுகிறது. அரசின் நிலங்களிலுள்ள ஆக்கிரமங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருவாய்த்துறைக்குத் தெரிவிக்கப்படுகின்றன. அதன் பின் ஒவ்

சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி சுடு தண்ணீர் தயாரிக்கும் கருவி ஒன்றை மேற்கு ஜெர்மனி நாட்டுத் தொழிற்நுட்ப உதவியோடு பெங்களூர் நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது.

எந்தவிதச் செலவும் இல்லாமல் ஒரு குடும்பத்திற்கு வேண்டிய அளவு சுடுநீரை 80 டிகிரி சென்டிகிரேடு வெப்பத்துடன் இந்தக் கருவி சூரிய ஒளி உள்ள நேரங்களில் தயாரித்து அளிக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

பாலிபிரோபிலின் என்ற இரசாயனக் கலவைப் பொருளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பலகை இந்தச் சாதனத்தின் முக்கிய பகுதியாகும். சூரிய வெளிச்சம் இந்தப் பலகையின்மீது படும்போது ஏற்படும் வெப்பத்தால் இந்தப் பலகையின் கீழ் குழாய் வழியாகச் செல்லும் நீர் சூடாகி சற்று உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள தொட்டியில் சேமிக்கப்படுகிறது.

இந்தத் தொட்டியில் சேமிக்கப்படும் சுடுநீர் சுமார் 30 மணிநேரத்திற்கு அதே வெப்ப நிலையில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெங்களூரில் உள்ள ''சோலார் சிஸ்டம்ஸ் ஆப் இந்தியா'' என்ற நிறுவனம் இந்தச் சூரிய வெப்ப சுடுநீர் தயாரிப்புக் கருவியைத் தயாரித்துள்ளது. ஐந்தாயிரம் ரூபாய் விலையுள்ள இந்தக் கருவியைச் சலுகை விலையில் மக்களுக்கு விற்பனை செய்ய மத்திய, மாநில அரசுகள் மானியம் அளிக்க முன்வந்துள்ளன என்றும், சென்னையில் இக்கருவி 1500 ரூபாய்க்கே கிடைக்கும் என்றும் அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு விஜயகுமார் தெரிவித்தார்.

ஒரு நிகழ்ச்சியில் இக்கருவியை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். மின் பற்றாக்குறை அதிகம் உள்ள தமிழ்நாட்டில் அப்பற்றாக்குறையை ஓரளவு குறைக்க இந்தக் கருவி உதவும் என்றும், பொதுமக்கள் அதிக அளவில் அரசு அளிக்கும் மானியத்தைப் பயன்படுத்தி இக் கருவியை வாங்க முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

7. இப்பழங்குடியினரில் 3 பேருக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

8. இக்குடும்பங்களைச் சேர்ந்த 30 பேருக்கு இலவச வேஷ்டி, சேலைகள் வழங்கப்பட்டுள்ளன.

9. மலைவாழ் மக்களுக்கென ''செண்பகத் தோப்பு மலைவாழ் கூட்டுறவுத் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கம்'' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் தலைவராக வனத்துறையிலிருந்து வனப்பாதுகாவலர் இருக்கிறார். இச்சங்கமானது வனத்துறையிலிருந்து நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து அதில் வனப் பொருள்களைப் பயிர் செய்து, விலைக்கு விற்கும். இதன் மூலம் இந்த ஆண்டு இந்தச்சங்கம் ரூபாய் 5300 வருமானத்தை ஈட்டியுள்ளது. மேலும் ஏலக்காய் மற்றும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்ததன் மூலம் ரூபாய் 11,000 அளித்துள்ளது. மேலும் இப்பகுதியில் உள்ள 61.56 ஏக்கர் புறம்போக்கு நிலம் இக்குடும்பங்களுக்கென விவசாயம் செய்ய உரிமையாக்கித் தரும்திட்டம் ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது.

10. மேலும் இப்பழங்குடி மக்களுக்கென உதவிட ஒரு மருந்தகம் செயல்பட்டுவருகிறது. வாரம் ஒரு முறை மருத்துவர், உதவியாளர்கள் இங்கு வந்து பரிசோதித்து, மருந்துகள் வழங்குவார்கள்.

11. இப்பழங்குடி மக்களுக்கென இராஜபாளையம் கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலை மூலம் இங்கு ஒரு கிளை துவக்கப்பட்டுள்ளது. இங்குள்ள குடும்பங்களுக்குக் குடும்ப அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. வாரத்திற்கு ஒரு முறை நல்ல தரமான அரிசி, பருப்புவகைகள், எண்ணெய் வகைகள், மண்ணெண்ணெய் போன்றவை வழங்கப்படுகின்றன.


12. பாண்டியன் போக்குவரத்துக்கழகத்தாரால் திருவில்லிப்புத்தூரிலிருந்து செண்பகத்தோப்பிற்கு ஒரு பேருந்து விடப்பட்டுள்ளது. இதன்மூலம் இம்மக்கள் அருகில் உள்ள நகருக்குச்சென்று வேண்டிய பொருள்களைப்பெற்று வரவும் முடிகிறது.

13. இந்த ஆண்டு இவர்களுக்கென ஒரு சமுதாய நலக் கூடமும் கட்டப்படவுள்ளது.

14. 3.7.85 அன்று இக்கிராமத்திற்கு வருகைதந்து இப்பழங்குடி மக்களின் வாழ்க்கைத்தரத்திற்கு தமிழ்நாடு அரசு செய்துள்ள பணிகளை வியந்து பாராட்டிய இந்தியாவின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மேதகு பி.என். பகவதி அவர்கள், இம்மக்களுக்கென ரூபாய் 50,000 மதிப்பில் கட்டப்படவுள்ள தரைமட்டக் குடிநீர்த் தொட்டிக்கான அடிக்கல்லை நாட்டினார். இன்னும் பல பணிகள் இம்மக்களுக்கெனத் தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல். என். விஜயராகவன் இ.ஆ.ப. அவர்களால் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு தமிழக அரசு இந்தியப்பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள தீவிரப்பணியால் ''ஒரு சமுதாயம் ஒரு புதிய உலகை நோக்கி'' விறு நடைபோட்டுச் செல்கிறது. இந் நிலைக்குக் காரணமானவர்களுக்கு நாம் மனதார நன்றி கூறுவோம்.





# ஓடக்காடு வெண்மைப் புரட்சி....

இரா. அண்ணாதுரை,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
உதகமண்டலம்.

குளிர்ச்சியூட்டும் வெண் மேகங்கள் சூழ்ந்த மலைகளின் ராணியாக நீலகிரி மாவட்டம் விளங்குவது போலவே - பால் வளத்துறையில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்துவதிலும் இம்மாவட்டம் உயர்ந்து நிற்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் மனத்திண்மை படைத்த ஒரு கிராமத்தின் கதையைக் கேளுங்கள். ஒரு கிராமம் சுயமுயற்சியில் தன் சொந்தக் காலில் நிற்கமுடியும் என்பதற்கு நீலகிரியில் உள்ள ''ஓடக்காடு'' கிராமம் ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறது.

நீலகிரி மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சார்ந்த ''ஓடக்காடு'' கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கம் நடப்பு ஆண்டில் ஒரு மகத்தான சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஓடக்காடு சங்கம் 1977-ஆம் ஆண்டு 50 உறுப்பினர்களுடன் தொடங்கி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இந்தச்சங்கத்தின் தலைவராக உள்ளவர் ஒரு இளைஞர். சர்வதேச இளைஞர் ஆண்டில் திரு சின்னசாமி என்பார் இதற்குத் தலைவராகப் பொறுப்பேற்ற ஒரு மாதத்திற்குள்ளாகவே சங்க உறுப்பினர்கள் கிராமப் பொது மக்கள் ஆகியோரின் உடல் உழைப்பு பொருள் உதவி ஆகியவற்றைப் பயன்படுத்தி ரூ.16 ஆயிரம் மதிப்பில் கூட்டுறவுச் சங்கத்திற்கு என்று தனியாகப் புதிய கட்டடத்தையே கட்டி முடித்துவிட்டார். புதிய கட்டடத்தைக் கடந்த 16.6.85 ஆம் நாளன்று நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் கு. அம்பலவாணன் திறந்து வைத்தார்.

துவக்கத்தில் 50 உறுப்பினர்களுடன் துவங்கிய இச்சங்கத்தின் மூலம், தற்போது 150 உறுப்பினர்களுடன் தினசரி 200 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. மொத்தம் 185 கறவை மாடுகள் இப்பணியில் ஈடுபட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டு வரும் வெண்மைப்புரட்சியில் ஓடக்காடு சங்கமும் குறிப்பிடத்தக்க பங்கைச் செலுத்தி வருகிறது.

நீலகிரி மாவட்டத்தின் வெண்மைப்புரட்சியில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்கு மற்றும் வளர்ச்சிக்கான காரணங்கள் இங்கே குறிப்பிடத்தக்கவை.

ஒருங்கிணைந்த கிராமப்புற பால் உற்பத்தி, கொள்முதல் மற்றும் விநியோக முறைகளின் மூலம் பால் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கும் ஏழை விவசாயக் குடும்பங்களை இலாபகரமான விலையில் பால் கொள்முதல் செய்வதன் மூலம் முன்னேற்றவும் அதே நேரத்தில் நகரியப் பொது மக்களுக்கு நியாயமான விலையில் தரமான விலையில் பாலை வழங்கும் நோக்கத்துடனும் இவ்வொன்றியம் செயல்பட்டு வருகிறது.

65 ஆயிரம் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 120 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தங்களிடமுள்ள 34000 கறவை மாடுகளிலிருந்து பெறப்படும் பாலை ஒன்றியத்திற்கு வழங்கி நாள் தோறும் ரூ.75,000 பெறுகின்றனர். நாளொன்றுக்குச் சராசரி 25000 லிட்டர் பாலை இந்த ஒன்றியம் 34 பால் வழித்தடங்கள் மூலம் பெற்று கோத்தகிரி, கூடலூர், வாழைத்தோட்டம் பகுதிகளிலுள்ள பால் குளிரூட்டும் நிலையங்கள் மூலமாகப் பதப்படுத்தப்பட்டு உதகை பால் பண்ணை மூலமாக விநியோகம் செய்கிறது. 5 கால்நடை மருத்துவ மையங்கள், 6 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 6 அவசரகால சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி நிலையம் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் இனவிருத்தி மற்றும் மருத்துவத் தேவைகளைச் செவ்வனே செய்கிறது.

1975-76 ஆம் ஆண்டு முதல் இவ்வொன்றியம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதுநாள்வரை ரூ.371.768 லட்சங்களை மானியமாகவும் கடனாகவும் பெற்று, பால் கொள்முதல் மற்றும் விநியோகத்திற்கான வாகனங்கள், பால்பண்ணை இயந்திரங்கள் மற்றும் புதியதொரு பால்பண்ணைக் கட்டடத்தையும் கட்டியுள்ளது. புதிய பால் பண்ணைத் திட்டப்பணிகள் சுமார் 11.34 ஏக்கர் நிலப்பரப்பில் 1981-இல் துவக்கப்பட்டு தற்போது உற்பத்தி தொடங்க உள்ளது.

இப்போது ஆரம்பித்துள்ள 7 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், அடுத்துவரும் ஆண்டுகளுக்கும் மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்க 196.40 லட்ச ரூபாய் அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டு அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

'மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரிது' என்பதைப் போல இச்சிறிய மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வெண்மைப் புரட்சி நாள்தோறும் பெருமை அடைகின்றது.

தாலும், அது, மேல் கட்டடத்தைப் பாதிப்ப தில்லை.

வெவ்வேறு அளவு உயரம் உள்ள கட்ட டங்களுக்கு, வெவ்வேறு விதமான நில நடுக்க எதிர்ப்புக்கான புதிய முறைகளை ஃப்ரூன்ஸ் நகர விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்ற னர்.



## கடல் படுகையைத் தெளிவாகக் காண எலெக்ட்ரானிக் சாதனம்

கடல் நீருக்கு அடியில், கடல் படுகையில் உள்ள பொருள்களைத் தெளிவாகக் காண உதவும் புதிய தானியங்கிச் சாதனம் ஒன்றை சோவியத் விஞ்ஞானப் பேரவை கண்டுபிடித் துள்ளது.

கடலடியில் உள்ள பொருள்களைக்காண இப்பொழுது தொலைக்காட்சி பயன்படுத்தப் படுகிறது. ஆனால் சில இயற்கைக் குறை பாடுகள் காரணமாக, தொலைக்காட்சி மூலம் கிடைக்கும் படத்தைத் தெளிவாகக் காண முடியவில்லை. இதனால் தொலைக்காட்சி சாதனத்தின் முழுப் பயனை அடைய முடிவ தில்லை. எனவே தொலைக்காட்சிப் படத்தில் முக்கியமான பொருள்களை அனுபவமுள்ள வர்கள்கூட கவனியாமல் விட்டுவிட வாய்ப்பு உள்ளது.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய சாதனமோ நமக்கு வேண்டிய பொருளின் உருவத்தை மட்டும் தெளிவாக எடுத்துக் காட்டும், இது தவிர ''இன்ஃப்ரா ரெட்'' ஒளியிலும் இந்தப் புதிய சாதனம் பொருள் களைக் ''காண'' முடியும். பல கிலோ மீட்டர் ஆழத்தில் உள்ள தண்ணீரின் வெப்ப நிலை யைக் கண்டுபிடிக்கவும் இது பயன்படும்.

## பூச்சி கொல்லிப் பூச்சிகள்!

பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொல் லக்கூடிய வேறு பூச்சிகளை வளர்க்கும் முறையை விஞ்ஞானிகள் கையாள்கின்றனர்.

இவர்கள், கூட்டுப் பண்ணைகளுக்கும், அரசுப் பண்ணைகளுக்கும் இந்தப் பூச்சிகளை ஆண்டு முழுவதிலும் சப்ளை செய்கின்றனர்.

இந்த விஞ்ஞானிகள் தங்கள் முயற்சிகளை செடிகள் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை, செயற்கை முறையில் ஏற்படுத்தப்படும் ''பசுமை இல்லங்களில்'' (கிரீன்அவுஸ்) திருப்பியுள்ளனர்.

அவற்றில் பயிர்களை அழிக்கும் பூச்சிகள் ஏராளமாகத் தோன்றுகின்றன. அவற்றை அழிப்பதற்கு, பூச்சி கொல்லிப் பூச்சிகள் வளர்க்கப்படுகின்றன. இதனால் சுற்றுப்புறச் சூழல் சுத்தப்படுத்தப்பட்டு, செடிகள் நன்றாக வளர்கின்றன.

சோளம், பட்டாணிப் பயிர்களையும், திராட்சைத் தோட்டங்களையும் பாதுகாக்கப் பூச்சிக் கொல்லிப் பூச்சிகள் பயன்படுகின்றன.

## அறுவைச் சிகிச்சைக்கு பிளாஸ்மா வாயுச் சாதனம்

உலக மருத்துவ வரலாற்றிலேயே முதல் முறையாக, அறுவைச் சிகிச்சை மூலம் மனித உயிரைக் காப்பாற்றுவதற்குக் கத்திக்குப் பதி லாக, பிளாஸ்மா என்ற வாயுப் பொருளை, சோவியத் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் பயன்படுத்துகின்றனர்.

பிரபல சோவியத் அறுவைச் சிகிச்சை நிபுணர், மாஸ்கோ மருத்துவமனை ஒன்றில், நோயாளியின் ஈரலில் கட்டி வளர்ந்திருப் பதைக் கண்டுபிடித்தார். அதை உடனே அகற்ற வேண்டியிருந்தது. அதற்கு மரபான அறுவைச் சிகிச்சை முறைகளும், லாசரும் கூடப் பயன்படாது. ஆனால் பிளாஸ்மா வாயுக் ''கத்தியை''க் கொண்டு, இரத்தம் சிந்தாமலே அந்தக் கட்டியை அகற்றி விட் டார்.



இம் மருத்துவமனைகளில் இதுவரை இது போன்ற 100-க்கு மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள் ளன. இதற்கு முன் பயன்படுத்தப்பட்ட எல்லாக் கத்திகளையும் விடச் சிறந்த ஆயுதம் இப்பொழுது மருத்துவர்களுக்குக் கிடைத்துள்ளது. பிளாஸ்மாவைக் கொண்டு பக்கத்துத் திசுக்களைக் காயப்படுத்தாமல், வேண்டிய இடத்தில் மட்டும் நுண்ணிய அறுவைகளைச் செய்ய முடியும். அபாயகர மான இரத்த நட்டமின்றி, இப்பொழுது ஈர லிலோ, குலையிலோ, அல்லது நுரையீரலிலோ அறுவைச் சிகிச்சை செய்ய முடியும். வெட் டப்பட்ட இரத்தக் குழாய்களைப் பிளாஸ்மா உடனடியாக ஒட்ட வைத்து விடுகிறது. எனவே கிளிப், தையல், லிகேசர், இரத்ததானம் முதலியவற்றிற்குத் தேவையில்லை. தவிர தொற்றுநோய், அழற்சி முதலியவற்றிலிருந் தும் நோயாளிகளைப் பிளாஸ்மா பாதுகாக் கிறது. வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களி டையே இந்தச் சாதனம் மிகுந்த ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

—சோவியத் சிறப்புக் கட்டுரைகள்



## இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணா நோன்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து, திம்புவில் நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகும் இலங்கைத் தமிழர்கள்மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இது பற்றிப் பேச, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 13.9.85, 14.9.85 ஆகிய நாட்களில் அனைத் துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

அக்கூட்டத்தில்-இலங்கைக் கொடுமைகள் குறித்து நமது வருத்தத்தைத் தெரிவிப்ப தற்கும், இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்ச னைக்கு அமைதியான தீர்வு ஏற்பட்டு நிம்மதி காண வேண்டுமெனக் கருதியும் 24.9.85 செவ்வாய்க்கிழமையன்று அனைத்துக் கட்சி யினரும் உண்ணாநோன்பு மேற்கொள்வ தெனவும் பொது வேலை நிறுத்தம் செய்வ தெனவும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி - குறிப்பிட்ட அந்நாளில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை மாநகரிலும், மற்றும் அமைச்சர் பெருமக் களும் அனைத்துக் கட்சியினரும், அனைத்து மதத்தாரும், பல்வேறு தொழிற்சங்கங்கள், தனி அமைப்புகள். மகளிர் அணியினரும் திரைப்படக் கலைஞர்களும் தமிழகமெங்கும் உண்ணா நோன்பிருந்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு முதல் நாள் (23.9.85 அன்று) அரசு ஊழியர்கள் அனைவரும் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் முன்னிலையில் அரசு ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.



# தபால் தந்தியின் கதை!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அரசு புரிந்த சந்திரகுப்தன் விரைவாக ரகசியச் செய்திகளை அனுப்ப புறாக்களைப் பழக்கப் படுத்தினான். இது புறா விடுதூது எனப்படுகிறது. பிறகு பல நூற்றாண்டுகள் வரை அஞ்சல் காரர்கள் மூலமேதான் கடிதங்கள் அனுப்பப்பட்டுவந்தன.

அக்பர், ஔரங்கசீப் முதலிய முகலாயர்கள் காலத்தில்தான் 'அஞ்சல் தபால்' என்பது ஏற்பட்டது. நடந்து செல்லும் அஞ்சற்காரர்களைத் தவிர குதிரை, குதிரை வண்டிகள், பல்லக்குகள், படகுகள் மூலமாகவும் கடிதங்கள் செல்ல ஆரம்பித்தன. ஆனால் நமது நாட்டில் மட்டும் தான் இப்படி இருந்தது என்பதில்லை.

1914ல் பிரிட்டனைச் சேர்ந்த ரோலண்டுஹில் என்பவர் ஒரு நாட்டினுள் கடிதம் எந்த இடத்துக்குப் போனாலும்சரி, அதற்கு ஒரே கட்டணமாக இருக்கும் முறையையும், தபால் தலையையும் ஏற்படுத்தினார்.

உள்ளூருக்குள் தபால் செல்ல 'ஜில்லா தபால்' என்று ஏற்படுத்தியிருந்தார்கள். ஜில்லா கலெக்டர் தான் இதற்கு மேலதிகாரி. தபால்களைப் போலீஸ்காரர்களும், கிராமாதிகாரிகளும் பட்டுவாடா செய்தனர்.

'வீட்ஸ்டன், குக்' என்ற இருவரும் தந்தி அனுப்புவதற்கு ஒரு விதமான கருவி கண்டுபிடித்தனர். ஆனால் இது ரயில்வே ஸ்டேஷன்களுக்கிடையே மட்டும் செய்திகள் அனுப்பப் பயன்பட்டது.

'மோர்ஸ்' என்ற அமெரிக்கர் தான் இப்போது பழக்கத்திலிருக்கும் தந்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தார்.

**ஆதாரம் :**
**திரு துமிலன் எழுதிய, 'தபால் தந்தியின் கதை'**
**தகவல் :**

**ச. புகழேந்தி**
**இளங்கலை-தாவரவியல் மூன்றாம் ஆண்டு, அ. வீ. வா. நினைவு ஸ்ரீ புட்பம் கல்லூரி, பூண்டி, தஞ்சை மாவட்டம்**

# புள்ளி விவரங்கள்

சாதாரண நிலையில் நுரையீரலில் எப்போதும் 1000 கன சென்டி மீட்டர் காற்று இருந்து கொண்டே இருக்கும்.

நாம் சுவாசிக்கும்போது 20.64 சதவீதம் அளவுள்ள பிராண வாயுவை உள்ளிழுக்கிறோம்.

வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் சரணாலயம் கி.பி. 1965-ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் நாள் திறக்கப் பட்டது.

குழந்தைகள் பிறந்து 6 மாதங்கள் ஆவதற்கு முன்பு நோய் எதிர்ப்புச்சக்தியைக்குழந்தைகள் உடலில் ஏற்படுத்த 'ஏடிடி' (ஆன்ட்டி டிப்தீரியா டாக்ஸாயிட்) என்ற ஊசி போடப்படுகின்றது.

தொழு நோயை ஏற்படுத்தும் 'பேசில்லஸ்' என்ற நுண்ணுயிரியை 'ஹேன்சன்' என்பவர் 1874ல் கண்டுபிடித்தார்.

# மாணவர் பக்கம்

அபாய விளக்குகள் சிவப்பாக இருக்கக் காரணம் என்ன? சிவப்பு நிற ஒளியின் அலைநீளம் அதிகம். எனவே, அது சிறிதுகூடச் சிதறல் அடையாது. எவ்வளவு தொலைவில் சிவப்புநிற அபாய விளக்கு வைக்கப்பட்டாலும், அதன் சிவப்பு ஒளி சிறிதும் சிதறல் அடையாது பார்ப்பவரது கண்களை வந்து அடையும்.

**த. அருள்சிவபாலன்**
11ஆம் வகுப்பு புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி, செங்கல்பட்டு-1



## விளையும் பயிர்

தருமபுரி மாவட்டம், ஒசூர் ஆ. வி. அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவர் கே. நரசிம்மன். இவர் கதை, கட்டுரை, கவிதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். பல பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார். இம்மாணவன் மேலும் வளர வாழ்த்துவோம்!



## ஒன்று நாமே!

வண்ணங்கள் ஏழானாலும்
வானவில் ஒன்றுபோலே
எண்ணங்கள் நூறானாலும்
இதயத்தால் ஒன்று நாமே!

வண்டிகள் பல்வானாலும்
வழித்தடம் ஒன்று போலே
உண்டிகள் மாறானாலும்
உதிரத்தால் ஒன்று நாமே!


பள்ளிகள் வேறானாலும்
படிப்பெலாம் ஒன்றுபோலே
பிள்ளைகள் யாரானாலும்
பிறப்பினால் ஒன்றுநாமே!

கொம்பிரு கூரானாலும்
குணத்தினால் ஒன்றுபோலே
எம்மொழி, நாடானாலும்
இனத்தினால் ஒன்றுநாமே!

—தகவல்: இளங்குமரன்



அறிவியல் சாளரம்



# பூச்சி கொல்லிப் பூச்சிகள்

லெனின்கிராடில் உள்ள வாய் நோய் மருத்துவமனையில், லாசர் கதிர்களைப் பயன் படுத்திச் சிகிச்சை செய்ததில், மரபான சிகிச்சைமுறையைவிட லாசர் கதிர்ச்சிகிச்சை முறையால் பல் சம்பந்தமான நோய்கள் சீக்கிரம் குணமாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கன்னத்து வீக்கம், ஈறு அழற்சி முதலிய நோய்களை இந்த முறையினால் குணப்படுத்தலாம். இரத்தக் குழாயில் இரத்தம் வேறு விதமாக ஓடச் செய்யும் வகையில் லாசர் கதிர் அசைக்கப்படுகிறது. இதனால் திசுக்கள் வளர்ச்சி அடைகின்றன. நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பது இதன் சிறப்பு அம்சமாகும். உதாரணமாக, பல் அகற்றப்பட்ட இடத்தில் அழற்சி ஏற்பட்டால், அடுத்த நாளைக்குள், அதைக் குணப்படுத்தி விடலாம். பல் சொத்தை பிடிப்பதைத் தடுக்கவும் லாசர் கதிர் பயன்படுகிறது. லாசர் கதிரின் உதவியால் மருந்தைப் பல்லுக்குள் செலுத்த முடியும்.

## செடிகளுக்கு நோய்த் தடுப்பு

செடிகளுக்கு நோய் வராமல் தடுக்கும் புதிய மருந்து ஒன்றைச் சோவியத் உயிரியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

பயிர்களுக்கு வரும் நோயினால் ஏற்படும் நட்டத்தைப் பாதியாகக் குறைக்க இது உதவுகிறது. இதனால் தாவரங்களுக்கோ மக்களுக்கோ தீங்கு எதுவும் ஏற்படுவதில்லை. சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படுவதில்லை. பூச்சி கொல்லி மருந்துகள் ஆண்டுதோறும், பயிர்களுக்கு பயன்படுத்தப்படுவதையும் மீறி, வரும் நோய்களாலும் பூச்சிகளாலும் மகசூலில் மூன்றில் ஒரு பங்கு நட்டமாகிறது.

பூஞ்சைதான் பயிர்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கிறது. இந்தப் பூஞ்சையை அழிப்பதற்காகத்தான் புதிய மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பூஞ்சையை அழிக்கக் கூடிய மருந்துப் பொருள்கள் தாவர உயிரணுக்களில் (செல்களில்) உள்ளன. இவற்றைக் கொண்டு புதிய மருந்து தயாரிக்கப்படுகிறது.

## பிராண வாயு பற்றி ஒரு புதிய அனுமானம்

உலகத்தில் பிராண வாயு (ஆக்ஸிஜன்) உற்பத்திக்குத் தாவரங்கள் மட்டும் காரணமல்லவென்றும், முக்கியமாக அது பூமியின் உட்பகுதியிலிருந்து வருவதாகவும் புவியியல் மற்றும் கனிப்பொருளியல் நிபுணர் ஒருவர் கருதுகிறார். கடற் படுகை வெடிப்புகளிலிருந்து ஏராளமான பிராண வாயு வெளிப் படுவதாக அவர் கூறுகிறார்.

இந்த ஆக்ஸிஜன் கரைந்து தண்ணீர், கடலின் அடி மட்டத்திலிருந்து மேல் பரப்பிற்கு வருகிறது. அது வெப்பமடைந்து ஆக்ஸிஜனைக் காற்றில் கலக்க விடுகிறது. கடலின் மேல்மட்ட நீரில் தாவர-ஆக்ஸிஜன் அதிகமாக இருக்கும்காரணமும் இதனால் விளங்குகிறது.

கடலின் அதிக ஆழத்தில் செல்லச்செல்ல கடல் நீரில் இத்தகைய ஆக்ஸிஜனின் அளவு குறைகிறது. தவிர, வாயு மண்டல ஆக்ஸிஜனை விடக் கடலின் அதிக ஆழத்தில் நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜனின் கனம் அதிகம்.



அதன் தன்மையும் வேறுபட்டுள்ளது. எனவே இந்த ஆக்ஸிஜன் வேறு இடத்திலிருந்து வருவதாக விஞ்ஞானி கருதுகிறார்.

## நில நடுக்கத்தை எதிர்த்து நிற்கும் கட்டடங்கள்

சோவியத் மத்திய ஆசியக் குடியரசாகிய கிர்கீசியாவின் தலைநகரான ஃப்ருன்சில் செயற்கை முறையில் ஏற்படுத்தப்பட்ட நில நடுக்கம், அங்கு இப்பொழுது கட்டப்பட்டு வரும் ஒன்பது மாடிக் கட்டடத்தைப் பாதிக்க வில்லை.

இந்தக் கட்டடத்தின் கட்டுமானத்தில், நில நடுக்கங்களை எதிர்க்கக்கூடிய ஃப்ளூரோ பிளாஸ்டிக் என்ற பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தின் மேல் பகுதி ஃப்ளூரோபிளாஸ்டிக் என்ற பொருள் மூலம் அதன் அடிக்கல்லுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நில நடுக்கம் ஏற்படும் பொழுது கட்டடத்தின் அடிக்கல் அசைந்

# அரசு கொண்டாடும் சான்றோர் விழாக்கள்

தமிழக அரசு நாட்டுக்கு உழைத்த தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்கள் ஆகியோரின் நினைவாக அவர்களின் பிறந்தநாள் விழாக்களையும் நினைவு நாட்களையும் ஆண்டு தோறும் கொண்டாடி வருகிறது. அந்த விழாக்கள் வருமாறு:

ஜனவரி-23 நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் பிறந்தநாள் விழா

ஏப்ரல்-14 டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழா

மே-29 பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா

மே '85 வீரபாண்டிய கட்டபொம்மன் விழா

ஜூன்-5 காயிதேமில்லத் பிறந்தநாள் விழா

ஜூலை-15 பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா

ஜூலை-31 பாவலர் செய்குதம்பி பிறந்த நாள் விழா

ஆகஸ்ட்'85 வல் வில் ஓரி விழா

செப்-5 கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி பிறந்தநாள் விழா

செப்-15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா



மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு

—பேரறிஞர் அண்ணா

செப்-17 தந்தை பெரியார் பிறந்தநாள் விழா

செப்-26 கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பிறந்தநாள் விழா

அக்-2 மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழா

அக்-11 மயிலாடுதுறை வேதநாயகம் பிள்ளை பிறந்தநாள் விழா

அக்-19 நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை பிறந்தநாள் விழா

அக்-30 பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழா

டிசம்பர்-10 மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா

டிசம்பர்-11 மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா

அத்துடன் சான்றோர் பலரின் நூற்றாண்டு விழாக்களையும் தமிழக அரசு சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறது. அவற்றில் சில:

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா
மூதறிஞர் ராஜாஜி நூற்றாண்டு விழா
மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா
தமிழ்த்தென்றல் திரு வி.க. நூற்றாண்டு விழா.
நசிகமணி டி. கே.சி. நூற்றாண்டு விழா
வ.வே.சு. ஐயர் நூற்றாண்டு விழா
சர் பி. டி. தியாகராயர் 134-வது பிறந்த நாள் விழா.

இவை தவிர, அவ்வப்போது, சில சான்றோர்களின் விழாக்களையும் தமிழக அரசு கொண்டாடி வருகின்றது.




## குடும்பநலம் காக்க
## சென்னை வர்த்தகச் சங்கத்தின் நன்கொடை

தனது 150-வது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் சென்னை வர்த்தகச் சங்கம், அவ்விழாவினை ஒட்டி குடும்ப நலத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் நேரடியாகப் பங்கேற்க முன்வந்துள்ளது.

பெஸ்ட் அன்கோ என்ஜீனியரிங் கம்பெனியின் நிர்வாக மேலாளர், திரு எம். கே. குமார், சென்னை வர்த்தகச் சங்கத்தின் தலைவர் திரு என். சங்கர் தலைமையில் நடைபெற்ற விழாவில் சென்னை குடும்பநலத் திட்டச் சங்கத்திற்கு குடும்பநலக் கருவியான 'லாப்ராஸ்-கோப்', ஒரு தொலைக்காட்சிப் [illegible]

போன்று வர்த்தகக் கழகத்தின் மற்றக் கிளைகளும், பிரதமர் நேரடியாக அக்கறை காட்டுகிற மாநில முதல்வர்களின் நேரடிக் கவனத்தை ஈர்த்துள்ள குடும்பநலத் திட்டத்தை ஊக்கப் படுத்திட முன் வந்துள்ளன.

[illegible] அக்டோபர் 2-ஆம்தேதி மாலை 5 மணிக்கு இக்கருவியினை வழங்குவதற்காகவே நடைபெற்ற விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. [illegible] கலைமைச் செயலாளர் [illegible]



# அறப்போர் வீரர் காந்தி



அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாள் விழா 2.10.85 அன்று சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்புற நடைபெற்றது.

கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் காந்தி பற்றிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியுடன் விழாத் தொடங்கியது.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் கண்காட்சியினைத் திறந்து வைத்தார்கள். கண்காட்சியில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளைப் பார்வையிட்டார். ஆளுநருடன் சென்ற மாண்புமிகு சட்டமன்ற மேலவைத்





தலைவரும், மாண்புமிகு தொழில் அமைச்சரும் அரங்குகளைப் பார்வையிட்டனர்.

தமிழ்த்தாய்வாழ்த்துடன் விழா ஆரம்பமாயிற்று. செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப. விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

விழாவைத் தொடங்கிவைத்து மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் பேசுகையில், “ஜாதி பேதமற்ற காந்திய வழியில் நாம் வாழ வேண்டும். அதுதான் அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.” என்றார்.

மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு க. ராசாராம் அவர்கள்பேசுகையில், ''நமக்கு எல்லாம் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த காந்தியடிகளின் பிறந்தநாளைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். இன்றைய தலைமுறையினருக்கு காந்தி பற்றித் தெரியாது. இதுபோன்ற விழாக்கள் மூலம் தெரியப்படுத்த வேண்டும். ஜாதி பேதம் நீங்கப்பாடுபட்டார் மகாத்மா காந்தியடிகள். காந்தியின் தத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து புரட்சித் தலைவர் இன்று பல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகிறார்'' என்றார்.

மைய அரசின் முன்னாள் அமைச்சர் திரு சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் பேசுகையில், “உலக சரித்திரத்திலே நிலைபெற்றவர்கள் பத்துப் பேர் உண்டு; அதில் காந்தியடிகள் ஒருவர். ஆயுதம் ஏந்தாமல் சுதந்திரம் வாங்கினார். தென் ஆப்பிரிக்காவில் அரிசனங்களுக்கு உதவினார். இந்த மாதிரி மனுஷன் இருந்தார் என்று இன்றைய இளைஞர்கட்குத் தெரியாது'' என்றார்.

திரு சி.டி.வி. இராகவலு அவர்கள் பேசுகையில், ''காந்திகதருக்கு முக்கியத்துவம் கொடுத்து வேலை வாய்ப்பை உண்டாக்கினார். கதர்ப் பொருட்களை நாம் வாங்கி தொழிலாளர்களை உற்சாகப் படுத்த வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

திரு பி. மாருதி அவர்கள் பேசுகையில் ''சுயசிந்தனையுடன் செயல்பட வேண்டும். சமுதாயத்திற்கு எளிய முறையில் பணியாற்ற வேண்டும். வன்முறை மூலம் வெற்றி பெற முடியாது என்று இன்றைய இளைஞர்கள் உணர வேண்டும்'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையேற்றுப் பேசுகையில், ''எப்படிப் பாடுபட்டு சுதந்திரம் பெற்றோம் என்பது இன்றைய தலைமுறையினருக்குத் தெரியாது. நம்மோடு சுதந்திரம் பெற்ற மற்ற நாடுகளைப் பாருங்கள் பெரும்பாலும் இராணுவ ஆட்சிதான் நடைபெறுகிறது. நம்முடைய நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்படாமைக்குக் காரணம் காந்தி தான்.

“சென்னையில் வெள்ளையர் மீது நடத்திய தாக்குதலைக் கண்டித்து அறிக்கை விட்டார் காந்தி. பலாத்காரத்தில் சுதந்திரம் நாளையே கிடைக்கும் என்றால் அந்த சுதந்திரம் தேவையில்லை என்றார் காந்தி.

“இந்தியா காந்திய வழியில் பணியாற்றி வருகின்றது'' என்று தெரிவித்தார்.

விழா இறுதியில் செய்தி - மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

சீர்காழி டாக்டர் சிவசிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் விழா இனிதே முடிந்தது.

தேசப்பிதா காந்தியின் நினைவை மக்களுக்கு எடுத்துகாட்டும் வகையில் ஒருவார காலமாக நடந்த காந்தியடிகள் விழா 8.10.'85 அன்று காந்திமண்டபத்தில் நிறைவு பெற்றது.





திருப்பனந்தாள் திரு எஸ். பாலசுப்பிரமணியம் குழுவினரின் நாயன இசையுடன் விழா தொடங்கியது.

செய்தி-மக்கள்தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

சுற்றுலா அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசியதாவது:-

''மனிதப் பண்புள்ளவர்கள் நாம் என்பதற்கு இந்த விழா ஓர் எடுத்துக்காட்டாகும். உத்தமர் காந்தி தமிழர் மீது பற்றும் பாசமும் உடையவர்.

''நாம் சுதந்தர மனிதர்களாக நடமாடுகிறோம் என்றால் அந்தப் பெருமை காந்தியடிகளைச் சாரும்''.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழா நிறைவுரையாற்றுகையில்,

''காந்தி பிறந்து இருக்காவிட்டால் இந்தியா என்னவாகியிருக்கும்? வீழ்ச்சியுற்றுக் கிடந்த இந்தியாவிற்குக் கிடைத்த எழுச்சி மிக்க தலைவர் அவர். இலண்டனில் சென்று படிக்கும் அளவிற்கு தகுதியும் திறமையும் வசதியும் பெற்று இருந்தார். இந்தியப் பண்பாடு கெடாமல் வெளிநாட்டில் படித்தார்.

''அண்ணல் காந்தியடிகள் முதன்முதல் ஆண்டிக்கோலம் கண்டதே தமிழ்நாட்டில் தான். மதுரைக்குப் பக்கத்திலே நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் கலந்து கொண்டபொழுது மக்கள் சட்டையே இல்லாமல் அரை நிர்வாணியாக இருக்கக் கண்டார். தாம் பிறந்த நாட்டில் தன்னைச் சார்ந்தமக்கள் சட்டை கூட வாங்கிப் போட வசதியில்லாமல் இருப்பது கண்டு ஆண்டிக் கோலம் பூண்டார்''.

''வட்ட மேஜை மாநாட்டிற்குச் சென்ற போது சட்டையில்லாமல் சென்றார். காந்திக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப் பட்டது''.

விழாவிற்குத் தலைமையேற்ற மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவ்ர்கள் பேசுகையில், ''காந்தியடிகள் பயிற்சி பெற்ற நாடு இந்தியா அதனால்தான் இந்தியா அமைதியாக இருக்கிறது. இந்தியாவில் எட்டுப் பொதுத் தேர்தல்கள் நடந்ததற்குக் காரணம் காந்தியடிகள் தான் என்றால் மிகையாகாது. இந்திய ஒருமைப்பாட்டிற்கு காந்திதான் வித்தாவார்.''


மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் காந்தியடிகள் குறித்த, கட்டுரை, பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினார். கண்காட்சியில் அரங்குகள் அமைத்தவர்கட்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

விழா இறுதியில் சென்னை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு கு. கோவிந்தராஜுலு நன்றி கூறினார்.

ஒருவார காலம் நடைபெற்ற காந்தி விழாவை மக்கள் கண்டு களிப்புற்றனர்.




# சிப்பிக் காளான்



டாக்டர் கா. சிவப்பிரகாசம்
பி.சலால்ராஜன்
டாக்டர் அ. ஜெயராசன்

காளான்கள் பல்லாண்டுகளாக சுவைமிக்க உணவாகக் கருதப்பட்டு வந்துள்ளன. கோவை வேளாண்மைக் கல்லூரியில்நடைபெற்ற ஆய்வுகளின் பயனாகச் சிப்பிக் காளான் சாகுபடி செய்யும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. காளான்களில் அடங்கியுள்ள மணம், சுவை, ஊட்டச் சத்து ஆகியவை எல்லோரையும் கவர்ந்திருக்கும் இயல்பினைப் பெற்றிருக்கின்றன. அண்மையில் கண்டறிந்த சிப்பிக் காளான் வளர்ப்பு நுணுக்கங்கள் பற்றித் தெரிந்து கொள்வோம்.

சிப்பிக் காளான் 20 முதல் 30 டிகிரி செ. கி. வெப்ப நிலையில் வளரும். ஆயினும் 20 முதல் 25 டிகிரி செ. கி. வெப்ப நிலையில் நன்றாக வளரும். காற்றில் ஈரப்பதம் 75 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும். வெப்பநிலை கூடுதலாக இருக்கும் காலங்களில் உயரத்திற்கு மணலைப் பரப்பித் தண்ணீர் தெளித்து வருவதுடன் சுவரை ஒட்டி சாக்குப் படுதாக்களைத் தொங்கவிட்டுத் தண்ணீர் தெளித்து வரவேண்டும். அதன் மூலம் வெப்ப நிலை குறைவதோடு ஈரப்பதமும் அதிகரிக்கும்.

இயற்கையில் நிலவும் தட்ப வெப்ப நிலைகளை அனுசரித்து மித வெப்பப் பகுதிகளிலும் குளிர்ப்பகுதிகளிலும் சிப்பிக் காளானை வளர்க்கலாம். கூரை வேய்ந்த குடிசை, ஈரச் சூழ்நிலை நிலவும் அறை ஆகியவை இதற்குத் தேவை. மலைப் பிரதேசங்களில் காளான் வளர்ப்பதற்கு ஆஸ்பெஸ்டாஸ் போடப்பட்ட வீடுகளைப் பயன்படுத்தலாம்.

படுக்கைகளில் வித்துப் பரவுதலுக்கும், காளான் வளர்வதற்கும் தனித்தனி அறைகள் இருப்பது ஏற்றது. படுக்கைகளைத் தயாரித்தவுடன் வித்துப் பரவும் அறையினில் உள்ள அடுக்குகளில் 20 நாட்கள் வரை வைத்திருக்க வேண்டும். இந்த அறையில் வெளிச்சமும் காற்றோட்டமும் தேவையில்லை. அதன் பின்பு காளான் வளர்வதற்கான அறையில் வைத்திருக்க வேண்டும். இந்த அறையில் வெளிச்சமும் காற்றோட்டமும் அவசியம். அப்பொழுதுதான் காளான்கள் படுக்கையிலிருந்து வெளிவந்துவளரும்.

சோளம், மக்காச்சோளம், கம்பு, கோதுமை ஆகியவற்றில் ஏதாவதொரு தானியத்தை நீரில் ஓரளவு வேகும்படி கொதிக்க வைக்க வேண்டும்.தானியத்தைக் கைவிரல்களுக்கிடையில் வைத்து அமுக்கினால் அமுங்குகின்ற அளவுக்கு வெந்திருக்க வேண்டும்.

தானியங்களில் வெடிப்பு தெரிகின்ற அளவுக்கு வேக வைக்கக் கூடாது. இதற்கு மக்காச் சோளத்திற்கு சுமார் ஒன்றரை மணி நேரமும், சோளம், கோதுமை, கம்பு ஆகிய தானியங்களுக்கு சுமார் ஒரு மணி நேரமும் ஆகலாம். பின் நீரை வடித்து விட்டு நிழலில் உலர்த்த வேண்டும்.

ஒரு கிலோ தானியத்திற்கு 20 கிராம் வீதம் கால்சியம் கார்பனேட் கலக்கவேண்டும். பிறகு கண்ணாடிப் புட்டிகளில் முக்கால் பாகம் வரை நிரப்பி, புட்டிகளைப் பஞ்சை உருட்டி இறுக்கமாக மூடி வைக்கவும். அதற்கு மேல் காகிதத்தைச் சுற்றி நூலினால் கட்டி வைக்கவும்; புட்டிகளை அமுக்க வெப்ப மூட்டியில் (ஆட்டோகிளேன்) 20 இராத்தல் அழுத்தத்தில் இரண்டு மணி நேரம் வைத்திருக்க வேண்டும். அமுக்க வெப்பமூட்டி இல்லையாயின் பிரஷர் குக்கரைப் பயன்படுத்தலாம். இவ்வாறு தொற்று நீக்கிய புட்டிகளை வெளியில் எடுத்து வைத்து, சூடு தணிந்தபின் ஏற்கெனவே வைத்திருக்கும் காளான் பூசணம் வளர்ந்திருக்கும் புட்டியிலுள்ள சில தானியங்களைக் கம்பியைச் சூடாக்கிய பின் கிளறி விட்டு புதிதாகத் தயாரித்த புட்டிகளில் உட்புகுத்த வேண்டும். இவ்வாறு செய்யும்போது பிற நுண்ணுயிர்கள் உட்செல்லாதவாறு செயல்பட வேண்டும். எனவே புன்சன் பர்னர் அல்லது மின் விளக்கு எரியும்போது அதன் மேல் புட்டியின் கழுத்துப் பாகத்தைப்பிடித்து உட்புகுத்த வேண்டும். புட்டிகளை வைத்திருந்து புட்டிகளின் தூர்ப்பாகம் வரை காளான் பூசனம் வளர்ந்த பின்பு காளான் படுக்கை தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

காளான் படுக்கை தயாரிக்க வைக்கோல், கழிவுப் பஞ்சு, கழிவுக் காகிதம், கரும்புச் சக்கைபோன்றவற்றைப்பயன்படுத்தலாம். வைக்கோலைச் சுமார் 3-5 செ. மீ. நீளத்தில் சிறுதுண்டுகளாக வெட்டிக்கொண்டு தண்ணீரில் 4 மணிமுதல் 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு வெளியில் எடுத்து வெந்நீரிலோ நீராவியிலோ சுமார் 30 நிமிடங்கள் அமிழ்த்தி வைத்திருக்க வேண்டும். நீரை வடித்து விட்டுச்சுத்தமான சாக்குப்படுதாவில் பரப்பி வைத்து சுமார் மூன்று மணி நேரம் நிழலில் உலர வைக்க வேண்டும். வைக்கோல் அதிக ஈரத்துடன் இல்லாமலும் காய்ந்து விடாமலும் இருப்பது சிறந்தது.

காளான் வித்தினைப் புட்டியிலிருந்து வெளியில் எடுக்கவேண்டும். ஒரு வித்துப் புட்டியிலிருந்து எடுத்த வித்துக்களை மூன்று படுக்கைகள் தயாரிக்கப் பயன்படுத்தலாம். வெள்ளைப் பாலித்தீன் பைகளைப் பயன்படுத்திப் படுக்கைகளை அமைக்கலாம். பாலித்தீன் பையின் உயரம் 60 செ. மீ., அகலம் 30 செ. மீ. பாலித்தீன் பை கனமாக இருப்பதை விட மெல்லியதாக இருந்தால் (80 காஜ்) சிறந்தது. பையின் நடுவில் ஒரு பக்கத்திற்கு ஒரு துவாரம் வீதம் ஒரு செ. மீ. அளவுள்ள துவாரங்கள் ஒரு பைக்கு இரண்டு வீதம் போட்டுக் கொள்ள வேண்டும். பையின் அடிப்பாகத்தை நூலினால் முடிந்து கொண்டு பையின் அடியில் வைக்கோல் துண்டுகளைச் சுமார் 5 செ. மீ. உயரத்திற்குப்


தமிழ்நாடு கதர்க்கிராமத் தொழில் வாரியம்
விழா

பரப்ப வேண்டும். காளான் வித்துக்களை நான்கு சமபங்காக பிரித்து அதன் மேல் ஒரு பங்கினைத் தூவ வேண்டும். இரண்டாவது தடவையாக வைக்கோல் துண்டுகளை சுமார் 10 செ.மீ. உயரத்திற்குப் பரப்பியபின் காளான் வித்துக்களின் மற்றொரு பங்கினைத் தூவ வேண்டும். மூன்றாவது தடவையாக மீண்டும் சுமார் 10 செ. மீ. உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளைப் பரப்பி மற்றொரு பங்கு வித்துக்களைத் தூவ வேண்டும். நான்காவது தடவையாக மீண்டும் சுமார் 10 செ. மீ. உயரத்திற்கு வைக்கோலைப் பரப்பி இறுதியாக வித்துக்களைத் தூவ வேண்டும். அதன் பின் சுமார் 5 செ. மீ. உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளைத் தூவி விட்டுப் பையினைக் குலுக்கிய பின், பையின் நுனிப் பாகத்தை நூலினால் முடிந்து வித்துப் பரவும் அறையில் உள்ள அடுக்குகளில் வைக்க வேண்டும். காளான் பூசணத்தில் வளர்ச்சி வித்துக்களிலிருந்து தோன்றிப் படுக்கை முழுதும் பரவும். இருபது நாட்கள் வரை இதே அறையில் வைத்திருக்க வேண்டும்.

இருபது நாட்களுக்குப் பிறகு பாலித்தீன் பையினை உருவி எடுக்க வேண்டும். சில நேரங்களில் இருபது நாட்களுக்கு முன்பே பாலித்தீன் பையினைப் பெயர்த்துக் கொண்டு காளான் மொட்டுக்கள் தோன்றுதலும் உண்டு. அவ்வாறு மொட்டுக்கள் தோன்றினால் பாலித்தீன் பையினை உடனடியாக நீக்கி விட வேண்டும். மொட்டுக்கள் தென்படவில்லையாயின் படுக்கை தயாரித்த 21-வது நாளில் பாலித்தீன் பையினை நீக்கி விட்டு காளான் தோன்றுவதற்கான அறைக்கு மாற்ற வேண்டும். இவ்வறையில் காற்றும் வெளிச்சமும் பரவ சன்னல், கதவு ஆகியவற்றை 20-30 நிமிடங்கள் காலையிலும், மாலையிலும் திறந்து வைப்பது பயனுள்ளது. மலைப்பிரதேசங்களில் வெளிச்சம் குறைவாக இருந்தால் டியூப் லைட்டைப் பயன்படுத்தி ஒரு நாளைக்கு சுமார் ஒரு மணிநேரம் வெளிச்சம் பரவுமாறு செய்ய வேண்டும்.

படுக்கைகளைக் காளான் தோன்றுவதற்கான அறைக்கு மாற்றிய பின் இரண்டு நாட்கள் தண்ணீர் தெளிக்க வேண்டாம். அதற்குப் பின் நாள்தோறும் இருமுறை படுக்கைக்கு வேண்டிய அளவு தெளிப்பான் மூலம் தண்ணீர் தெளித்து வர வேண்டும். மலைப் பிரதேசங்களில் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் படுக்கைகளின் மேல் அடிக்கடி தண்ணீர் தெளிக்க வேண்டிய நிலை ஏற்படாது.

காளான் வித்திட்ட நாளிலிருந்து சுமார் 22 முதல் 30 நாட்களில் காளான் மொட்டுக்கள் படுக்கையில் தோன்றும். மொட்டுக்கள் தோன்றியதிலிருந்து நான்கு நாட்களுக்குள் நன்கு வளர்ந்துவிடும். வளர்ந்த காளான்களைத் தண்ணீர் தெளிக்கு முன்னால் அறுவடை செய்ய வேண்டும். காளான் அறுவடை செய்தவுடன் படுக்கையில் வெளிப்புறத்திலிருந்து சுமார் ஒரு செ. மீ. அளவில் சுரண்டி எடுத்து விட்டு, தொடர்ந்து தண்ணீர் தெளித்து வர வேண்டும். 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் மூன்று அல்லது நான்கு முறைகள் காளான் தோன்றும்.

படுக்கை தயாரிக்கப் பயன்படும் வைக்கோலில் எடைக்கு சராசரி 40 முதல் 80 சதவிகிதம் வரை காளான் கிடைக்கும். காளான் ஒரு கிலோ ரூபாய் 17.50 முதல், ரூபாய் 25 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அறுவடை செய்தவுடன் சிப்பிக் காளானில் 2.9 சதவிகிதம் புரதச் சத்து உள்ளது. காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் உள்ள புரதச் சத்தினைக் காட்டிலும் சிப்பிக் காளானில் உள்ள புரதச் சத்து அதிகமாகும். காளானில் கொழுப்புச் சத்து 0.36 சதவிகிதமும், மாவுச்சத்து 5.3 சதவிகிதமும் உள்ளன. காளானில் கொழுப்புச் சத்தும் மாவுச் சத்தும் மற்ற உணவுப் பொருட்களைக் காட்டிலும் குறைவாகவே உள்ளன. எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும், இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் காளான்கள் சிறந்த உணவுப் பொருளாகப் பயன்படுவதாகப் பலராலும் கருதப்படுகின்றன.

காளான் வித்து தயாரித்தல், காளான் வளர்த்தல் ஆகியவற்றுக்கான பயிற்சி கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பயிர்ப் பாதுகாப்பு ஆய்வு மையத்தைச் சேர்ந்த பயிர் நோயியல் துறையில் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5-ம் நாள் இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆடவரும் பெண்டிரும் கலந்து பயன்பெறலாம். காளான் வித்துப் புட்டிகளும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு புட்டியின் விலை ரூபாய் 2.50. சிப்பிக் காளான் வளர்ப்போரின் எண்ணிக்கை தமிழகத்தில் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் பெருகி வருகின்றது. அதன்வழி காளான் வளர்ப்பு வளம் பெருக்கும் குடிசைத் தொழிலாக மாறி வருகின்றது.

## தஞ்சை மாவட்டத்தில்...



தஞ்சை மாவட்டத்தில் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதியதாக நீர்ப்பாசனப் பெருக்குத் திட்டத்தின் கீழ் 5632 எக்டர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்து தரப்பட்டுள்ளது. பயிறு வித்துக்கள் பெருக்குத் திட்டத்தின் கீழ் 43,000 டன் பயிறு வித்துக்களும், எண்ணெய் வித்துக்கள் பெருக்குத் திட்டத்தின் கீழ் 69,290 டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

உபரி நிலங்கள் 77.95 ஏக்கர் பட்டா செய்து தரப்பட்டுள்ளது. 5828 ஆதிதிராவிடர் குடும்பங்கட்குக் கடனும், மானியமும் அளிக்கப்பட்டுள்ளன. 96 கிராமங்களில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 6395 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

939 பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது. 1 இலட்சம் மரங்கள் நடப்பட்டுள்ளன. 248 எரிசாண வாயு அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 15,060 பேருக்கு நிரந்தரக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

6 வயது முதல் 14 வயதுக்குள் உள்ள மாணவ, மாணவியர்கள் 18,655 பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். 58,892 முதியோர்க்கு, முதியோர் கல்வி சொல்லித் தரப்பட்டுள்ளது. 95 சிறிய தொழிற் கூடங்கள் உருவாக்கப்பட்டன.

தஞ்சை மாவட்டத்தில் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளில், எண்ணெய்வித்துக்கள் பெருக்குத் திட்டம், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம், குடிசைப் பகுதி வாழ் மக்கட்கு உதவிடும் திட்டம், முதியோர் கல்வித் திட்டம் ஆகியவற்றில் இலக்கினை விஞ்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

85356

"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது

